



Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ் : 03 சோபகிருது வருடம், ஆனி மாதம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (16.07.2023) ஹிஜ்ரி-1444, துல்ஹஜ் - 27, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8

விலை ரூ.130


## அரச ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை தொடர்பான சுற்றறிக்கை

அரச ஊழியர்களுக்கு சம்பளமின்றி விடுமுறை எடுக்கும் முறையொன்றை அறிவிக்கும் சுற்றறிக்கையை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் குறித்த விடுமுறையை எடுக்கும் அரச ஊழியர்களுக்கு வெளிநாடு... 02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



கடந்த ஒரு வருட காலமாக சுருண்டு படுத்துக்கிடந்த "பௌத்த பேரினவாதம்" மீண்டும் நாட்டில் தலைவிரித்தாட தொடங்கியுள்ளது.

இதற்கான முழுமையான "பொறுப்புக்கூறலை" ரணில் - ராஜபக்ஷ அரசு ஏற்றுக்கொள்ளவேணும்.

பௌத்த பிக்குகள் தொடக்கம் ஒருசில பேரினவாத அமைச்சர்கள் வரை தமிழ் நிலத்தில் நின்றுகொண்டு 13 ஆம் பக்கம்



# அதிகார மோதலின் உச்சத்தில் அமைச்சர் நசீரும் ஆளுநர் செந்திலும்



13 ஆம் பக்கம்

# தமிழர்கள் விரட்டியடிப்பு!

## குருந்தூர் மலையில் பிக்குகள், பொலிஸார் அட்டகாசம்



முல்லைத்தீவு குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் பொங்கல் வழிபாட்டுக்குச் சென்ற தமிழ் மக்கள் பெரும் களேபரத்தின் மத்தியில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மலையிலிருந்து மக்களை கீழே இறக்குவதற்கு பொலிஸார் பலவந்த முயற்சிகளை... 02 ஆம் பக்கம்

## சந்திரயான்-3 விண்கலத்தைச் சுமந்து எல்.வி.எம்.-3 ஏவுகணை விண்ணில்



இந்தியாவின் வரலாற்று முக்கிய நிகழ்வாக சந்திரயான்-3 விண்கலத்தைச் சுமந்துகொண்டு எல்விஎம்-3 ரொக்கெட் வெற்றிகரமாக வெள்ளிக்கிழமை நண்பகல் 2.35 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆய்வு மையத்தின் இரண்டாவது தளத்திலிருந்து சரியாக பிற்பகல் 2.35 மணிக்கு ரொக்கெட் விண்ணில் பாய்ந்தது. சந்திரயான் விண்கலத்தைச் சுமந்துகொண்டு சென்ற எல்பிஎம் 3 - எம்4 ரொக்கெட்டின் இரண்டு அடுக்குகளும் திட்டமிட்டபடி வெற்றிகரமாக பிரிந்த நிலையில், தற்போது மூன்றாவது அடுக்கும் வெற்றிகரமாக பிரிந்துவிட்டது. 02 ஆம் பக்கம்

## செந்தில் தொண்டமானுக்கு ஆதரவாக கிழக்கில் களமிறங்கிய முஸ்லிம் அமைப்புகள்!

காத்தான்குடி கோட்டக்கல்வி உத்தியோகத்தர் நியமனத்துக்கு எதிராக கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் நசீர் அஹமட்டுக்கு எதிராகவும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு ஆதரவாகவும் முஸ்லிம் அமைப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன. 02 ஆம் பக்கம்

## தேர்தலுக்காக ஒன்றிணைக!

### சஜித் அழைப்பு



தற்போதைய அரசாங்கம் பல்வேறு பொய்யான காரணங்களை முன்வைத்து மக்களை அவமதிப்புக்குள்ளாக்கி நடத்த வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் ... 02 ஆம் பக்கம்






## தொல்பொருள் விடயங்களில் எந்த நாட்டையும் தலையிட விடோம்!

### சரத் வீரசேகர எம்.பி. அதிரடி



நா. தினுஷா

இலங்கையிலுள்ள தொல்பொருட்கள் விடயங்களில் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு இடமளிக்க முடியாது. பௌத்த தொல்பொருட்களை சேதப்படுத்தி அவற்றின் மீது கோவில் களை அமைப்பதற்கு இந்தியா மட்டுமல்ல ,வேறு எந்த நாட்டிலிருந்து உதவி கிடைத்தாலும் அதனை தடுத்து நிறுத்துவோம் - என்று பாராளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

அவர் வழங்கிய முழுமையான பேட்டி 06ஆம் பக்கத்தில்...




# மலையகத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தாதியர் கல்லூரி, பல்கலைக்கழகம் அமைய இந்தியா உதவிட வேண்டும்

## மலையகம் 200 தொடர்பில் மனோ கணேசன்



"கொழும்பு, அவிசாவளை முதல் நுவரெலியா வரை நாடெங்கும் பரந்து வாழும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவை தொடர்பில் இந்திய மத்திய அரசு உதவிட உத்தரவாதம் தர வேண்டும். மலையகம்-200 நினைவுறுத்தல் தொடர்பில் இந்தியாவின் பங்களிப்பு இந்த அடிப்படைகளில் அமைய வேண்டும். இவ்வருட ஆரம்பத்திலேயே நாம் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் மலையகம்-200 நினைவுறுத்தல் நிகழ்வுகள் உரையாடி தொடர்பில் எழுத்துமூல கோரிக்கை விடுத்துள்ளோம். இலங்கை வந்துசென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடமும் உரையாடியுள்ளோம். இந்நிலையில், அடுத்தவாரம் இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இவை தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நல்லெண்ண உத்தரவாதங்கள் அளிப்பார் என நாம் நம்புகிறோம்."

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பில் இந்திய மத்திய அரசை நாம் நம்பியுள்ளோம். குறிப்பாக, நாடெங்கும் பரந்து வாழும், இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் பிள்ளைகளின் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை. இந்தப் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களை பயிற்றுவிக்க விசேட வேலைத்திட்டம் தேவை. அதேபோல் தேயிலை, இறப்பர் மலைகளில் அல்லலுறும் எங்கள் பெண்களின் வெளிநாட்டு, உள்நாட்டு வேலைவாய்ப்புகளை உறுதிப்படுத்த தாதியர் பயிற்சிக் கல்லூரி அவசியம். உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வியை அடிப்படையாகக்கொண்டு ஒரு முதற்கட்ட பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவை அனைத்தும் இந்திய வம்சாவளி மலையக தமிழர்களுக்கான விசேட சமூக அபிவிருத்தித் திட்டங்களாக முன்னேடுக்கப்பட வேண்டும். மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் நமது மக்கள் தொடர்பில் தமக்குள்ள தார்மீகக் கடப்பாட்டை இந்திய மத்திய அரசு நிறைவேற்றும் என நாம் நம்புகிறோம். அதேவேளை, இலங்கையில் மலையகத் தமிழரது தேசிய அரசியல் அபிலாஷை கோரிக்கைகள் தொடர்பில் நாம் உள்நாட்டில் இலங்கை அரசுடன் பேசுவோம். அதிகாரப்பூர்வ அரசாங்க தரப்பு பேச்சுவார்த்தை குழுவை முறைப்படி அமைத்து, அத்தகைய பேச்சுகளை விரைவில் ஆரம்பிக்க இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் உறுதியளித்துள்ளார். அந்த உறுதிமொழியை அவர் நிறைவேற்றுவார் என நாம் நம்புகிறோம்.

# அனைத்து துறைகளிலும் உரிய நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து!

நாரா நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்படாத பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற உள்ளூர் இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்டு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கடற்படை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், உள்ளூர் இழுவைப்படகுகளால் பாதிப்பு ஏற்படுவதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் முறையிட்ட நிலையிலேயே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாரா எனப்படும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் முகவர் நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட சேற்றுநிலப் பகுதிகளில் மாத்திரம் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு உள்ளூர் இழுவைப்படகுகளுக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், நெடுந்தீவு கடல் பகுதியில் அடையாளப்படுத்தப்படாத பகுதிகளிலும் குறித்த உள்ளூர் இழுவைப்படகுகள் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் தமது கடல் வளத்தை அழிப்பதாக வெள்ளிக்கிழமை குற்றஞ்சாட்டப்பட்டது.

இதேவேளை, நெடுந்தீவு மக்களுக்கு 24 மணித்தியாலங்களும் மின்சாரம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்பிறப்பாக்கிகள் சுழற்சி முறையில் மாற்றப்படுகின்றபோது நேர ஒழுங்கு பின்பற்றப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று எரிபொருட்களின் விலை, நாடளாவிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட



விலையைவிட அதிகபட்சம் 20 ரூபா அதிகமாக மாத்திரமே விற்பனை செய்ய முடியும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எரிபொருள் விற்பனை தொடர்பாக மேற்பார்வை செய்யுமாறு பிரதேச செயலாளரை கேட்டுக்கொண்டார்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களைவிட சுமார் 45 ரூபா வரையில் விலை அதிகரித்து நெடுந்தீவில் எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாக பிரதேச மக்களால் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையிலேயே அமைச்சரால் மேற்குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே நெடுந்தீவில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுகின்றபோது, உரிய சட்ட நியமங்கள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பிரதேச சபை மற்றும் மிருக வைத்திய அதிகாரி போன்ற எவற்றின் அனுமதிகளும் பெறப்படாமல் தான்தோன்றித்தனமாக மாடுகள் வெட்டப்படுவதாக பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகளால் சுட்டிகாட்டப்பட்ட நிலையிலேயே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேசத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வெள்ளிக்கிழமை (14-07-2023) நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நெடுந்தீவு பிரதேச செயலாளரின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பிரதேசத்தின் கடல் போக்குவரத்து சுற்றுலாத்துறை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதன்போது மத்திய மற்றும் மாகாண அமைச்சுகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள், அவற்றின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

மேலும் துறை ரீதியான முன்னேற்ற மீளாய்வில் சேவைத்துறை சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றின் தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட் டுள்ளன.

குறிப்பாக சுகாதாரம், கல்வி, வீட்டுத்திட்டம், உள்ளூராட்சி, கூட்டுறவு, நீர்வழங்கல், மின்சாரம், போக்குவரத்து, சமுர்த்தி, விவசாயம், நீர்ப்பாசனம், வாழ்வாதாரம், மீன்பிடி, வீதி புனரமைப்பு காணி உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சந்திரயான்-3 விண்கலத்தைச்...

பிறகு வெற்றிகரமாகப் பயணித்து பூமியிலிருந்து 179 கி.மீ. தொலைவில், நீள் வட்டப்பாதையில் சந்திரயான் - 3 விண்கலம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

அதற்கான 25.30 மணிநேர கவுன்ட் டவுன் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்கியது. எரிபொருள் நிரப்பும் பணிகளும், இறுதிக்கட்டப் பணிகளும் நிறைவடைந்த நிலையில், சந்திரயான்-3 விண்கலத்தை விண்ணில் செலுத்துவதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் மேற்கொண்டு வந்தனர்.

அனைத்துக் கட்டங்களையும் வெற்றிகரமாகக் கடந்து, சந்திரயான்-3 விண்கலம் நிலவை அடைய வாழ்த்துகளைத் தெரிவிப்போம் என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம், ஸ்ரீ ஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவண் ஆய்வு மையத்தின் இரண்டாவது தளத்திலிருந்து சரியாக வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.35 மணிக்கு சந்திரயான்-3 விண்கலத்தைச் சுமந்துகொண்டு எல்விஎம்-3 ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

சந்திரயான் விண்கலத்தைச் சுமந்துகொண்டு சென்ற எல்விஎம் 3- எம்4 ரொக்கெட்டின் இரண்டு அடுக்குகளும் திட்டமிட்டபடி வெற்றிகரமாக பிரிந்த நிலையில், தற்போது மூன்றாவது அடுக்கும் வெற்றிகரமாக பிரிந்துவிட்டது.

பிறகு வெற்றிகரமாகப் பயணித்து பூமியிலிருந்து 179 கி.மீ. தொலைவில், நீள் வட்டப்பாதையில் சந்திரயான் - 3 விண்கலம் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.சந்திரயான் விண்கலம் விண்ணில் ஏவப்பட்டதைத் தொடர்ந்து, இஸ்ரோ தலைவர் சோம்நாத் உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில், புவி வட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் சந்திரயான் - 3 விண்கலத்தின் இயக்கம் திருப்திகரமாக உள்ளது. சந்திரயான் விண்கலமானது ஏவப்பட்ட 16 நிமிடங்களில் புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. நிலவுக்கான பயணத்தை சந்திரயான் தொடங்கியிருக்கிறது'' என்றார்.சந்திரயான் விண்கலம் வெற்றிகரமாக புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டமை குறித்து விஞ்ஞானிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். மேலும், பல்துறை தலைவர்களும் பாராட்டுகளைத் தெரிவித்து வருகிறார்கள்.அமெரிக்கா, ரஷ்யா, சீனாவை தொடர்ந்து இந்தியா மூன்றாவது முறையாக நிலவை ஆய்வுசெய்ய முன்னெடுத்துள்ள இந்த முயற்சி, உலக நாடுகளின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் ரொக்கெட் ஏவுதல் நிகழ்ச்சியை இஸ்ரோ தளத்தில் முன்பதிவு செய்து நேரடியாக பார்த்தனர்.

### அரச ஊழியர்களுக்கு...

செல்லவோ அல்லது இந்நாட்டில் தங்கியிருக்கவோ வாய்ப்பளிக்கப்படுகிறது..

குறித்த விடுமுறையை எடுக்கும்போது அவர்களின் பதவியுயர்வு அல்லது ஓய்வூதியத்துக்கு எந்தத் தடையும் இருக்காது என்றும் பொது நிர்வாக அமைச்சு தெரிவிக்கிறது.

சம்பளம் இல்லாமல் விடுப்பு எடுத்ததற்கு முந்தைய நாள் இருந்த பணி மூப்பு, மீண்டும் பணியில் சேர்ந்த பிறகு மாறாது என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க நிதியில் இயங்கும் பொது நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு அந்த விதிகளைப் பயன்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்களை நிதியமைச்சு வெளியிடும் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வெளிநாட்டுக்கு செல்வதற்கு சம்பளமற்ற விடுமுறை எடுக்கும் அதிகாரிகள், விடுமுறைக்கு ஒப்புதல் அளிக்கும் உயரதிகாரிகளுடன் செய்துகொள்ள வேண்டிய ஒப்பந்தத்தின் தொடர்ச்சியும் இந்த சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.07.13
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5174
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,593,720.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 8 4 9 1 1 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3416
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,233,209.20
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 20 22 32 58

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1204
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,685,576.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 13 18 33 51
விசேட எழுத்து K

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 483
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,271,862.60
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 18 25 28 29
விசேட இலக்கினம் மீனம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1522
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,972,492.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 11 31 39 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

### தேர்தலுக்காக ஒன்றிணைக!...

வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான விசேட கலந்துரையாடலொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (14) நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தேர்தலை ஒத்திவைப்பதாற்காக அரசாங்கம் முன்வைக்கும் சகல காரணங்களும் பொய்யானவையாகும். இது நாட்டு மக்களையும் சகலரையும் ஏமாற்றும் விடயமாகும். இந்த ஜனநாயக விரோதச் செயலைத் தொடர அரசாங்கம் மேலும் பல யுக்திகளைப் கையாண்டு வருகிறது. வேறு வழிகளில் கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளை மீள அழைக்கும் தீவிர ஜனநாயக விரோத நடவடிக்கையில் இந்த அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

உறுப்பினர்களான ஜயந்த கெட்டகொட மற்றும் எதிரிமான்ன ஆகியோரின் முன்மொழிவுகள் ஊடாக இந்த அரசியலமைப்புக்கு முரணான மற்றும் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடு முன்னெடுக்கப்பட்டாலும் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றும் சர்வஜன வாக்கெடுப்பு வெற்றியின் பின்னர் இந்த தனிப்பட்ட உறுப்பினர் பிரேரணை சட்டமாக செயற்படுத்தப்பட வேண்டுமென சட்டமா அதிபர் சட்ட வியாக்கியாணம் வழங்கியுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. இந்த முயற்சியை முறியடிக்க சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்போம்.

நீதிமன்றத்தின் உதவியை நாடி இதனை சட்டரீதியாக தோற்கடிப்பதுடன், எதிர்காலத்தில் தேர்தல் முறைமைக்கு ஏற்படக்கூடிய ஜனநாயக விரோத செயற்பாடுகளை முறியடிக்க ஒன்றிணைய வேண்டும்.

ஜனநாயக கட்டமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும். தேர்தலை வெளிப்படைத்தன்மையுடன் சரியான நேரத்தில் நடத்துவது ஜனாதிபதி, பிரதமர், அரசாங்கம், ஆளும் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகள் சகலரினதும் பொறுப்பாகும்.

அத்துடன், தேர்தலை நடத்துமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அரசாங்கத்தின் உறுப்பினர்கள் நீதிமன்ற நீதிபதிகளை பாராளுமன்றத்தின் சிறப்புரிமைக் குழுவின் முன் நிறுத்த முற்பட்டனர்.

உயர் நீதிமன்றத்தையும் அதன் நடுநிலையான நீதிபதிகளையும் கூட சங்கடப்படுத்தும் வகையில் அவர்கள் செயல்படுகிறார்கள். நிறைவேற்று அதிகாரம் கூட நீதித்துறையில் தலையீடு செய்கிறது. கொள்கைகள் எதுவாக இருந்தாலும் இந்நேரத்தில் தேர்தலை நடத்த ஆளும் எதிர்க்கட்சிகள் என அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

### செந்தில் தொண்டமானுக்கு...

காத்தான்குடி கோட்டக்கல்வி உத்தியோகத்தர் பதவி வெற்றிடம் காணப்பட்டிருந்த நிலையில், அப்பதவிக்கு SLES GRADE 3 தகுதியுடையவர்கள் காணப்படாமையால், தற்காலிக அதிகாரியாக SLPS GRADE 1 தகுதியுடையவரான எம்.எம்.கலாவுதீன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், SLES GRADE 3 படிப்பை நிறைவு செய்திருந்த ஏ.ஜி.மொஹமட் ஹக்கீம் என்பவருக்கு கோட்டக்கல்வி உத்தியோகத்தர் நியமனம் தற்போது கல்வி அமைச்சால் வழங்கப்பட்டது.

அமைச்சர் நசீர் அஹமட், தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த SLPS GRADE 1 தகுதியுடையவர் தொடர்ந்தும் இப்பதவியில் இருக்க வேண்டும் எனவும் SLES GRADE 3 நிறைவு செய்தவருக்கு கோட்டக்கல்வி உத்தியோகத்தர் நியமனம் வழங்கக்கூடாது எனவும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்து வந்ததையடுத்து, கல்வி அமைச்சின் செயலாளரால் இவ்விடயம் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆளுநர் செந்தில் தொண்டமான் கல்வி அமைச்சின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தகுதியுடையவர்களுக்கு இந்நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆளுநரின் இந்தச் செயற்பாட்டை கிராமிய அபிவிருத்திச் சபை உட்பட பல அமைப்புகள் வரவேற்றுள்ளதாக ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

### தமிழர்கள்...

எடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பொலிஸாரால் தாக்கப்பட்ட தாகவும், தள்ளிவிழுத்தப்பட்டதாகவும் பக்தர்கள் பலர் குற்றஞ்சுமத்தினர்.

குருந்தூர் மலையில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பின் மத்தியில் சிங்கள இனவாதிகளும், பிக்குகளும் செய்த தடைகளால் தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவும் கணக்கிலெடுக்கப்படவில்லை.

குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பொங்கல் வழிபாடு மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

பொங்கல் விழாவுக்கு அனுமதி கோரி ஏற்பாட்டாளர்கள் கடந்த வியாழனன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். நீதிமன்றம் அதற்கு அனுமதி அளித்திருந்தது.

வெள்ளிக்கிழமை காலையில் பொங்கல் விழாவுக்காக தமிழ் மக்கள் சென்றபோது, அங்கு சிங்கள கடும்போக்காளர்கள் பலர் அழைத்துவரப்பட்டிருந்தனர். பௌத்த பிக்குகளும் குவிந்திருந்தனர். வெளியிடங்களிலிருந்து 2 பஸ்கள் மற்றும் வாகனங்களில் அவர்கள் அழைத்துவரப்பட்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள். க.சிவனேசன், பா.கஜதீபன், து.ரவிகரன் உள்ளிட்டவர்களும் அங்கு சென்றிருந்தனர்.

பொங்கலுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டபோது, அங்கு தீ மூட்டி பொங்கல் செய்ய முடியாது என சிங்கள இனவாதத் தரப்பினர் மிரட்டல் விடுத்தனர். பிக்குகளும் சன்னதமாடினர். இதனால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது. இரு தரப்பும் மோதுவதை போன்ற சூழல் ஏற்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் அனுமதியுடனேயே பொங்கல் வழிபாட்டுக்கு வந்துள்ளதாக தமிழ் மக்கள் தெரிவித்த போதும், அதை சிங்கள இனவாதத் தரப்பினர் கிஞ்சித்தும் கணக்கிலெடுக்கவில்லை.

தொல்பொருள் திணைக்களப் பிரதிநிதியொருவர் பிரசன்னமாகியிருந்தார். அவரும் பொங்கல் மேற்கொள்ள முடியாது என்றார்.

இந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்று, நீதிமன்ற அனுமதியுடனேயே பொங்கலுக்கு வந்துள்ளதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் க.சிவனேசன் சுட்டிக்காட்டினார். அத்துடன், பொங்க முடியாது என்றால் அதை எழுத்துமூலம் தருமாறு கேட்டார்.

இதையடுத்து சுருதியை மாற்றிய தொல்பொருள் திணைக்களப் பிரதிநிதி, கட்டுப்பாடுகளுடன் பொங்கல் செய்யலாம் என்றார்.

நிலத்தில் தீ மூட்டாமல், நிலத்தில் கல் வைத்து அதன் மேல் தகரம் வைத்து, அதன்மேல் கல் வைத்து தீ மூட்டுமாறு கூறினார்.

தொல்பொருள் திணைக்களத்தினரின் அறிவுறுத்தலின்படி, தகரத்தின் மீது பொங்கல் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. தீ மூட்ட தயாரானபோது, மீண்டும் சிங்கள இனவாதத் தரப்பினரும், பிக்குகளும் ரகளையில் ஈடுபட்டனர்.

இதனால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டது.

அப்போது முல்லைத்தீவு பொலிஸார் அடாத்தாக செயற்பட்டு, பொங்கலுக்கு செய்யப்பட்ட ஏற்பாடுகளை சிதைத்தனர். பொலிஸ் அதிகாரியொருவர் சப்பாத்து காலால் கற்பூரத் தீயை மிதித்து அணைத்தார்.

மலைக்கு கீழே பொங்கி, பொங்கலை எடுத்து வந்து மேலே படையல் செய்யலாம் என பொலிஸார் கடுமையான நிபந்தனை விதித்தனர். எனினும், தமிழ் மக்கள் அதை ஏற்கவில்லை. குருந்தூர் மலையில் தமக்குள்ள வழிபாட்டு உரிமையை சுட்டிக்காட்டினர்.

எனினும், பொலிஸார் பொங்கலுக்கு அனுமதியளிக்கவில்லை. பொலிசார், விசேட அதிரடிப்படையினர் அங்கு குவிக்கப்பட்டனர்.

பின்னர் பொங்கலுக்கு சென்ற தமிழ்த் தரப்பினர் அனைவரையும் மலையிலிருந்து கீழே இறங்கி செல்லுமாறு பொலிஸார் கட்டளையிட்டனர். அதே சமயத்தில், இன்று குழப்பத்தில் ஈடுபட்ட சிங்களத் தரப்பினர், சட்டவிரோத விகாரை பகுதியில் பொலிஸாரின் பாதுகாப்பில் தங்கியிருந்தனர்.

தமிழர்களுக்கு ஒரு சட்டம், சிங்களவர்களுக்கு ஒரு சட்ட மா என கேள்வியெழுப்பிய தமிழ்த் தரப்பினர், அங்கு கூடி, சிறிய மத அனுஷ்டானத்தில் ஈடுபட்டனர். சிங்களவர்களையும் மலையிலிருந்து இறக்கினாலே நாமும் இறங்குவோம் என பொங்கலுக்குச் சென்ற தமிழ்த் தரப்பினர் குறிப்பிட்டனர்.

இதையடுத்து, பொலிஸார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டு, தமிழ்த் தரப்பினரை மலையிலிருந்து கீழே இறக்கினர். இதன்போது, பலரை பொலிஸாரால் பலவந்தமாக தள்ளினர். சிலர் தாக்கப்பட்டனர். அண்மையில் முல்லைத்தீவில் முஸ்லிம் காங்கிரஸின் தராசு சின்னத்தில் இணைந்து உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த பீற்றர் இளஞ்செழியன் என்ற இளைஞன் தாக்கப்பட்டு, இரத்தம் வழிந்த நிலையிலிருந்தார்.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபனும், து.ரவிகரனும் தள்ளிவிழுத்தப்பட்டனர். இதனால் தமது காலில் உபாதையேற்பட்டுள்ளதாக கஜதீபன் குறிப்பிட்டார். இந்தச் சம்பவம் தமிழர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# இறங்கி வந்த எடப்பாடி: கண்டுகொள்ளாத பன்னீர்!

ரமணி

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள் மன்னிப்புக் கடிதம் கொடுத்தால் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வம், சசிகலா, தினகரன் ஆகிய மூவரைத் தவிர, ஏனையவர்கள் மீண்டும் வந்தால் கட்சிக்குள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என அறிவித்த எடப்பாடி, அவர்களின் பெயரைக் குறிப்பிடாமல் மன்னிப்புக் கடிதம் கொடுத்தால் சேர்த்துக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

பன்னீர்செல்வம், சசிகலா, தினகரன் ஆகிய மூவரையும் கட்சியில் சேர்க்கும்படி பாரதீய ஜனதா நெருக்கடி கொடுத்தது. அதனைக் கண்டுகொள்ளாத எடப்பாடி இப்போது இறங்கிவந்து மன்னிப்புக் கடிதம் கொடுக்க வேண்டும் என நிபந்தனை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிவிப்புக்கான கருத்துரை எதிர்த்தரப்பிலிருந்து வெளிவரவில்லை.

''பன்னீர்செல்வத்தைக் கட்சியிலிருந்து நீக்கி சரியாக ஒரு வருடத்தின் பின்னர் கட்சியில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள், மன்னிப்புக் கடிதம் கொடுத்து, பின் மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டால் மட்டுமே கட்சி உறுப்பினர்களாக கருதப்படுவர்" என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்திருக்கிறார்.

''கட்சியின் கொள்கைக்கும், குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்படுபவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவது வழக்கம். அவ்வாறு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள், தாங்கள் செய்த தவறை உணர்ந்து மீண்டும் கழகத்தில் சேர்வதாக இருந்தால், அவர்கள் பொதுச் செயலாளருக்கு மன்னிப்புக் கடிதம் கொடுத்து, மீண்டும் கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக அறிவிப்பு வெளியிடப்படுபவர்களும், பொதுச் செயலாளரை நேரில் சந்தித்து மன்னிப்புக் கடிதம் வழங்கி மீண்டும் கழகத்தில் சேர்பவர்களும் மட்டுமே உறுப்பினர்களாகக் கருதப்படுவர்.

எம்.ஜி,ஆர்., ஜெயலலிதா ஆகியோர் காலந்தொட்டு இந்த நடைமுறைதான் பின்பற்றப்பட்டு வருகிறது. எனவே, கட்சியிலிருந்து நீக்கிவைக்கப்பட்டவர்கள் மீண்டும் கழகத்தில் சேர்வதாக இருந்தால், மேற்கண்ட நடைமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்" எனக் கூறப்பட்டிருந்தது.

பன்னீரை மீண்டும் கட்சிக்குள் சேர்ப்பதற்கு எடப்பாடிக்கு கொஞ்சமும் விருப்பம் இல்லை. பன்னீர்செல்வத்தை கட்சிக்குள் சேர்க்க வேண்டும் என சில மூத்த உறுப்பினர்கள் நெருக்கடி கொடுக்கிறார்கள். கட்சியிலிருந்து வெளியேறிய சோழவந்தான் மாணிக்கம் இணைந்திருக்கிறார். மேலும், பலர் இணையும் யோசனையில் இருக்கிறார்கள். சோழவந்தான் மாணிக்கம் மன்னிப்புக் கடிதம் கொடுத்ததாக தகவல் எதுவும் வரவில்லை. கட்சியிலிருந்து வெளியேறியவர்களோ அல்லது வெளியேற்றப்பட்டவர்களோ மன்னிப்புக் கடிதம் கொடுத்துச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. மன்னிப்புக் கடிதம் கொடுத்து கட்சியில் சேரும் நிலையில் பன்னீர்செல்வம் இல்லை. ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பன்னீரை அவமானப்படுத்துவதில் எடப்பாடி குறியாக இருக்கிறார்.

எடப்பாடியும், பன்னீரும் ஒன்றாக இருந்தபோது சசிகலாவும், தினகரனும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். சசிகலாவுடன் தொடர்பில் இருந்தவர்களும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களும் மன்னிப்புக் கடிதம் கொடுக்க வேண்டும்.

மன்னிப்புக் கடிதம் கொடுத்தால்தான், கட்சியில் இணையலாம் என்ற அறிவிப்பை கழகத்திலுள்ள மூத்த உறுப்பினர்கள் ரசிக்கவில்லை. தங்கள் தவறை உணர்ந்தவர்கள்தான் மீண்டும் கட்சிக்குள் வர நினைப்பார்கள். அவர்களை மண்டியிட வைக்கும் நடைமுறை நல்லதல்ல.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகிய இருவரையும் போன்ற ஆளுமை எடப்பாடிக்கு இல்லை. எம்.ஜி.ஆர். காலத்தில் தேர்தலில் வெற்றி மேல் வெற்றி. ஜெயலலிதாவின் காலத்தில் தேர்தலில் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வந்தன. எடப்பாடியின் காலத்தில் எட்டு தேர்தல்களில் தொடர்ச்சியாகத் தோல்விதான் கிடைத்தது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், சசிகலா, தினகரன், பன்னீர்செல்வம் ஆகியவர்களின் பின்னால் சென்றுவிட்டனர். முக்கிய நிர்வாகிகள் பலர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்துள்ளனர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது.

மன்னிப்புக் கடிதம் கொடுத்தால் கட்சியில் அடிப்படை உறுப்பினராகலாம் என்ற எடப்பாடி பழனிசாமியின் அறிவிப்பு ஓ.பி.எஸ்., டி.டி.வி. தினகரன், சசிகலா ஆகியோருக்குப் பொருந்தாது எனவும் மற்ற அனைவருக்கும் பொருந்தும் எனவும் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலின்போது தமிழகத்தில் அதிக இடங்களில் போட்டியிட பாரதீய ஜனதாக் கட்சி விரும்புகிறது. பன்னீர், வாசன் போன்றவர்களை தாமரை சின்னத்தில் களமிறக்க பாரதீய ஜனதா விரும்புகிறது. ஆனால், பன்னீரை விட்டு வெகுதூரம் பாரதீய ஜனதா செல்கிறது.

பாரதீய ஜனதாவினதும், ஆளுநர் ரவியினதும் அண்மைக்கால நடவடிக்கைகளை தமிழக மக்கள் எரிச்சலுடன் பார்க்கிறார்கள். பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டபோதெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பாரிய வெற்றி பெறவில்லை. தமது தோல்விக்கு பாரதீய ஜனதாதான் காரணம் என கழகத்தின் மூத்த தலைவர்கள் பகிரங்கமாக அறிவித்தனர்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிரான வாக்குகளை திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக் கட்சிகள் பெற்றுவிடும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வாக்குகளை பன்னீர், சசிகலா, தினகரன் ஆகியோர் பங்குபோடப்போகின்றனர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கைக்குள் வைத்திருக்கும் எடப்பாடிக்கு தேர்தல் பாடம் புகட்டும். அதுவரை எடப்பாடி அதிகாரம் செய்வார்.

# பொருளாதார வளர்ச்சியை அடையவேண்டுமெனில் இலங்கையை உலகுக்கு திறந்துவிட வேண்டும்

## இந்திய வர்த்தகர்களுடனான விசேட சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த இலங்கையை உலகுக்கு திறந்துவிட எதிர்பார்த்துள்ளதாகவும், அது தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள் விரைவில் கொண்டு வரப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையை அதிக போட்டித்தன்மை கொண்ட பொருளாதார முறைக்குக் கொண்டு செல்வது தனது எதிர்பார்ப்பு எனத் தெரிவித்த ஜனாதிபதி, பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஊடாக வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் வியாழக்கிழமை (13) நடைபெற்ற இந்திய வர்த்தகர்களுடனான விசேட சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''பொருளாதார சுபீட்சத்திற்கான பாதையில் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைத் தொடர இலங்கை எதிர்பார்க்கிறது. இந்திய பொருளாதாரத்தை முன்னேற்ற பிரதமர் மோடி மேற்கொண்டுவரும் நிதிக் கொள்கை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் சுமார் எழுநூறு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமானவை. கேரளாவிலிருந்து இலங்கைக்கு வியாபாரம் செய்ய வந்த வரலாறு நமக்கு உண்டு. நவகமுவிலுள்ள பத்தினி ஆலயம் கேரள மக்கள் இந்நாட்டுக்கு வந்து வர்த்தகம் செய்யும்போது கட்டப்பட்டதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது ஆசியப் பிராந்தியத்தில் பலம் வாய்ந்த நாடாக இந்தியா தனது அதிகாரத்தை நிலைநாட்டியுள்ளது. ஆனாலும், மேற்காசிய நாடுகளும் பலமாக மாறியிருப்பதும் சிறப்பு வாய்ந்தது. இந்தியா போன்ற பலம் வாய்ந்த நாட்டுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் நன்மை பயக்கும். பிரதமர் மோடி மேற்கொண்ட நிதிக் கொள்கையால் பொருளாதாரத்தில் இந்தியா முன்னேற முடிந்தது. அந்த நிதிக் கொள்கைகள் இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்துக்கும் உதவக்கூடியதாக அமைந்துள்ளது.

நான் இலங்கையை மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரத்துக்கு கொண்டுசெல்லவே விரும்புகிறேன். பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் இலங்கையின் பொருளாதார நிலையை வலுவான நிலைக்கு உயர்த்த முடியும். அதற்கு சட்டவிதிகள் அவசியம். போட்டி, பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு தேவையான சட்டங்களை எதிர்காலத்தில் சீர்திருத்த எதிர்பார்க்கின்றோம்.

நமது பொருளாதாரத்தை வலுப்படுத்த, இந்தியாவுடன் நெருங்கிய உறவை வைத்திருக்க வேண்டும். இலங்கையின் பொருளாதார நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. இரு நாடுகளுக்குமிடையில் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு அதற்கான துறைகளை அவற்றில் ஈடுபடுத்த வேண்டும்.

இலங்கையில், இந்திய ரூபாவின் புழக்கம் குறித்து இங்கு கூறப்பட்டது. இந்திய ரூபா மட்டுமல்ல, டொலரும் புழக்கத்தில் இருந்தால் அது இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக அமையும். இலங்கையில் இந்திய ரூபா புழக்கத்தில் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுசெய்ய நடவடிக்கை எடுத்துவருகின்றோம். ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால், அது உலகுக்கு திறந்துவிடப்பட வேண்டும். அது தொடர்பான அவசர சட்ட சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படும்" என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.



இங்கு உரையாற்றிய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே,

"இந்தியாவைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலமாக இலங்கையில் வியாபாரம் செய்து வருகின்றனர். இந்த வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவுப் பாலத்தை உருவாக்க முடிந்துள்ளது. அது இலங்கை மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்துமென நான் நம்புகிறேன். இலங்கை மக்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் அந்த மக்களுடன் இந்தியா இருந்தது. கடந்த ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடியின்போது இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கு இந்திய அரசாங்கம் உட்பட வர்த்தக சமூகம் உதவிகளை வழங்கியது. இலங்கை, தற்போது நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வருகிறது என்றே கூறவேண்டும். நிதி நெருக்கடியின் போதும், இந்திய வர்த்தகர்கள் இலங்கையில் வியாபாரங்களை ஆரம்பித்து இலங்கையின் நிதி நிலைமை நன்றாக உள்ளது என்ற செய்தியை உலகுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

இலங்கையில் வர்த்தகம் செய்யும் இந்திய வர்த்தகர்களுக்கு கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையிலுள்ள அரசாங்கங்களின் ஆதரவு கிடைத்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறே ஆதரவளித்துள்ளார். இலங்கையை பொருளாதார ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கத்தின் மற்றும் வர்த்தக சமூகத்தினரின் ஆதரவு வழங்கப்படும் என்பதை இங்கு நினைவுகூர்கிறேன். இது இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு வழங்கப்படும் வாக்குறுதி என்றே கூறவேண்டும்" என்று இலங்கைக் கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வீடமைப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல, இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, திலும் அமுனுகம, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், முப்படை பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/



தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 16, 2023

## மாறவேண்டும் சரத் எம்.பியின் அடிமை சிந்தனை

மிகப்பெரிய தேசப்பற்றாளன் என தன்னை அடையாளப் படுத்திக் கொண்டு சிங்கள மக்கள் சார்ந்த கருத்துகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் சரத் வீரசேகர, தனது இனவாத முகத்தை மீண்டும் வெளிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அண்மைக்காலமாக அவர் ஆற்றிவரும் உரைகளை ஆராயும்போது, தமிழ் மக்களின் வரலாற்றை திரிபுபடுத்தும் நோக்கம் அதில் புதைந்திருப்பது புலனாகிறது. அவ்வாறே, தனது சிறப்புரிமையைப் பயன்படுத்தி வடக்கில் தமிழ் நீதிபதிகளை இலக்குவைத்து ஜூலை முதல் வாரம் அவர் சபையில் ஆற்றிய உரை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை, சிங்கள பௌத்த நாடு என்பதை தமிழ் நீதிபதிகள் விளங்கிக் கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக நீதிபதிகளும் செயற்படுவதால் பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என சரத் வீரசேகர சபையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகள் தொடர்பில் ஆராய்வதற்கு விஜயம் மேற்கொண்டிருந்த முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவின் பணிக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சரத் வீரசேகர செயற்பட்டிருந்தார். நீதிமன்ற விசாரணைகளில் அரசியல்வாதிகள் தலையிடக் கூடாது எனக் கூறி அவரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு நீதிபதி நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த சரத் வீரசேகர, தனது ஒட்டுமொத்த ஆத்திரத்தையும் பாராளுமன்றத்தில் கொட்டித்தீர்த்தார். அதுமாத்திரமன்றி, தமிழ் நீதிபதிகள், சட்டத்தரணிகளுக்கு எதிராக கடுந்தொனியில் கருத்து வெளியிட்டார்.

சரத் வீரசேகரவின் இந்தக் கருத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கில் சட்டத்தரணிகள் கடந்த வாரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன், அன்றைய தினம் நீதித்துறை முற்றாக முடங்கியிருந்தது.

அதுமாத்திரமன்றி, சரத் வீரசேகரவுக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் சிவப்புக்கொடி காட்டியது.

சரத் வீரசேகர எம்.பி.யின் கருத்து நாட்டின் அடிப்படைக் கட்டமைப்பான நீதிமன்றத்தின் மீதான மிக மோசமான தாக்குதல் என அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியது. ஜனநாயகம் நிலைத்திருப்பதற்கு நீதிமன்றம் சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்ற சுதந்திரத்துக்கு மதிப்பளிப்பது அரசாங்கத்தினதும் எதிர்த்தரப்பினரதும் கடமை என்பதுடன், நீதிமன்ற செயற்பாடுகள் மீதான எந்தவொரு தலையீடும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது எனவும் சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டது.

அண்மைக்காலமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமக்குரிய பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிமன்றத்தின் ஆதிக்கத்துக்குட்ட விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போக்கு மேலோங்கி வருவது தொடர்பில் அச்சங்கம் கவலை வெளியிட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் சரத் வீரசேகர சட்டத்தரணிகள் சங்கத்துக்கு ஆலோசனை கூறும் வகையில் பதிலளித்துள்ளார்.

"வடக்கு சட்டத்தரணிகள் பிரிவினைவாதிகள். நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறுவதை வன்மையாக மறுக்கிறேன். நமது நீதித்துறை சுதந்திரமாகவும் வெளிப்புற அழுத்தங்களிலிருந்து விடுபட்டதாகவும் இருக்க வேண்டும் என்பது நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் தெரியும். அதற்கு சட்டத்தரணிகள் சங்கம் விளக்கமளிக்கத் தேவையில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியும். எனது பௌத்த பாரம்பரியத்தின் எச்சங்கள் எவ்வாறு குண்டர்களால் அழிக்கப்படுகின்றன என்பதை சட்டத்தரணிகள் சங்கம் வடக்குக்குச் சென்று பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பழங்கால பௌத்த எச்சங்களை இடித்து சிவலிங்கத்தை வைத்து வழிபடும் முறையை அவதானிக்குமாறும் அவர்களுக்கு தெரிவிக்கிறேன். இடிபாடுகளை புனரமைக்கும் தொல்லியல் துறை அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதுடன், முல்லைத்தீவு சட்டத்தரணிகள்மீது பொய் வழக்குப் போட்டு புனரமைப்புப் பணிகளை நிறுத்துமாறும் அதுவரை கட்டப்பட்டதை இடித்துத் தள்ளும் நிலையும் உள்ளது.

நாட்டின் சட்டத்தை நிறுவுவதே உங்கள் சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தால் மோதலை ஏற்படுத்தக் கூடிய இதுபோன்று விடயங்களிலும் உங்கள் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். சட்டத்தரணிகள் சங்கத்துக்கு தேசப்பற்று இருந்தால் இவற்றையும் கவனிக்க வேண்டும்" என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் தமிழர்களில் தொல்லியல் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றமையின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இருந்துவந்தது. சரத் வீரசேகரவின் கருத்துகளைப் பார்க்கும்போது அந்த சந்தேகக் கண் தெளிகிறது.

இனவாதம் என்ற ஆயுதத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு வாக்குவேட்டையில் இறங்கிவிடலாம் என்ற எண்ணம் அவரது பேச்சில் மேலோங்கியிருக்கிறது. தனது நடத்தையில் நியாயம் இருக்குமானால் வடக்கில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றையாவது ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்?

எப்போதுமே தமிழர்களை அடிமைகளைப் போல சுட்டிப் பேசுவதன் பின்புலமும் நோக்கமும் என்ன? தொல்பொருள் இடங்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டவற்றில் அகழ்வுப் பணிகளையோ கட்டுமானப் பணிகளையோ மேற்கொள்ளக் கூடாது என்பதுதான் சட்டம். ஆயினும், அது அப்பட்டமாக மீறப்படுகின்றமையை அவர் அறிந்தும் அறியாததுபோல் தொடர்ச்சியாகப் பேசி வருகிறார்.

வெறும் வார்த்தைகளால் சிங்கள மக்களை திருப்திப்படுத்துவதன் ஊடாக தமிழர்களின் வரலாற்றுப் பாரம்பரியத்தை முற்றாக ஒழித்துவிட முடியாது. தமிழர்களுக்கு மிக நீண்ட, நெடிய வரலாறும் வரலாற்றுச் சான்றுகளும் உண்டு.

சிங்கள தேசம் என்பதை நிலைநிறுத்திக்கொள்வதற்காக ஒரு நாட்டின் பூர்வீகக் குடிகளை அடிமைப்படுத்த நினைக்கும் சரத் வீரசேகரவின் சிந்தனையில் மாற்றம் வரவேண்டும். அவ்வாறில்லாவிடின், தமிழர்களின் கோபமும் ஆவேசமும் மடைதிறக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

# தமிழ்த் தலைமைகள் பிரிந்து நின்று சாதிக்க முயல்வது என்ன?



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

தமிழர் விவகாரத்துக்கான தீர்வு குறித்த விடயத்தைப் பேசுபொருளாக்கி வழமை போன்று சிங்களத் தலைவர்களின் பாணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கை அரசியலில் ஓர் இனப் பதற்றத்தை சூடாக்கியுள்ளார். சுதந்திர தினத்தின் 75ஆவது வருட கொண்டாட்டத்துக்குள் தீர்வு என்று கூறிய ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடிக்குள் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் அவசியமா என்ற பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் கொழும்பில் மாத்திரமல்ல, யாழ்ப்பாணத்திலும் தமிழர் விவகாரத்தக்குத் தீர்வின்றியே சுதந்திர தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தார்.

இறுதியில் தான் மட்டும் தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காணமுடியாது. சகலரதும் ஒத்துழைப்பும் தேவை என்று தமிழர் விவகாரத் தீர்வுக்கு முத்தாய்ப்பு வைத்தார்.

இந்த அறிவிப்புடன் வெளிநாடு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டு கலரிக்காக (gallery) தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காணப்படும் என வாக்குறுதியளித்தார். சிங்களத் தலைமைகளின் வழமையான பாணியிலேயே ரணில் விக்கிரமசிங்க நடந்துகொண்டார். அதேவேளை, தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்ற கோரிக்கையையும் சிங்களத் தலைமைகளின் பாணியிலேயே முன்வைத்தார். போர் மௌனிக்கப்பட்ட 2009க்குப் பிற்பட்ட காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாணியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய அணுகுமுறையும் அச்சொட்டாக அமைந்திருந்தது.

இதில் இன்னொரு ஒற்றுமையும் உள்ளது. மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் தமிழரசுக் கட்சியானது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் கூட்டுக் கட்சிகளையும்

**பௌத்த மேலாதிக்கம் மற்றும் காணிக் கொள்ளை போரிலிருந்து மக்களையும் மண்ணையும் காப்பாற்றப் போவது யார்?**

இணைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைக்குச் சென்று பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இறுதியில் பேச்சுவார்த்தை ஓர் அங்குலம்தானும் நகரவில்லை என்று தமிழ் மக்களுக்கும் உலகத்துக்கும் கூறினர். பேச்சுவார்த்தை ஓர் அங்குலம்தானும் நகராத நிலையில், எவ்வாறு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன என்பது புரியாத புதிராக இன்றுவரை உள்ளது.

ஆனால், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நடக்காத உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்காகக் காவு கொடுத்த தமிழரசுக் கட்சி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டது. இறுதியில் பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை என்று பேச்சுவார்த்தையிலிருந்து தமிழரசுக் கட்சி விலகிக்கொண்ட போதும் தற்போது ஜனாதிபதி சட்டத்தரணியும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி ஜூலை வரை அவகாசம் கேட்டுள்ளதாகவும் அதற்கிணங்க ஜனாதிபதி கேட்டுள்ள கால அவகாசம் வரை பொறுத்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

### தீர்வு இல்லை – புளொட்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், தமிழர் விவகாரத்துக்கான தீர்வை வழங்க சிங்களத் தலைமைகள் முன்வராது என்று அறிவித்துள்ளார்.

புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனுக்கு இந்த ஞானம் எவ்வாறு உதயமாகியது என்பது தெரியவில்லை. ஆனால், தமிழ் பேசும் சாதாரண மக்களுக்கு இந்த ஞானம் என்றோ உதயமாகிவிட்டது.

தமிழ்த் தலைமைகளில் புளொட் போன்ற அமைப்புகள் ஆயுதமேந்த ஆரம்ப காலத்தில் இந்த நிலைப்பாடே காரணமாக இருந்தது என்பது பரம இரகசியமல்ல. இவர்கள் காலப்போக்கில் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு சிங்களத் தலைமைகள் தீர்வைத் தரும் என்று நம்பி இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இணைய முயற்சித்ததன் தோல்வியின் எதிரொலியாக இந்த ஞானோதயம் பிறந்திருக்கலாம் அல்லது தமிழர் அரசியலில் தமது எதிர்கால இருப்புக்கான கவசமாக இந்த நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால், சித்தார்த்தன் உண்மையைப் போட்டு உடைத்துள்ளார். இந்த உண்மை சிங்களத் தலைமைகளுக்கு ஒன்றும்தெரியாத - புரியாத விடயமல்ல. இந்த உண்மைகள் எல்லாம் சிங்களத் தலைமைகளுக்கு எருமை மாட்டில் மழை பெய்வது போன்றதுதான்.

### அடுத்து என்ன ? – What Next?

"அடுத்து என்ன?" என்பதுதான் இன்றைய கேள்வியாகும். தற்போதைய தமிழ்த் தலைமைகள் எவரிடமும் இதற்கான பதிலோ அல்லது அடுத்தகட்ட நகர்வுக்கான திட்டமிடலோ அல்லது திட்டமோ கைவசம் இல்லை என்பதுதான் உண்மை. 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்த் தலைமைகளின் நிலை இதுதான்.

**மனிதத் துயரத்திலிருந்து அரசியல் இலாபங்களை பார்க்கும் அரசியல்வாதிகள்**

### மைத்ரி ஏன் யாழ். வந்தார்?

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேனவிடம் 13ஆவது திருத்தம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். அதற்குப் பதிலளித்த அவர், தாம் தற்போது ஆட்சியதிகாரத்தில் இல்லை என்றும் அது குறித்து தற்போது ஆட்சியில் இருப்பவர்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்து பாராளுமன்றில் அறிவித்தபோது முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, ஆளுந்தரப்பு இதுபற்றி முடிவெடுக்க வேண்டுமெனக் கூற முன்வரவில்லை. மாறாக, அதிகாரப்பகிர்வுக்கு உள்ளூராட்சி சபை அமைப்பே போதுமானது எனக் குறிப்பிட்டார்.



முழுத் தேங்காய் கிடைத்தாலும் பயனில்லை நாய்க்கு!

### சிங்களத் தலைமைகளிடையே தமிழர் விவகாரத்தில் வேறுபாடுகள் இல்லை

சிங்களத் தலைமைகள் தமிழர் விவகாரத்துக்கான தீர்வு குறித்து கொழும்பில் ஒன்றும், தமிழர் பிரதேசங்களில் ஒன்றும், வெளிநாடுகளில் ஒன்றும் கூறுவது வழமையானது. அது ரணில் விக்கிரமசிங்கவாகவோ அல்லது மஹிந்த ராஜபக்ஷவாகவோ அல்லது மைத்ரிபால சிறிசேனவாகவோ இருக்கலாம். சிங்களத் தலைமைகளிடையே தமிழர் விவகாரத்தில் வேறுபட்ட நிலைப்பாடுகள் இல்லை என்பதைத்தான் இந்தச் சம்பவங்கள் மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்டி நிற்கின்றன.

### சிங்களத் தலைமைகளின் இரட்டை வேடம்

இதில் விசித்திரம் என்னவெனில், இந்த இரட்டை வேடத்தை தமிழர் மண்ணில் கேள்வி கேட்க யாரும் இல்லாது போய்விட்டனரே என்பதுதான்.

அது மாத்திரமல்ல, நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் மேவிய நிலையில், தமிழ் மக்கள் மீது மரபுரிமைப் போரை பௌத்த மேலாதிக்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.



குரங்கும் அப்பத்துண்டும்...

தமிழர் தாயகத்தை பௌத்த விகாரைகளும் சிங்களக் குடியேற்றங்களும் ஆக்கிரமித்து நிற்கின்ற வேளை, முன்னாள் ஜனாதிபதியின் யாழ். வருகை மூலம் தமிழ் மக்களுக்கு தெற்கிலிருந்து கொண்டுவந்த செய்தி என்ன என்பதுதான் இன்றைய கேள்வியாகும்.

அதிகாரப்பகிர்வுக்கு மாகாண சபைகள் அல்ல, உள்ளூராட்சி சபைகளே போதுமானது என பாராளுமன்றில் பிரகடனப்படுத்தும் சுதந்திரக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன எவ்வித குற்ற உணர்வோ கூச்சமோ இல்லாமல் ஒன்றும் நடக்காததுபோல் தமிழ் மக்கள் முன் தலைகாட்டி நிகழ்வுகளிலும் பங்கேற்று மாலை மரியாதைகளுடன் கொழும்பு திரும்பியுள்ளார்.

### தேர்தலுக்கான அரசியல் அரங்கம்

இவை அனைத்தும் தேர்தலுக்கான அரசியல் அரங்கம் என்பதைத் தவிர, வேறொன்றும் இல்லை. இவர்களுடன் இணைந்து இணக்க அரசியல் நடத்துபவர்களுக்கும் தென்னிலங்கைக் கட்சிகள் மூக்கணாங்கயிறு கட்டி வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. இவர்களின் சுதந்திரம் மூக்கணாங்கயிற்றின் நீள சுற்றுவட்டத்துடன் மட்டுப்படுத்தப்பட்டது என்பது இணக்க அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தெரியும்.

உண்மையில் இணக்க அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகளும் சரி, மறைமுக இணக்க அரசியலை நடத்தும் தமிழ்த் தலைமைகளும் சரி அவர்களது பேச்சுகள், அறிக்கைகள் எல்லாம் தமிழ் மக்களை உசுப்பேற்றி தேர்தலை நோக்கி தமிழ் மக்களை தமிழ் ஊடகங்களுக்கூடாக வழிநடத்தும் உத்தி என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

இந்த ஊடகப் போரால் பேரினவாதச் சக்திகளின் பயணம் தடுத்து நிறுத்தப்பட்டதாக 2009க்குப் பிற்பட்ட தமிழர் அரசியலில் பதிவுகள் ஏதும் இல்லை.

தற்போது தமிழ் மக்கள் பேரினவாத பேரலைக்குள் மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பௌத்த விகாரைகளாகவும் சிங்களக் குடியேற்றங்களாகவும் தமிழர் பிரதேசங்கள் கரைந்துகொண்டு போகின்றன. இதனைத் தடுத்து நிறுத்தக்கூடிய சக்தி தமிழ்த் தலைமைகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தலைமைகள் தேர்தல்களை நோக்கி காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

### இளைஞர்கள் அரசியல்வாதிகளாக வேண்டும்

தமிழ்த் தலைமைகள் ஈகோவுக்குள்ளும் சுயநலத்துக்குள்ளும் மூழ்கிக் கிடக்கின்றன. மாற்றீடாக இளைஞர்கள் அரசியல்வாதிகளாக வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதற்கும் அப்பால் தமிழர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பது உண்மைதான். இவர்களில் யார் உண்மையான தலைவர்கள்? தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் இறுதிவரை போராடுபவர்கள் யார் என்று அடையாளம் காண முடியாதிருக்கின்றது. தமிழர்களிடம் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்று பின்னர் சுயநல பாதையில் பயணிக்கின்றனர். இதனால் மக்கள் எவரையும் நம்பத் தயாராக இல்லை. தமிழ் மக்களுக்காக மூச்சுமுட்ட கத்தி,

**சிங்கள பௌத்தத்திற்குள் கரைந்து போன நிலையிலான மண்ணும் மக்களுமே மிஞ்சுவர்**

மக்களின் பிரதிநிதியாகி சிங்கள அரசாங்கம் குதிரை ஓட குனிந்து நிற்கின்றது - என தமிழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மிக அப்பட்டமான தரகு அரசியல் மாத்திரமே நடைபெறுகின்றது என்று கூறும் தமிழ் மக்கள் இவர்கள் தமிழ் மக்களை உருப்பட விட மாட்டார்கள் என்றும் கூறுகின்றனர்.

இலங்கை அரசியல்வாதிகள் மக்களின் துன்பங்களை ஆயுதமாக்குவதில் திறமையானவர்கள், கைதேர்ந்தவர்கள் என தென்னிலங்கை மக்கள் இன்று வெளிப்படையாகக் கூறத் தொடங்கிவிட்டனர். தமிழ்த் தலைமைகளும் தமிழ் அரசியல்வாதிகளும் இதற்கு விதிவிலக்கல்ல என்பது தமிழ் மக்களுக்கும் தெரிந்த விடயமே.

மனித துயரத்திலிருந்து ஏதேனும் அரசியல் இலாபங்களைப் பெற முடியுமா என்பது குறித்தே சிந்தித்து தமிழ்த் தலைமைகள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

தங்களின் சலுகைகளையும் அரசியல் அந்தஸ்தையும் உயர்த்திக்கொள்வது மட்டுமே அவர்களின் கண்களுக்குத் தெரிகின்றன என்றால் அது மிகையாகாது என்றும் தமிழ் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சரி, தமிழர்கள் சார்பாக உள்ள அரசியல் கட்சிகளும் சரி இது வரைக்கும் எத்தனைமுறை இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமருடன் தமிழர் விவகாரம் குறித்து கலந்துரையாடியுள்ளார்கள்? தமிழ்த் தலைவர்கள் ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதுடன் சரி. அதற்கு மேல் எதுவும் இல்லை செய்யவும் மாட்டார்கள் என்ற தமிழ் மக்களின் கோபக்கனல் வார்த்தைகளுக்கு தமிழ்த் தலைமைகள் கூறப்போகும் பதில் என்ன?

இதற்கும் அப்பால் தமிழ் மக்களின் இருப்புக்கே பெரும் அச்சுறுத்தலாக உள்ள இவ்வேளையில் வருந்தத்தக்க விடயம் என்னவெனில், தமிழர் விவகாரத்தில் தமிழ்த் தலைமைகள் கூட்டாகவோ அல்லது பொது வேலைத்திட்டத்தை முன்வைத்தோ செயலில் இறங்கத் தயாராக இல்லை என்பதுதான்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

# சண்டே சாம்பார்



ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று, உச்சபட்ச அதிகாரப் பரவலாக்கலை வழங்க வேண்டும். அந்த இறுதித் தீர்வை எட்டுவதற்குள் உடனடியாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும், தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து அனுப்பும் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணம் மேற்கொள்ளும்போது, மேற்படி விவகாரத்தை வலியுறுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தியப் பிரதமரிடம் இந்தக் கடிதத்தின் மூலம் 6 கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் விடுதலை இயக்கம் (ஈ.பி.ஆர்.எல்.எவ்), ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளும், சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டு, இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ளன.

கடந்த புதன்கிழமை சுரேஸ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் கட்சித் தலைவர்கள் கூடி, கடிதத்தில் கையொப்பமிட்டனர். ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அப்போது கொழும்பில் தங்கியிருந்ததால், அவர் அன்று கையொப்ப மிடவில்லை.

5 கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்ட கடிதத்தில் செல்வம் அடைக்கலநாதன் கடந்த வியாழக்கிழமை (13) கையொப்பமிட்ட பின்னர், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் கடிதம் கையளிக்கப்பட்டது.

இந்தியா செல்லும் ரணில் விக்கிரமசிங்கவிடம் இலங்கைத் தமிழர்களுக்கு அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்குமாறு புதுடில்லியிடம் வலியுறுத்த வுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் மக்கள் வெளியக சுயநிர்ணய அடிப்படையில், விரும்பினால் பிரிந்து செல்லும் அம்சங்களைக்கொண்ட, உச்சபட்ச சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்குமாறு கோரவுள்ளதாக தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

13ஆவது திருத்தத்தை உடனடியாக அமுல்படுத்துமாறு இலங்கையை வலியுறுத்தும்படி, இந்தியப் பிரதமர் நரேந்தர மோடியை கோருவதென்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தீர்மானித்து, கடந்த வருடம் கடிதமொன்று அனுப்பப்பட்டது.

இந்தக் கடிதத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியும் கையொப்பமிட்டிருந்தது. அந்த சமயத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி கையொப்பமிட விரும்பாமல் இழுத்தடித்து வந்தது. இதே இழுபறி, தற்போது மீண்டும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### திம்பு பேச்சின் அடிப்படையில் இந்தியா உதவ வேண்டும்: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

ஒற்றையாட்சி கட்டமைப்பிற்குள் உள்ள எந்தவொரு முன்மொழிவையும் தமிழ் மக்கள் நிராகரிப்பதை இந்தியா ஆதரிக்க வேண்டும், அதற்குப் பதிலாக தமிழ்த் தேசத்தை அங்கீகரித்து பாதுகாக்கும் மற்றும் தமிழ் மக்களின் பிரிக்க முடியாத சுய உரிமையை உணர அனுமதிக்கும் இலங்கைக்கான கூட்டாட்சி அரசியலமைப்பை ஆதரிக்க வேண்டும் என்று எங்கள் அமைப்பு கேட்டுக்கொள்கிறது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

அந்த அமைப்பின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டு,

## ஆன்மீகப் பயணங்களில் பிஸியாக இருக்கும் கோட்டா

இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளனர்.

“பொதுவாக கடந்த 75 ஆண்டுகால கொள்கைகளும், குறிப்பாக தீர்க்கப்படாத இனப்பிரச்சினையும் இலங்கையை பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இயற்கையாகவே, எதிர்காலம் கணிசமாக சிறப்பாக இருக்கவேண்டுமானால், கொள்கைகள் கணிசமாக வேறுபட்டிருக்க வேண்டும். இலங்கையில் சமீபகால மக்களின் எழுச்சிகள் ஒரு முழுமையான “அமைப்பு மாற்றத்திற்கு” தொடர்ந்து அழைப்பு விடுத்துள்ளமை, வழமையான அதிகார கட்டமைப்பை மக்கள் விருப்பமில்லை என்பதை உணர்த்துகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று ஒற்றையாட்சி அமைப்பு. இலங்கையின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, நாட்டின் கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரை, அர்த்தமுள்ள சுயாட்சியை அடைய முடியாது என்ற அடிப்படையில் தமிழர்கள் அதை நிராகரித்தனர். 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 36 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அது அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தை விட நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. நாட்டின் உயர் நீதிமன்றங்களிலிருந்து 30க்கும் மேற்பட்ட நீதித்துறை தீர்ப்புகள் உள்ளன, அவை அரச கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரை கொழும்பிலுள்ள அரசாங்கம் அனைத்து அதிகாரங்களையும் தேக்கி வைத்திருக்கும் இடமாக இருக்கும் மற்றும் குறிப்பாக அதிகாரப்பகிர்வுக்கு எதிராக உள்ளது.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுக்கான அடிப்படையான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்ப்படுத்த வேண்டும் என்று இந்தியா கோரி வருகிறது. ஆனால், 13வது திருத்தச் சட்டத்தின் பல்வேறு விதிகளை அமுல்படுத்தக் கோரி உயர் நீதிமன்றங்களை அணுகும்போதெல்லாம், நீதிமன்றங்களின் தீர்ப்புகள் மேலே குறிப்பிடப்பட்ட வையாகவே உள்ளன.

13ஆவது திருத்தத்தை பேச்சுவார்த்தைக்கான ஆரம்பப் புள்ளியாக தமிழர்கள் கருதுவதில் கூடுதல் அரசியல் ஆபத்து உள்ளது. நமது வரலாற்றில் முதன் முறையாக தமிழர்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்று அர்த்தம். இத்தகைய நடவடிக்கையானது, 13ஆவது திருத்தத்தை ஏற்று தமிழர்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளதால், இலங்கையில் இன முரண் இனி இருக்காது என்ற சட்ட நிலைப்பாட்டை

## இந்தியாவுக்குப் பறந்த தமிழ்க் கட்சித் தலைவர்களின் கடிதங்கள்

இலங்கை அரசு எடுக்கும் அபாயம் உள்ளது. இந்தக் காரணங்களால்தான் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு தொடக்கமாகக் கூட ஏற்க எங்கள் அமைப்பு மறுக்கிறது.

1985ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் இலங்கை அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தையின்போது தமிழர்கள் ஒற்றுமையாக உச்சரித்த திம்புக் கொள்கைகளில் கூறப்பட்ட அடிப்படைக் கொள்கைகளை எங்கள் அமைப்பு தீவிரமாக நம்புகிறது.



இந்தக் காரணங்களால்தான் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு தொடக்கமாகக் கூட ஏற்க எங்கள் அமைப்பு மறுக்கிறது. பேச்சுவார்த்தைகள் தீவிரமாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டுமெனில், தலைவர்கள் பேச்சுவார்த்தைகளை சுட்டிக்காட்டி வலியுறுத்துகின்றனர்.

ஒற்றையாட்சிக்கு அப்பால் செல்வதன் மூலமே தீர்வை எட்ட முடியும் என்பதை சிங்கள தேசம் மக்களுக்குச் சொல்ல வேண்டும். மாநில கட்டமைப்பு மற்றும் ஒரு கூட்டாட்சி கட்டமைப்பை கருத்திற்கொண்டு அதே நேரத்தில் அரசியலமைப்பு ரீதியாகவும் முயல்கிறது.

### நாட்டின் ஒற்றுமையை உறுதிசெய்ய வேண்டும்

1985 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின்போது தமிழர்கள் ஒற்றுமையாக உச்சரித்த திம்புக் கொள்கைகளில் கூறப்பட்ட அடிப் படைக் கொள்கைகளை எங்கள் அமைப்பு தீவிரமாக நம்புகிறது. கோட்டாபய ஜனாதிபதியால் நியமிக் கப்பட்ட பிசி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான நிபுணர்கள் குழுவிடம், திம்பு கொள்கைகளின் அடிப்படையில் நாங்கள் எங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பித்தோம்.

அந்த முன்மொழிவுகளின் சுருக்கமாக, அது ஒரு கூட்டாட்சி கட்டமைப்பாகும், இது சிங்கள தேசத் தையும் தமிழ் தேசத்தையும் ஐக்கிய இலங்கை அரசுக்குள் அவற்றின் ஒவ்வொரு தனித்த இறைமை யையும் அங்கீகரிக்கிறது. வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் மற்றும் இலங்கை யில் மலையக தமிழ் மக்களின் அபிலாஷைகள் உள்ளடக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது - என தெரிவித்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் கொன்சியூலர் ஜெனரல் ராகேஷ் நட்ராஜிடம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இந்தியப் பிரதமருக்கான கடிதம் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனால் கடந்த திங்கட்கிழமை (10) மாலை ஒப்படைக்கப்பட்டது.

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாணியில் தமிழரசுக் கட்சியும் மோடிக்குக் கடிதம்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனித்து கடிதம் அனுப்பியதைப்போன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தனித்துக் கடிதம் அனுப்பியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்துக்கு முன்னதாக இந்தியப் பிரதமர் மோடிக்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தக் கோரும் கடிதத்தை அனுப்புவதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானித் தது. அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களின் கையெழுத்துடன் அனுப்புவதற்கு முடிவு செய்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் ஒப்பத்துக்காக கடிதம் ஒப்படைக் கப்பட்டது. அவர் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருவதை மாத்திரம் குறிப்பிட் டுள்ளமையால் அதனை ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சமஷ்டியை வலியுறுத்தி கடிதம் அனுப்பியதைப்போன்று, அந்தக் கோரிக்கையை உள்ளடக்கி இலங்கைத் தமிழரசுக் கட்சி தனியாக அனுப்புவதை சம்பந்தன் விரும்பியதையடுத்து தயாரிக்கப்பட்டுள்ள புதிய கடிதம் புதுடில்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்நாட்டுக்கு வருகை தந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோஹன் குவத்ரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த செவ்வாய்க்கிழமை (11) பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்திக்கொண்டு, இரு நாட்டு மக்களுக்கும் பலனளிக்கும் வகையில் சமூக மற்றும் பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப் பட்டது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் மறுசீரமைப்பு

## அமெரிக்க, இந்தியத் தூதுவர்கள் சம்பந்தனுடன் முக்கிய சந்திப்பு

வேலைத்திட்டம் தொடர்பில் இந்திய வெளியுறவுச் செயலாளருக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியின்போது இலங்கைக்கு, இந்தியா வழங்கிவரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார்.

அதேபோல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த இந்திய விஜயம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்ததோடு, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம்

## மறுசீரமைக்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சி

பிரதானியுமான சாகல ரத்நாயக்கவையும் இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோஹன் குவத்ரா சந்தித்துக் கலந்துரையாடினார்.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டம் முடிவடைந்த கையோடு இந்திய வெளியுறவுச் செயலரை சந்தித்த ரணில், வேறு பல முக்கிய விடயங்கள் குறித்தும் கருத்துகளைப் பகிர்ந்துள்ளார். இந்திய வெளியுறவுச் செயலரை சந்தித்த பின்னர் பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு நடத்திய செயலமர்வு ஒன்றிலும் ஜனாதிபதி கலந்துகொண்டார். பின்னர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி திறப்புவிழாவுக்காக இரத்தினபுரி நோக்கி பயணமானார் ஜனாதிபதி.

### அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுக்கு ரணிலைத் தள்ளவேண்டும் டில்லி - கோரிக்கை விடுத்தார் சம்பந்தன்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் செயற்படுத் தப்படாமலுள்ள அனைத்து விடயங்களையும் செயற்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலை வரும் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் கோரியுள்ளார். இந்த விடயத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்துக்குக் கொண்டுசெல்வதாகத் தூதுவர் பதிலளித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, பிரதித் தூதுவர், அரசியல் செயலர் கடந்த புதன்கிழமை நேரில் சென்று சந்தித்தனர். இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றது.

சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-

"இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை யொட்டிய பேச்சுகள் எல்லாம் அவருக்குத் தெரியும். நாட்டின் தலைவராகத் தெரிவாகிய பின்னர் முதல் தடவையாக அவர் இந்தியாவுக்குச் செல்கின்றார். இதன்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கின்றார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் செயற்படுத்தப்படாத பகுதிகளை செயற்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் அழுத்தம் கொடுக்க வேண்டும். குறிப்பாக, அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வலியுறுத்த வேண்டும் என்று சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயத்தை உடனடியாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தெரியப்படுத்துவதாக தூதுவர் கோபால் பாக்லே உறுதி யளித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் முடிவடைந்த பின்னர் என்ன நடந்தது என்பதை மீண்டும் சந்தித்து விளக்கமளிப்பதாகவும் தூதுவர் பாக்லே, சம்பந்தனிடம் தெரிவித்தார்" - என்றார்.

### சம்பந்தனை திடீரென சந்தித்த அமெ. தூதுவர் - தமிழர் விவகாரம் தொடர்பில் முக்கிய பேச்சு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையில் சந்திப்பு வியாழனன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையில் தமிழர்கள் மற்றும் பிற சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான சமூகத்தின் கோரிக்கைகள் தொடர்பான விரிவான உரையாடல் இடம்பெற்றது என்று அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது ட்விட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அமெரிக்கத் தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

### ஆன்மீகப் பயணங்களில் பிஸியாக இருக்கும் கோட்டா

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன சிங்கப்பூரில் இருந்தார். மருத்துவப் பரிசோதனைக்காக அவர் அங்கு சென்றிருந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நாடு திரும்பிய அவர், அதே விமானத்தில் வந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுடன் நீண்டநேரம் உரையாடியபடி வந்தார். ஜூன் 24ஆம் திகதி கம்போடியா மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகளுக்கு யாத்திரை சென்ற கோட்டாபய இப்போது ஆன்மீக பயணங்களுக்கு முக்கியத்துவமளித்து செயற்படுவதாக சொல்லப் படுகிறது.

### மறுசீரமைக்கப்படும் ஐ.தே.க.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் எதிர்வரும் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் மாநாடு ஒன்றை நடத்தி கட்சிக்கு புதிய யாப்பை கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த யாப்பின் பிரகாரம் கட்சியின் பொதுச் செயலாளரின் அதிகாரங்கள் குறைக்கப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிகொத்தவின் அன்றாட நிர்வாகப் பணிகளுக்கு மட்டுப்படுத்தப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரவி கருணாநாயக்கவுக்கு பொதுச் செயலாளர் பதவியை வழங்கி பரந்த அதிகாரங்களை வழங்குவதற்கு ரணில் முன்னர் தயாராகியிருந்த போதிலும், ஜனாதிபதியின் நெருங்கிய சகா ஒருவரின் அழுத்தம் காரணமாகவே ரணில் இந்த புதிய முடிவை எடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி தற்போதுள்ள ஒரு துணைத் தலைவர் பதவிக்குப் பதிலாக ஏழு அல்லது எட்டு துணைத்தலைவர் பொறுப்புகள் உருவாக் கப்பட்டு கட்சியின் அனைத்து அமைப்பு செயல் பாடுகளும் இந்த ஏழு அல்லது எட்டு தலைவர் களுக்கே ஒதுக்கப்படும் என கூறப்படுகிறது. இந்த தலைமைக் குழுவுக்கு (அரசியல் நடவடிக்கை குழு) என பெயரிடப்பட்டு ருவன், அகில, ரவி, சாகல, வஜிர, ஹரின், மனுஷ, பாலித ரங்கேபண்டார ஆகியோரை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் ஒரே அந்தஸ்து வழங்கப்பட்டு, இவர்களில் திறமையானவர்களை முன்னோக்கிக் கொண்டுசெல்வதே ரணிலின் நோக்கமாகும்.



# தமிழ்த் தலைவர்களே அடிப்படைவாதிகள்!

## சரத் வீரசேகர எம்.பி. அதிரடி

உரையாடல் - நா.தினுஷா

**அண்மையில் முல்லைத்தீவு பிரதேசத்துக்குச் சென்றிருந்தீர்கள். அதனைத் தொடர்ந்து உங்கள் மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. உண்மையில் அங்கு என்ன நடந்தது?**

இதற்கு முன்னர் அங்கு நான் சென்றதில்லை. அதன் காரணமாகவே அங்கு சென்றிருந்தேன். அதன்போது, நீதவானும் பரிசோதனைக்காக அங்கு வந்திருந்தார். மேலும், சட்டத்தரணிகள், சிவிலியன்கள் சிலரும் விளக்கமளிக்க வந்திருந்தார்கள்.

திரிசூலமொன்றை வைத்து வழிபாட்டில் ஈடுபடுவதற்கு அனுமதி கோரியிருந்தார்கள். அதற்கு நான், "நீங்கள் நேர்மையானவர், இந்த விடயத்துக்கு நீங்கள் ஒரு பதிலை வழங்க வேண்டும்" என்று நீதவானிடம் கோரினேன். அங்கிருந்த சட்டத்தரணிகள் எனது கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள்.

நீதவான் எனது கோரிக்கையை நிராகரித்திருந்தார். அதற்கு நான் எந்தப் பதிலும் வழங்கவில்லை. அமைதியாக இருந்துவிடடேன்.

அந்த இடத்தில் எந்த முரண்பாடும் இடம்பெறவில்லை. நான் அனுமதி கேட்டபோதிலும் அதற்கு அவர் அனுமதி வழங்கவில்லை. அதன்பின்னர் அதுகுறித்து நான் எதுவும் பேசவில்லை.

**இருந்தபோதும் , நீங்கள் நீதித்துறையை அவமதித்துவிட்டதாக குறிப்பிட்டல்லவா வடக்கு, கிழக்கிலுள்ள சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்?**

எனது பாராளுமன்ற உரையை சுட்டிக்காட்டியே சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையை சகலரும் தெளிவாக கேட்கவேண்டும். நான் நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக தெரிவித்தே சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், அந்த ஆர்ப்பாட்டத்தை நான் கணக்கிற்கொள்ளவில்லை.

இருந்தபோதும், நீதித்துறைக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியதாக தெரிவித்து சட்டத்தரணிகள் சங்கம் எனக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தது.

நான் அவ்வாறு நீதித்துறைக்கு அவதூறு எதுவும் ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்து சட்டத்தரணிகள் சங்கத்துக்கு பதில் கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளேன். அவ்வாறு நான் எந்த அச்சுறுத்தலையும் விடுக்கவில்லை. அவ்வாறு அச்சுறுத்தல் விடுக்க எண்ணியதும் இல்லை.

இருந்தபோதும், நீதித்துறைக்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனே அச்சுறுத்தல் விடுத்தார். அவரே, உயர் நீதிமன்றத்தை வீட்டுக்குச் செல்லுமாறு தெரிவித்து நீதித்துறைக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் எமது நீதித்துறையை முழுமையாக காட்டிக்கொடுத்தார்கள். காட்டிக்கொடுத்தது மாத்திரமல்லாமல், ஊழல்வாதிகள் என்று அறிவித்தார்கள். அதன்போது, சட்டத்தரணிகள் சங்கமோ அல்லது முல்லைத்தீவிலுள்ள சட்டத்தரணிகளோ எதுவும் கூறவில்லை.

உண்மையைக் கூறி எமது நீதித்துறையின் மதிப்பை பாதுகாத்துக்கொள்ள நானே போராடினேன். அவ்வாறு செயற்பட்ட நான் எவ்வாறு நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுப்பேன். ஆகவேதான் என்னுடைய பாராளுமன்ற உரையை முறையாக கேட்க வேண்டும் என்று கோருகிறேன்.

**வடக்கு பிரதேசங்களில் பௌத்த தொல்பொருள் ஆதாரங்கள் இருக்கின்றன என்று நீங்கள் கூறுவதுபோன்று, அங்கு இந்து சமயத்துக்கான தொல்பொருள் ஆதாரங்கள் இருப்பதாக அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கூறுகிறார்கள். இவ்வாறு இரு நிலைப்பாடுகள் இருக்கும்போது இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது?**

இரு நிலைப்பாடுகள் இருக்கின்றன என்பது உண்மையாகும். ஆனால், அந்த நிலைப்பாடுகளை உறுதியாக்குவது யார்? நானோ, நீங்களோ, முல்லைத்தீவிலுள்ள சட்டத்தரணிகளோ அல்லது தொல்பொருள் ஆதாரங்களை உடைத்து அழிக்கும் குண்டர்களோ இந்த நிலைப்பாடுகளை உறுதிப்படுத்தப்போவதில்லை. அதனை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளே தீர்மானிக்க வேண்டும்.

அந்த அதிகாரிகளுக்கு அதற்கான அதிகாரமும் இருக்கிறது. அதன் காரணமாகவே பௌத்த தொல்பொருள் ஆதாரங்களை இனங்கண்டு, பௌத்த தொல்பொருள் ஆதாரங்களைக்கொண்ட முக்கிய அறிக்கையாகக் கருதப்படும் மகாவம்சத்தை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட இடங்களில் இருக்கும் தொல்பொருள் ஆதாரங்களை ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்துகிறார்கள். அந்த தொல்பொருள் ஆதாரங்கள், விகாரைகள், ஆலயங்கள் எந்த மன்னனின் காலத்தில் உருவாக்கப்பட்டது என்பதை அந்த அதிகாரிகள் உறுதிப்படுத்துகிறார்கள்.

**புராதன எச்சங்கள் குறித்து தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளே இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும்**

அவ்வாறு அறிவிக்கப்பட்ட இடமொன்றில் திரிசூலமொன்றை வைத்து விளக்கேற்றி வழிபடுவது தவறான செயற்பாடாகும். தென்பகுதிகளிலுள்ள கோவில்களை உடைத்துவிட்டு அந்த இடங்களில் புத்தர் சிலைகளை நாங்கள் அமைக்கப்போவதில்லை. ஒரு இடத்தை பார்த்ததும் இங்கு இருப்பது பழைமையான பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலை, தூண்கள் என்பன பௌத்த விகாரை என்பதை உறுதிப்படுத்துகின்றன என்பதை எந்தவொரு நபராலும் இலகுவாக புரிந்துகொள்ள முடியும். அவ்வாறிருக்கையில், அங்கு எவ்வாறு இந்து ஆலயமொன்று இருந்திருக்க முடியும்.

கொழும்பில் கூட தேவையானளவு இந்துக் கோவில்கள் இருக்கின்றன. ஆனால், அதற்கு நாங்கள் எதிர்ப்பை வெளியிடுவதில்லை. சமாதானமாக இருக்கும் பௌத்த மற்றும் இந்து மக்கள் மத்தியில் முறுகல் நிலையை ஏற்படுத்தவே தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக்கிறார்கள். அடிப்படைவாத தமிழ் அரசியல்வாதிகளே இவ்வாறான பிரச்சினைகள் உருவாகுவதற்கு காரணமானவர்கள்.

இதுபோன்ற செயற்பாடுகளை தடுத்துநிறுத்த நாங்கள் அறிவுபூர்வமாக சிந்தித்துச் செயற்பட வேண்டும். நாங்களும் கோவிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபடுகின்றோம். நாங்களும் இந்து தெய்வங்களை மதிக்கின்றோம். அவ்வாறிருக்கையில் எதற்காக பௌத்த - இந்து மக்கள் மத்தியில் முரண்பாட்டை ஏற்படுத்துகிறார்கள் என்பது புரியவில்லை.

இது 2000 வருடங்கள் பழைமையான பௌத்த கட்டடம். இவ்வாறு அடையாளம் காணப்படும் ஆதாரங்கள் சிங்கள - பௌத்த மக்களுக்கு மாத்திரம் சொந்தமானவை அல்ல. நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைகளுக்கும் உரிமையானவையாகும்.

இவ்வாறு கட்டடங்களை மறுசீரமைப்பு செய்து நாட்டுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் தேசிய சுற்றுலாப் பயணிகளால் அந்தப் பிரதேசங்களில் இருக்கும் மக்களுக்கே வருமானம் கிடைக்கும். அவர்களின் வாழ்வாதாரமே உயரப் போகிறது. முஹுது மகா விகாரைக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் அநேகமாக அந்தப் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் மக்களின் கடைகளிலேயே உணவு உண்கிறார்கள்.

எனவே, இந்த விடயங்களில் தவறான விளக்கமளிப்பது தவறாகும். இவை சிங்கள, தமிழ், முஸ்லிம் என சகல இனத்தவர்களுக்கும் உரிமையானவை. இவ்வாறான தொல்பொருள் ஆதாரங்களில் சிவலிங்கத்தை வைத்து பூஜை செய்வது தவறாகும். அதனை நான் நேரில் பார்த்துள்ளேன். நாங்கள் ஒருபோதும் அவ்வாறு செய்ததில்லை. தொல்பொருள் ஆதாரமென்றால் அதனை நாம் உயிரைப்போன்று பாதுகாக்க வேண்டும். அவ்வாறான கட்டடக் கலைகளை மீண்டும் நிர்மாணிக்க முடியாது. அவை எமது நாட்டுக்கு பெறுமதி சேர்ப்பவை. எனவே, இதுதொடர்பில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளே இறுதித் தீர்மானங்களை எடுக்க வேண்டும். அவ்வாறு அங்கு கோவில் இருந்திருந்தாலும் நாங்களும் அங்கு சென்று வணங்குவோம். விகாரை இருந்திருந்தாலும் வணங்குவோம். அதற்குப் பதிலாக அவற்றை உடைத்து சேதப்படுத்துவது ஒழுக்கமான செயற்பாடல்ல.

**குருந்தூர் விகாரை முழுமையாக பௌத்த சமயம் சார்ந்ததொரு நிர்மாணிப்பாகும்**

**தமிழ் அரசியல் தலைவர்கள் வெளிநாட்டு அதிகார சக்திகளுடன் இணைந்து நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்கப் பார்க்கிறார்கள்.**



**வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள இந்து சமய வழிபாட்டுத்தலங்களைப் பாதுகாத்துத் தருமாறு தமிழ்த் தலைவர்கள் இந்தியாவிடம் கோரிக்கை முன்வைத்திருக்கிறார்கள். இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். அதன்போது இந்த விடயங்கள் குறித்தும் பேசப்படாலாம். இதுதொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

நாட்டில் இருக்கும் இந்து ஆலயங்களின் வழிபாட்டு நடவடிக்கைகள் அவ்வாறே இடம்பெற்று வருகின்றன. அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இலங்கையில் அநேகமான புதிய கோவில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதுவரையில், இந்து சமயத்துக்கோ அல்லது இஸ்லாமிய சமயத்துக்கோ எந்த கட்டுப்பாடும் விதிக்கப்பட்டதில்லை. யாரிடமும் எந்தவொரு உதவியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால், பௌத்த தொல்பொருட்களை சேதப்படுத்தி அவற்றின் மீது கோவில்களை அமைப்பதற்கு இந்தியா மட்டுமல்ல, வேறெந்த நாட்டிலிருந்து உதவி கிடைத்தாலும் அதனை தடுத்து நிறுத்துவோம்.

வெளிநாடுகளிலிருந்து எமக்கு அழுத்தம் வரும்போது, ஒரே தேசத்தவர்கள் என்றவகையில் சிங்கள, இந்து, முஸ்லிம், பௌத்தம், கிறிஸ்தவர்கள் என்ற வேறுபாடின்றி ஒன்றுபடவேண்டும்.

தமிழ் அரசியல் வாதிகளே, மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தி சமாதானத்தை இல்லாமல் செய்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளால் கர்ப்பிணித் தாய்மார் கொலை செய்யப்படும்போது கொழும்பிலிருந்து அவர்கள் பாதுகாப்பதற்காக புறப்பட்டுச் சென்றார். அவர்களை நாங்கள் தடுத்து நிறுத்தவில்லை. மக்களை தாக்கி ஸ்ரீ மகா விகாரையை சேதப்படுத்தியபோது நாங்கள் கோவில்களை உடைக்கவில்லை. அவ்வாறிருக்கையில் எதற்காக பௌத்தர்ளின் பொறுமையை சோதிக்கிறார்கள்.

இந்தியாவோ, அமெரிக்காவோ எந்தவொரு வெளிநாட்டிலிருந்து அழுத்தம் வந்தாலும் ஒரே தேசத்தவர்கள் என்ற அடிப்படையில் மக்கள் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும். ஒன்றுபடுவதற்காகவுள்ள சமத்துவத்தையே தற்போது இல்லாமலாக்க முயற்சிக்கிறார்கள். இது தேசத்துரோகமான செயற்பாடாகும்.

தேவையில்லாமல், இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி நாட்டின் சமத்துவத்தை இல்லாமலாக்கி சமத்துவத்தை சீர்குலைக்கவே முயற்சிக்கிறார்கள். வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து பணம் பெற்றுக் கொண்டே இதுபோன்ற செயற்பாடுகளை செய்கிறார்கள். சாதாரண தமிழ், இந்து மக்கள் மிகவும் அப்பாவியானவர்கள். இது அவர்களுக்கும் நன்றாக தெரியும். இருந்தபோதும், பிரிவினைவாத தமிழ் எதிர்ப்பாளர்கள் இருக்கிறார்கள் என்பதை காட்டிக்கொள்வதற்காகவே இதனை செய்கிறார்கள். பௌத்த தொல்பொருள் ஆதாரங்களில் தமிழர்களுக்கான தொல்பொருள் ஆதாரம் இருந்தது என்று குறிப்பிடுவது முழுமையான பொய்யாகும். அந்தப் பொய்யை உண்மையாக்கவே இவர்கள் செயற்பட்டு வருகிறார்கள்.

எந்த சமயத்துக்குச் சொந்தமானதான தொல்பொருள் ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை முழு நாட்டுக்கும் சொந்தமானவையாகும். இதனை புரிந்துகொள்ளவேண்டும்.

**குருந்தூர் மலை விவகாரத்தில், அந்த ஆலயத்தின் நிர்வாகத்தினர் இந்திய உயர்ஸ்தானிகராலயத்துக்கு கடிதமொன்றையும் கையளித்துள்ளார்கள். அங்கு இந்து சமயத்துக்கான ஆதாரம் இல்லாமல் அவர்கள் உயர்ஸ்தானிகராலயம் வரையில் சென்றிருக்க மாட்டார்கள் அல்லவா?**

அது தவறான செயற்பாடாகும். குருந்தூர் மலையில் இந்து ஆலயம் இருந்ததற்கான ஆதாரம் இல்லை. பழைமையான பௌத்த கல்வெட்டுகள் குருந்தூர் மலையிலேயே இருக்கின்றன. ஆகவே குருந்தூர் விகாரை முழுமையாக பௌத்த சமயம் சார்ந்தவொரு நிர்மாணிப்பாகும்.

**இவ்வாறான பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ள நிலையில், அரசாங்கம் ஏன் இதுதொடர்பில் எந்த நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தாமல் இருக்கிறது?**

அதனை அரச தலைவரே தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவரே, மக்களின் சமத்துவத்தை இல்லாமலாக்கும் செயற்பாடுகளை நிறுத்துமாறு தமிழ் அரசியல்வாதிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

# தடைசெய்த தடைசெய்யாத விடுதலைப் புலிகளும்!

# ஒரு நாடு இரு சட்டம்



விடுதலைப் புலிகள் என்ற பெயர் இலங்கையில் தடைசெய்யப்பட்டதா என்றால் எல்லோரும் ஆம் என்றுதான் பதில் கூறுவார்கள். ஆனால், அதில் எனக்கு சந்தேகம் உள்ளது. 'விடுதலைப் புலிகள்' என்பது இலங்கையில் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது என்பதே எனது விடை.

தர்க்க ரீதியாக நான் முன்வைக்கும் ஆதாரங்களைக் கவனமாகப் படியுங்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு. 2009, மே 18இல் தாம் அவர்களை இலங்கையிலிருந்து முற்றாக அகற்றிவிட்டதாக இலங்கை அரசு கூறும் அதேவேளை, அந்தப் பெயரை - அதாவது, 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற பெயரை இலங்கையில் எவருமே கூறமுடியாது. அப்படி கூறினால் - எழுதினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்பதே நாம் அறிந்த உண்மை வரலாறுகள்.

அப்படியானால் 'தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்' என்ற பெயரை சட்ட ரீதியாக இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது அல்லவா? அது எப்படி?

இதில் கவனிக்க வேண்டியது. அவதானமாக ஒரு தடவை வாசியுங்கள்...

1. தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற வசனத்தில் 'தமிழீழம்' என்ற சொல்லுடன் விடுதலைப் புலிகள் என்ற சொல்லை சேர்த்து உச்சரித்தால் அது தடை. இதுவே இலங்கையில் நாம் கண்ட உண்மை.

2. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்ற வசனத்தில் 'தமிழ் மக்கள்' என்ற சொல்லுடன் விடுதலைப் புலிகள் என்ற சொல்லை சேர்த்து உச்சரித்தால் இலங்கையில் தடையில்லை. அது தேர்தல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பெயர். இதனை எந்த வகையில் ஏற்றுக் கொள்வது?

இந்த இரண்டு விதமான வசனங்களையும் கூர்ந்து அவதானிப்போமானால், 'தமிழீழம்' என்பது தடை. 'தமிழ் மக்கள்' என்பது தடையில்லை. ஆனால், ஏனைய 'விடுதலைப் புலிகள்' என்ற வசனம் இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் என்பதை தெளிவாக உணர்ந்துகொள்ளலாம். அப்படியானால் விடுதலைப் புலிகள் தடையில்லை என்பதுதானே உண்மை.

அதாவது, அரசுடன் இணைந்து காட்டிக்கொடுத்தால் அந்த விடுதலைப் புலிகளுக்குத் தடையில்லை, அரசை எதிர்த்துப் போராடினால் இந்த விடுதலைப் புலிகளுக்குத் தடை.

இது யாரையும் அவமதிப்பதற்காகவோ கேலி செய்வதற்காகவோ நான் கூறவில்லை. நடைமுறையில் இலங்கையில் கடந்த 14 வருடங்களாக உள்ளதையே மீட்டுப்பார்க்க வேண்டிய தேவை இருந்ததால் இந்த சந்தேகம் எழுந்தது. இதற்கு சட்ட நிபுணர்கள் எப்படி வியாக்கியானம் சொல்வார்கள் என்பது தெரியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து 2004இல் பிரிந்து சென்ற விநாயகமூர்த்தி முரளிதரன் (அவருக்கு விடுதலைப் புலிகள் வைத்த பெயர் கருணா அம்மான்) என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்புத்தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள். அவர் லண்டனில் 2005 காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டு லண்டன் சிறையில் இருந்தபோது சிவநேசதுரை சந்திரகாந்தன் (விடுதலைப் புலிகள் வைத்த பெயர் பிள்ளையான்) என்பவரை அந்த கட்சியை இயக்க அன்றைய மஹிந்த அரசு அனுமதி வழங்கியிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் சார்பில் வட்டுக் கோட்டை தீர்மானம், தனி தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை 1976, மே 14, தமிழர் விடுதலைக் கூட்டணி மூலமாக தந்தை செல்வாவால முன்வைக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் பின்னர் 36 விடுதலை இயக்கங்கள் இலங்கை தமிழர்களிடத்திலிருந்து ஆயுதம் ஏந்தி பல இயக்கங்கள் உருவாகின. அவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் 2009, மே 18 வரை போராடி முள்ளிவாய்க்காலில் போர் மௌனிக்கப்பட்ட ஒரு இயக்கம் என்பது முக்கியமான ஒன்று.

அந்த விடுதலை இயக்கம் பாரிய முப்படைகளைக்கொண்ட மிகப்பெரிய விடுதலை இயக்கமாக இலங்கையில் முப்பது வருடங்களாக இயங்கிய ஒரு மரபுப்படை அணியாகும். இந்த இயக்கமானது 1990களின் பின்னர் மிகப்பெரிய இராணுவ பலத்தைக்கொண்ட இயக்கமாக வலுவடைந்தது. இந்திய அமைதிப்படையுடனும் முதலாம் கட்ட ஈழப்போரை நடத்திய வல்லமை அந்த இயக்கத்துக்கு மட்டுமே உண்டு.

**தற்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தற்போதைய இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை தலைவராகவும், பூ.பிரசாந்தனை செயலாளராகவும் கொண்டு செயல்படுவதைக் காணலாம்.**

அதனைத் தொடர்ந்து 2004ஆம் ஆண்டின் பின்னர் இவ்வியக்கமானது தனக்குள்ளே ஒரு பிளவை எதிர்கொள்ள நேர்ந்தது. அந்த இயக்கத்தை பிரிப்பதற்காக அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட சதியால் பிளவு ஏற்பட்டது என்பதை அவரே 2020இல் கூறியும் இருந்தார். அது 'கிழக்குப் பிளவு' என அப்போது அழைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கருணா குழுவினரை அடிப்படையாகக்கொண்டு வன்முறைகளைக் கைவிட்டு தாம் ஜனநாயகப் பாதையில் பயணிப்பதற்காக புதிய கட்சி ஒன்று உருவாக்கப் பட்டது என விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்த கருணா அந்தக் காலப்பகுதியில் ஊடகங்களில் கூறியிருந்தார்.

முள்ளிவாய்க்கால் போர் 2009, மே18இல் மௌனிப்பதற்கு முன்னமே சரியாக 16 மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட தளபதியாக இருந்து - விடுதலைப் புலிகளில் இருந்து அவர்களை காட்டிக்கொடுத்துவிட்டு அரச படையினருடன் இணைந்து செயல்பட்ட கருணாவால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது 2008, ஜனவரி 23இல் இலங்கையில் ஓர் அரசியல் கட்சியாக இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்துகொண்டது. அதன் பெயரே 'தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி.' சின்னமாக அப்போது புலியின் தலையைக் குறிப்பிட்டு பின்னர் புலியை எடுத்து விட்டு படகு அந்தக் கட்சியின் சின்னமாக மாற்றப்பட்டது.

அந்தக் கட்சியானது கிழக்கு மாகாண மக்களின் ஜனநாயக உரிமைகள் மீது உண்மையான நேசம் கொண்டதென தன்னை வெளிப்படையாகக் கூறினாலும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு எதிரான பிரதேசவாத அரசியல் செய்யும் கட்சியாகவே அதன் செயல்பாடுகள் அந்தக் கட்சி ஆரம்பித்த 2008, ஜனவரி 23 தொடக்கம் இன்றுவரையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

அந்த கட்சியின் யாப்பில் வெளிப்படையாக,

★ இலங்கையின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க எமது கட்சி போராடும்.

★ இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களின் சமத்துவ உரிமைகளுக்காக எமது கட்சி உழைக்கும்.

★ கிழக்கு மாகாணத்தின் தனித்துவ அரசியல் சுதந்திரத்துக்காகவும் இன நல்லுறவுக்காகவும் கட்சி பாடுபடும்.

★ எமது தேசத்தின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் அதனூடாக உழைக்கும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் கட்சி முன்னிற்கும்.

மேற்படி கட்சியின் செயற்பாடுகள் ஊடாக இன, மத, மொழி, சாதி, பால், வர்க்க, பிரதேச வேறுபாடுகளைக் கலைந்து இலங்கையை ஒரு மதச் சார்பற்ற நாடாகவும் இலங்கையர்களை ஒரு சமத்துவ சமுதாயமாகவும் உருவாக்குவதே தமது இலக்காகும் என குறிப்பிட்டாலும் உண்மையில் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராக பிரதேசவாத கருத்துகளை கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பும் ஓர் அரசியல் செயல்பாடுகளே தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன

2008இல் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடக்கூடாது என்பதற்காக அந்த கட்சி உறுப்பினர்களால் கிழக்கு மகாணத்தில் குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், உறவினர்கள் என பலருக்கு எதிராக பல வன்முறைகள் இடம்பெற்ற வரலாறுகளை நாம் மறக்கமுடியாது.

ஆனாலும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஷபக்ஷ விடவில்லை. அந்தக் கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சியில் வெற்றிலை சின்னத்தில் இணைந்து போட்டியிட்டு முதலமைச்சராக சந்திரகாந்தன் எனும் பிள்ளையானை முதலமைச்சராக பதவி பெற வைத்தனர்.

விடுதலைப் புலிகள் என்ற பெயரில் 1974 தொடக்கம் 2009,மே 18, வரை ஒரு ஆயுதப்போராட்ட அமைப்பாக செயல்பட்ட விடுதலைப் புலிகள் என்ற பெயர் இலங்கையில் தடை. அதேவேளை, அந்தப் போராட்ட அமைப்பில் இணைந்து செயல்பட்டு அவர்களை காட்டிக்கொடுத்து அதிலிருந்து பிரிந்து 2008, ஜனவரி 23இல் அதே விடுதலைப் புலிகள் என்ற சொல்லை பிரதி செய்து ஆரம்பித்த (தமிழ்மக்கள்) விடுதலைப் புலிகள் இலங்கையில் தடை இல்லை.

எனவே, இதிலிருந்து பொதுவாக நாம் கவனிக்க வேண்டியது 'விடுதலைப் புலிகள்' எனும் பெயரை அரசாங்கத்துடன் ஒட்டி இருப்பவர்கள் பாவிப்பதில் தடை இல்லை, அரசுக்கு எதிரானவர்கள் அந்த பெயரை பாவித்தால் தடை இதுதான் நாம் கவனிக்கவேண்டிய விடயமாகும்.

**'விடுதலைப் புலிகள்' எனும் பெயரை அரசாங்கத்துடன் ஒட்டி இருப்பவர்கள் பாவிப்பதில் தடை இல்லை, அரசுக்கு எதிரானவர்கள் அந்த பெயரை பாவித்தால் தடை இதுதான் நாம் கவனிக்கவேண்டிய விடயமாகும்.**

ஏற்கனவே 2008, ஜனவரி 23இல் விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து சென்ற கருணாவால் 'தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள்' எனும் பெயரில் கட்சி ஆரம்பிக்கப்பட்டாலும் தற்போது கருணா அந்தக் கட்சியில் இல்லை. அவர் தற்போது பல்வேறு அரசாங்க தரப்பு கட்சிகளுடன் இணைந்து தமது அரசியலை மேற்கொள்கிறார்.

தற்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தற்போதைய இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை தலைவராகவும், பூ.பிரசாந்தனை செயலாளராகவும் கொண்டு செயல்படுவதைக் காணலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கையில் மட்டுமல்ல, உலகத்தில் பல நாடுகள் தடைசெய்து அதனை பயங்கரவாத இயக்கமாக சித்திரித்தாலும் விடுதலைப் புலிகள் வைத்த பெயரை இலங்கையில் அவர்களுக்கு எதிரானவர்கள் அவர்களிலிருந்து விலகி அரசுடன் செயல்படுபவர்கள் அந்தப் பெயரை மங்கவிடாமல் ஒருவகையில் காப்பாற்றியுள்ளனர் என்பதை இதன் மூலமாக புரிய முடிகிறது அல்லவா?

இலங்கையில் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட பெயர் இல்லை என்பதை இந்த விடயங்கள் மீண்டும் மீண்டும் ஒரு வகையில் நிரூபித்து விட்டதை சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஒருசாரார் விடுதலைப் புலிகளை அரசியலுக்காக பயன்படுத்தலாம், அந்தப் பெயரில் கட்சி தொடங்கலாம், இன்னொருசாரார் விடுதலைப் புலிகளை பயன்படுத்தினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை. இந்த இரண்டு விதமான நிலைப்பாடுகள் இலங்கையில் எழுதப்படாத விதியாக உள்ளது என்பதை புரிதல் நல்லது.



பா.அரியநேத்திரன்



# இன்னுமின்னும் வாய்ப்புகளை இழக்கப்போகிறோமா?

**அக்னியான்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்ட ஒரு வருட பூர்த்தியை ஞாபகப்படுத்தும் வகையில் அவருடைய இந்திய விஜயம் அமையப்போகிறது. இந்த விஜயம் ஜனாதிபதியின் மிக முக்கியத்துவம் வாய்ந்த தேச விஜயமாக எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் மக்கள் கிளர்ச்சிக்கு தூபமிட்டதன் காரணமாக கோட்டாபயவின் பதவி துறப்பு தவிர்க்க முடியாத நிலையில், ஆபத்பாந்த இரட்சகராக ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடம் ஜூலை மாதம் 20 ஆம் திகதி இலங்கையின் ஜனாதிபதியாக முடி தரித்துக்கொண்டார். பதவி ஏற்றுக்கொண்டவர் பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கும் இராஜதந்திர நகர்வுகளுக்கும் மத்தியில் அயல்நாடான இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ முதல் விஜயமாக இந்த விஜயம் அமையப்போகிறது.

குறித்த விஜயமானது சர்வதேச முக்கியத்துவம் கொண்டதாக இருக்காவிட்டாலும் பிராந்திய ரீதியிலும் உள்நாட்டு விடயத்திலும் இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை நாட்டின் தலைமைப்பொறுப்பை ஏற்கின்ற எந்தவொரு தலைவராக இருந்தாலும் இந்தியாவை தரிசிக்காமலோ அன்றி அனுசரிக்காமலோ நாட்டை பொருளாதார ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் கொண்டுசெல்வதென்பது மிக சவாலுக்குரிய விடயமாகவே கருதப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக, சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், கச்சதீவு உடன்படிக்கை, இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியவை இடம்பெற்றதன்பின் பிராந்திய ரீதியில் இரு நாடுகளுக்குமான உறவுகள் மிக நெருக்கமுடையதாக கருதப்படுகிறது.

ஏற்கனவே இலங்கைக்கு அண்டைய நாடு என்ற காரணத்தினால் வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே இரு நாடுகளுக்குமான உறவு பலம் பொருந்தியதாகவும் பவித்திரம் நிரம்பியதாகவும் இருந்து வந்திருக்கிறதென்பதை வரலாற்று ஆதாரங்களிலிருந்து தெரிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது.

இலங்கை - இந்திய சுதந்திரத்துக்குப் பின் இரு நாடுகளுக்குமான உறவு இரு தேசம் என்ற வகையில் இராஜதந்திர தொடர்புகளாக இருந்த காரணத்தால் அந்நியப்பட்டிருந்தபோதிலும் ஈழப்போர் நடந்த காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழர் விவகாரத்துக்கான தொடர்புகள் நெருக்கம் கொண்டதான ஓர் அரசியல் சூழ்நிலை உருவாகி வந்ததைப் புறந்தள்ள முடியாது.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தை இலங்கை தமிழ் தரப்புகள் எப்படி கையாளப்போகிறார்கள், குறித்த வாய்ப்பை அவர்கள் எவ்வாறு பயன்படுத்தப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு தற்போது தமிழ் மக்கள் மத்தியில் உச்சமடந்து காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் தமிழ்த்தரப்பினர் கடந்த 72 வருடங்களுக்கு மேலாக முயற்சிகளை மேற்கொண்டுவந்தபோதும் அந்த முயற்சிகள் அனைத்துமே புறக்குடத்து நீர்போல் ஆகிப்போன ஒரு சூழ்நிலையில்தான் தற்போதைய ஆட்சிமாற்றமும் ஜனாதிபதியின் இந்திய விஜயமும் நல்லதொரு சமிக்ஞையாக மாறியிருப்பதை பயன்படுத்தவேண்டும் என்ற எண்ணம் தமிழ்த் தரப்பினரிடம் உருவாகியுள்ளது.

விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் நிகழ்ச்சி நிரல் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறபோதும் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் வகிபாகத்துக்கு ஒரு பலமான அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு முக்கியம் பெற்றிருப்பது கவனத்துக்குரிய விடயமாகும்.

இலங்கை ஜனாதிபதி மற்றும் இந்திய இரு தரப்பு பேச்சுவார்த்தையின்போது பல்வேறு விடயங்கள் பேசப்படலாம் என்ற நிகழ்ச்சி நிரல்கள் வகுக்கப்பட்டிருப்பதாக பேசப்படுகிறபோதும் வடக்கு, கிழக்கு நெருக்கடிகள் தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடியால் இவ்விடயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்திய வல்லரசின் வகிபாகம் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இருந்துவருகின்றபோதும் இன்னும் அது தீர்க்கப்படாத குறைப்பிரசவமாகவே இருந்துகொண்டிருக்கிறது என்ற கருத்து இருபக்கத்திலும் இருந்துகொண்டேயிருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். அவ்வாறு வைக்கும் பலமும் இராஜதந்திர நகர்த்தல்களையும் இந்தியாவால் மட்டுமே செய்யமுடியுமென்ற கருத்து அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

இலங்கை தமிழ் மக்கள் விவகாரத்தில் இந்தியா தலையீடு செய்யத் தொடங்கிய காரணங்கள், சூழ்நிலைகள் பல்முனைப்பட்டதாகவே இருந்தன. 1983ஆம் ஆண்டு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக இலட்சக்கணக்கான வடக்கு, கிழக்கு தமிழர்கள் இந்திய நாட்டுக்குள் அகதிகளாக அடைக்கலம் கோரினார்கள்.

விடுதலை இயக்கங்கள் பல்கிப் பெருகி தமிழகத்தையும் ஏனைய மாநிலங்களையும் தளமாகக்கொண்டு போருக்கான பயிற்சிகளைப் பெறுவதற்கு இந்தியா நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி நல்கிய நிலையிலேயே இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் நேரடியாக மத்தியஸ்தம் வகிக்கும் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டு திம்பு பேச்சுவார்த்தையை (1985) இரு தரப்பினரையும் அழைத்து நடத்தியது.

இப்பேச்சுவார்த்தையே ஈழத்தமிழர் அரசியல் தீர்வுக்கான முதலாவது சர்வதேச பேச்சுவார்த்தையாகவும் பரிணமித்தது. இப்பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் மாறுபட்ட கொள்கைகளைக்கொண்ட மூன்று ஆயுதக்குழுக்களும் மிதவாதப்போக்கக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையின்போதுதான் தந்தை செல்வா முன்வைத்த சமஷ்டி முறையிலான தீர்வு என்ற எல்லையைத்தாண்டி தமிழ் ஈழம் என்ற கோரிக்கைக்கு பலம் தேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னணியிலேயே பின்வரும் பிரதான நான்கு கோரிக்கைகளை தமிழ்த் தரப்பினர் முன்வைத்தார்கள்.

1.தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

2 தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

3.தமிழர் தாயகம் வடக்கு, கிழக்கு என்பதை பேரினவாத தலைமைகள் அங்கீகரிக்கவேண்டும்.

4 இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் குடியுரிமை அளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கைகளை சிங்கள தலைமைகள் ஏற்றுக்கொள்ள தயாராகவிருக்கவில்லை.

இதன் அடுத்த பரிணாமந்தான் 1987ஆம் ஆண்டு செய்துகொளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது அரசியல் சீர்திருத்தம் முன்வைக்கப்பட்டது. 13ஆவது திருத்தம் இந்திய ஆட்சியாளர்களால் பலாத்காரமாக திணிக்கப்பட்டதாக பேசப்பட்டபோதும் அல்லது விமர்சிக்கப்பட்டபோதும் தமிழர்களுக்கான அரசியல் அதிகாரப்பகிர்வு என்ற அடிப்படையில் முதல் முயற்சியாக இது அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. வரலாற்றில் இதுவொரு முதல் அத்தியாயம் என்றுகூட குறிப்பிடலாம்.

இருந்தபோதிலும் தமிழர்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளுக்கு போதுமானதல்ல என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் ஒருசில போராட்டக்குழுக்கள் இதை ஏற்றுக்கொள்வதாகவும் விடுதலைப் புலிகள் மற்றும் மிதவாதபோக்கைக் கடைப்பிடித்து வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மறுத்துரைத்த நிலைமைகள் காணப்பட்டது. எது எவ்வாறு இருந்தபோதும் இலங்கை சுதந்திரமடைந்த காலத்துக்குப் பின்னரான அதிகாரப்பகிர்வு விடயத்தில் மாகாண சபை முறைகள் முதன் முதல் பரீட்சிக்கப்பட்ட அதிகாரப்பகிர்வாக சிலாகித்து பேசப்பட்டது.

**இரா. சம்பந்தனின் கோரிக்கையில் 13ஆவது திருத்தத்தில் வரையறுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்கு இந்தியா முன்னுரிமை அளித்து அதை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை எடுத்துக்கூறியுள்ளார். 13ஆவது திருத்தம் என்பது இந்திய அழுத்தத்தின் பிரகாரம் கொண்டுவரப்பட்ட அதிகார விஸ்தரிப்பு என்பதையும் இதை முழுமையாக நடைமுறைப்படுத்தி தரவேண்டிய தார்மீகக் கடமை இந்திய தேசத்துக்கே உண்டு என்பதை சம்பந்தன் நாசூக்காக வெளிப்படுத்தியிருக்கிறார்.**

இதன் பின்னணியில் அழுத்தமான பங்கு வகித்தவர்களாக இந்திய அரசாங்கம் காணப்பட்டது. இருந்தபோதிலும் 13ஆவது திருத்தத்தில் விதந்துரைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு தொடர்பில் முழுத்தன்மை இல்லை என்ற குற்றச்சாட்டுள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்டு வந்தபோதும் இலங்கை அரசாங்கமானது மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை சுருக்கிக்கொண்டதே தவிர அதை முழுமைப்படுத்த விரும்பவுமில்லை, எத்தனிக்கவுமில்லை.

இந்த விடயம் தொடர்பாக மாகாண ஆட்சி தொடங்கப்பட்ட காலத்திலேயே இலங்கை அரசாங்கத்துக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டபோதும் இலங்கை அரசாங்கம் எந்த அழுத்தத்துக்கும் அடிபணியாத நிலையில், இந்திய அமைதிப்படையின் நாடு திருப்பத்துடன் மாகாண ஆட்சியாளர்களான வரதராஜப்பெருமாள் தலைமையிலான ஆட்சிக் குழுவினர் இலங்கையை எச்சரிக்கும் வகையில் தமிழ் ஈழப் பிரகடனத்தை செய்தார்கள். அப்பிரகடனம் குகைக்குள் முடங்கிப்போன குரலாகவே ஆகிப்போனது. இப்பிரகடனத்தை இலங்கை அரசோ அல்லது இந்திய அரசோ பொருட்படுத்தியதாக தெரியவில்லை. மாகாண ஆட்சியும் கலைக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ''தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு முழுமையான தீர்வை வழங்க நான் தயாராக இருக்கிறேன். மாகாண ஆட்சி அதிகாரப்பகிர்வானாலும் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவேன்'' என்று சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் சத்தியம் செய்தார். ஆனால், அது நடைபெறவில்லை.

தீர்வுக்கான முயற்சிகளை உருவாக்குவதற்காக தமிழ்த் தரப்பினர் உட்பட சகல எதிரணியினரும் ஒன்றுசேர்ந்து 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கினார்கள். அரசியல் சாசன முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோதும் அது கூழ் முட்டையாக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் இந்திய தேசத்தின் ஆட்சியாளர்கள் கடந்த பல வருடங்களாக கவலைகொள்ளாமல் இருந்தார்கள் என்பதும் இவ்வாறான சூழ்நிலையில் இந்தியப் பிரதமர் மோடியை கூட்டமைப்பினர் சந்திக்க எடுத்த முயற்சிகள் பல்வேறு காரணங்களால் தடைப்பட்டும், தள்ளப்பட்டும் போன நிலையிலேயே ஜனாதிபதியின் இந்திய விஜயம் தற்போது இடம்பெறுகிறது.

தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்துக்கு இந்திய அரசின் அழுத்தத்தைப் பிரயோகிக்கவேண்டுமென்ற சூழ்நிலையொன்று உருவாகியிருக்கும் நிலையில் இத்தகைய சந்தர்ப்பமொன்றை தமிழ்த் தலைமைகள் எவ்வாறு பயன்படுத்தப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடத்திடத்திலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் கனதியான எதிர்பார்ப்பு கொண்டதாக ஆகியிருக்கிறது.

இந்த யதார்த்தத்தின் மத்தியில்தான் தமிழ்த் தலைமைகளுக்கிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகளும் கட்சி முரண்பாடுகளும், மீண்டும் தமிழ் மக்களின் இன்றைய எதிர்பார்ப்பை சீர்குலைத்துவிடுமோ என்று பயங்கொள்ள வைக்கிறது.

இந்தியத் தூதுவர் கோபால் பாக் லேக்கும் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் பாராளுமன்றக் குழுக்களின் தலைவருமன இரா. சம்பந்தனுக்குமான சந்திப்பொன்று கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றிருக்கிறது.

இந்தச் சந்திப்பின்போது சம்பந்தன் உயர்ஸ்தானிகர் மூலம் இந்தியப் பிரதமர் மோடிக்கு பின்வரும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கும் அனைத்து விடயங்களையும் இலங்கை அரசாங்கம் செயற்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை சம்பந்தன் விடுத்திருப்பதாகவும், இதற்கு பதில் அளித்த இந்திய உயர்ஸ்தானிகர் இவ்விடயத்தை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் கவனத்துக்கு கொண்டுபோவதாகவும் தூதுவர் பதிலளித்துள்ளார்.

இரா. சம்பந்தனின் கோரிக்கையில் 13ஆவது திருத்தத்தில் வரையறுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்கு இந்தியா முன்னுரிமை அளித்து அதை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை எடுத்துக்கூறியுள்ளார். 13ஆவது திருத்தம் என்பது இந்திய அழுத்தத்தின் பிரகாரம் கொண்டுவரப்பட்ட அதிகார விஸ்தரிப்பு என்பதையும் இதை முழுமையாக நடைமுறைப்படுத்தி தரவேண்டிய தார்மீகக் கடமை இந்திய தேசத்துக்கே உண்டு என்பதை சம்பந்தன் நாசூக்காக வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதேவேளை, தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சி கட்டமைப்பின் கீழ் எந்தவொரு முன்மொழிவையும் தாம் நிராகரிப்பதகவும் அதேவேளை, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக்கூடிய சமஷ்டி முறையிலான அரசியலமைப்பை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்ற விரிவான கோரிக்கை அடங்கிய கடிதமொன்றை யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்துதுவர் ராகேஸ் நட்ராஜாவிடம் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கையளித்துள்ளனர்.

இந்தக் கடிதத்தில் தமிழர் இனப்பிரச்சடினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வையே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்துள்ளது.

இக்கருத்தை அடிப்படையாகக்கொண்டே பிரித்தானியாவை தளமாகக்கொண்டு இயங்கிவரும் தமிழர் பேரவை பின்வரும் கோரிக்கையை இந்தியப் பிரதமரிடம் முன்வைத்துள்ளது. அதாவது, இந்தியா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் காணப்படும் கூட்டாட்சி கொள்கையின் அடிப்படையில் நீண்டகால அரசியல் தீர்வு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கொண்டுவரப்படவேண்டும் என இந்தியப் பிரதமரை வலியுறுத்தியுள்ளது பிரித்தானிய தமிழர் பேரவை.

இன்னொரு புறம் பார்ப்போமானால், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும் என்று இவர்களால் கோரப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும், புளொட் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், ஈ.பி.ஆர் எல். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரனும், ஜனநாயக போராளிகள் கட்சி சார்பில் வேந்தனும்

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

# அரச கட்டமைப்பு சீர்குலைந்ததன் விளைவா

# தினசரி வாகன விபத்துகளுக்குக் காரணம்



சின்னத்தம்பி குருபரன்

ஒரு நாட்டின் போக்குவரத்துக் கட்டமைப்பு அந்நாட்டின் சகல துறைகளுக்குமான அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்கிறது. பல்தேசியக் கம்பனிகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் ஒரு நாட்டில் முதலீடு செய்வதற்கு வரும்போது பெரும்பாலும் அந்நாட்டின் போக்குவரத்துக் கட்டமைப்பைப் பரிசீலிப்பார்கள். அவற்றில் திருப்தி கண்ட பின்னரே முதலீட்டைச் செய்வதற்கு முன்வருவார்கள். அதற்காக பல நாடுகள் போக்குவரத்துக் கட்டமைப்பை நவீன முறையில் அபிவிருத்தி செய்கின்றன. சீரான போக்குவரத்துக் கட்டமைப்பு சகல துறைகளினது செயற்பாடுகளையும் இலகுபடுத்துகிறது. நேரம், காலம், பணம் ஆகியவற்றை மீதப்படுத்தித் துரித செயற்பாட்டுக்கு உதவுகிறது. பயணிகளின் சௌகரியமான போக்குவரத்துக்கு உதவுகிறது. மேலைத்தேச நாடுகளில் போக்குவரத்துக் கட்டமைப்புகள் செய்மதிகளினதும் CCTV கெமராக்களினதும் கண்காணிப்புக்குள் இருக்கின்றமையால் வாகனப் போக்குவரத்துகள் மிக நவீனமயப்படுத்தப்பட்ட வலையமைப்பினூடாக கண்காணிக்கப்படுகின்றன. அதனால் வாகன விபத்துகள் மிக மிகக் குறைவாக பதிவுசெய்யப்படுகின்றன. இலங்கையில் இத்தகைய சீரான போக்குவரத்துக் கட்டமைப்பு இன்மையால் தினசரி வாகன விபத்துகள் சர்வசாதாரணமாக நடந்துகொண்டிருக்கின்றன.

30 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் வீதிக் கட்டமைப்பு நெடுஞ்சாலைகள், பிரதான வீதிகளில் பெரும்பாலானவை கார்பெட், கொங்கிரீட்




போடப்படாமல் சிறிய பாதைகளாகவே இருந்தன. அப்போது பாதைகளில் விபத்துகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. மலையகப் பாதைகளில் பெரும்பாலானவை ஒடுங்கிய சிறிய பாதைகளாகவே இருந்தன. அப்போதைய சாரதிகள் மிக அவதானமாக வாகனங்களைச் செலுத்தினர். வாகன விபத்துகள் மிகமிகக் குறைவாகவே இருந்தன.

இப்போது பாதைகள் விஸ்தரிக்கப்பட்டு கார்பெட் இடப்பட்டுள்ளமையால் அங்கீகரிக்கப்பட்ட வேகத்தையும் மீறி மிக வேகமாக வாகனத்தை ஓட்டி விபத்துக்குள்ளாகின்றனர். அத்தோடு வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் ஊழல், பரிசோதனையில் ஊழல், போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் பலரிடம் காணப்படும் ஊழல், வாகனங்களைக் கண்காணிப்பதில் ஊழல், வாகன வழி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் ஊழல், குற்றமிழைத்த சாரதிகள் பாதுகாக்கப்படுதல், இலஞ்சம், மோசடி என்பவற்றாலேயே பெரும்பாலான விபத்துகள் நாட்டில் நடந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறு சம்பந்தப்பட்ட பல அரச கட்டமைப்புகள் பலவீனமாகக் காணப்படுகின்றமையே பல விபத்துகளுக்குக் காரணமாக அமைகின்றன.

வீதிப் போக்குவரத்துத் தொடர்பான தேசிய சபை கடந்த மே (2023) மாதம் வீதி விபத்துகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையொன்றில் இலங்கையில் வீதி விபத்துகளால் வருடாந்தம் சராசரி 2900 பேர் வரை இறப்பதாகவும் அண்ணளவாக 7700 பேர் வரை காயங்களுக்கு உட்படுவதாகவும் நாளொன்றுக்குச் சராசரி எட்டுப் பேர் வரை இறப்பதாகவும் கூறியுள்ளனர். அதிலும் பெரும்பாலான விபத்துகள் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் நிகழ்வதாகவும் பண்டிகைக் காலங்களிலும் விசேட தினங்களிலும் மிக அதிகமான வீதி விபத்துகள் நிகழ்வதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

நித்திரைத் தூக்கம், சாரதிகளின் கவனயீனம், மது மற்றும் போதைப் பொருட்களைப் பாவித்துக்கொண்டு வாகனம் ஓட்டுதல், போட்டி போட்டுக் கொண்டு வாகனம் செலுத்துதல், அங்கீகரிக்கப்பட்டதற்கு மேலான வேகம், வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமை, வீதித் தடைகள், புகையிரதக் கடவை ஆகியவற்றைக் கவனியாது வாகனம் செலுத்துதல், பிரயாணிகளின் உயிரைப் பற்றிக் கவனத்திற்கொள்ளாது பணத்தை மாத்திரம் குறியாகக்கொண்டு செயற்படுகின்றமை, ஆடு, மாடுகளை ஏற்றுவதுபோல் பயணிகளை வாகனத்துள் ஏற்றி அவஸ்தைக்கு உட்படுத்துதல் ஆகியவற்றால் அதிக வீதி விபத்துகள் ஏற்படுவதாக அறிக்கையுடன் பயணிகளும் சமூக ஆர்வலர்கள் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்தோடு காவல்துறை ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி நிஹால் தல்துவ ஜூலை 11இல் நடந்த ஊடக சந்திப்பொன்றில் 2023 ஜனவரி முதல் ஜூலை 10 வரையான காலப் பகுதிக்குள் வாகன வீதி விபத்துகளால் 1192 பேர் மரணமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆறு மாத காலத்துக்குள் இத்தனை வீதி விபத்து இறப்புகளா?

2023-07-09, 10 ஆகிய தினங்களில் 24 மணிநேரத்துக்குள் நடந்த நான்கு வாகன வீதி விபத்துகளில் 12 பேர் உயிரிழந்தும் 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அதில் மூன்று விபத்துகள் பிரதானமானதாகக் கொள்ளப் பட்டன.

தலவாக்கலை வட்டகொடயிலிருந்து பூண்டுலோயா துலுகதெனியா நோக்கித் தோட்டத் தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு சென்ற தனியார் பஸ் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 30 அடிப் பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியதில் 26 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அன்று இரவு 7.30 மணிக்கு கதுறுவெல பஸ் நிலையத்திலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மன்னம்பிட்டி கொட்டலிய பாலத்தின் பாதுகாப்பு வேலியை உடைத்து பாலத்துக்குள் விழுந்ததில் 10 பேர் மரணமடைந்து 41 பேர் வரை காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். மறுநாள் காலை (10) யாத்திரிகர்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் சாரதி நித்திரை மயக்கத்தில் அநுராதபுரத்தில வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கனரக வாகனமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் மரணமடைந்தனர். 21 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த மூன்று விபத்துகளும் சாரதிகளின் கவனக்குறைவால் நிகழ்ந்ததாகும். அதிலும் மன்னம்பிட்டி கொட்டலிய பாலத்தில் நிகழ்ந்த விபத்துக்குக் காரணமான சாரதி போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரால் பலமுறை தண்டிக்கப்பட்டிருக்கின்றார். 2020இல் குறித்த சாரதி தொடர்பாக அன்றைய தினம் பஸ்ஸில் பிரயாணம் செய்த பயணி ஒருவர் தனது முகநூல் பக்கத்தில் வீதி ஒழுங்கைப் பின்பற்றாது வாகனம் ஓட்டியமை பற்றி பதிவிட்டு எச்சரித்திருந்தார். அப்போது அப்பதிவு வைரலாகியும் இருந்தது. இத்தகைய



வாகனச் சாரதிகளுக்கு வாகனத்தை ஓட்டக் கொடுத்த வாகன உரிமையாளரும் தண்டிக்கப்படவேண்டியவரே.

அதேபோல் தலவாக்கலையிலிருந்து தோட்டத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்று விபத்துக்குள்ளாகிய சாரதியும் தண்டிக்கப்பட வேண்டியவரே. மலையகத்தில் பயணிக்கும் வாகனம் என்பதால் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் வாகனத்தைப் பரிசோதித்திருக்கவேண்டும். பரிசோதிக்கத் தவறியதன் காரணமாகவே வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கின்றது. வாகனம் ஓட்டும்போது கண் விரைவாகக் களைப்படையும் என்பதால் நித்திரை வருவதற்கான சாத்தியக்கூறுகளும் உள்ளன. நித்திரை என்ற உணர்வு உணர்த்தப்படுவதற்கு முன்னர் பயணிகளின் பாதுகாப்புக் கருதி வாகனத்தை நிறுத்தி முகத்தைக் கழுவி அல்லது வேறு ஏதாவது ஒன்றைச் செய்து சோர்வைத் தவிர்த்திருக்கலாம். அதைச் செய்யத் தவறியமைக்காக அவரும் தண்டிக்கப்பட வேண்டியவரே.

இலங்கையில் கடந்த 15 வருடங்களாக வாகன வீதி விபத்துகளால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பான விபரங்களைக் கணக்கெடுத்தால் 70 வீதத்துக்கும் மேற்பட்ட மரணங்கள் தனியார் வாகனங்களின் மூலம் நிகழ்ந்த விபத்துகளாலானவை என்பதை அவானிக்க முடியும். ஏன், எதற்காக வாகன விபத்துகள் அதிகம் நிகழ்கின்றன என்பது பற்றி ஆய்வு செய்யும்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவருவதாக பலரும் கூறுகின்றனர். அவை இதனுடன் சம்பந்தப்பட்ட பல அரச கட்டமைப்புகள் பலவீனமடைந்திருப்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. இக்கட்டமைப்புகளில் இலஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகியன நிகழ்வதைப் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர். இதற்குள் பெருமளவு பணம் கைமாற்றப்படுகின்றன. எங்கு பணம் அதிகமாகக் கைமாறப்படுகிறதோ அங்கு வேலையும் வேகமாக நிறைவேறுவதாக பலரும் கூறுகின்றனர். நீதி, நியாயம், நேர்மை என்பதெல்லாம் பேச்சளவிலே இருப்பதாகவும் இலஞ்சம், ஊழல், மோசடியே முக்கியம் பெறுவதாகவும் பலரும் வேதனையோடு கூறுவதையும் அவதானிக்க முடிகிறது.

2017- 2020 வரை பிரதான நகரங்களில் இருந்து கொழும்புக்குச் சென்றுவந்த தனியார் அதிசொகுசு, அரைச் சொகுசு பஸ்கள் பலவற்றுக்கு வழி அனுமதிப் பத்திரம் (Route Pass) இருக்கவில்லை. அவர்கள் பல்வேறு வகையிலும் இலஞ்சம் கொடுத்தே தினமும் கொழும்புக்குச் சென்று வந்தனர்.

நான் ஒருமுறை கொழும்புக்குச் சென்று திரும்புவதற்கு கொழும்பிலிருந்து அக்கரைப்பற்றுக்குச் செல்லும் அதிசொகுசு பஸ் ஒன்றில் செல்வதற்கு ஆசனப் பதிவு செய்தேன். ஆசனப் பதிவு செய்தவர், "பஸ் மாலை 7.00 மணிக்குப் புறப்படும். வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்கு அருகில் வாருங்கள்" என்று கூறினார்.

'உதம்பி ஏழு மணிக்கு வெளிக்கிட்டு நள்ளிரவில் சென்று தெருவிலா இறக்கப் போகிறீர்களா'' எனக் கேட்டபோது "நீங்கள் வந்து ஏறுங்கையா. பஸ் புறப்படும். நீங்கள் வழமையாக இறங்கும் நேரத்தில் உங்களை இறக்கிவிடுவார்கள்" என்றார். நானும் சென்று ஏறினேன். பஸ் நேரத்துக்குப் புறப்பட்டது. வழமையாகச் செல்லும் பாதையில் செல்லாமல் பல சிறிய பாதைகளுக்கூடாகச் சென்று அதிகாலை ஐந்து மணிக்கு இறக்கிவிட்டனர். ஏழு மணித்தியாலங்களில் நிறைவுசெய்ய வேண்டிய பயண நேரத்தை 10 மணித்தியாலங்கள் எடுத்துச் சாரதி நிறைவு செய்தார். உள்ளே அமர்ந்திருந்த பயணிகள், வழி அனுமதிப்பத்திரம் இல்லாததனால் இப்படிக் காடு மேடெல்லாம் சுற்றி ஓடுறானுகள் என்று கூறிக்கொண்டனர். இதற்கிடையில் காவல்துறையினர் பல இடங்களில் வழிமறித்துத் தமக்குரிய அவிபாகங்களைப் பெற்றுக்கொண்டு வழியனுப்பி வைத்தனர். இவ்வாறுதான் பல அதிசொகுசு வாகனங்கள் தினமும் கொழும்புக்குச் சென்று வருகின்றன.

இன்னுமொருவர் கூறுகின்றபோது, "நான் வெளிநாட்டிலிருந்து வந்து திரும்பிச் செல்வதற்குரிய வீசா தொடர்பான கருமங்களை முடிப்பதற்காக யாழ் நகரிலிருந்து கொழும்பு செல்வதற்கு அதிசொகுசு பஸ் ஒன்றில் ஆசனப் பதிவு செய்தேன். அதில் போதியளவு பயணிகள் இல்லாதால் பிறிதொரு அதிசொகுசு பஸ் ஒன்றில் ஏற்றிவிட்டனர்.

இரவு 9.00 மணிக்குப் புறப்படவேண்டிய பஸ் 10.30க்குப் புறப்பட்டது. சாரதி அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தினார். தேநீர் அருந்துவதற்கு ஒரு உணவகத்தில் நிறுத்தினார்கள். உணவகத்தால் சாரதிக்கும் நடத்துனருக்கும் மதுபானம் உட்படசகல மரியாதைகளும் செய்யப்பட்டன. எனக்கு அருகில் இருந்து தேநீர் அருந்தியவரிடம் சாரதி சாராயம் குடிக்கிறார். போதையுடனா வாகனத்தைச் செலுத்தப் போகிறார். எனக் கேட்டேன். தினமும் இப்படித்தான் நடக்கிறது. சிலர் போதையுடன் வாகனம் ஓட்டுவார்கள். சிலர் எடுத்துச் சென்று கொழும்பு வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்திய பின்னர் குடிப்பார்கள் என்று சலிப்போடு கூறினார். 20 நிமிடங்களுக்குப் பின்னர் பஸ் புறப்பட்டது. சாரதி பேய்த்தனமாக வாகனத்தை செலுத்தினார். அதிக வேகம் காரணமாக இடையில் மூன்று இடங்களில் காவல்துறையினரால் வாகனம் மறித்து நிறுத்தப்பட்டது. சகல இடங்களிலும் உரிய அவிபாகத்தைக் கொடுத்து வாகனத்தைக் கொழும்புக்குக் கொண்டு சேர்த்தார். அதுவரையும் மரண பயத்துடன் இருந்தேன்'' என கவலையுடன் கூறினார்.

இவ்வாறுதான் வேலியே பயிரை மேயும் செயற்பாடுகள் மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்காலத்தில் அதிகமான வீதி விபத்துகள் ஏற்படுவதற்கு இதுவும் காரணமாக அமைகின்றன. இவ்வாறு பல சம்பவங்களைக் கூறலாம்.

பாலம் கட்டுவதில் ஊழல், பாதை அமைப்பதில் ஊழல், வாகனப் புகை பரிசோனை செய்வதில் ஊழல், வழி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் ஊழல், சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் ஊழல், பொதுப் போக்குவரத்துக் கண்காணிப்பாளர்களின் பலவீனம், பஸ் சாலைகளின் நேரக் கட்டுப்பாட்டாளரின் பலவீனம், ஒவ்வொரு இடங்களுக்கும் ஏற்றவாறு வாகன வேகத்தைக் கட்டுப்படுத்திச் செலுத்த வேண்டும் என்ற வீதி ஒழுங்கு விதி இருந்தபோதிலும் அதனைக் கவனிக்காது வாகனத்தைச் செலுத்துதல், சாதாரணமான நெடுஞ்சாலைகளில் 70 கிலோ மீற்றருக்கு உட்பட்ட வேகத்திலும் அதிவேகப் பாதையில் 100 கிலோ மீற்றர் வேகத்துக்கு உட்படாமலும் வாகனத்தைச் செலுத்த வேண்டும் என்ற மிகக் கட்டுப்பாடான வேகக் கட்டுப்பாட்டு விதி இருந்தபோதிலும் ஓரிருவரைத் தவிர மற்ற எல்லாச் சாரதிகளும் விதியை மீறியே வாகனத்தைச் செலுத்துகின்றனர்.

வாகனம் ஓட்டும்போது வேகம், விவேகம், புத்திசாதுரியம், நிதானம், தைரியம் ஆகியன சாரதிக்கு அவசியம் தேவைப்படுகிறது. எந்த வாகனத்தினது கட்டுப்பாடும் அதன் வேகத்தில் தங்கியிருக்கிறது. வாகனத்தினது ஈர்ப்பு விசை (Cravity), வாகனத்தின் மத்திய விசை (Center Poss) மத்திய விசைச் சமநிலை (Center Balance) ஆகியன தளம்பாமல் உரிய வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் வேண்டும். வேகக் கட்டுப்பாட்டை வாகனம் இழக்கும்போது இந்த மூன்று விசைகளும் வாகனத்தை ஓட்டுனருக்குச் சாதகமில்லாமல் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து பாரிய விபத்தை ஏற்படுத்திவிடும்.

வெளிநாடுகளில் தனித்தனி நேர் பாதையில் உரிய வரிசையில் உரிய வேகத்தில் வாகனம் சென்று கொண்டிருப்பதனால் அங்கு விபத்துகள் குறைவாக நிகழ்கின்றன. இலங்கையில் வளைந்து நெளிந்த பாதைக் கட்டமைப்புக் காணப்படல், காட்டு விலங்குகள், ஆடு, மாடு, நாய் ஆகியன பாதையில் நிற்றல், பாதையைக் கடத்தல், சிலவேளைகளில் மனிதனும் மிருகத்தைப்போல் பாதையைக் கடப்பது ஆகியவற்றையும் கவனத்திற்கொண்டு வாகனத்தை அவதானமாகச் செலுத்துதல் வேண்டும். வாகனம் ஓட்டுவது 'கரணம் தப்பினால் மரணம் போன்றது' எத்தகைய திறமைசாலியான சாரதியும் என்றோ ஒருநாள் வேகக் கட்டுப்பாட்டை இழக்கும் போது விபத்துக்குள்ளாகலாம் என்பதைக் கருத்திற்கொண்டு நிதானமாக ஓட்டுதல் வேண்டும்.

தினசரி நடக்கும் வாகன விபத்துகளை அவதானிக்கும்போது போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட சகல அரச கட்டமைப்புகளும் சீர்குலைந்து பலவீனமடைந்ததன் விளைவே வீதி விபத்துகளுக்குக் காரணமாக அமைகின்றன. இதனைப் பல சமூக ஆர்வலர்களும் சுட்டிக்காட்டுகினறனர். வாகனத்தில் பயணம் செய்யும் பெறுமதி மிக்க அத்தனை உயிர்களினதும் அவர்களின் குடும்பம், எதிர்காலம் பற்றியும் கவனத்திற்கொள்ளாமல் மன உணர்ச்சிக்கு ஆட்பட்டு கர்வத்துடன் வாகனம் ஓட்டும் சாரதிகள் தயவு, தாட்சண்யமின்றித் தண்டிக்கப்படவேண்டியவர்களே என்பதைச் சம்பந்தப்பட்ட சகலரும் கவனத்திற்கொள்ள வேண்டும். 'வேலியே பயிரை மேயும் போது எவரைத்தான் கட்டுப்படுத்த முடியும்' எனக் கூறியும் பலர் சலித்துக் கொள்கின்றனர்.

## இன்னுமின்னும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சு...)

கையொப்பம் இட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ரெலோ சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் ஸ்ரீகாந்தாவும் கையொப்பம் இட்டுள்ளனர்.

இந்தத் தரப்பினரைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைய பிளவு காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலத்திய நிலையில் அந்த குழுவால் இந்தக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமருக்கு இவர்களால் எழுதப்பட்ட, கோரப்பட்ட கடிதங்களில் என்ன உள்ளது என்று ஆராய்ந்து பார்ப்பதை விட ஒருமித்த கருத்துக் கொண்டவர்களாக தீர்வு விடயத்தில் இவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்களா என்ற கேள்வியை முன்வைக்க வேண்டியுள்ளது. இது ஒரு புறம் விசனத்தையும் மறுபுறம் கவலையையும் தருவதாகவே அமைகிறது. தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இவர்கள் காட்டும் திசைகளும் திருப்பங்களும் நிற்கும் கோணங்களும் கவலை அளிப்பதாகவே காணப்படுகிறது. கருத்தொருமைப்பாடு அற்ற கட்சிகளாகவும் தலைமைகளாகவும் காணப்படுவது கட்சிகளுக்கிடையே காணப்படும் முரண்பாடுகளையும் ஒருமித்த கொள்கை இன்மையையுமே புட்டுக்காட்டுவதாக அமைகிறது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் 13ஆவது திருத்தம் நடைமுறையில் இருந்துவருகிறபோதும் அதை முழுமையாக நடைமுறைப்படுத்தும் அளவுக்கு அரசாங்கத்துக்குள் ஆதரவு இல்லை என்பது தெளிவான விடயம். 13ஆவது திருத்தத்தை இல்லாது ஆக்கவேண்டுமென்று தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு தரப்பினர் கங்கணங்கட்டி வருகிறார்கள்.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என திடகாத்திரமாக கூறியிருந்தார். தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் ஆராய்வதற்கு கடந்த டிசம்பர் ஜனவரி மாதமளவில் சர்வகட்சி கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டத்தில் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை பல சிங்களத் தலைமைகள் வலியுறுத்தியிருந்தன. இரண்டாவது கூட்டத் தொடரிலும் இது இடம்பெற்றது.

ஆனால், ஜனாதிபதியின் இந்த முன்னெடுப்பு தொடர்பில் நாட்டிலுள்ள நான்கு பௌத்த பீடங்கள் தமது கடுமையான எதிர்ப்பைக் கக்கின. இவ்வாறு தாறுமாறான நிலைகள் காணப்படுகிறபோது சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதில் கூட முரண்பாடுகளையும் முட்டி மோதல்களையும் உண்டு பண்ணும் நிலைகளைக்கொண்டவர்களாகவே தமிழ்த் தலைமைகளும் அவர் தம் கட்சிகளும் காணப்படுகின்றன.

இவ்விடயத்தில் தமிழ் மக்கள் நலன் கருதியும் காலத்தேவை கருதியும் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் அனைத்து கட்சிகளும் கூடிப்பேசி கலந்துரையாடி ஒரு பொதுவான முடிவுக்கு வரவேண்டியது அவசியமாகிறது. இல்லையாயின் மீண்டும் வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் இழந்து இன்னும் காத்திருக்கவேண்டிய பின்னடைவே ஏற்படும்.



# கால அவகாசம் என்ற பெயரில்

எம்.எஸ். அமீர் ஹுசைன்

# குற்றவாளிகள் நழுவ இடமளிக்கக் கூடாது

2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் என்று உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன உட்பட உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டை செலுத்த கால அவகாசம் கோரப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே பேராயர் மெல்கம் ரஞ்சித் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதல்களின் உண்மையான சூத்திரதாரிகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் போராடி வருகின்ற நிலையில், இந்த கால அவகாசம் கோரல் இடம்பெற்றிருக்கின்றது.

2023 ஜனவரி மாதம் 12ஆம் திகதி ஐந்து நீதியரசர்கள்கொண்ட குழாம் அரசியலமைப்பின் 12 (1), 14 ஆகிய உறுப்புரைகள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை அவர்கள் மீறியுள்ளதாக வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் குண்டுத் தாக்குதலை தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் அந்தப் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றத் தவறினார்கள் என்ற அடிப்படையில் தீர்ப்பொன்றை வழங்கி இருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன 10 கோடி ரூபா, முன்னாள் பொலிஸ் மா அதிபர் 7 கோடியே 50 இலட்சம் ரூபா, நிலந்த ஜயவர்தன 7 கோடியே 50 இலட்சம் ரூபா, ஹேமசிறி பெர்னாண்டோ 5 கோடி ரூபா, சிசிர மெண்டிஸ் ஒரு கோடி ரூபா மற்றும் அரசாங்கம் 10 இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டு நிதியத்துக்கு 06 மாத காலப்பகுதிக்குள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப் பட்டிருந்தது. அதன்படி இம்மாதம் 12ஆம் திகதி அந்த 06 மாதங்கள் கடந்துவிட்டன.

இந்தத் தீர்ப்புக்கிணங்க முன்னாள் ஜனாதிபதி குறித்த நட்டஈட்டுத் தொகையில் இதுவரையில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாவை செலுத்தியுள்ளார். மீதியான 8 கோடியே 50 இலட்சம் ரூபாவை செலுத்த 10 வருட கால அவகாசம் கோரி உயர் நீதிமன்றத்திற்கு நகர்த்தல் பத்திரம் ஒன்றின் மூலம் மனுவொன்றை சமர்ப்பித்துள்ளார்.

வருடாந்தம் 85 இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் 10 தவணைகளில் 10 வருடங்களில் செலுத்தி முடிக்க அவகாசம் வழங்குமாறு அவரது சட்டத்தரணி ஊடாக இந்தக் கோரிக்கை மன்றில் விடுக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது.

அவருக்கு ஜனாதிபதியாக இருந்ததற்கான ஓய்வூதியமாக மாதாந்தம் 97,500 மற்றும் தற்போது பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கான சம்பளமாக 54,500 ரூபா கிடைப்பதாகவும் அவற்றை சேகரித்து வருடத்துக்கு 85 இலட்சம் ரூபா செலுத்துவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் (ஆழவழைn) நகர்த்தல் பத்திரம் மூலமான கோரிக்கை அமைந்திருக்கின்றது.

அதேநேரம் ஏனையவர்களாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 10 இலட்சம், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர 17 இலட்சம் ரூபா, முன்னாள் தேசிய புலனாய்வுத்துறை பிரதானி சிசிர மெண்டிஸ் 50 இலட்சம் ரூபா, முன்னாள் அரச புலனாய்வுப் பொறுப்பதிகாரி நிலந்த ஜயவர்தன 41 இலட்சம் ரூபா மற்றும் அரசு செலுத்த வேண்டிய 10 இலட்சம் ரூபா ஆகிய அடிப்படையில் கடந்த 06 மாத காலப்பகுதிக்குள் நட்டஈட்டு விதிப்புகள் செலுத்தப்பட்டுள்ளன.

2019 ஏப்ரல் 21 தாக்குதலில் தனது இரண்டு பிள்ளைகளை இழந்த தந்தையான நந்தன சிறிமான்ன, வர்த்தகர் ஜனக்க விதானகே, இரண்டு கத்தோலிக்க மதகுருமார்கள், ஷங்கிரிலா ஹோட்டலில் சிக்கிய சட்டத்தரணி மோதி ஏக்கநாயக்க, சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், ஹில்மி அஹமட், ஊடகவியலாளர் கசுன் புஸ்ஸவெல்ல உள்ளிட்ட 12 பேர் பாதிக்கப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக மனுக்களை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

அந்த மனுவில் பிரதிவாதிகளாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர், சில அமைச்சுகளின் செயலாளர்கள் உட்பட பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த மனுக்களை பரிசீலித்த உயர் நீதிமன்றம் 124 பக்கங்களைக்கொண்ட தீர்ப்பை கடந்த ஜனவரி 12 ஆம் திகதி அறிவித்தது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட 06 தரப்பினருக்கான நட்டஈட்டுத் தொகை அறிவிக்கப்பட்டது. அந்த நட்டஈட்டைப் பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் ஒரு நிதியம் ஏற்படுத்தப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, ஏனைய நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, எல்.டி.பி. தெஹிதெனிய, மூர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா ஆகியோர் கொண்ட நீதியரசர்கள் குழாமே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கி இருக்கின்றது.

நாட்டையும் மக்களையும் பாதுகாக்கவேண்டிய ஜனாதிபதி உட்பட உயர் அதிகாரிகளான இவர்கள் அந்தத் தொடர் குண்டு வெடிப்பைத் தடுக்க போதுமான ஆதாரங்கள், புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தும் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காததால் குண்டுவெடிப்பு இடம்பெற்றதோடு, நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தும் அதே எண்ணிக்கையானோர் காயமடையும் நிலையும் ஏற்பட்டது. இதனால் அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படையில் பாதிக்கப் பட்டவர்களது அடிப்படை உரிமை மீறப்பட்டதாக 124 பக்கத் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

எவ்வாறாயினும், ஏற்கனவே 06 மாத காலப்பகுதிக்குள் செலுத்தி முடிக்கப்பட வேண்டியிருந்த நட்டஈட்டை உரிய முறையில் செலுத்தாமல் நீதிமன்றத்தில் காலம் வீணடிக்கப்பட்டிருக்கின்றது. சரியாக 06 மாதங்கள் கடந்துள்ள நிலையில் நிர்ணயிக்கப்பட்ட தொகையின் ஒரு பகுதியை இவர்கள் செலுத்தியுள்ளனர். இந்தத்தொகையை குறிப்பிட்ட 06 மாத காலப்பகுதிக்குள் செலுத்தாதிருந்தால் நீதிமன்றத்தை அவமதித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மேலும் தண்டனை அனுபவிக்க வேண்டி ஏற்படலாம் என்ற காரணத்தால் ஒரு பகுதி தொகையை இவர்கள் செலுத்தி நகர்த்தல் பத்திரம் மூலம் அவகாசம் கோரி இருக்கின்றனர்.

தாம் உரிய முறையில் பொறுப்பை நிறைவேற்றாமல் தவறிழைத்தது மாத்திரமன்றி நீதிமன்றத்தின் உத்தரவையும் மதிக்காமல், பாதிக்கப்பட்ட வர்களுக்கான நட்டஈட்டையும் செலுத்தாமல் காலத்தைக் கடத்தும் இவர்கள் மீது மன்று அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கும் என்பது தொடர்பாக பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.



இந்த 2019 ஏப்ரல் குண்டுவெடிப்பு தாக்குதலைத் தொடர்ந்து இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகம் கடுமையான பாதிப்புகளையும் துன்பங்களையும் அனுபவிக்க நேரிட்டது. நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களங மீதான கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள், முஸ்லிம் சமூகம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்ற சமூகம் என்ற மோசமான சிந்தனை பரப்பல், அரச மற்றும் தனியார் தொழில் துறைகளில் தொழில் புரிந்துகொண்டிருந்த அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் வேலைகளை இழந்தமை அல்லது அவர்கள் பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தப்பட்டு பலவந்தமாக தொழில்களில் இருந்து வெளியேற்றப்பட்டமை, முஸ்லிம் வர்த்தக வாணிப நடவடிக்கைகளை முற்றாக முடக்க நடவடிக்கை எடுத்தமை, முஸ்லிம் பெண்கள் தமது இஸ்லாமிய மத, கலாசார விழுமியங்களைப் பின்பற்றிவர்களாக தெருவில் இறங்கி நடந்துபோக முடியாத அளவுக்கு இம்சைப்படுத்தல் என்றெல்லாம் சொல்லொணா துன்பங்களை அனுபவிக்க நேரிட்டது.

ஆனாலும் 2022 மே மாதம் 09ஆம் திகதியின் பின்னர்தான் நாட்டில் வாழும் முஸ்லிம் அல்லாத சமூகங்களால் இத்தகைய தொடர் குண்டுத் தாக்குதல்களின் பின்னணி எப்படிப்பட்டது, எங்கிருந்து திட்டங்கள் வகுக்கப்பட்டன, குண்டுவெடிப்புகளின் பின்னணி அரசியல் இலக்கு போன்ற வற்றை புரிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டது. அதன் காரணமாகவேதான் பேராயர் மெல்கம் ரஞ்சித் தொடர்ச்சியாக சூத்திரதாரிகளை வெளிப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றார். ஆனாலும் அந்தக் கோரிக்கை இதுவரையில் செவிடன் காதில் ஊதும் சங்காகவே இருந்துவருகின்றது.

எவ்வாறோ 2023 ஜனவரி மாதம் 12ஆம் திகதி உயர் நீதிமன்றம் வழங்கிய இவ்வாறான ஒரு தீர்ப்பின் மூலமாவது ஒருவகையில் பொறுப்பை நிறைவேற்ற வேண்டியவர்கள் அந்தப் பொறுப்பை சரிவர நிறைவேற்றாததால் அந்த குண்டுத் தாக்குதலை தடுக்க முடியாமல் போய்விட்டது என்ற உண்மையைப் புலப்படுத்தியமை இந்நாட்டு மக்களுக்கு ஒரு திருப்திகரமான தீர்ப்பாகும். ஆனாலும் கால அவகாசம் என்ற அடிப்படையில் தொடர்ந்தும் இவர்கள் குற்றவாளிகள் என்ற வலையில் இருந்து நழுவ இடமளிக்கக்கூடாது.

**உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பேராயரின் கோரிக்கை செவிடன் காதில் ஊதும் சங்காகவே இருந்துவருகிறது.**



# விபத்து

**உமர் அலி உஸ்மான்**

இலங்கையில் 2023 ஜனவரி 01 முதல் ஜூன் 18 வரை சுமார் 8,875 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது 1,043 பேர் உயிரிழந்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண அண்மையில் தெரிவித்திருந்தார். இந்த விபத்துகளில் பஸ்கள், சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளே தொடர்புபட்டிருந்ததாக இராஜாங்க அமைச்சர் விளக்கிக் கூறியுள்ளார். வீதிகளின் தரம், வாகன நிலைமைகள், மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனையில் வாகனம் செலுத்துதல் உள்ளிட்ட பல காரணிகளால் இந்த விபத்துகள் ஏற்பட்டுள்ளதாக அழகியவண்ண மேலும் தெரிவித்தார். இவற்றையும் தாண்டி பல காரணங்கள் விபத்துகளுக்கு இருப்பது எல்லோரும் அறிந்ததே. இந்தக் கட்டுரையை வாசித்துக்கொண்டிருக்கும்போது விபத்துகளின் எண்ணிக்கையும், அதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும், காயப்பட்டவர்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்திருக்கும் என்பது கவலையான உண்மை.

இதற்கு மேலதிகமாக இலங்கையில் வருடாந்தம் சராசரியாக 38,000 விபத்துகள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக சுமார் 3,000 இறப்புகள் மற்றும் 8,000 கடுமையான காயங்கள் ஏற்படுகின்றன. மதிப்பிடப்பட்ட வருடாந்த வீதி விபத்து இறப்புகள், தெற்காசியாவில் அதன் அயல்நாடுகளில் மிக அதிகமாகவும், உலகில் சிறப்பாக செயல்படும் நாடுகளில் ஐந்து மடங்கு அதிகமாகவும் உள்ளன.

இலங்கையின் வீதிகளில் அதிக வீதி விபத்து மரணங்கள் மற்றும் காயங்கள் வீதம் கடந்த தசாப்தத்தில் வறுமையைக் குறைத்தல் மற்றும் செழிப்பை அதிகரிப்பதில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. வீதி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானவர்கள் 15-64 வயதுக்கு இடைப்பட்ட வேலை செய்யும் வயதுடையவர்களாகும். 2011 மற்றும் 2018க்கு இடையில் 67% வாகன உரிமையின் விரைவான வளர்ச்சி, பல்வேறு அளவுகள் மற்றும் வேகங்களின் மோட்டார் மற்றும் மோட்டார் அல்லாத போக்குவரத்தின் பன்முகத்தன்மையால் இந்த நிலைமை மோசமடைகிறது. இதனால் பாதிக்கப்படக்கூடிய வீதிப் பயனாளிகளுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாமல் போய்விடுகிறது.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் 90 வீதத்துக்கும் அதிகமானோர் பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுபவர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களாகும். இந்தப் போக்கு தொடர்ந்தால், அவசரமாக தேவையான நடவடிக்கைகள் செயல்படுத்தப்படாவிட்டால் எதிர்பார்த்தபடி விபத்து இறப்புகள் மற்றும் காயங்கள் சீராக அதிகரிக்கும் என்கிறது ஓர் ஆய்வு.

இது நாட்டின் ஆரோக்கியம், நல்வாழ்வு, மனித மூலதனம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான பிரச்சினையாகும். வீதி விபத்துகள் மற்றும் காயங்கள் காரணமாக இலங்கை போன்ற நாடுகளுக்கு வருடாந்தம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3-5% வரை செலவாகும் என உலக வங்கி கணித்துள்ளது. செயல்படாமை தொடர்பான செலவும் மிகவும் அதிகமாக உள்ளது.

“தேசிய வீதி விபத்து மரணங்களை 50 வீதமாகக் குறைப்பதற்கான நிலையான அபிவிருத்தி இலக்கு 3.6 இலக்கை அடைய வேண்டுமானால், எதிர்வரும் பத்தாண்டுகளில் இலங்கைக்கு கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டொலர் கூடுதல் முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த முதலீடு பயனுள்ளதாக இருப்பதற்கும், நிலையான அடிப்படையில் வீதிப் பாதுகாப்பு செயல்திறனை மேம்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தின் நீண்டகால அர்ப்பணிப்பு மற்றும் நிலையான பார்வை தேவைப்படும்.

இவற்றைக் கட்டுப்படுத்த வீதிப் பாதுகாப்புக்குப் பொறுப்பான நிறுவனங்கள், வீதிகளில் அதிகரித்துவரும் அபாயங்களைச் சமாளிக்கப் போதுமான அதிகாரம் மற்றும் வளங்களைக் கொண்டிருக்க வேண்டும். இதில் நிர்வாக சவால்கள் மற்றும் வீதி விபத்து தரவுகளிலுள்ள இடைவெளிகளும் அடங்கும். இந்தச் சிக்கல்கள் முடிவுகளை மையப்படுத்திய மூலோபாயத்தை உருவாக்குவதற்கான திறனைக் குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது மற்றும் அதன் போதுமான ஒருங்கிணைப்பு மற்றும் செயல்படுத்தலை உறுதி செய்கிறது. நல்ல வீதிப் பாதுகாப்பு நடைமுறையை வரையறுப்பதற்கும், செயல்பாட்டுக்கான வரைபடத்தை வழங்குவதற்கும் மிகவும் பயனுள்ள, திறமையான மற்றும் அளவிடப்பட்ட முன்முயற்சிகள் தேவை.



T.THANESH
Officer in Charge
Eastern Province Road
Passenger Transport Authority
Main Bus Stand,
Batticaloa.

இலங்கையில் வீதி விபத்துகள் அதிகரித்து வரும் நிலையில், 30.05.2023 அன்று ஒரே நாளில் மட்டும் மூன்று வயது குழந்தை உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா - நீர்கொழும்பில் பாதசாரிகள் இருவரை லொறி மோதியதில் இருவர் மரணமடைந்துள்ளார். மூன்று வயது ஆண் குழந்தையும், அவரின் 29 வயதான தந்தையுமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

கண்டி - கம்பளையில் பஸ் மோதியதில் 60 வயதான பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார். பஸ்ஸை விட்டு இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டவேளை அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

குருநாகல் - குளியாப்பிட்டியில் காரும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கரவண்டி சாரதி மரணமடைந்துள்ளார். 42 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

புத்தளம் - ஆனமடுவ, பெரியகுளம் பகுதியில் வான் மோதியதில் பாதசாரி ஒருவர் மரணமடைந்துள்ளார். 68 வயதான வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - வெள்ளவத்தையில் தனியார் பஸ்ஸுடன் மோட்டார்சைக்கிள் மோதியதில் ஒருவர் மரணமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 28 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் - ஸ்வஸ்திபுர பகுதியில் வேன் விபத்துக்குள்ளானதில் 76 வயதான பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார். இந்த விபத்தில் பெண் ஒருவரும், ஆண் ஒருவரும், இரண்டு சிறுவர்களும் காயமடைந்துள்ளனர்.

களுத்துறை - பாணந்துறையில் முச்சக்கரவண்டி கவிழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர். 33 வயதான முச்சக்கரவண்டி சாரதியும், அதில் பயணித்த 41 வயதான பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

மொனராகலை - வெல்லவாயவில் ஹயஸ் வேன் மோதியதில் 72 வயதான வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இப்படி நீளும் மரணப்பட்டியலில் இலங்கையின் எதிர்காலம் சிதைந்துள்ளதை நாம் காணலாம்.

இவர்கள் எல்லாம் யார் ? இவர்களால் இந்த நாடு அடைந்த நன்மைகள் ஏராளமாக இருக்கலாம். இவர்களை இழந்தமையால் இவர்களின் குடும்பமும் நாடும் அடைந்த நஷ்டங்கள் ஏராளம். இதனைக் கட்டுப்படுத்த நாங்கள் என்ன செய்யப்போகிறோம் ?

இவற்றுக்கு நடுவில் கடந்த வார இறுதி தினத்தில் நாட்டை சோகத்தில் ஆழ்த்திய பஸ் ஒன்று ஆற்றில் கவிழ்ந்து 13 பேர் அளவில் உயிர்நீத்த பயங்கர பஸ் விபத்து இடம்பெற்றது. இந்த விபத்து நடைபெற்ற கொட்டலிய பாலம் அடிக்கடி விபத்து இடம்பெறும் ஒரு பாலமாகவே உள்ளதென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அன்று இரவு 7.25 மணியளவில் பொலன்னறுவையிலிருந்து கிழக்கின் முஸ்லிம் நகரமொன்றை நோக்கி பயணித்த பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது. அது அதிகளவான மக்கள் பயணிக்கும் பஸ் எனவும், வார இறுதியில் ஞாயிற்றுக்கிழமை என்பதால் காத்தான்குடி செல்லும் பஸ்ஸில் வழமையான எண்ணிக்கையை விட அதிகமான பயணிகள் நிரம்பி இருந்ததாகவும் அந்த விபத்தில் உயிர் தப்பிய இளைஞர் வெளிப்படையாகவே ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். அதுமட்டுமன்றி பஸ் பயணத்தை ஆரம்பித்து 10 நிமிடங்களுக்குள் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மகாவலி ஆற்றுடன் இணைக்கப்பட்டுள்ள கிளை ஆறுகள் கொட்டலிய பாலத்தின் கீழ் பாய்ந்தமையால், விபத்து இடம்பெற்றுள்ளது. இந்தப் பாலத்தின் கீழ் பகுதி சதுப்பு நிலமாக காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் குறுக்கலாக உள்ளதால், ஒரே நேரத்தில் இரண்டு வாகனங்கள் கடந்து செல்ல முடியாது. இதனால் இப்பகுதியில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர். விபத்து நடந்த உடனேயே, அருகிலுள்ள இராணுவத் தளங்களிலிருந்து வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து காப்பாற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர். விபத்தில் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் சடலங்கள் அனைத்தும் பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு விபத்து தொடர்பில் பொலன்னறுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இலங்கையர்களின் கண்களை திறந்து வைத்துக்கொண்டு உறக்கத்தில் கதை அளப்பது போன்றுள்ளது அரச இயந்திரத்தின் போக்கு.

இந்தப் பாலம் அமைந்துள்ள இடத்தில் முன்னரும் பல விபத்துகள் ஏற்பட்டு, மரணங்கள் சம்பவித்திருந்தபோதிலும் கூட, இவ்வாறான பாரிய விபத்துகளைத் தடுப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் இதுவரையில் உரிய முறையில் மேற்கொள்ளாதது பலத்த கண்டனத்துக்குரியது. அதுமட்டுமன்றி முன்னாள் ஜனாதிபதி மைத்ரியின் சொந்த பூமியும் கூட. விபத்துக்குள்ளான வாகன பெர்மிட் கூட போலியானது அல்லது பெர்மிட் இல்லை என்பது போக்குவரத்துத் துறையினருக்கு தெரியாதா என்ன? பல உயிர்களைக் காவுகொண்ட பஸ் விபத்துக்கு கண்மூடித்தனமாக செயற்பட்ட கிழக்கு மாகாண வீதி போக்குவரத்து அதிகாரசபை, இலங்கை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு போன்ற அரச அமைப்புகள் பொறுப்புக்கூற வேண்டியுள்ளது.

ஒரு தேசத்தின் அறிவார்ந்த மக்கள் அஜாக்கிரதையையும், அராஜகத்தையும் தொடர்ந்தேர்ச்சையாக மௌனமாய் கடந்து அனுமதித்தால் இறுதியில் என்ன நேரும் என்பதற்கு கொட்டலிய பாலத்தடியில் நிகழ்ந்த துர்ப்பாக்கிய சம்பவமும் தக்க பாடமாகும். குறித்த தனியார் பஸ் கடந்த பல ஆண்டுகளாக பல மக்களின் பல்வேறு நியாயமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருந்தும் உரியவர்கள் இவ்விடயங்களில் கரிசனை காட்டவில்லை என்பது விலைமதிக்க முடியாத உயிர்களின் மீது அதிகார வர்க்கத்தினருக்கு இருந்த அக்கறையின்மையின் வெளிப்பாடு எனலாம்.

ஒரு பயணி கதுறுவலையில் ஏறும்போது காசு பார்ப்பதற்காக கல்முனை வரை பயணிக்கும் என்று சொல்லி கடைசியில் காத்தான்குடியில் இறக்கிவிடும் போக்குவரத்து போக்கிரித்தனத்தை வெகு அசாட்டாக செய்துவந்த தனியார் பஸ்ஸின் பொடுபோக்குத்தனமே இத்தனை ஒப்பற்ற உயிர்களை இழக்க காரணமாக அமைந்திருக்கிறது என்பது எமது பிந்திய அவதானமாகும்.

அன்றைய தினம் (08) கடமையில் இருந்த குறித்த பஸ்ஸின் சாரதி என்ன நிலைமையில் இருந்தார்? வேகக் கட்டுப்பாட்டை இழந்தாரா? அவர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். விசாரணையில் அவர் கூறியது என்ன? என்பதெல்லாம் இன்னும் பொதுமக்களுக்கு விளக்கிச் சொல்லப்படவில்லை. அந்த பஸ்ஸில் பயணித்தவர்களின் தகவலின்படி குறித்த பஸ் ஓட்டுனரின் நிதானமின்மை விபத்துக்கு முக்கிய காரணமாக அறியப்படுகிறது எனும் ஊடகவியலாளர்களின் கருத்துக்கு அரச இயந்திரம் கொடுக்கப்போகும் பதிலென்ன?

எது எப்படியோ, தனிப் போக்குவரத்து அல்லது பொதுப் போக்குவரத்து என்று வருகின்றபோது சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்கள், சாரதிகள் அதில் கூடிய கவனம் செலுத்தி மக்களை அழைத்துச் செல்வது அவசியமாகும். மன்னம்பிட்டிய ‘கொட்டலிய’ பாலத்தில் இதற்கு முதலும் சில விபத்துகள் இடம்பெற்று பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, அரசு இவ்விடயங்களில் கூடிய கவனஞ்செலுத்தி எதிர்வரும் காலங்களில் விபத்துகளைத் தடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். இவற்றையெல்லாம் தாண்டி கசப்பான சிலவற்றை நாம் அப்படியே ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது. இப்படியான விபத்துகளுக்கு சாரதிகள் மட்டுமன்றி, பயணிகளும், சட்டத்தை அமுல்படுத்துகின்ற அதிகாரிகளும் பொறுப்பாளிகளாவர்.

ஏனெனில், சட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றவர்களின் இலகுத்தன்மையும் தாங்கள் பயணிக்கும் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளின் வாகனம் செலுத்தும் விதம் தொடர்பில் பயணிகளின் அக்கறையற்ற தன்மையும் காரணங்களாகவுள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். பாதுகாப்புக் கடமையில் இருக்கும் ஒருசில பொலிஸார் அதிவேகமாக வாகனம் ஓட்டும், ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டும், சாலை விதிமுறைகளை மீறி வாகனம் ஓட்டும் சாரதிகளை நிறுத்தி அவர்களிடமிருந்து இலஞ்சப் பணங்களை பெற்றுக்கொண்டு விடுவிப்பதால் சாரதிகள் அசால்ட்டாக பிழைகளை செய்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். இலஞ்சம் வாங்கினாலும், கொடுத்தாலும் குறித்த அதிகாரியின் ஒட்டுமொத்த குடும்பமும் பிரஜாவுரிமை இழக்க நேரிடும் எனும் கடினமான சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட வேண்டும். சொல்வதைச் சொல்லுங்கள் செய்வதைச் செய்வோம் என்ற கோட்பாட்டில் பலர் நடக்க முற்படுவதனால்தான் விளைவுகளை விலைகொடுத்து வாங்கிக்கொள்கிறார்கள். இவ்விளைவுகளுக்கு அவர்கள் மாத்திரமன்றி பலரும் பலியாக்கப்படுகிறார்கள்.

குற்றங்களையும் குற்றச்செயல்களையும் தடுப்பதற்கும் விபத்துகளையும், அவ்விபத்து களால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமென பல்வேறு சட்ட ஏற்பாடுகளும், திட்டங்களும் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டாலும் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வந்தாலும் அவை வெற்றிபெறுவது அல்லது இலக்கை எட்டுவது என்பது நமது இலங்கையைப் பொறுத்தவரை முயல்கொம்பு நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இவற்றை ஓரளவேனும் வெல்ல மிதமிஞ்சிய வேகத்தில் வாகனத்தை செலுத்தினால் ஒரு வருடம் அல்லது ஆறு மாதம் அவர் வாகனம் செலுத்தத் தடை விதிக்க வேண்டும். வீதி விதிகளை மீறி விபத்துகளை ஏற்படுத்தினால் அதற்கான தண்டனை உச்சபச்சமாக இருக்க வேண்டும். வீதி மீறலுக்கு உச்ச தண்டனை அறிவிக்காதவரை இன்னும் பல உயிர்களையும், சொத்துகளையும் நாம் இழக்க நேரிடும்.

அதிகூடிய வேகம் விபத்துகளுக்கான சந்தர்ப்பத்தை அதிகரிப்பதோடு, விபத்து ஏற்படுமிடத்து பாதிப்பையும் அதிகரிக்கும். உதாரணமாக 140 kmph வேகத்தில் வாகனத்தைச் செலுத்தி இன்னுமொரு வாகனத்தில் மோதுவதற்கும், 60 kmph வேகத்தில் அதே வாகனத்தில் மோதுவதற்குமான வித்தியாசத்தை எம்மால் உணர முடியும். வேகக்கட்டுப்பாடு மிகவும் அவசியமாகின்றது. போதையில் வாகனம் செலுத்துதல், தொலைபேசியை பேசிக்கொண்டு அல்லது கையாண்ட வண்ணம் வாகனம் செலுத்துதல் ஆகியவை சாரதியின் கவனத்தைக் குறைத்து விபத்துக்கு வழிகோலுவதுடன் சாரதிகளை மட்டுமன்றி ஏனையவர்களையும் பாதிக்கின்றது.

தலைக்கவசம், ஆசனப்பட்டி போன்றவை கட்டாயமாக அணியப்பட வேண்டியவை. வாகனம் வைத்திருப்பவர்கள், வாகனத்தின் ரயரின் தரத்தைக் கண்டிப்பாக கவனத்திற்கொள்ள வேண்டும். இவை விபத்துகளின்போது பலத்த காயம் மற்றும் உயிரிழப்புகான சந்தர்ப்பத்தை வெகுவாக குறைக்கின்றன. ஒரு வீதியில் நாம் மட்டும் பயணிப்பது இல்லை. ஒரு சமூகம், நாட்டின் எதிர்கால சந்ததி என பல்வேறு தரப்பட்ட தனித்தனி உடல்கள் பயணிக்கின்றன. ஒரு சாரதியின் அல்லது பாதசாரியின் கவனக் குறைவால் ஒரு மனிதனின் வாழ்க்கை, ஒரு நொடியில் மாற்றமடைகிறது.

**எனவே, நாட்டின் வீதி விதிகளை சரிவரக் கடைப்பிடித்து, வேகத்தைக் கட்டுப்படுத்தி, நல்வாழ்வுக்கான பாதையில் நிதானமாக பயணிப்போம்.**



# கைகளை இழந்தாலும் நம்பிக்கையை இழக்கவில்லை



## சத்தியசீலன் சப்திகா



**சிவகுமார் திவியா**

சாதிப்பதற்கு நம்பிக்கையும், விடாமுயற்சியும், உண்மையான உறவுகளின் ஒத்துழைப்பும் இருந்தால் போதும். எந்தத் தடைகளையும் தாண்டிவிடலாம் என்பதற்கு சிறந்தொரு உதாரணமாக சாதனை படைத்து சாதிக்கத் துடிக்கின்றாள் சத்தியசீலன் சப்திகா.

வவுனியாவில் வசிக்கும் சப்திகாவுக்கு பிறப்பின்போதே கைகள் இல்லை. ஆனால், அவர் அதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு கால்களால் கீபோர்ட் வாசித்து கேட்போர் மனதைக் கொள்ளைகொள்கின்றார். பிறக்கும்போதே சப்திகாவுக்கு இரண்டு கைகளும் இல்லை. வலது காலில் மூன்று விரல்களும் இடது காலில் நான்கு விரல்களும் மாத்திரமே உள்ளன. ஆனால், அவையெல்லாம் தனது இசை தாகத்திற்கு குறுக்கே வரமுடியாது என்ற நம்பிக்கையோடு இசை அமைப்பாளராகும் இலட்சி யத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறார் சப்திகா.

இவர் வவுனியா இறம்பக்குளத்தில் 2003ஆம் ஆண்டு பிறந்தவர். இந்தக் குழந்தையை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறீர்கள், அவரைக் கொண்டுபோய் அனாதை இல்லத்தில் விடுங்கள் என்று பலர் அவரது பெற்றோரிடமே கூறியுள்ளார்கள். இந்தப் பேச்சுகளை செவிமடுக்காத



அவரது பெற்றோர் அவளை நம்பிக்கையோடு வளர்த்துள்ளனர்

**தாயின் கண்ணீர்க் கதை**

''எனது மகளைக் கொண்டுபோய் அனாதை இல்லத்தில் விட்டுவிட்டு வரும்படி பலர் என்னிடம் கூறினார்கள். நான் அதை சற்றும் செவிமடுக்காமல் எனது வீட்டுக்கே கூட்டி வந்துவிட்டேன். இவர் இங்குதான் வளர்ந்தார். சில நேரங்களில் எனக்கே தாங்க முடியாத கவலையாக இருக்கும். மூத்த மகள் விளையாடும்போதெல்லாம் இவர் ஒன்றும் செய்ய இயலாமல் இருப்பார். ஏனெனில், அவரால் நடக்க முடியாது. சிறுவயதில் நடக்க முடியாமல் உருண்டுதான் செல்வார். பின்பு ஐந்து வயதில் எதிர்பாராத விதமாக தானாகவே எழுந்து நடந்தார்" என்று சப்திகாவின் தாய் கண்ணீரோடு தெரிவித்தார்.

அவர்களின் நம்பிக்கை வீண் போகவில்லை. சப்திகா தனது பிறவி குறைபாட்டை எண்ணி சோகமாக இருக்காமல் தனது கால்களையே தனது கைகளாகவும் பயன்படுத்தி வந்துள்ளார். கால்களால் எழுதுகிறார். ஓவியம் வரைகிறார். ஒப்பனை செய்துகொள்கிறார். தற்பொழுது 20 வயதாகிறது. உயர்தரப் பரீட்சையை எழுதிவிட்டு முடிவுக்காக காத்துக்கொண்டிருக்கிறார் சத்தியசீலன் சப்திகா.

**சப்திகாவின் மனத்துணிவு**

''ஆரம்பத்தில் ஆசிரியர்கள் ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார்கள். பின்னர் என்னை உற்சாகப் படுத்தினார்கள். நானும் அவர்களுக்கேற்றாற்போல் வேகமாக எழுதுவேன். ஆனால், ஆசிரியர் நான் மெதுவாகத்தான் எழுதுவேன் என நினைத்து மெதுவாக சொல்வார். அப்போது நான் ஆசிரியரிடம், நீங்கள் மெதுவாக கூற வேண்டாம். நானும் ஏனைய மாணவர் களைப்போல் வேகமாக எழுதுவேன் என்று கூறுவேன்.

நான் கிட்டத்தட்ட நான்கு பாட்டுகள் பாடி வைத்துள்ளேன். ஒன்று நண்பர்களைப் பற்றி, இன்னொன்று அப்பாவை பற்றி, அடுத்தது என்னைப் போன்ற குழந்தைகளைப் பற்றி மற்றும் எனது தாய்நாடாக இருக்கும் இலங்கையைப் பற்றி. என்னைப்போன்ற குழந்தைகள், ஏழை மக்கள் அனைவரும் பலவற்றை சாதிக்க வேண்டும் என ஆசைப்படுவார்கள். ஆனால், இந்தச் சமூகம் அவர்களை மேல்நிலை அடையவிடாது. இதைப் பற்றிய ஒரு பாடலையும் இயற்றியுள்ளேன். இவற்றை எல்லாம் போராடிப் பெறவேண்டும்'' என்று சப்திகா மனத்துணிவோடு கூறினார்.

தன்னுடைய அன்றாட வேலைகள், படிப்பு போன்றவை எல்லாவற்றையும் தாண்டி கால்களாலேயே இசையமைக்கவும் செய்கிறார் சப்திகா. அம்மா வழி தாத்தா அவளுக்கு சிறந்த ஆசானாகவும் நல்ல உறவினராகவும் இருந்து கால்களால் பியானோ வாசிக்க கற்றுக் கொடுத்துள்ளார்.

தாத்தா கூறுகையில்,

''ஒருநாள் நான் பியானோ கொண்டுவந்து இவள் முன் வைத்தேன். அவள் ஆர்வத்துடன் அப்போது தனது கால்களால் மெல்ல மெல்ல அதனை வாசித்தார். அப்போது நான் புரிந்துகொண்டேன் இவரால் இது முடியும் என்று . பின்னர் நான் அவருக்கு அதனை பழக்கிக் கொடுத்தேன் அதன் பின் மெல்ல மெல்ல பழகி இப்பொழுது தானாகவே வாசிக்கத் தொடங்கிவிட்டார்'' என்றார். சப்திகா சவால்களை சமாளித்து வாழ்க்கையில் சாதிக்க உதவியாக இருந்த அவரது தந்தை சத்தியசீலன், வவுனியா நகர்ப்பகுதியில் ஹோட்டல் ஒன்றில் பணியாற்றுகின்றார். அவரே சப்திகாவுக்கு சிறகுகளாக இருக்கின்றார்.

**தந்தை சத்யசீலன்,**

"எனக்கு ஆரம்பத்தில் இருந்த மனவேதனைக்கு இப்போது மிகவும் சந்தோஷமாக உள்ளது. சாதாரண மாணவர்களை விட எனது மகள் படிப்பிலும் சரி, இசையிலும் சரி இவ்வளவு புத்திசாலியாக வருவாள் என நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை. இதை நினைத்துப் பார்க்கும்போது எனக்கு மிக சந்தோஷமாக உள்ளது.

சினிமாப் பாடல்கள், கிறிஸ்தவ பாடல்களை வாசிக்கும் சப்திகா, தானே பாடலை பாடவும் செய்கிறார். அதுமட்டுமன்றி பல பாடல் வரிகளை எழுதி தானே பாடுகின்றார். அப்பாடல்களுக்கு தானே இசையமைத்தும் உள்ளார். இசையமைப்பாளராவதையே தனது இலட்சியமாகக்கொண்டுள்ளார். இசையே தமக்கான அடையாளமாக இருக்கவேண்டும் என விரும்புகின்றார்'' என்றார்.

இவரின் இந்த முன்னேற்றத்திற்கு அவரது குடும்பத்தின் நம்பிக்கையும் உறவினரின் ஆதரவும் பேருதவியாக உள்ளன. கால்களால் சத்தத்தை உருவாக்கும் சப்திகா, நான் ஒரு நாள் இசையை ஆளும் ராணியாவேன் என்று கண்களில் நம்பிக்கை ஒளி மின்ன கூறுகிறார்.

# தமிழர்களின் வாழ்வியலோடு இணைந்துள்ள வெங்காயம்



## தொற்று நீக்கி, நோய் தீர்க்கும் மருத்துவ மூலிகை

தமிழர்கள் நீண்டகாலமாக நோய் ஏற்படாமல் தடுப்பதற்கும் நோய் வந்த பின் குணமாக்கலுக்கும் நோய்த் தொற்று ஏற்படாமல் இருப்பதற்கும் தொற்று நீக்கி மூலிகைகளைப் (Herbal Antiseptic) பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழர்களது வாழ்வியல் கூறுகளோடு பிரிக்க முடியாதவாறு மூலிகை மருத்துவமானது இணைந்து காணப்படுவதனால் மூலிகை மருத்துவத்தை தமிழ் மருத்துவம் அல்லது தமிழர் மருத்துவம் என தமிழர் பிரதேசங்களில் விதந்து போற்றப்படுவதைக் காணலாம்.

புராதன கால தமிழர்களது விஞ்ஞான வளர்ச்சியின் ஓர் அங்கமாக மூலிகை மருத்துவம் காணப்படுவதனால் அதன் சிறப்பை உணர்ந்த பல்வேறு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மூலிகைகளின் இரசாயனப் பகுப்பு (Chemical Analysis) ஆய்வுகளையும் மூலிகை மருந்தியல் ஆய்வுகளையும் செய்து வருகின்றனர்.

மூலிகைகளிலிருந்து இரசாயனப் பிரித்தெடுப்பின் மூலம் பிரித்தெடுத்து ஆங்கில மருந்துகளில் சில உருவாக்கப் படுகின்றன. இவ்வாறு மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆங்கில மருந்துகள் பல்வேறு நாடுகளில் ஆங்கில மருத்துவர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறான மூலிகை மருந்துகளில் கிருமிகளுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய சிறப்பான தொற்று நீக்கி மூலிகைகளை ஆராய்வது காலத்தின் தேவைகளில் ஒன்றாகக் கருதவேண்டியுள்ளது. இந்த வகையில் தமிழர்களால் நீண்டகாலமாக உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்தப் பட்டு வருகின்ற தொற்று நீக்கி மூலிகையான வெங்காயத்தின் மருத்துவ சிறப்புகளை ஆராய்வது முக்கியமானதாக அமைகின்றது.

வெங்காயமானது யாழ்ப்பாணத்தில் சிறப்பாக வளரும் பயிரினமாகும். இது அமரல்லி டேசியே எனும் தாவர குடும்பத்தைச் சார்ந்த பயிரினமாகும். அலியம் அஸ்கோலினிக்கம் என்ற தாவரவியற் பெயர்கொண்ட இத்தாவரத்தின் நிலக்கீழ்த் தண்டின் திரிபான குமிழ், பூ ஆகிய பகுதிகள் உணவாகப் பயன்டுத்தப்படுகின்றன. குமிழ், பூ, செதிலிலை, விதை ஆகிய பகுதிகள் மருந்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வெங்காயமானது ஈரவெங்காயம் ஈருள்ளி. ஈரவுள்ளி, காயம், சுக்கிரந்தம். நிச்சியம் போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. வடமொழியில் பலாண்டு என்றும் ஆங்கிலத்தில் Onion என்றும் குறிப்பிடப்படுகின்றது.

சேதன சல்பைட்டுகள் கந்தகம் அடங்கிய ஆவிபறப்புடைய எண்ணெய் போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் வெங்காயத்தில் காணப்படுகின்றன. சேதன சல்பைட்டுகள் போன்ற கந்தக சேர்வைகள் காணப்படுவதனால் வெங்காயமானது உணவுக் கால்வாய் தொகுதியில் தொற்று நீக்கியாக தொழிற்படுகின்றது.

மயக்கம், வலிப்பு, சிறுவருக்கு ஏற்படும் வலிப்பு, ஹிஸ்டிரியாவில் ஏற்படும் வலிப்பு, மூர்ச்சை போன்ற நிலைகளில் முதலுதவியாக வெங்காயச் சாற்றை முகரக் கொடுக்கும்போது மயக்கம் தணிவதைக் காணலாம்.

வெங்காயத்தை நெய்யிட்டு வதக்கி கட்டுகள்மீது போடுவதன் மூலம் கட்டுகளை பழுக்க வைத்து உடைப்பதற்கு நீண்டகாலமாக தமிழர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பூச்சிக்கடிகள், தேள் கொட்டல் போன்ற நிலைமைகளிலும் வெங்காயச்சாற்றை கடிபட்ட இடத்தின் மேல் முதலுதவி சிகிச்சையாக பூசுகின்றனர். நாட்பட்ட புகையிலை நிக்கோட்டின் நஞ்சைக் குறைப்பதற்கு விஷ முறிவாக (Antidote) வெங்காயச்சாறு பயன்படுத்தப்படுகின்றது. கடுகு எண்ணெயும் வெங்காயச்சாறும் கலந்து கீல்வாத வேதனை தாபித நிலைமைகள் Inflammatory swellings) போன்ற நிலைமைகளில் பயன்படுத்தலாம். வெங்காயம் காமம் பெருக்கி (Aphrodisiac) செய்கையுடையதாக இருக்கின்றது. வெங்காய விதையை உலர்த்திப் பொடி செய்து சர்க்கரையுடன் வேளைக்கு 1/2 முதல் 1 வராகனெடை வீதம் தினம் மூன்று வேளை உட்கொள்ள ஆண்மை பெருகும். குன்மநோயும் குணமாகும்.

வெங்காயமானது குருதி அழல் சிரங்கு, ஆஸ்துமா, வயிற்றோட்டம், மூல நோய் போன்ற நோய்களைக் குணமாக்குகின்றது. வெங்காயத்துடன் சீரகத்தூள், கற்கண்டு தூள் சேர்த்து பின்னர் பசு நெய்விட்டு வதக்கி உட்கொள்ள மூலநோய் குணமாகும். வெங்காயமானது வெண்ணெய் அல்லது நெய்யுடன் பொரித்து உணவுடன் சேர்த்து உட்கொள்ள மூலநோய் தணிவதைக் காணலாம்.

ஆஸ்துமா, நாட்பட்ட மூச்சுக்குழல் (Chronic Bronchitis), அழற்சி பீனிசம் போன்ற நிலைமைகளுக்கு கொடுக்கப்படும் சின்னச்சிவப்பு எனும் சித்த மருந்துடன் உள்ளிச்சாறு, வெங்காயச்சாறு, வெற்றிலைச்சாறு. தேன் ஆகியன கலந்த அனுபானத்துடன் கொடுக்கும்போது சிறப்பான பலனைக் காணக்கூடியதாயுள்ளது.

வெங்காயச்சாற்றுடன் உப்பு கலந்து கொடுக்கும்போது வயிற்று வேதனை குறையும். வெங்காயச்சாற்றைக் காடியுடன் கலந்து தொண்டைப் புண் போன்ற நிலைமைகளில் பயன்படுத்துவர். வெங்காயத்தைக் கடிக்கும்போது வெளி வரும் ஆவியானது தொற்று நீக்கித் தன்மை உடையதாக இருப்பதுடன், தொண்டையில் தீங்கு விளைவிக்கும் பற்றீரியாக் கிருமிகளை ஒழிப்பதற்கு பயன்படுகின்றது.

தோலுரித்த நாட்டு வெங்காயத்தை ஆமணக்கெண்ணெயில் வதக்கி உட்கொள்ள மலச்சிக்கல் குணமாகும். பரு உள்ள இடத்தில் வெங்காயத்தைத் தேய்க்கும்போது சில நாட்களில் பரு மறைந்துவிடும். சித்தமருத்துவ பாலவாகடத்தில் சிறுவர்களின் கணைக்கழிச்சல் எனும் நிலைமையில் வெங்காயக்குடிநீர் கொடுக்கலாம் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறான பலவித மருத்துவச் சிறப்பு வாய்ந்த வெங்காயத்தை வெட்டியவுடன் பாவிப்பதே சிறந்தது. அதிகநேரம் கழித்து பயன்படுத்துவது அவ்வளவு சிறப்பானதல்ல. மேலும் உள்ளி. வெங்காயச்சாற்றுடன் தேன் கலந்து உள்ளெடுக்கும்போது இரத்த கொலஸ்ரோல் குறைவதாக ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாயுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை எண்மிய நூலகத்தை (Digital Library) உருவாக்குவதுடன், சித்த மருத்துவ நூல்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து உலக அரங்குக்கு சித்த மருத்துவத்தைக் கொண்டுசெல்வதற்கான புலமைத்துவக் குழுவை அமைத்துப் செயற்படவேண்டும்.

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் பிரதேச சித்த மருத்துவமனைகளில் சித்த மருத்துவ நூல் நிலையங்களை அமைக்க வேண்டும்.

இது எங்களுடைய மொழி, எங்களுடைய மருத்துவம் என்ற தமிழுணர்வு எம் மக்கள் மத்தியில் மேலோங்குவது இன்றைய காலகட்டத்தில் முதன்மையான தேவைகளில் ஒன்றாக அமைகின்றது.



டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
A . m c . b
மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,
தெல்லிப்பழை.



# அதிகார மோதலின் உச்சத்தில்

# அமைச்சர் நசீரும் ஆளுநர் செந்திலும்

**றிப்தி அலி**

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதிகாரத் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முறையிடவுள்ளேன் - என சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் 'தமிழன்' வார வெளியீட்டுக்குத் தெரிவித்தார்.

இந்த அதிகாரத் துஷ்பிரயோகம் காரணமாக கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான முக்கிய சந்திப்பொன்றை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் ஏற்பாடு செய்துள்ளதாகவும் அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான சில முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

கடந்த ஓரிரு வாரங்களாக சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட்டுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் பாரிய கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்திலுள்ள கனிய வளங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் சில அதிரடி உத்தரவுகளை கிழக்கு ஆளுநர் அண்மையில் மேற்கொண்டிருந்தார். இதனையடுத்தே குறித்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நசீர் அஹமட்டுக்கும் ஆளுநருக்கும் இடையில் முரண்பாடு தோன்றியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் 'தமிழன்' வார வெளியீட்டுக்குத் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்திலுள்ள கனிய மணல் மற்றும் கைத் தொழி ல்சார் கனிய வளங்கள் தொடர்பான முன்மொழிவுகளை செயற்படுத்துவதை உடனடியாக இடைநிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க கடந்த ஜூன் 16ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

அது மாத்திரமல்லாமல், கனிய மணல் மற்றும் கைத்தொழில்சார் கனிய வளங்களுடன் தொடர்புடைய காணிகளை விடுவிக்க வேண்டாம் எனவும் ஆளுநரின் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் ஆளுநர் செயலகத்திலுள்ள மாகாண கனிய மதிப்பீட்டுக் குழுவால் மதீப்பீடு செய்யப்பட்டு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்படும் வரை இந்தத் தடையுத்தரவு தொடரும் எனவும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட இந்த உத்தரவு தொடர்பான அறிவித்தல், மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனினும், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளரால் அனுப்பப்பட்ட மேற்படி கடிதத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட உத்தரவு, அரசியலமைப்பை நேரடியாக மீறும் செயல் என புவிச்சரிதவியல் அளவை சுரங்கவியல் பணியகம் அறிவித்துள்ளது.

"கனிய வளங்கள் தொடர்பில் எந்தவொரு உத்தரவையும் ஆளுநர் செயலகத்தால் வழங்க முடியாது. இது தொடர்பில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது" என இப்பணியகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் பட்டய புவிச்சரிதவியல் நிபுணர் அஜித் பிரேம தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்கவுக்கு புவிச்சரிதவியல் அளவை சுரங்கவியல் பணியகத்தின் பதில் பணிப்பாளரால் கடந்த 7ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள அவசர கடிதத்திலேயே இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், சுற்றாடல் அமைச்சின் செயலாளர், உள்நாட்டலுவல்கள், பொது நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, "கனிய மணல் மற்றும் மண் அகழ்வுகள்" எனும் தலைப்பிலான விசேட கூட்டமொன்றுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் கடந்த 7ஆம் திகதி அழைப்பு விடுத்துள்ளார்.

மாகாணத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கும், புவிச்சரிதவியல் அளவை சுரங்கவியல் பணியகத்தின் பிராந்திய பொறியியலாளர்களுக்குமே இந்தக் கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஐந்து வருடங்களில் வழங்கப்பட்ட கனிய மற்றும் மண் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அனுமதி வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் போன்றவற்றின் தகவல்களையும் இக்கூட்டத்துக்குக் கொண்டுவருமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

எனினும், "துறையுடன் சம்பந்தப்பட்ட அமைச்சரின் அனுமதி பெறப்பட்ட பின்னரே இக்கூட்டத்தில் கலந்துகொள்ள முடியும்" என கிழக்கு மாகாணத்திலுள்ள புவிச்சரிதவியல் அளவை சுரங்கவியல் பணியகத்தின் பிராந்திய பொறியியலாளர்கள் மூவரும் தனித் தனி கடிதங்களினூடாக ஆளுநரின் செயலாளருக்கு கடந்த ஜூலை 7ஆம் திகதி அறிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரியாக செயற்பட்ட எம்.எம்.கலாவுதீன், ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தலுக்கமைய, இறக்காமம் பிரதேசத்துக்கு இடமாற்றப்பட்ட விடயம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற காத்தான்குடி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட்டின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.



இன்னும் ஓரிரு வருடங்களில் ஓய்வுபெறவுள்ள கலாவுதீன், சுற்றுநிரூபத்தை மீறி வெளி மாவட்டமொன்றுக்கு இடமாற்றப்பட்ட விடயமும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனால் குறித்த இடமாற்றத்தை உடனடியாக இரத்துச்செய்வது என தீர்மானம் இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் நசீர் அஹமட்,

"கிழக்கு மாகாணம் என்பது செந்தில் தொண்டமானின் அப்பாவினதோ அல்லது அவரினதோ சொத்து கிடையாது. அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டால் கிழக்கிலே இறங்கவிடக்கூடாது.

மலையகத்தில் செய்வதுபோன்று அதிகாரிகளை சும்மா கூப்பிட்டு வைத்துக்கொண்டு கணக்கெடுக்காமல் ஆட்சிசெய்கின்ற விடயங்கள் எல்லாம் இங்கு சரிவராது. கிழக்கு மாகாணத்தில் இந்த விளையாட்டுகளுக்கு இடம் கிடையாது.

நானும் முதலமைச்சராக இருந்தவன். ஆனால், அரசியல் பழிவாங்கல் நோக்கில் இப்படியான இடமாற்றங்களை வழங்கியது கிடையாது. எங்களது கல்வி வலயத்திலுள்ள கல்வி அதிகாரிகளின் இடமாற்ற விடயங்களில் கிழக்கு மாகாண ஆளுநர் தலையிடக்கூடாது.

கோட்டக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றம் வலயக் கல்விப் பணிப்பாளரின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம். ஆளுநர் சொல்லுகின்றார் என்பதற்காக இவ்வாறு எல்லாவற்றையும் வலயக் கல்விப் பணிப்பாளர் செய்ய முடியாது.

இது தொடர்பாக விரிவான அறிக்கையை அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவுக்கு மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் வழங்க வேண்டும்.

தற்போதுள்ள கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திஸாநாயக்காவை இரவோடு இரவாக அன்று நான் மாற்றினேன். ஏனென்றால், இந்தச் செயலாளர் கிழக்கு மாகாண கல்வியை முழுக்க முழுக்க அழித்தவர். மாகாண கல்விச் செயலாளரின் இந்த நடவடிக்கைகளுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இடங்கொடுக்கக் கூடாது" என்றார்.

---

# வெடிமணியம்

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*"கொக்கரித்தவண்ணம்" இருக்கிறார்கள்.*

*நாடு கிடக்கும் நிலையில் இது தேள்வையா?*

*குருந்தூர் மலையில் தமிழர் தாயகபூமியில் அடாத்தாக கட்டப்பட்ட விகாரையை நியாயப்படுத்தும் இவர்கள்;*

*அங்கே பாரம்பரியமாக இருக்கும் கோயிலின் நடவடிக்கைகளில் "மூக்கை நுழைப்பதன்" பின்னணி என்ன?*

*சிறிலங்காவின் நீதித்துறை இதைக்கண்டும் காணாமலும் இருப்பதன் "மர்மம்" என்ன?*

*இந்த விடயத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன நடவடிக்கையை செய்யப்போகிறார்கள்?*

*இப்படியாக கன கேள்விகளுக்கு யார் பதில் சொல்வது?*

*உடனடியாக இந்த விடயத்தைக் கையிலெடுத்து பாரிய போராட்டத்தை செய்து உடனடியாக இந்த "பௌத்த பேரினவாத அடாவடியை" நிறுத்தாவிட்டால்;*

*மீண்டும் மீண்டும் இந்த மண்ணில் இதே மாதிரியான "அடாத்தான" காரியங்களை செய்து பௌத்த விகாரைகளை சட்டவிரோதமாக அமைக்கும் நடவடிக்கை தொடரப்போகிறது.*

*உடனடியாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை சந்திச்சு இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேணும்.*

*இந்த லட்சணத்தில் சம்பந்தர் அண்ணர் இந்திய - அமெரிக்கத் தூதுவர்களை சந்திச்சு என்ன பேசுகிறார் என்று புரியவில்லை.*

*பேசுவதில் தப்பில்லை. ஆனால், இந்த மண்ணில் தொடரும் மறைமுகமான இன ஒடுக்குமுறையை உடனடியாக "வெளியுலகத்துக்கு" எப்படி வெளிக்கொணரப்போகிறோம் என்று சம்பந்தர் அண்ணர் திடமான முடிவெடுக்கவேணும்.*

*அதைவிட்டுப்போட்டு சும்மா பேசிக்கொண்டிருப்பதில் அஞ்சு சதத்து பிரயோசனமும் இல்லை.*

*கொக்குதொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட "மனிதப் புதைகுழி" விவகாரம் திட்டமிட்டபடி மூடிமறைக்கப்படுகிறது.*

*இந்த "புதைகுழிக்கு" தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவில்லை.*

*சர்வதேச நியமங்களுக்கு அமைய இந்தப் புதைகுழி தோண்டும் பணி நடக்கவில்லை.*

*சர்சதேச நாடுகளின் கண்காணிப்பில் இந்தப் புதைகுழி தோண்டப்படவேணும். அதுகும் செய்யப்படவில்லை.*

*கொன்றவர்களின் "கைகளில்" கொடுத்து புதைகுழியை தோண்டச்சொல்வது எந்தளவுக்கு நியாயமானது?*

*காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் 2000 நாட்களைத் தாண்டி போராடிக்கொண்டிருக்கிறார்கள்.*

*அந்த உறவுகளின் "கண்ணீருக்கு" பதில் என்ன?*

*இந்தப் புதைகுழிக்குள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட தமிழ் உறவுகள் எத்தனை பேர்?*

*அவர்களுக்கான "நீதி" என்ன?*

*இந்தப் "புதைகுழிக்கு" காரணம் தாங்கள் இல்லை. புலிகள்தான் காரணம் என்று நாளைக்கு இவர்கள் கதையை மாற்றுவார்கள். தடயங்களை அழிப்பார்கள். இறுதியில் செம்மணி, மன்னார் புதைகுழிகள்போல் இழுத்து மூடப்படும்.*

*இதுதானே நடக்கப்போகிறது!*

*இனப்படுகொலைக்கான "ஆதாரங்கள்" ஆயிரம் இந்த மண்ணில் இருக்கின்றன.*

*அவை ஒவ்வொன்றும் வெளியே தெரியும்போது அதற்கு காரணமானவர்கள் அதை அழித்து காலத்துக்குக் காலம் தப்பித்துக்கொள்கிறார்கள்.*

*எமக்கான "நீதி" எங்கே? எப்போது கிடைக்கும்?*

*இந்த லட்சணத்தில் ரணில் இந்தியாவுக்கு போறார்.*

*அதற்கு ஆதரவாக "13ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த" இந்தியாவின் வாசலில் பொங்கல் வைப்பதற்கு ஒருசாரார் முயற்சிக்கிறார்கள்.*

*"13 ஆம் திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேணும்" எண்டதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை.*

*ஆனால், தமிழர்கள் நாங்கள் கேட்கும் "அரசியல் தீர்வு" அதுவல்ல!*

*இத்தனை கொடுமைகளையும் அனுபவித்த தமிழினத்துக்குக்கான ஒரே ஒரு தீர்வு "சமஷ்டி" மட்டுமே.*

*அதை நோக்கித்தான் நாங்கள் முன்னேறவேணும்.*

*அதில் இருந்து "இம்மியளவும்" பிசைவாங்காது நிண்டு போராடவேணும்.*

*கிடைக்கிறதா? இல்லையா? என்பது வேற கதை.*

*ஆனால், தமிழ்மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு "சமஷ்டி" என்பதில் விடாப்பிடியாக ஓரணியில் நின்று போராடவேண்டியது காலத்தின் கட்டாய தேள்வை.*

*இந்தியாவையும் அமெரிக்காவையும் சம்பந்தர் அண்ணர் சந்திச்சு பேசும்போது இந்த விடயங்களைத்தான் "ஆணித்தரமாக" வலியுறுத்தியிருக்கவேணும்.*

*ஆனால், சம்பந்தர் அண்ணர் அதைச்செய்திருப்பாரா? என்பதில் எங்கள் எல்லாருக்கும் நம்பிக்கை இல்லை.*

*ஏனெண்டால் அவர் இந்தியாவை நோக்கி "13ஆம் திருத்தச்சட்டத்தை" மட்டுமே கேட்டிருப்பார். அதைவிட அவருக்கு வேற கதைக்க ஒண்டுமில்லை.*

*அப்ப நாங்கள்தானே "அதைப்பற்றி" ஓங்கி குரலெடுத்து பேசவேணும்.*

*ஒட்டுமொத்த தமிழ்க்கட்சிகளும் உடனடியாக ஓரிடத்தில் கூடி "சமஷ்டி" ஒன்றே எங்களின் தீர்வு என்பதை இடித்துரைக்கவேணும்.*

*எருமை மாடுகள்போல் தனித்தனியே மேஞ்சு கொண்டு திரியும் தமிழ்க்கட்சிகளை யார் இழுத்து வந்து ஒரு தடியில் கட்டுவது?*

*இந்தியாவும் அமெரிக்காவும் ஒருபோதும் சிறிலங்காவையும் சிங்கள மக்களையும் பகைத்துக்கொள்ளாது.*

*அவர்களைப்பொறுத்தவரை இரண்டு முகங்கள்.*

*தமிழர்களுக்கு முன்னால் அழுதுபோட்டு சிங்கள பேரினவாதிகளுடன் கூடிக்கழித்து கும்மாளம் இடுவார்கள்.*

*இதுதான் அவர்களின் உண்மையான "நிலைப்பாடு".*

*ஆக;*

*எமக்கான நீதியை நாங்கள்தான் போராடிப் பெறவேண்டியுள்ளது.*

*"சமஷ்டிதான் தமிழ்மக்களின் அரசியல் தீர்வு" என்பதை வானுயர குரலெடுத்து நாம் ஒலிக்கவேணும்.*

*இதற்கு வடக்கு, கிழக்கு தமிழ்மக்களை ஒரு ஜனநாயக போராட்டத்துக்கு ஆயத்தப்படுத்தவேணும்.*

*இப்போது எமக்கு முன்னே இருக்கும் ஒரே ஒரு "தெரிவு" இதுதான்.*

*வடக்கு, கிழக்கு தமிழ்மக்களை ஓரணியில் திரட்டி ஒரு மிகப்பெரிய சனநாயக வழிப்போராட்டத்தை செய்ய முனைப்பு காட்டவேணும்.*

*இந்த விடயத்தை தமிழ்பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி கூடி கலந்தாலோசிக்கவேணும்.*

*இதை ஏன் அவர்கள் செய்யாமல் இருக்கிறார்கள் என்பது புரியவில்லை.*

*இந்தியாவும் அமெரிக்காவும் இதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்களா என்ற சந்தேகம் எழுகிறது.*

*மீண்டும் "பொங்குதமிழ்" போன்ற ஒரு மாபெரும் இன உணர்வைத் தூண்டும் ஜனநாயக வழியிலான போராட்டத்தை யார் ஒருங்கிணைக்கப்போகிறார்கள்?*

*அல்லது;*

*இப்படியே இந்த இனம் அழிந்து வீழ்ந்து போவதுதான் விதியா?*

*காலம்தான் பதில் சொல்லவேணும்.*

# புதிய வானம் விருது விழா

களுத்துறை மாவட்டத்தில் இயங்கிவரும் புதிய வானம் வலைக்காட்சியின் விருது வழங்கும் விழா இங்கிரிய, றைகம், கீழ்ப் பிரிவு, விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் கடந்த ஜூன் 18ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

களுத்துறை, இரத்திபுரி, காலி உள்ளிட்ட மாவட்டங்களில் அமைந்திருக்கும் பெருந்தோட்டங்களின் வரலாற்றில் முதல் முறையாக ஒரு சமூக ஊடகம் விருது வழங்கும் விழாவை நடத்தியிருப்பது இதுவே முதல்முறையாகும்.

ஆனால், மலையகத்தில் 2018இல் மலையகம்.எல்கே எனும் சமூக ஊடகம் ஒரு விருது விழாவை நடத்தியிருந்தது. மலையகத்தில் முதல் சமூக ஊடகம் வழங்கிய விருது விழா என்ற பெயரை அது தனதாக்கிக்கொண்டிருக்கிறது.

களுத்துறையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு சமூக அமைப்புகள் விருது வழங்கும் விழாக்களை நடத்தியிருக்கின்றன. ஆனால் சமூக ஊடகம் வழங்கிய முதல் விருது விழாவாக புதிய வானம் விருது வழங்கும் விழா பார்க்கப்படுகிறது.

புதிய வானம் சமூக ஊடகத்தின் நிறுவுனரும், ஊடகவியலாளருமான மணி ஸ்ரீகாந்தனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவுக்கு றைகம், கீழ்ப் பிரிவு, விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் மெய்யன் ஆனந்தகுமார் தலைமை தாங்கியிருந்தார்.

'மகத்தான நம் ஆளுமைகளுக்கு மகுடம் சூடும் விழா' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த விருது வழங்கும் நிகழ்வில், கல்வியாளர்கள், ஆன்மீகவாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 22 நபர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கான அனுசரணையை பூமணி அம்மா அறக்கட்டளை, சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ், அகலவத்தை, டார்டன்பீல்ட், கணபதி அறநெறி பாடசாலை, மலையக தேன்மொழி மக்கள் சேவை ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தியிருந்தன.

நிகழ்வில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக ஆன்மீகப் பணி செய்துவரும் றைகம், கீழ்ப் பிரிவு, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கணேச பரமசிவன் குருக்கள் மற்றும் வணக்கத்துக்குரிய பாஸ்டர் ஜனார்தனன்பிள்ளை மகேந்திரன் ஆகியோருக்கு சிறந்த ஆன்மீக தன்னார்வலர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையானது இங்கிரிய பிரதேச மக்களின் பாராட்டுகளைப் பெற்றிருக்கிறது.

விழாவில் பேசிய சிவஸ்ரீ பரமசிவன் குருக்கள், "இந்த புதிய வானம் விருதானது எப்படி சூரியன் சுடர்விட்டு பிரகாசிக்கிறதோ அதேபோன்று இந்த விருதுகளை பெற்ற நமது ஆளுமைகளின் வாழ்வும் பிரகாசிக்கும்'' என்று வாழ்த்தினார்.

அவரைத் தொடர்ந்து பேசிய வணக்கத்துக்குரிய பாஸ்டர் ஜனார்தனன்பிள்ளை மகேந்திரன், "பேதங்கள் கடந்து சகோதரத்துவமாக நடைபெறும் இந்த விழாவில் கலந்துகொண்டதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இதேவேளை, இந்த புதிய வானம் நிகழ்வானது எதிர்காலத்தில் பிரதேசங்கள் கடந்து, தேசங்கள் கடந்து பல்வேறு இடங்களில் நடைபெற வேண்டும்" என்று பாராட்டினார்.

நிகழ்வுக்கு தலைமை தாங்கிய விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் மெய்யன் ஆனந்தகுமார், "நம் மத்தியில் சிறப்பான ஆளுமைகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு ஒரு மேடை அமைத்து பாராட்டி விருது வழங்குவதென்பது இந்த மாவட்டத்தில் மிகவும் அரிதாக நடைபெறும் நிகழ்வு. அதிலும் மற்றவர்களைப் பாராட்டுவதற்கும் ஒரு மனசு வேண்டும். அது எல்லோருக்கும் வராது. அந்த பெருந்தன்மைக்காக புதிய வானம் அமைப்பினரை நாம் நிறையவே பாராட்டணும். இந்த பெருநிகழ்வு எமது பாடசாலையில் நடப்பதில் நான் பெருமைகொள்கிறேன்" - என்றார்.

முன்னாள் ஹொரணை பிரதேச சபை உறுப்பினரும், ஆசிரியருமான மருதமுத்து சிவகணேசமூர்த்தி தனது சிறப்புரையில், "முதலில் இப்படியான விழாவை ஏற்பாடுசெய்த புதிய வானம் குழுவினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுவாகவே நம்முடைய மொழிநடைக்கே வருகின்றேன். ஏதாவது சோழி நடக்கணும்னாதான் காக்கா பிடிப்பாங்க. சோழி நடந்த பிறகு மறந்திடுவாங்க. ஆனால், தம்பி மணி ஸ்ரீகாந்தன் இந்த மண்ணில் சேவையாற்றிய நம்மவர்களுக்கு பின்னாளில் ஒரு விழா எடுத்து பாராட்டியிருக்கிறாரே அதற்காக நாம் அனைவரும் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால், காரியம் முடிந்த பிறகு இந்த சமூகத்துக்கு சேவை செய்தவர்களை மறந்துவிடும் இந்தக் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அப்படி இந்த சமூகத்துக்காக ஏதாவது ஒரு வழியில் சேவையாற்றிய நம் ஆளுமைகளை இனங்கண்டு அவர்களை கௌரவிக்கும் இந்த நிகழ்வானது ரொம்பவும் நல்ல விடயம். அதிலும் ஒருவன் வாழும் காலத்திலேயே அவரை வாழ்த்துவதென்பது நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயம். அத்தோடு எங்களால் முடிந்த ஏதோ சில சேவைகளை நாம் இந்த சமூகத்துக்காக செய்திருக்கின்றோம் என்ற மனத்திருப்தி எங்களுக்கு இருக்கிறது. அதற்கான அங்கீகாரத்தை இன்று எமக்கு வழங்கியிருக்கிறீர்களே அதற்காகவும் நாம் பெருமைக்கொள்கின்றோம்" என்று குறிப்பிட்டார்.











விருதுகள் என்பது நமது திறமைக்கும், அர்ப்பணிப்புக்கும் வழங்கப்படும் ஒரு பாராட்டு நற்சான்றிதழ் இப்படியான விருதுகளை பெறுவதற்கு கல்வித் தகமையோ, வயது மூப்பு, பட்டம் என எதுவும் அவசியமில்லை. நாம் சார்ந்திருக்கும் துறையில் செய்யும் அர்ப்பணிப்பு, சாதனை மற்றும் சவால்களை கடந்து செய்யும் பலவிதமான சேவைகளுக்கு வயது வித்தியாசமின்றி உலகம் முழுவதும் வழங்கப்படும் ஒரு அன்பளிப்பாகும்.

இப்படியான விருதுகள் அரச மற்றும் பதிவு செய்த, பதிவு செய்யாத தனியார் அமைப்புகள், நிறுவனங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் என்று அனைத்து இடங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

மன்னர் காலங்களில் போர் வீரர்கள், புலவர்கள் உள்ளிட்டோரின் திறமையை பாராட்டி வழங்கப்படும் அன்பளிப்புகள், பொற்கிழிகள், பட்டயங்கள் ஆகியவை காலப்போக்கில் புதிய பரிணாமம் பெற்று இன்று அந்த நபரின் பெயர் பதிக்கப்பட்ட விருதுகளாக மாறியிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் மாதம் ஒரு விருது விழா நடைபெற்றாலும் களுத்துறை மாவட்டத்தில் விருது விழா என்பது ஒரு புதிய விடயமாக பார்க்கப்படுவதோடு, விருது பற்றிய தெளிவான புரிதல் இல்லாத சில முகநூல் போராளிகளால் விமர்சனத்துக்கும் உள்ளாகி இருக்கிறது.

புதிய வானம் குழுவினரால் வழங்கப்பட்ட இந்த விருது, வலைக்காட்சியில் பணியாற்றிவர்களுக்கும், விழா குழுவினரின் பரிந்துரைக்கு அமைவாக தெரிவுசெய்யப்பட்ட சிலருக்கும் விழாக் குழுவினரின் சுய விருப்பத்தில் வழங்கப்பட்டதாகும்.

எனவே, இது அரசு விழாவோ அல்லது விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நடத்தப்பட்ட விழாவோ அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்வது சிறந்ததாகும்.

நிகழ்வுக்கான அனுசரணையாளராக பங்கேற்ற பூமணி அம்மா அறக்கட்டளை சர்வதேச தமிழ் வானொலி அமைப்பின் மேல் மாகாணம் மற்றும் மலையகத்துக்கான உதவி இணைப்பதிகாரி இளஞ்செழியன் பேசும்போது, "இந்த நிகழ்வில் விருது பெற்றதில் மிகவும் மகிழ்கிறோம். அதற்கு பூமணி அம்மா அறக்கட்டளையின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். புதிய வானம் விருது களுத்துறை மாவட்டத்துக்கான முன்மாதிரியான விருது வழங்கும் நிகழ்வாக இருக்கும் என்று நம்புகிறேன். விருதுக்கான களப்பணியாளர்களை மிகவும் சிறப்பாக தெரிவுசெய்த விழா குழுவினருக்கு எனது வாழ்த்துகள்" என்று தெரிவித்தார்.

புதிய வானம் விருது வழங்கும் நிகழ்வின் ஏற்பாட்டாளர் மணி ஸ்ரீகாந்தன் தனது உரையில், "விருது ஏன், எதற்காக, யாருக்கு வழங்கப்படுகிறது என்பதை முதலில் உங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். விருது என்பது இந்தச் சமூகத்தில் அவர்கள் செய்யும் பணிக்காக, திறமைக்காக வழங்கப்படுவது. அது ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ மக்களின் முன்னிலையில் வழங்கப்படுவது. இந்த விருதைப் பெறுவதற்கு அந்த நபர் ஏதாவது ஒரு பணியை சிறப்பாக செய்திருக்க வேண்டும், இதற்கு கல்வித் தகமையோ வயதுக்கான எல்லையோ இருக்கணும் என்பது அவசியமில்லை, சிறுவர் முதல் பெரியோர் வரை அவர்களின் திறனை மதித்து பாராட்டி வழங்குவதுதான் விருது.

விருதுகள் தகரத்திலோ, தங்கத்திலோ அல்லது கட்டையிலோ, எதில் வேண்டுமானாலும் வடிவமைக்கப்பட்டு இருக்கலாம். விருதுக்கான பெறுமதி அது எந்த இடத்தில் என்ன பெயரில் வழங்கப்படுகிறது என்பதை பொருத்தே அமையும், இதில் அரசு விருதுகளுக்கு தனி மதிப்பு இருக்கிறது.

எமது விருது எந்தவித இலாப நோக்கத்திலும் நடத்தப்பட்டதல்ல. திறமையான நபர்களை இனங்கண்டு அவர்கள் வாழும் காலத்திலேயே அவர்களை வாழ்த்தியிருக்கிறோம் அவ்வளவுதான். இதனால் நம் சமூகத்துக்கு என்ன இலாபம் என்று நீங்கள் கேள்வி கேட்பது புரிகிறது.

நாம் ஒருவரை பார்த்து ''உங்களின் பணி மிகவும் சிறப்பாக உள்ளது வாழ்த்துகள்'' என்று பாராட்டுவது அவர்களுக்கு வழங்கும் வெகுமதிகளை விட சிறந்தது என்று நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுவே அவர்களை பொது மேடைக்கு அழைத்து பாராட்டி கௌரவம் தரும்போது விருது பெறும் நபர்களின் திறனும், சமூகப் பணியும் பன்மடங்காக அதிகரிப்பதோடு அவர்களின் சிந்தனையிலும் ஒரு மாறுதல் ஏற்படும். அவர்களுக்குள் ஒரு புதிய உத்வேகம் பிறக்கும். அவர்களின் சேவைக்கு இந்த அங்கீகாரம் ஒரு கூடுதல் பலத்தைத் தரும். எனவே, அது நம் வருங்கால சமூகத்துக்கு நன்மையையும் தரும்" என்று குறிப்பிட்டார்.

நிகழ்வின் இறுதியில் நன்றியுரையாற்றிய கணபதி அறநெறி பாடசாலையின் நிறுவனர் சதாசிவம் உதயசாந்தன்,

"இந்த புதிய வானம் விருது இனிவரும் காலங்களிலும் தொடர்ச்சியாக நடத்துவதற்கு நமது ஏற்பாட்டுக்குழுவினர் தயாராகியுள்ளார்கள். எனவே, இந்த முறை விருது பெற்ற ஆளுமைகள் தவிர, நமது மாவட்டத்தில் களப்பணியாற்றும் மேலும் மகத்தான ஆளுமைகளை இனங்கண்டு அடுத்த ஆண்டில் அவர்களுக்கான விருதுகள் வழங்கப்படும்" என்று உறுதியளித்தார்.

புதிய வானம் விருதுகளுக்கான வரவேற்பு அதிகமாகவுள்ளதால் அடுத்த ஆண்டிலிருந்து நாடளாவிய ரீதியில் மகத்தான ஆளுமைகளை தெரிவுசெய்து அவர்களுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளது.

எனவே, முகநூலில், களுத்துறைக்கு விருதுகள் அவசியமாக, இல்லையா எனும் விவாதங்களை கைவிட்டு உங்களால் முடிந்த ஆளுமைகளை பாராட்டி அவர்களை கௌரவித்து ஊக்கப்படுத்துவோமாக.

நாளை நமதே!

**நாராயணசாமி ஜெயரட்ணம்**





## தமிழ்த் தலைமைகள்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அப்படியானால், தமிழ்த் தலைமைகள் யாருக்காக அரசியல் நடத்துகின்றனர் என்ற கேள்விக்கு தமிழ்த் தலைமைகள் கூறப்போகும் பதில் என்ன?

மொத்தத்தில் தமிழ் மக்கள் மீது பேரினவாதச் சக்திகள் பிரகடனப்படுத்தியுள்ள பௌத்த மேலாதிக்கம் மற்றும் காணிக் கொள்ளை போரிலிருந்து மக்களையும் மண்ணையும் காப்பாற்றப் போவது யார்?

சிங்கள இராஜதந்திரம் பொருளாதாரத்தில் தோற்றது என்னமோ உண்மைதான். ஆனால், தமிழர் விவகாரத்தில் தோல்வியை நோக்கிச் செல்வதாகத் தெரியவில்லை. நாட்டைக் கொண்டு நடத்த பணம் இல்லையென தென்னிலங்கைத் தலைவர்கள் வெளிநாடுகளிடம் கையேந்தி நிற்கின்றனர். ஆனால், மறுபறம் தமிழர் தாயகத்தில் பௌத்த தூபிகள் அமைக்கவும் தமிழர் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களை அமைக்கவும் நிதி தாராளமாகச் செலவிடப்படுகின்றது.

சிங்கள இராஜதந்திரம் மீண்டும் ஒரு வெற்றியை ஈட்ட சிதறிக் கிடக்கும் தமிழ்த் தலைமைகளே வழிசமைப்பவர்களாக இருப்பர் என்பது மட்டும் உண்மையாகும்.

ஏனெனில், 'பிச்சை வேண்டாம், நாயைப் பிடி' என்ற நிலைக்கு தமிழ்த் தலைமைகளை சிங்கள ஆளுந்தரப்பு தள்ளியுள்ளது. ஆனால், இந்த யதார்த்தத்தை உணராத நிலையில் இன்றும் தமிழ்த் தலைமைகள் தனித் தனித் தீவுகளாக அரசியல் நடத்திக்கொண்டிருக்கின்றன.

மொத்தத்தில் சிங்களத் தரப்பின் அணுகுமுறையைப் பார்க்கும்போது குரங்கும் அப்பத் துண்டும் கதையே ஞாபகத்துக்கு வருகின்றது. தமிழ்த் தலைமைகளின் நிலை அரசியல் நாயிடம் சிக்கிய முழுத்தேங்காய் கதையாகவே உள்ளது.

தமிழ் மக்களை வெற்றிப்பாதை நோக்கி அழைத்துச் செல்லவேண்டிய பாரிய பொறுப்பை தமிழ்த் தலைமைகள் கொண்டுள்ளன என்பதை தமிழ் மக்களின் சார்பில் நினைவூட்ட விரும்புகின்றோம்.

தமிழர் நலன் நோக்கி தமிழ்த் தலைமைகள் பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஓரணியில் திரளவேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை தமிழ்த் தலைமைகள் உணர்ந்தாக வேண்டும். இல்லையேல் உங்களுக்கிடையிலான குடும்பிப்பிடி அரசியல் சண்டைக்குள் நீங்கள் அரசியல் நடத்தவதற்கு மக்களும் மண்ணும் இருக்க மாட்டாது. சிங்கள பௌத்தத்துக்குள் கரைந்துபோன நிலையிலான மண்ணும் மக்களுமே மிஞ்சுவர்.

Email:vathevaraj@gmail.com

## உனக்கான உலகம்

மௌனமாய் ஒரு
கதை சொல்லு
நீ பூக்களை வானில்
தூவியதையும்
வானவில்லை எடுத்து
பூமியில் விதைத்ததையும்
சொல்லு

கேட்பதற்கு யாருமில்லை
என்பதால்
சொல்வதை தவிர்க்காதே
அது உன் நம்பிக்கை
அந்த நம்பிக்கையே
உன் எழுச்சி

கேட்பதற்கு தயாரில்லாததும்
திறமைகளில் நம்பிக்கை
கொள்ளாததுமான
சமூகத்தில்
உன் கதைகளை
சத்தமின்றிச் சொல்வதே
உன் எண்ணங்களை
செயற்படுத்தும்

உரக்கச் சொல்வதை
உயர்த்திச் சொன்னாலும்
நம்ப மறுப்பவர்களுக்காக
வாயால் மௌனம் கொள்
மனதால் விழித்துக் கொள்

உன் மனதில்
நீ போட்ட உலகமே
உலகமல்ல
அது பரந்து விரிந்தது
மனதை உறுதிப்படுத்தி
பாதங்களை முன்நோக்கி
எடுத்து நகர்த்து

ஒருநாள்
இவ்வுலகில் நீயும்
பேசப்படுவாய்.

*அ . ஜெகன்*
*சுவிஸ்*

## ஆருயிரே அம்மா

என் அன்புள்ள அம்மா
அறிவை ஊட்டி வளர்த்தாய்
காலத்தின் கோலத்தால்
இன்று அநாதையாகி விட்டேன்
உன்னை மறக்க சொல்கிறது
இந்த பாழாய்ப்போன உலகம்
முடியுமா அம்மா ?

உனக்காக படித்தேன்
உன்னை இழந்ததால்
படிப்பும் பாழாய்ப் போனது
உனக்காக கவிதை வடித்தேன்
அதனால் என் நெஞ்சம்
வாடிப்போகும் என்று
அதையும் தடுக்கிறது
இந்த உலகம்

என்னதான் உலகம்
தடுத்தாலும்
தவமிருந்து வடிப்பேன்
கோடி கோடி கவிதை

கடவுளை நினைப்பதைவிட
தாயை நினைப்பது தான்
உலகின் சிறந்தது என
அடிக்கடி நீ தானே கூறினாய்

என்னை நினைக்கும் உள்ளம் நீ
நான் பூஜிக்கும் தெய்வம் நீ
ஒருபோதும் மறக்காது
உன்னை என் உள்ளம்

தண்ணீரில் வாழும் மீன்
தரையில் வாழாது
உன்னுடனே வாழும்
இந்த பிள்ளை மனம்.

"சிவநமஹரகர ஸ்ரீராமஜெயம்
இராமசீத்தாலச்சுமன்
அனுமன் துணை"

*- வி.எஸ்.வள்ளியம்மா ஜெயசங்கர்*
*மொண்டிகிறிஸ்டோ*
*நாவலப்பிட்டிய -*

## மின் வெட்டு

தெளிவாகத் தெரிகிறது
இருட்டு.
★★★
வளைந்திருப்பதும்
பேரழகுதான் வானவில்.
★★★
காதல் கடிதம்
நிறைந்திருக்கின்றன
எழுத்துப் பிழைகள்.
★★★
அடை மழை
அதிகரித்துச் செல்கிறது
கூதல் காற்று.
★★★★
மல்லிகை வாசம்
மனதை நெருடும்
மயான வீதி.
★★★★
நேரம் பிழை என்கிறாய்
திருத்திக் கொள்
உன் மனதை.
★★★★
நீரில் வீழ்ந்தாலும்
அழகாய்த் தெரிகிறது
மரத்தின் நிழல்.
★★★★
நிலவின் ஒளி
மங்கலாக தெரிகிறது
கண் பார்வை.
★★★★
தண்ணீர் தாகம்
அதிகமாய் இருக்கிறது
வெயிலின் கோரம்.
★★★★
நரை முடி
அதிகரித்துச் செல்லும்
தாத்தாவின் வயது.

*- அய்ஷத்அப்சத்*
*பாலமுனை -*

## முதியோர் இல்லம்

முதியோர் இல்ல நந்தவனம்
இன்று பூத்துத் தான்
போய் இருக்கிறதோ
இல்லை பூரித்துத் தான்
போய் இருக்கிறதோ.

காய்ந்து போன நார்களை
உதிர்ந்து போன உறவுப் பூக்கள்
மாலை சூட வரும் எனும்
நினைப்பில் பூரித்துத் தான்
போய் இருக்கின்றதோ.

அடிவயிற்றில் மீண்டும் ஒரு வலி
கை தடவி ஆறுதல் சொல்ல
இமை தழுவிக் கண்களைத்
தூங்க வைக்கிறது.

அழத் தெரியாத
எல்லா மகன்களையும்
அம்மா அழ
வைத்துக்கொண்டுதான்
இருக்கிறாள்.

கோவில் எல்லாம் இன்று
வெறிச்சோடிப்
போய்தான் இருக்கிறது
தெய்வதரிசனம்
முதியோர் இல்லங்களில்
நடப்பதனால்.

*- சி. மேகவர்ணன்*
*( மார்க்கோணி )*
*கனடா -*

## எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்
சொல்லாலும் செயலாலும்
திடமாக வேண்டும்
நில்லாமல் நிறுத்தாமல் முயல வேண்டும்
நிலைபேறு உலகினில் பெறுதல் வேண்டும்

கல்லாரும் கற்றாரும் சேர்தல் வேண்டும்
கல்விதனைக் கலங்காமல் கற்க வேண்டும்
துள்ளாமல் எந்நாளும் பணிவு வேண்டும்
தள்ளாத வயதினிலும் உழைக்க வேண்டும்

பொல்லாத குணங்கள் அழிதல் வேண்டும்
குள்ள மனங்களும் குறைதல் வேண்டும்
தெள்ளத் தெளிவான பேச்சு வேண்டும்
தேசமெங்கிலும் கருணை ஓங்க வேண்டும்

எல்லாரும் எல்லார்க்கும் உதவ வேண்டும்
இல்லாமை இல்லாத பூமி வேண்டும்
நல்லாரே தீயாரைத் திருத்தல் வேண்டும்
நானிலத்தில் நன்மைகள்
விளைய வேண்டும்

*- Dr. ஜலீலா முஸம்மில்*
*ஏறாவூர் -*

## தூறல்கள்

இது போன்று உங்களுடைய
கவிதைகளையும்
பிரசுரிக்க வேண்டுமானால்
thamilanweekly@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## சுயசிந்தனை!



அரிஸ்டோட்டிலிடம் அலெக்ஸாண்டர் மாணவராக இருந்த நேரம். அரிஸ்டோட்டில் தமது மாணவர்களிடம் ஒரு கேள்வி எழுப்பினார்.

"நீங்கள் மன்னராக இருந்தால், உங்கள் நாட்டில் குழப்பம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?"

ஒரு மாணவன் சொன்னான், "ஐயனே, அமைச்சரவையைக் கூட்டி அவர்கள் ஆலோசனைப்படி நடப்பேன்."

மற்றொரு மாணவன் சொன்னான், "என் முன்னோர்களின் வழிமுறைகளைக் கேட்டறிந்து அதன்படி நடப்பேன்."

அடுத்ததாக அலெக்ஸாண்டர் கூறினார்: "சூழ்நிலைக்கு ஏற்றபடி முடிவெடுப்பேன்..."

அதைக் கேட்ட அரிஸ்டோட்டில், "சபாஷ், சரியான முடிவு" எனப் புகழ்ந்தார்.

அலெக்ஸாண்டரின் இந்த சுயசிந்தனைதான் அவருக்கு வெற்றிகளைத் தேடித் தந்தது.

## தமிழன் தர்பார்

இது எங்க ஏரியா

## உழைப்பு



அமெரிக்காவில் சுதந்திரப் போர் நடந்துகொண்டிருந்தபோது, சில வீரர்கள் ஒரு பெரும் உத்திரத்தை சிரமப்பட்டு நகர்த்திக் கொண்டிருந்தனர்.

அக்குழுவின் தலைவன் குதிரை மீது அமர்ந்து, அவர்களை அதட்டி வேலை வாங்கிக்கொண்டிருந்தான்.

அப்போது அவ்வழியே குதிரையில் வந்த மற்றொரு வீரன், அந்தக் குழுத் தலைவனைப் பார்த்து, "நீயும் இறங்கி இவர்களுக்கு உதவக்கூடாதா?" என்று கேட்டான்.

"நான் இந்தக் குழுவின் தலைவன், இவர்களுடன் சேர்ந்து வேலை செய்வதா?" என்று உறுமினான்.

வந்த வீரன், தனது குதிரையிலிருந்து இறங்கி, அந்த வீரர்களோடு சேர்ந்து உத்திரத்தை நகர்த்தி வைத்துவிட்டுத் தனது குதிரையில் ஏறிக் கிளம்பினான்.

"நீ யார்?" என்று அந்தக் குழுத் தலைவன் கேட்டான்.

"என் பெயர் ஜோர்ஜ் வோஷிங்டன்" என்று கூறிவிட்டு விரைந்தான். அவர்தான் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி.

## தாய்மண்!



இந்திய விடுதலைப் போராட்ட சமயம். ஜவஹர்லால் நேருவின் தலைமையில் போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ரொட்டியில் மண் கலந்திருந்தது.

இதைக் கண்ட நேரு, "ரொட்டியை இப்படிக் கொடுத்தால் எப்படி? சுத்தமான ரொட்டியைக் கொடுங்கள்" என்று சிறை அதிகாரிகளிடம் கேட்டார்.

அதற்கு அதிகாரி ஏளனமாக, "இதில் இருப்பது உங்கள் தாய்மண்தானே. அதற்காகத்தானே போராடி சிறைக்கு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இது சுவையாகத்தான் இருக்கும். சாப்பிடுங்கள்" என்று சொன்னார்.

உடனே நேரு, "நாங்கள் போராடுவது மண்ணை மீட்பதற்குத்தானே தவிர, தின்பதற்கு அல்ல" என்று கோபமாகக் கூறினார்.

சிறை அதிகாரி வாயடைத்துப் போனார்.

## இவர்கள்



உங்கள் குழந்தைகளை மட்டம் தட்டிப் பேசாதீர்கள். பிரிட்டிஷ் பிரதமராக உயர்ந்த அந்தச் சிறுவன் ஏழு வயது வரை படு மக்கு. அதனால் கடைசி பெஞ்சில்தான் உட்கார வைக்கப்பட்டார். அவர்தான் **வின்ஸ்டன் சர்ச்சில்.**

## முன்னேற்றம்...



ஐன்ஸ்டீன். நண்பர் பிலிப் பிராங்குடன் பேர்லினில் இருந்த வானிலை ஆராய்ச்சி நிலையத்துக்குச் செல்ல விரும்பினார்.

இருவரும் போஸ்டாம்ப் என்ற பகுதியிலுள்ள பாலத்தில் சந்தித்துக்கொள்வது என ஏற்பாடு.

பிலிப், பேர்லினுக்குப் புதியவர். அதனால் குறித்த நேரத்துக்குத் தன்னால் வர முடியாதே என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

உடனே ஐன்ஸ்டீன், "பரவாயில்லை. எவ்வளவு நேரமானாலும் காத்திருக்கிறேன்" என்றார்.

"உங்கள் பொன்னான நேரம் வீணாகுமே?" என்றார் பிராங்க்.

"நான் செய்யும் வேலையை எங்கிருந்து வேண்டுமானாலும் செய்வேன். வீட்டிலிருந்து செய்யும் ஆராய்ச்சியை பாலத்தின்மீது அமர்ந்து செய்தால் போச்சு" என்றார் ஐன்ஸ்டீன் அலட்சியமாக.

சூழ்நிலைகளையும் இடையூறுகளையும் பொருட்படுத்தாதவர்கள்தான் சாதிக்கிறார்கள்.

## செருப்பை வைத்து எம்.ஜி.ஆருக்கு கலைவாணர் புகட்டிய பாடம்!



என்.எஸ்.கிருஷ்ணன் என்ற இவரது இயற்பெயரைவிட 'கலைவாணர்' என்றாலே இவரை பெரும்பாலானோருக்குத் தெரியும். நகைச்சுவை என்றால் சிரிக்க மட்டுமல்ல, சிந்திக்கவும் கூட என்று உணர்த்தியவர். இவரது இந்த தனி பாணி, அக்காலத்து மக்கள் அனைவரையும் ஈர்த்தது. இவர் வள்ளல் குணம் கொண்டவரும் கூட, தன்னிடம் இருப்பதை மற்றவருக்கும் பகிர்ந்து கொடுத்து வாழ்ந்தவர்.

எம்.ஜி.ஆர். நடிக்க வந்த ஆரம்பக் கட்டத்தில் கலைவாணர் உதவியுள்ளார். நல்ல நண்பராகவும் பொறுப்பாளராகவும் இருந்து கவனித்துக்கொண்டார். எம்.ஜி.ஆருக்கு ஒரு நல்ல வழிகாட்டி என்று கூட கலைவாணரை கூறலாம்.

இவர்கள் இருவருக்கும் மத்தியில் நடந்த ஒரு நிகழ்வு, எம்.ஜி.ஆருக்கு நல்லதொரு பாடத்தைக் கற்பித்தது.

எம்.ஜி.ஆருக்கு அது திரையுலகில் ஆரம்ப காலகட்டம். ஒரு படப்பிடிப்புக்காக கல்கத்தா சென்றிருந்தார்கள். எம்.ஜி.ஆரும், கலைவாணரும் ஒன்றாகத்தான் பயணம் செய்துகொண்டிருந்தார்கள்.

ஒருநாள் படப்பிடிப்புக் குழுவினர்கள் ஓர் ஓடையை தாண்டி செல்ல வேண்டிய நிலை நேர்ந்தது. அனைவரும் ஓடையில் இறங்கி, கடக்க ஆரம்பித்தனர், கலைவாணர் உட்பட.

எம்.ஜி.ஆர். தனக்குரிய அந்தத் துடிப்பான முறையில், அனைவரையும்போல் ஓடையில் இறங்கி கடக்காமல், அந்த ஆறடி ஓடையை ஒரே தாவில், தாவிக் குதித்தார் எம்.ஜி.ஆர்.

தாவி குதித்த மறு நொடி எம்.ஜி.ஆரின் செருப்பு அறுந்துபோனது. உடனே கலைவாணரிடம், "வாங்கண்ணே ஒரு புது செருப்பு வாங்கி வரலாம்" என்று கூறியிருக்கிறார்.

"இன்று வேண்டாம், நேரமாகிவிட்டது. நாளை போய் வாங்கிக்கொண்டு வரலாம்'' என்று எம்.ஜி.ஆருக்கு பதிலளித்திருக்கிறார் கலைவாணர்.

எம்.ஜி.ஆர். மறுநாள் காலை மீண்டும் கலைவாணரின் அறைக்கு சென்று, ''வாங்க போகலாம்'' என்று செருப்பு வாங்க அழைத்திருக்கிறார் எம்.ஜி.ஆர். அப்போதும், உடன் கிளம்பவில்லை கலைவாணர். அதற்குப் பதிலாக எம்.ஜி.ஆரிடம் ஒரு பார்சலைக் கொடுத்தார்.

கலைவாணர் கொடுத்த பார்சலை திறந்து பார்த்த எம்.ஜி.ஆருக்கு ஆச்சரியமாக இருந்தது. அதில், அவரது அறுந்த செருப்பு தைத்து வைக்கப்பட்டிருந்தது. உடனே, "என்ன அண்ணே, புது செருப்பு வாங்கலாம்னு கூப்பிட்டா, பழசையே தாரீங்களே" என்று கலைவாணரிடம் வினா எழுப்பினார் எம்.ஜி.ஆர்.

"உங்க அம்மா, உன்னையும், உன் அண்ணனையும் அனுப்பியது பணம் சம்பாதிக்கத்தான். பழைய செருப்பு நல்லாதான் இருக்கு, அத நானே தைத்து வெச்சுட்டேன். எந்த பொருளாக இருந்தாலும் அதை முழுமையாக பயன்படுத்த வேண்டும்" என்று கூறினாராம் கலைவாணர்.

கலைவாணர் கூறிய நாள்முதல் அவர் இறக்கும் தறுவாய் வரையிலும் எந்த பொருளாக இருந்தாலும் அதை முழுமையாக பயன்படுத்தும் பழக்கத்தை பின்தொடர்ந்து வந்தார் எம்.ஜி.ஆர்.

இந்த நிகழ்வுக்குப் பிறகு, தான் எவ்வளவு உயரத்திற்கு சென்றபோதிலும் கூட ஆடம்பரத்தையும் தவிர்த்தார் எம்.ஜி.ஆர்.

இந்த நிகழ்வு எம்.ஜி.ஆரின் ஆள் மனதில் அவர் இறக்கும் வரையிலும் பதிந்து இருந்ததாகக் கூறப்படுகிறது.



காரைக்கவி



# சீத்துவக்கேடு 248

எங்கடை ஆக்கள் விளையாடின விளையாட்டுகளைப் பற்றிப் பறையிறது எண்டால் நாள் முழுக்கப் பறையலாம் எண்ட அப்பு, அப்ப அந்தக் காலத்திலை எங்கடை பெடியள் ஏறுகோள், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், மல்யுத்தம், வில் விளையாட்டு, வேல் விளையாட்டு, வாள் விளையாட்டு, சிலம்பாட்டம், செண்டாட்டம் எண்டு நிறைய விளையாட்டுகள் விளையாடி இருக்கிறாங்கள். உனக்கு ஒரு விசயம் தெரியுமே.



முதலாம் நரசிம்மவர்மன் எண்ட பல்லவ மன்னன் உந்த மல்யுத்ததிலை வலு கெட்டிக்காரனா இருந்தபடியாலை அவனை மாமல்லன் எண்டு சொன்னவை எண்டார்.

உந்த செண்டு விளையாட்டு பற்றி உனக்கு நான் சொல்ல வேணும் எண்ட அப்பு, பெரிய புராணத்திலை எங்கடை சேக்கிழார் உந்த விளையாட்டைப்பற்றி ஒரு பாட்டிலை சொல்லுறார் எண்டுபோட்டு அந்தப் படைச் சொன்னார்.

"நிலைச் செண்டும் பரிச் செண்டும் வீசி மிக மகிழ்வெய்தி
விலக்கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல் கண்டருளி வென்றிபெற
மலைக்குநெடு முட்கணைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி அலைகுமறப் பலபுள்ளினமர் விரும்பி யமர்கின்றார்".

(பாடல் எண் :3873)

சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாள் நாயனாரிட்டைப் போன இடத்திலை கன விளையாட்டுகளை விளையாடிக் காட்டினவையாம்.

அதிலை ரெண்டு வகை செண்டு விளையாட்டை சேக்கிழார் சொல்லுறார். ஒண்டு நிலைச் செண்டு, மற்றது பரிச் செண்டு. செண்டு எண்டது ஒரு வளைஞ்ச குச்சியைப்போல இருக்கிற ஆயுதமாம். நீண்ட மரப்பிடியோடை இருக்கிற செண்டின்ரை தலையில கூரான இரும்பு வேலும் அடிப்பக்கத்தில சின்னச் சின்ன இரும்பு சூலங்களும் இருக்குமாம். அதைப்பாக்க பூச்செண்டுபோல இருக்கும் எண்டபடியாலைதான் உதையும் செண்டு எண்டு சொல்லி இருக்கினம் எண்டார். உந்தச் செண்டு சிவன், நந்தி தேவர், ஐயனார், கிருட்டிணன் எண்ட கடவுள்களின்ரை கையிலை இருக்குதாம். உதாலைதான் திருமாலை செண்டு சிலுப்பி எண்டும் ஐயனாரை செண்டாயுதன் எண்டும் சொல்லுறவை எண்டார் அப்பு.

உக்கிரபாண்டியன் எண்ட பாண்டிய மன்னன் சிவன் குடுத்த செண்டு ஆயுதத்தை வாங்கி பெரிய கெறுவிலை இருந்த மேரு மலையை அடிச்சு அடக்கினவன் எண்ட செய்தி திருவிளையாடல் புராணத்தின்ரை செண்டால் அடித்த படலத்தில இருக்குது எண்ட அப்பு, கரிகால சோழன் வடக்கே படையெடுத்துப் போய் இமயத்தைச் செண்டால் அடிச்சு புலிச் சின்னம் பொறிச்சான் எண்ட கதை சிலப்பதிகாரத்தில இருக்குது எண்டார். உதை மாதிரி குலோத்துங்கசோழனும் மகத நாட்டினை செண்டு கொண்ட படையினால வெண்டான் எண்டு சொல்லுது எண்டார்.

இஞ்சை சேக்கிழார் நிலைச் செண்டு வீசுதல் எண்டு சொன்னது நிண்டபடியே வீசுறது. உந்த நிலைச் செண்டு கதாயுதம் மாதிரி இருக்கும். பரிச் செண்டு எண்டது குதிரை மேல வந்து இடம் வலமா சுத்திச் சுழண்டு வீசுறது எண்டார். உந்தப் பரிச் செண்டிலை எறிய வசதியா சங்கிலி இருக்கும். உனக்கு ஒண்டு தெரியுமே. உந்தப் பரிச் செண்டுதான் எங்கடை ஆக்கள் அப்ப அந்தக் காலத்திலை விளையாடின போலோ விளையாட்டு எண்ட அப்பு, உந்த செண்டு விளையாட்டு நடக்கிற இடத்தை செண்டு வெளி எண்டு சொன்னவை எண்டார்.

அந்தக் காலத்திலை எங்கட தமிழ் மன்னர்களின்ரை அரண்மனையளிலை செண்டு வெளி கட்டாயம் இருக்குமாம். ஆயிரக்கணக்கான சனம் சுத்தி இருந்து உந்தப் போட்டியளைப் பாக்க ஏலுமாம். அந்தச் செண்டு வெளியை போட்டி இல்லாத நாள்களிலையும் கூட கவனமா பழுது பாப்பினமாம். அதால குதிரையள் வழுக்கி விழாமல் வலு வேகமா ஒடுங்களாம். உந்த செண்டு வெளியை குதிரைவையாளி வீதி, புரவிவட்டம், திருமுற்றம் எண்டும் ஆக்கள் சொல்லுறவை எண்டு சொன்ன அப்பு, செண்டு விளையாட்டு நடக்கிறதுக்கு ரெண்டு மூண்டு நாட்களுக்கு முதலே சனத்துக்கு போட்டி நடக்கப் போகுது எண்டு சொல்லிப்போடுவினமாம்.

போட்டி நடக்க முந்தி செண்டுவெளி வீர நாடகம் எண்டு கூத்து எல்லாம் ஆடுவினமாம். அதாலை உதைப் போர்க்கூத்து எண்டு சொல்லுறது எண்டு "மண்டிலர் குதிரை நாடு வட்டம் போர் கூத்துமாகும். செண்டு செண்டாயுதம் பந்தெறி வீதி" ("நாநார்த்த தீபிகை") சொன்னார் அப்பு.

*(இன்னும் ஆடுவம் )*



வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

# இவ்வார இராசி பலன்கள்

## மேஷ ராசி அன்பர்களே!

பொருளாதார வசதி நல்லபடியே காணப்படுகிறது. கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் அதைச் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். பொருள்கள் களவு போக வாய்ப்பு உள்ளதால் கவனமாக இருக்கவும்.

அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். பணியில் ஸ்திரத்தன்மை உண்டாகும்.

வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

## ரிஷப ராசி அன்பர்களே!

குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் நீங்கி, மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணைவழியில் ஆதாயம் ஏற்படும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். தாயின் தேவைகளைப் பூர்த்திசெய்து, மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர் நீங்கள் கேட்ட உதவியை செய்து தருவார். தந்தைவழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து நடந்துகொள்வது அவசியம். உங்கள் வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம்.

வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை எதுவும் இருக்காது.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

## மிதுன ராசி அன்பர்களே!

உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படவும் அதன் காரணமாக கடன் வாங்கவும் நேரிடும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பைத் தருவார். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்டநாட்களாக எதிர்பார்த்த சுபசெய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. உங்களுடன் கருத்துவேறுபாடு கொண்டு விலகிச்சென்ற உறவினர்கள், வலிய வந்து உறவு பாராட்டுவார்கள்.

அலுவலகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். உயர்ந்த பதவி தேடி வரும். சம்பள உயர்வும் கிடைக்கும். ஆனால், சக ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும்.

வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவதற்காக கூடுதலாக உழைப்பீர்கள். அதிக உழைப்பின் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்பட்டு நீங்கும். இலாபம் கூடுதலாக இருக்கும்.

குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம்.

## கடக ராசி அன்பர்களே!

பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி உற்சாகம் அடைவீர்கள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

சிலருக்குக் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் சிறிது அலைச்சல் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமை அவசியம்.

அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. இப்போதைக்கு சலுகைகள் எதையும் எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு இட மாறுதல் கிடைப்பதற்கும் வாய்ப்பு உள்ளது.

வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கடன் வாங்க நேரிடும்.

## சிம்ம ராசி அன்பர்களே!

குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். செலவுகளைச் சமாளிப்பதற்குத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். உறவினர், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

அலுவலகத்தில் இதுவரை இருந்த பணி நெருக்கடி இப்போது சற்று குறையும். அதனால் மனதில் உற்சாகம் ஏற்படும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும்.

வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சக வியாபாரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படும்.

குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும்.

வேலை பார்க்கும் பெண்களுக்கு வீட்டில் ஏற்பட்ட சிரமங்கள் நீங்கும்.

## கன்னி ராசி அன்பர்களே!

வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகையால் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். கணவன் - மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் செய்தி கிடைக்கும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது வாழ்க்கைத்துணையின் ஆலோசனை கேட்டுச் செய்வது நல்லது.

வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதற்கேற்ற ஆதாயமும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள்.

வியாபாரத்தை விரிவுபடுத்தவும், சரக்குகளைக் கொள்முதல் செய்யவும் சிலருக்கு வெளிமாநிலப் பயணம் மேற்கொள்ளவேண்டி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது.

## துலா ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் அவருடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். பிள்ளைகளால் திடீர் செலவுகள் ஏற்படும்.

அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். மற்றபடி பதவி உயர்வோ சலுகை உயர்வோ எதிர்பார்க்கமுடியாது.

புதிதாக வியாபாரம் தொடங்க விரும்புபவர்கள் இந்த வாரம் தொடங்கலாம். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு நிம்மதியான வாரம். புகுந்த வீட்டு உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

## விருச்சிக ராசி அன்பர்களே!

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

அலுவலகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகை இப்போது கிடைக்கும். சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கும்.

வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

குடும்ப நிர்வாகத்தை கவனித்துவரும் பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

## தனுசு ராசி அன்பர்களே!

பணவரவு தேவையான அளவுக்கு இருக்கும். வீண் செலவுகளும் இருக்காது. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுப்பிடித்துச் செல்லவும்.

அலுவலகத்தில் உங்களுக்கு மறுக்கப்பட்டு வந்த சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு வேறு ஊருக்கு இடமாறுதல் கிடைக்கும்.

வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகளுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டாகும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு வார பிற்பகுதியில் மனதில் சிறு குழப்பம் ஏற்படக் கூடும். வார பிற்பகுதியில் புகுந்தவீட்டு உறவினர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும்.

## மகர ராசி அன்பர்களே!

பணவரவு திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உள்ளது. சகோதர வகையில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகளும் கசப்பு உணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படும்.

உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

விலகிச்சென்ற நண்பர்கள் மீண்டும் வந்து நட்பு பாராட்டுவார்கள்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவால் நீண்டநாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும்.

வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும். பங்குதாரர்களால் தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும்.

குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிப்பதால் சற்று சிரமமான வாரம் என்றே சொல்ல வேண்டும்.

## கும்ப ராசி அன்பர்களே!

பணவரவு இருந்தாலும் வீண்செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

அலுவலகத்தில் உங்கள் பணிகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். உயர் அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கி இணக்கமான சூழ்நிலை உண்டாகும். கடன் வாங்கி முதலீடு செய்வதைத் தவிர்க்கவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திருப்திகரமான வாரம். வேலைக்குச் சென்றுவரும் பெண்களுக்கு பணிச்சுமையின் காரணமாகச் சற்று சோர்வு ஏற்படக்கூடும்.

## மீன ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்கள் அனுகூலமாகும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்றுசேரும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சகோதரர்கள் மூலம் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்க அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமை அவசியம்.

அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சிலருக்கு விரும்பத்தகாத இடமாற்றம் ஏற்படக்கூடும். அதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும்.

வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். பற்று வரவு விடயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். புகுந்த வீட்டினர் கண்டிப்பாக இருந்தாலும் அவர்களை அனுசரித்துச் செல்வது எதிர்காலத்துக்கு நல்லது.

தமிழன் தொடர்கதை

# யார் அவன்

அத்தியாயம்

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

அன்புள்ள அண்ணாவுக்கு...

அண்ணா முதலில் நான் கெஞ்சுக் கேட்டுக்கொள்வது, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு பெரிய துரோகம் செய்துவிட்டேன். நீங்கள் எத்தனையோ முறை அவனை பற்றி என்னிடம் சொன்னீர்கள். அவன் கூடாதவன் என்றெல்லாம் சொன்னீர்கள். ஆனால், நான் அப்போது கேட்கவில்லை. பின்னர் அது உண்மையா என்று தேடிப் பார்த்தேன். அது அத்தனையும் அப்பட்டமான உண்மைதான்.

நீங்கள் சொன்னதைப்போலவே அந்தக் கடை அவனுக்கு சொந்தமானதுதான். அங்கு அவனுடைய கையாள் ஒருவனை முகாமையாளராக வைத்துக்கொண்டு அவனுடைய நண்பனைப்போல் அங்கு வந்துபோவதும் பிறகு அங்கு வேலை பார்க்கும் பெண்களில் கொஞ்சம் அழகானவர்களுக்கு காதல் வலை வீசுவதும் அதில் சிக்கவைத்து தனக்கு தேவையான மட்டும் அனுபவித்து விட்டு கை விடுவதும் அவனின் வாடிக்கை. அவனால் அப்படி நாசமாக்கப்பட்ட பெண்களின் பட்டியல் மிகவும் அதிகம்.

அவன் மிகவும் மோசமானவன். அதை நான் தெரிந்துகொண்டாலும் அவனை விட்டு என்னால் பிரிய முடியாத நிலைமை அண்ணா. ஏனென்றால், அவன் என்னை ஆசை தீர தேவையான பொழுதெல்லாம் அனுபவித்துவிட்டான். அதன் விளைவாக நான் இப்போது கர்ப்பமாக இருக்கின்றேன்.

எனவே, அவனிடம் அதனைச் சொல்லி என்னை திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்திக் கேட்டேன். எனவே, என்னை திருமணம் செய்துகொள்வதாகவும் அதற்காக அவனுடைய காட்டு பங்களாவுக்கு வரச் சொல்லியிருக்கான். அங்கு வைத்து என்னை திருமணம் செய்துகொள்வதாக வாக்குத் தந்திருக்கிறான். எனக்கென்றால் அதில் துளியளவும் நம்பிக்கையில்லை. எப்படியும் அங்கு வைத்து என்னை கொன்றாலும் கொன்றுவிடுவான். அதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. இனிமேல் நான் வாழ்ந்தும் எந்த விதமான பிரயோசனமும் எனக்கில்லை. எனவே, எனக்கு இரண்டில் எது நடந்தாலும் ஒன்றுதான்.

அண்ணா, நான் இனி உன்னை பார்ப்பேனோ தெரியாது. அதனால் நான் உன்னிடமிருந்து விடைபெறுகிறேன். என்னை இல்லை... இல்லை... இந்தப் பாவியை மன்னித்துவிடு அண்ணா. மன்னித்து விடு. இதற்கு மேல் என்னால் எதுவும் பேச முடியவில்லை. இப்படிக்கு உன் அன்புத் தங்கை - என்று அவள் கடிதத்தை முடித்திருந்தாள்.

அதனை வாசித்து முடித்த ராதாவின் விழிகளில் கண்ணீர்த்துளிகள் எட்டிப் பார்த்தன. பின்னர் தன் கையிலிருந்த புகைப்படத்தை ராதாவிடம் நீட்டினான். அதில் ரவியும் ராதாவின் நண்பியும் ஒன்றாக இருந்தனர். அதனைப் பார்த்தவளுக்கு ஆயிரம் ஓல்ட் மின் தாக்கியதைப்போல் சொக்காகி நின்றாள்.

அதற்குப் பின் நண்பியின் அண்ணன் கதையை சொல்லத் தொடங்கினான்.

அதற்குப் பிறகு அவளை பிணமாகவே நான் கண்டேன். ரவி நல்லவனைப்போல் நன்றாக நடிப்பான். பின்னர் எப்படியும் ஏழை பெண்களை தன் வலையில் சிக்க வைத்து அனுபவிப்பான். அதனால் என்னுடைய தங்கைக்கு வந்த நிலை வேறு எந்தப் பெண்களுக்கும் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே அவனை கொலை செய்துவிடவேண்டும் என்று முயற்சி செய்துகொண்டிருந்தேன். ஆனால், அவன் எப்படியோ அதிலிருந்து தப்பித்து விடுகிறான். கெட்டவனுக்கு ஆயுள் கூட கெட்டிதான்.

கடைசியாக அந்த முயற்சியில் ஈடுபடும் பொழுதுதான் அவனுடன் உன்னை கண்டபொழுது எனக்கு அதிர்ச்சி. அதனால்தான் நான் சரியாக அவனை தாக்க முடியவில்லை. சரி நல்லவேளை ஆரம்பத்தில் கண்டுவிட்டேன். எனவே, அவனிடமிருந்து விலகி விடு. அதுவே உனக்கு நல்லது என்று அவன் சொன்னதும் தன் முகத்தை கரத்தால் மறைத்துக்கொண்டு அழத் தொடங்கிய ராதா.

''அண்ணா நானும் அவனிடம் ஏமாந்து விட்டேன். அவன் என்னையும் பல முறை சுவைத்துவிட்டான். அதையெல்லாம் வைத்துதான் அன்று என்னை திருமணம் செய்துகொள்ளச் சொல்லி கேட்பதற்காக அங்கு வரச் சொன்னேன். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது'' என்றபடி மீண்டும் அழுதாள்.

''அம்மா அப்பாவுக்கு நான் துரோகம் செய்து விட்டேனே. இனி எதற்கு நான் வாழணும். எப்படி அவர்களின் முகத்தில் என்னால் விழிக்க முடியும்## என்றபடி தேம்பித் தேம்பி அழுதாள் ராதா.

அவ்வாறு அழுதவளை ஆறுதல் படுத்த முடியவில்லை என்றாலும் அவளுக்கு ஒரு ஐடியாவை கொடுத்த அவளுடைய நண்பியின் அண்ணன். அவளை அவளுடைய வீட்டுக்கு கவனமாக போகும்படி அறிவுரை சொல்லி அனுப்பிவைத்தான்.

ராதாவும் அவன் சொன்னதைக்கேட்டு விட்டு அமைதியாக வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டாள். அங்கு ரவி இவளுக்காக காத்திருந்தான். அவள் அங்கு வருவதைக் கண்டதும்,

''என்ன ராதா எங்கு போனே. இண்டைக்கு உன்னைப் பார்க்க நான் கடைக்குப் போனேன். அங்கு உன்னைக் காணவில்லை. நீ கடைக்கு வரவில்லை என்று சொன்னார்கள். எனக்கு அதிர்ச்சியாகிட்டு உனக்கு என்னாச்சுது என்று தெரியாது உடனே கோல் எடுத்தால் அதுவும் வேலை செய்யவில்லை அதுதான் என்ன நடந்ததோ என்று தெரியாமல் பதறிக் கொண்டு இங்கு ஓடி வந்து கேட்டால் நீ கடைக்குப் போனதாகவே சொல்கிறார்கள். அதுதான் யோசித்துக்கொண்டிருந்தேன்'' என்றான்.



அதனை கேட்கவும் அவனைப் பார்க்கவும் அவளுக்கு கோபம் வெறியாக மாறிக் கொண்டிருந்தது. இருந்தாலும் அது அக்குடும்பத் துக்கு தெரிந்து விடும் என்பதற்காக வெளியே காட்டிக் கொள்ளாமல் அமைதியாக, ''போகும்போது பஸ்ஸில் வந்த ஓர் இளம்பெண்ணுக்கு முடியாமல் போய்விட்டது. அதுதான் அவளுக்கு துணையாக அவளை கூட்டிப் போய் அவளுடைய வீட்டில் விட்டுவிட்டு வரும்போது நேரம் போனதால் கடைக்கு போகவில்லை'' என்று சொல்லி சமாளித் தாலும் ராதாவின் முகத்தில் ஒரு மாற்றம் இருப்பதை ரவி விளங்கிக் கொண்டான். அது என்ன மாற்றம் என்பது அவனுக்குத் தெரியாது.

(தொடரும்)

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

வீரம்மா மனசால
நொந்திருந்தா
தன் புருசன் வீரய்யா
எத்தினயோ கனவுகளில்
சீம தேசம் கூட்டி
வந்தார்

இந்த தும்பற
தேசத்திலே
சின்னப்பட்டு சீரழிஞ்சி
நாதியத்த
பொணமானார்

அவர் கழுத்த
புடிச்சிழுத்து
தெருநாய போல
அங்கு
காட்டு பயலந்த
தொரக்காரே
மிதிக்கயிலே

கங்காணி கூடருந்தான்
எத்தனையோ சாதி
சனம் கண்ணு
முன்ன பாத்திருந்தும்
ஒருபயலும்
கேக்கலியே...

ஶ்ரீ துரையோட
துப்பாக்கி சத்தமாக
கத்திவிட ஒட்டுமொத்த
குரலுமதில்
மங்கித்தா போயிருச்சே

காலோட மூத்திரமும்
கக்காயும் போயிவிட
ஒட்டிருந்த அவருசுரு
போன எடம் தெரியலியே

வீரய்யா உசுரோட
இருக்கும்போதே
கங்காணி தீண்டவந்தா
தொரக்காரே
கண்ணடிச்சா
வீரய்யா
இருக்கவும்தான்
ஒருத்தனும் தீண்டவில்ல

வீரம்மா உடம்புமீது
கொண்டிருந்த
ஆசைகளும் அவ
புருசன கொன்றுவிட
காரணம் ஆகியது....

இத்தன பாவத்துக்கும்
காரணமே
கங்காணிதான்
மக்களோட கூடருந்து
காட்டி கொடுத்துவந்து
கடைசியில் கழுத்தறுத்து
விட்டிடுவான்

வீரய்யா இறந்த பின்னே
புத்தியற்று போயிருந்த
பூசாரி முருகையா
அப்பனப்போல்
உடனிருந்தான்...

கொலரா கொடும்
நோயில் அவரும்
இறந்துவிட ஊட்டுவள்ளி
தோட்டத்திலே
ஒண்டியாய் இருந்த
அந்த மாரிமுத்த
கைபுடிச்சா....

ரெண்டு பேரும் வேள
செஞ்சி இந்த நாசமத்த
தோட்டம் தாண்டி நம்ம
ஊரு போயிடணும்
ரெண்டு பேரு
மனசுக்குள்ளும்
இந்த கனவுகள்
தான்...

தோட்டங்களில்
கள்ளுக்கடை
அதிகரிக்க குடிப்பழக்கம்
கூடிவந்து பந்தியில
குந்திருக்கு
வாங்குகிற சம்பளமும்
கள்ளுக்கடை
பக்கமின்று கட்டாயம்
போயிவிட விட்டு
செலவுகளோ
புதுச்செலவாய்
ஆகியது

(சொல்ல மறந்த
கதை இன்னும்
சொல்லப்படும்)

தொடரும்........
எம். ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் சிறுகதை

# சுமைதாங்கி

வரக்காமுறையூர் ராசிக்

அன்று வழமைக்கு மாறாக சற்று நேரத்தோடு எழுந்து விடுகிறேன். சுபஹ் தொழுகையை நிறைவேற்றிவிட்டு வந்து வீட்டின் முன் பக்கமாக போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்துகொள்கிறேன். இன்றைய தினம் அந்த பாடசாலையில் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் இடம்பெறவிருந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பெற்றோருக்கு கருத்துரை வழங்கும் பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டிருந்தது. அதுவரைக்கும் என்ன பேசுவது? எப்படி பேசுவது? என்று எதுவுமே எனக்குத் தெரியவில்லை. கண்ணில் பட்ட புத்தகங்களை எல்லாம் வாசித்துக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தேன். போதாக்குறைக்கு என் மனைவியும் பக்கத்தில் வந்து அமர்ந்துகொண்டாள். வழமைப் போலவே அவளும் எனக்கு ஆலோசனை வழங்கினாள். நீண்டநேரமாக கலந்துரையாடி எப்படி பேசப் போகிறோம் என்றதொரு முடிவுடன் எழுந்து நிற்கிறேன்.

''உங்களுக்கு குறிப்பு ஒன்றும் தேவயில்ல. நீங்க பேசத் தொடங்கினா ஊத்துமாதிரி வந்து கொட்டும்'' வழமைப் போலவே என்னை உற்சாகப்படுத்தும் மனைவியை பார்த்து நன்றியுடன் புன்னகைக்கிறேன். ''சரி சரி சிரிச்சது போதும் அவசுரமா குளிச்சிட்டு ரெடியாகுங்க'' என்று கூறிய மனைவி சமையலறைக்குள் நுழைந்து மறைகிறாள். நான் அவசர அவசரமாக குளித்துவிட்டு வர காலைச் சாப்பாடு தயாராக இருந்தது. மனைவியின் அன்பு கலந்த பரிமாற்றத்துடன் திருப்திகரமாக காலை உணவை உட்கொண்ட நான் இறைவனுக்கு நன்றி செலுத்தியவனாய் வெளியேறிச் செல்கிறேன்.

எனக்கு முன்னமே பெற்றோர்களும், ஆசிரியர்களும் வருகை தந்திருந்தனர். ஆண்களும் பெண்களுமாக அனைவரும் ஆர்வத்துடன் என்னை எதிர்பார்த்திருப்பதை உணர்ந்துகொள்கிறேன். தாமதிக்காமல் கூட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. பாடசாலையின் உப அதிபர் என்னை அறிமுகம் செய்து வைக்கிறார். ''எங்கள் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் கல்விப் பணிப்பாளரை நான் அன்புடன் வரவேற்றுக்கொள்கிறேன். நீண்ட நாட்களுக்குப் பின்னால் சேர் எங்கட பாடசாலைக்கு வந்திருக்காரு. இன்று அவர் பெற்றோருக்குத் தேவையான நல்ல ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவார். எனவே, அதைக் கேட்டு பூரணமான பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறி விடைபெறுகின்றேன்.'' உப அதிபரின் சிறிய அறிமுகத்தைத் தொடர்ந்து நான் எழுந்து நிற்கிறேன். நீண்ட நாட்களுக்குப் பின் பேசுவதால் உடம்பு இலேசாக படபடத்தது. என்னையறியாமல் முகம் வியர்த்தது. அவை எல்லாவற்றையும் சாமர்த்தியமாக மறைத்துக்கொண்டு அனைவரையும் விழித்து முகமன் கூறியவனாக பேசத் தொடங்கினேன்.

''இன்னிக்கி நான் பெரிசா ஒண்ணும் பேச போறதில்ல. நீங்கதான் என்கூட பேசப் போறீங்க. ஏன்னா நான் மட்டும் பேசுறதவிட நீங்களும் சேர்ந்து பேசி கலந்துரையாடினாத்தான் எதிர்பார்த்த வெற்றியை பெறலாம். அதனால் ஒவ்வொருத்தரும் சுயாதீனமா எழும்பி உங்க வீட்டுக்குள்ள புள்ளைகளோட எப்படி நடக்குறீங்க? அவங்கள எப்படி நடத்துறீங்கன்னு சொன்னா நல்லா இருக்கும்னு நினைக்கிறன்.'' நான் முழுமையாகக் கூறி முடிப்பதற்குள் பெற்றோர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு எழுந்து நிற்கின்றனர். அவர்களை அமைதிப்படுத்தி அமரச் செய்துவிட்டு ஒவ்வொருவராக சந்தர்ப்பம் வழங்குகிறேன்.

''சேர் என்ட மகள் நல்லா படிக்கிறா சேர். வாப்பா வெளிநாட்ல இருக்காரு. அவக்கு எல்லாமே நான்தான். இரவு பதினொரு மணிக்கு பின்னாடித்தான் தூங்குவா. காலையில எழுப்புறதுக்கு கொஞ்சம் கஷ்டம். அவக்கு கொஞ்சம் கோவம் வார சேர். கொஞ்சம் போன் பார்ப்பா அவ்வளவுத்தான்.''

''என்ட மகன் சேர். படிக்கிறதுக்கு எல்லா வசதியும் இருக்கு. வாப்பா ஜப்பான்ல இருக்காரு. நான் சொல்றத கேட்க மாட்டாரு. படிக்க சரியான களவு. இரவைக்கி சும்மா முழிச்சிட்டு இருப்பாரு. போன்ல கொஞ்சம் கேம் விளாடுவாரு. மற்றபடி ஒரு குழப்பமும் இல்ல சேர்.''



''என்ட மகனுக்கு எல்லா வசதியும் இருக்கு சேர். ஆனா எவ்வளவு சொன்னாலும் படிக்க மாட்டாரு. ஒரே போன்லதான் வேல. சரியா தூங்குறதும் இல்ல. வாப்பா கட்டார்ல இருக்காரு. காலையில் எழும்பவே மாட்டாரு. வேற பெரிசா குழப்பம் ஒண்டும் இல்ல சேர்.''

''என்ட மகள் நல்லா படிக்கக்கூடியவ சேர். ஆனா படிக்கிற எதுவுமே அவக்கு ஞாபகத்துல நிக்குது இல்ல சேர். சாப்பிடவே மாட்டா. வாப்பா டுபாய்ல இருக்காரு. சொன்னாத்தான் தொழுவா. போன் ஈக்கிதுதான். ஆனா பெரிசா பாவிக்கா மாட்டா.''

ஒவ்வொருவராக தமது பிள்ளைகள் தொடர்பாகவும் வளர்ப்பு முறை தொடர்பாகவும் வெளிப்படையாகக் கூறிக்கொண்டிருந்தனர். பொதுவாக பிள்ளைகள் சாப்பிடுவதில்லை. நேரத்திற்கு தூங்குவதில்லை, தொலைபேசியில் கார்ட்டூன் பார்க்கிறார்கள், கேம் விளையாடுகிறார்கள், காலையில் எழும்புவதில்லை போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். பெரும்பாலும் தாய்மார் மட்டுமே பிள்ளைகளுடன் இருந்தனர்.

நான் பிள்ளை வளர்ப்பில் இருவருக்கும் உள்ள பொறுப்புகள் பற்றி விளக்கினேன். பெற்றோர்களின் முன்மாதிரிதான் பிள்ளைகளை வழிப்படுத்தும் என்பது பற்றி சிறுசிறு கதைகளுடன் வழிப்படுத்தினேன். இறுதியாக ஒரு மூலையில் சோக த்துடன் அமர்ந் திருந்த ஒரு தாயை எழுப்பு கிறேன். அவர் கண்கள் இரண்டும் கலங்கி இருந்தன. தயக்கத்துடன் எழுந்து நிற்கிறார். அவர் நாவு தடுமாறியது.

''எனக்கு மூணு புள்ள சேர். அவங்க எல்லாரும் மிச்சம் நல்லம் சேர்...ஏதோ படிக்கிறாங்க சேர்....'' தழுதழுத்த குரலில் பேசிய அந்த தாயை நான் அவதிப்படுத்த விரும்பாது அமரச்செய்தேன். ஆனால், அவருக்குள் ஏதோ பிரச்சினை இருப்பதாக என்னால் உணர முடிந்தது. எனினும், என்னால் வெளிப்படையாக எதுவும் பேச முடியவில்லை. வந்திருந்த அனைத்துத் தாய்மார்களையும் உற்சாகப்படுத்தி கதைத்து முடிக்கிறேன்.

''சேர் வாப்பாமாருக்கும் இப்படியொரு நிகழ்ச்சி செஞ்சா நல்லம் சேர்.'' இப்படி ஒருவர் சொல்ல, ''பிள்ளைகளோடயும் கொஞ்சம் பேசுங்க சேர்'' என அனைத்து தாய்மாரும் ஒருமித்துக் கூற, திருப்தியாக கூட்டம் நிறைவு பெறுகிறது. அவர்களின் முகத்தில் காணப்பட்ட திருப்தி என் மனதை நிறைத்தது. ஒவ்வொருவரும் தனித்தனியாக வந்து அவரவர் பிரச்சினைகளை என்னிடம் கூறிக்கொண்டிருந்தபோது இறுதியாக தட்டுத்தடுமாறி பேசிய அந்த தாய் என்னுடன் எதையோ பேசுவதற்கு காத்திருப்பதை உணர்ந்துகொண்டு அவசர அவசரமாக மற்றவர்களை அனுப்பிவைக்கிறேன். அந்த தாய் தயக்கத்துடன் என்னருகில் வருகிறார்.

''சேர்......... நான் உங்க கூட கொஞ்சம் தனியா பேசணும் சேர்'' அவர் சொல்லி முடிப்பதற்குள் ''வாங்க..வாங்க ஏதும் பிரச்சினையா?'' நான் சற்று அவசரப்பட்டேன்.

''''இல்ல சேர். எனக்கு துஆ செய்ங்க சேர். எனக்கு மூணு புள்ள சேர். இவரு இங்கதான் ஆட்டோ ஓட்றாரு. ஆனா அவருக்கும் இன்னொரு புள்ளக்கும் தொடர்பு ஈக்கி சேர். ஒரே எனக்கு அடிக்கிற. இத புள்ளைகளும் பார்க்குற. அவங்க மூணு பேரும் மனசால பாதிக்கப்பட்டிருக்காங்க சேர். வாப்பாக்கிட்ட எதையுமே கேட்க மாட்டாங்க. என்னோட சரியான இரக்கம். எனக்கு என்னபத்தி எந்த கவலையும் இல்ல சேர். என்ட புள்ளைகள நெனச்சாதான் வயிறு பத்துது சேர்'' அந்த தாய் கூறிக்கொண்டே செல்கிறார். என் கண்களில் கண்ணீர் முட்டியது. அதற்கு மேல் அவர் பேசுவதை என்னால் கேட்க முடியவில்லை.

''இதுக்குப் போய் ஏன் கவலப்படுறீங்க. உங்களுக்கு உசுரான மூணு பிள்ளைகள இறைவன் தந்திருக்கான். அவங்களும் பொறுப்பா உங்கள மதிச்சு நடக்குறாங்க. இப்படியே அவங்கள வளர்த்து ஆளாக்கி விட்டுடீங்கன்னா உங்கட கவல எல்லாம் தீர்ந்துடும். இறைவன் அவங்களுக்கு ஒரு நல்ல வழிய காட்டுவான். நிச்சியமா அவங்க நல்லா வருவாங்க'' நான் உணர்ச்சிப் பெருக்கோடு கூறி முடிக்க, அவர் ஒரு வெற்றிக் களிப்போடு என்னை நோக்குகிறார்.

''ஓ...சேர் எல்லாரும் இப்படித்தான் சொல்றாங்க. நீங்களும் எங்களுக்காக துஆ செய்ங்க சேர்'' அந்த ஒற்றை வார்த்தையில் நிரம்பி இருந்த நம்பிக்கைகள் என்னை பிரமிக்க வைத்தது. கலங்கிய விழிகளோடு வந்தவர் சிரித்த முகத்தோடு விடைபெற்றபோது மனதுக்கு கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. இருந்தாலும் மனதுக்குள் பெரும் சுமைகளை இடுக்கிக்கொண்டு நகர்ந்து செல்லும் அந்த சுமைதாங்கியை நினைக்கும்போது இலேசாக மனது வலித்தது.

# 2023 - 2025 டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை

# வெற்றியுடன் ஆரம்பிக்குமா இலங்கை?

ஏ. அகீல் சிஹாப்

## பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடர் இன்று காலியில் ஆரம்பம்




பாபர் அஸாம் தலைமையிலான சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும், திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணிக்கும் இடையிலான இரு போட்டிகள்கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதல் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது. இரண்டாவது போட்டி இம்மாதம் 24ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்றாவது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் (2023 - 2025) முதல் ஆட்டம் தற்போது இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடருடன் ஆரம்பமான நிலையில், இலங்கை அணி தங்களது முதல் தொடரில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. அது மட்டுமல்லாமல், பாகிஸ்தான் அணியும் 2023 - 2025 டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் முதல் ஆட்டத்தில் பங்கேற்கிறது.

### ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது டெஸ்ட் போட்டிகளுக்கும் ஒரு சம்பியனை தீர்மானிக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் என்ற பெயரில் ஒரு தொடர் கடந்த 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. குறித்த ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது இரண்டு வருடங்களாக நடைபெறுகிறது.

இரண்டு வருடங்களில் நடைபெறுகின்ற டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி, அந்த இரு அணிகளுக்கிடையில் நடைபெறும் இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை சுவீகரிக்கும். முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணியும், இரண்டாவது டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை பெட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியும் சுவீகரித்துள்ளன.

### நேருக்கு நேர்

### இதுவரையில் நடைபெற்ற போட்டிகள்

கடந்த 1982ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் டெஸ்ட் போட்டி கராச்சியில் நடைபெற்றது. குறித்த போட்டியில் பாகிஸ்தான் அணி 204 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரையில் இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் 57 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் பாகிஸ்தான் அணி 21 போட்டிகளில் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தும் நிலையில், இலங்கை அணி 17 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. 19 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளன.

Win Percentage




### இறுதி ஐந்து போட்டிகள்

இரு அணிகளுக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற 5 டெஸ்ட் போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்ற போது, இலங்கை அணி இரு போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் நிலையில், பாகிஸ்தான் அணி இரு போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவுக்கு வந்தது.

இறுதியாக பாகிஸ்தான் அணி கடந்த 2022 ஜூலையில் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தவேளையில் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணியும், இரண்டாவது போட்டியில் இலங்கை அணியும் வெற்றிபெற தொடர் சமநிலையானது.

### மீண்டும் டெஸ்ட் சம்பியன்ஷிப் மோதல்

முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பரில் இலங்கை அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. குறித்த தொடரை பாகிஸ்தான் அணி 1-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. பின்னர் கடந்த 2022 ஜூலையில் நடைபெற்ற தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலையானது. இந்நிலையில், தற்போது நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை – பாகிஸ்தான் அணிகள் மீண்டும் மோதுகின்றன.

### இருதரப்பு டெஸ்ட் தொடர்கள்

கடந்த 1982ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு ஜூலை வரையில் 21 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் பாகிஸ்தான் அணி 9 தொடர்களை வென்றுள்ள நிலையில், இலங்கை அணி 6 தொடர்களை வென்றுள்ளது. 6 தொடர்கள் வெற்றிதோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளன.

இலங்கை அணி கடந்த 2017ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்து பாகிஸ்தானுடன் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதன் பின்னர் இதுவரையில் தொடரைக் கைப்பற்றவில்லை. எனவே, இலங்கை அணி 6 ஆண்டுகளின் பின்னர் பாகிஸ்தானுடன் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

### பாகிஸ்தான் குழாம்

பாபர் அஸாம் (தலைவர்), மொஹமட் ரிஸ்வான், ஆமிர் ஜமால், அப்துல்லாஹ் சபீக், அப்ரார் அஹ்மட், ஹசன் அலி, இமாம் உல் ஹக், மொஹமட் ஹுரைரா, மொஹமட் நவாஸ், நசீம் ஷா, நோமான் அலி, சல்மான் அலி ஆகா, சர்பராஸ் அஹ்மட், சவுட் சகீல், சஹீன் அப்ரிடி, ஷான் மசூத்.

### இலங்கை குழாம் (முதல் போட்டி)

திமுத் கருணாரட்ன (தலைவர்), நிஷான் மதுஷ்க, குசல் மெண்டிஸ், அஞ்சலோ மெத்தியூஸ், தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா, பெத்தும் நிஸ்ஸங்க, சதீர சமரவிக்ரம, கமிந்து மெண்டிஸ், ரமேஷ் மெண்டிஸ், பிரபாத் ஜயசூரிய, பிரவீன் ஜயவிக்ரம, கசுன் ராஜித, டில்சான் மதுசங்க, விஷ்வ பெர்னாண்டோ, லக்ஷித மானசிங்க.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

வெளிவந்துவிட்டது!
ஜூனியர் வழங்கும் தமிழன்
2023ஆம் ஆண்டுக்கான
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை
'வெற்றிக்கு வழிவகுக்கும்'
விசேட மாதிரி வினாத்தாள் பொதி




விலை ரூ.850/= மட்டுமே
பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308 / 0741684643

# உலகின் பணக்கார உதைபந்து வீரர் யார் தெரியுமா?

## இளம் வயதில் பணக்காரரான புருனே இளவரசரின் மகன்








விளையாட்டு என்பது ஒரு ஆர்வம் மட்டுமல்ல, வெற்றி பெற்றால் உங்களுக்கு மரியாதை. ரசிகர்கள் மற்றும் பெரும் வருமானம் ஆகியவற்றை வழங்கும் மிகவும் கவர்ச்சிகரமான துறையாகும். கிரிக்கெட், உதைபந்து அல்லது டென்னிஸ் என எந்த விளையாட்டாக இருந்தாலும், வீரர்கள் தங்கள் பிராண்டுகளை விளம்பரப்படுத்து வதற்காக நிறுவனங்களால் பணத்தைப் பொழிகிறார்கள்.

மேலே செல்லும் பாதை சற்று கடினமானதாக இருந்தாலும், எந்த விளையாட்டிலும் உச்சத்தை எட்டுவது யாராலும் முடியாத காரியம் அல்ல. அந்தவகையில் உதைபந்து என்பது கணிசமான நிதி முதலீடுகளைச் சுற்றிச் சுழலும் ஒரு விளையாட்டாகும். உதைபந்து வீரர்கள் இடமாற்றங்கள், ஊதியங்கள், ஸ்பான்சர்ஷிப்கள் மற்றும் பல்வேறு வருவாய் வழிகள் மூலம் குறிப்பிடத்தக்க தொகையை சம்பாதிக்கின்றனர்.

உலகின் பணக்கார உதைபந்து வீரர் யார் என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா ? லியோனல் மெஸ்ஸி, கிறிஸ்டியானோ ரொனால்டோ, கைலியன் எம்பாப்பே அல்லது டேவிட் பெக்காம்? இவர்களில் யாருமில்லை. உலகின் பணக்கார உதைபந்து வீரர் ஃபைக் போல்கியா.

புருனேயின் இளவரசர் ஜெஃப்ரி போல்கியாவின் மகனும், உதைபந்து வீரருமான 25 வயதான ஃபைக் போல்கியா, உலகின் பணக்கார உதைபந்து வீரர் என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார். அவரது சொத்து மதிப்பு 20 பில்லியன் டொலராகும்.

அவருக்கு அடுத்து, லியோனல் மெஸ்ஸி வருகிறார். ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த 35 வயதான லியோனல் மெஸ்ஸி, நவீன உதைபந்து சகாப்தத்தின் மிகச்சிறந்த வீரராக பரவலாக அங்கீகரிக்கப்படுகிறார். மார்ச் 2023 நிலைவரப்படி, மெஸ்ஸியின் நிகர மதிப்பு 600 மில்லியன் டொலராக உள்ளது. இதனால் அவர், உலகின் இரண்டாவது பணக்கார உதைபந்து வீரராக உள்ளார்.

புகழ்பெற்ற போர்த்துக்கல் உதைபந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, மிகவும் வெற்றிகரமான வீரர்களில் ஒருவர். அவரின் தற்போதைய நிகர மதிப்பு சுமார் 500 மில்லியன் டொலர். அவர் உலகளவில் மூன்றாவது பணக்கார உதைபந்து வீரர் என்ற இடத்தைப் பிடித்துள்ளார். ரொனால்டோவின் சிறப்பான திறமைகள் மற்றும் பல சாதனைகள் அவரது நிதி வெற்றிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளன.

இங்கிலாந்தின் முன்னாள் உதைபந்து வீரரான டேவிட் பெக்காம், களத்திலும் வெளியிலும் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார். 450 மில்லியன் டொலர் நிகர மதிப்புடன், பெக்காம் உலகின் பணக்கார உதைபந்து வீரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். முன்னாள் இங்கிலாந்து உதைபந்து வீரர் மற்றும் தொழிலதிபர் டேவ் வீலன், உதைபந்து மற்றும் வணிக உலகில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். 210 மில்லியன் டொலர் நிகர மதிப்புடன், வீலன் தனது வாழ்க்கை முழுவதும் கணிசமான நிதி வெற்றியை அடைந்துள்ளார்.

இந்தப் பட்டியலில் அடுத்த இடத்தில் பிரேசில் வீரர் நெய்மர் உள்ளார். விளையாட்டில் மிகவும் திறமையான வீரர்களில் ஒருவராக நெய்மர் பெயர் பெற்றார். 200 மில்லியன் டொலர் நிகர மதிப்புடன், நெய்மர் தனது வாழ்க்கை முழுவதும் கணிசமான செல்வத்தைக் குவித்துள்ளார்.

சுவீடனைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர் ஸ்லாடன் இப்ராஹிமோவிச் களத்திலும் வெளியிலும் குறிப்பிடத்தக்க வாழ்க்கையைப் பெற்றுள்ளார். 190 டொலர் மில்லியன் நிகர மதிப்புடன், இப்ராஹிமோவிக் தனது புகழ்பெற்ற வாழ்க்கையில் கணிசமான நிதி வெற்றியைப் பெற்றுள்ளார்.

முன்னாள் இங்கிலாந்து உதைபந்து வீரர் வெய்ன் ரூனி வெற்றிகரமான வாழ்க்கையை அனுபவித்து கணிசமான செல்வத்தைக் குவித்துள்ளார். அவர் 170 மில்லியன் டொலர், நிகர மதிப்புடன் உள்ளார். பிரேசிலின் புகழ்பெற்ற உதைபந்து வீரரான ரொனால்டோ நசாரியோ 160 மில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் பட்டியலில் 9ஆவது இடத்தில் உள்ளார். தனது வித்தியாசமான கோல் அடிக்கும் திறன் மற்றும் திறமைக்காக அறியப்பட்ட ரொனால்டோ, பார்சிலோனா, இண்டர் மிலன் மற்றும் ரியல் மாட்ரிட் போன்ற மதிப்புமிக்க கிளப்புகளுக்காக விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

33 வயதான பிரேசிலிய உதைபந்து வீரர் அலெக்ஸாண்ட்ரே பாடோ, குறிப்பிடத்தக்க தொழில் வாழ்க்கையைக் கொண்டிருந்தார். அவரது நிகர மதிப்பு பொதுவாக சுமார் 150 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

இரு மனங்கள் இணையும் திருமணத்திற்காக...

மலர் :1 இதழ் : 40- 16.07.2023

# VIVAHA
# විවාහ
# விவாஹா

திருமண வாழ்க்கையில் அதிகம் எதிர்பார்ப்பு கொண்ட ராசிகள்!

திட்டமிட்ட செலவுகளும்... சிக்கன திருமணமும்...

நெற்றியில் குங்குமம் இடும் பெண்கள்

உங்களுடைய சருமம் பளபளப்பாக



# உங்களுடைய சருமம் பளபளப்பாக



உங்களுடைய சருமம் பளபளப்பாக, கண்ணாடி போன்று பளிச்சென்று மாறவேண்டும் என்றால் சருமத்தில் தேங்கும் அழுக்குகள் மற்றும் இறந்த செல்களை குறிப்பிட்ட இடைவெளிகளில் நீக்கவேண்டியது முக்கியம். இறந்த செல்கள் நீங்கி புதிய செல்கள் உருவாகி சருமத்தின் இரத்தோட்டம் அதிகரிக்கும்போதும் சருமம் இன்னும் கூடுதல் பொலிவாக மாறும்.



**சருமத்துக்கு ஸ்ரோபெரி பயன்படுத்துவதன் பயன்கள் (strawberry benefits for skin)**

ஸ்ரோபெரி எவ்வளவு சுவையான பழமோ அதே அளவுக்கு உங்களுடைய சருமத்துக்கும் அழகு சேர்க்கும். சருமத்துக்கு புத்துணர்ச்சியும் தக்காளி போன்ற பளபளப்பும் மென்மையும் உண்டாகும்.

ஸ்ரோபெரியிலுள்ள விற்றமின் சி மற்றும் அதிகப்படியான ஆன்டி ஆக்சிடண்ட்டுகள் உடலிலுள்ள ஃப்ரீ–ரேடிக்கல்ஸை எதிர்த்துப் போராடும். சுற்றுக்சூழல் மாசு சருமத்தைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள உதவும்.

ஸ்ரோபெரி சருமத்தில் கொலாஜன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதோடு, சருமத்தின் எலாஸ்டிசிட்டியை அதிகரிக்கச் செய்யும். சருமத்தில் ஏற்படும் சுருக்கங்களைப் போக்கி சருமத்தை இளமையாக வைத்திருக்கச் செய்யும். சருமத்தில் இருக்கும் பெரிய துளைகளைச் சரிசெய்ய உதவி செய்யும்.

**சருமத்துக்கு பிரௌன் சுகர் பயன்படுத்துவதன் நன்மைகள் (brown sugar scrub for skin)**

பிரௌன் சுகர் துகள் துகளாக இருக்கும். இது சருமத்துக்கு மிகச்சிறந்த எக்ஸ்ஃபோலியேட்டராகச் செயல்படும். இது மற்ற கெமிக்கல் ஸ்கிரப்புகளைப் போல் எந்தவித பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாது.

பிரௌன் சுகர் சருமத்திலுள்ள இறந்த செல்களையும் மாசுக்களையும் நீக்கி சருமத்துக்கு புத்துணர்ச்சியும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். சருமத்திலுள்ள இறந்த செல்களை மிகவும் மென்மையாக வெளியேற்றக் கூடியது. குறிப்பாக சருமத்திலுள்ள கரும்புள்ளிகளை நீக்கி சருமத்தை பளபளப்பாக வைத்திருக்கும். இதிலுள்ள கிளைக்கோலிக் அமிலம் சருமத்தில் புதிய செல்களை உற்பத்தி செய்கிறது.



**ஸ்ரோபெரி - பிரௌன் சுகர் ஸ்கிரப்பின் பயன்கள் (strawberry - brown sugar face scrub)**

ஸ்ரோபெரி மற்றும் பிரவுன் சுகர் சேர்த்து தயார்செய்த இந்த ஸ்கிரப் சக்திவாய்ந்த அழற்சி எதிர்ப்புப் பண்புகள் மற்றும் ஆக்ஸிஜனேற்ற பண்புகளைக் கொண்டுள்ளது.

இவையிரண்டும் சருமத்தில் ஏற்படும் அழற்சி மற்றும் இன்பிளமேஷன்களால் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்க உதவும்.



**ஸ்டிராபெர்ரி - பிரௌன் சுகர் ஸ்கிரப்**

தேவையான பொருட்கள்

ஸ்ரோபெரி – 3–4

பிரௌன் சுகர் – 2 ஸ்பூன்

மஞ்சள் பொடி – அரை ஸ்பூன்

**செய்முறை**

ஸ்ரோபெரியை நன்கு சுத்தமாகக் கழுவி விட்டு அதன் காம்பு மற்றும் நடுவிலுள்ள தண்டையும் வெட்டி எடுத்துவிடுங்கள். இந்த ஸ்ரோபெரியை நன்கு மசித்துக் கொள்ளுங்கள்.

இதோடு பிரௌன் சுகரையும் மஞ்சளையும் சேர்த்து நன்கு மசித்துக்கொள்ளுங்கள். இப்போது சூப்பர் ஸ்டிராபெர்ரி பிரௌன் சுகர் ஸ்கிரப் ரெடி.

**பயன்படுத்தும் முறை**

ஸ்கிரப்பை பயன்படுத்துவதற்கு முன்பு நன்றாக க்ளின்சர் போட்டு முகத்தைக் கழுவிக்கொள்ளுங்கள்.

அதன்பின் இந்த ஸ்கிரப்பை முகத்தில் பூசி வட்ட வடிவில் நன்றாக விரல்களால் மென்மையாக மசாஜ் செய்து விடுங்கள்.

நன்கு மசாஜ் செய்த பின் பத்து நிமிடங்கள் அப்படியே விட்டு விட்டு பின்பு குளிர்ந்த நீர் கொண்டு முகத்தைக் கழுவிக் கொள்ளுங்கள். முதல் முறை பயன்படுத்தும் போதே நல்ல வித்தியாசம் தெரியும்.



# திட்டமிட்ட செலவுகளும் சிக்கன திருமணமும்...

திருமணத்துக்கான மொத்த செலவில் மண்டபம், ஆடை, நகை, சீர்வரிசை என பல விடயங்களில் பட்ஜெட்டை விடவும் சிக்கனமாக திருமணத்தை நடத்த உதவும் சில வழிகளைக் காணலாம். திருமணம் என்பது வாழ்க்கையின் முக்கிய தருணம் என்பதால் அதைச் சார்ந்த பல கனவுகள், எதிர்பார்ப்புகள் மணமக்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் இருக்கும்.

திருமணம் என்றதுமே முதலில் முடிவுசெய்ய வேண்டியது மண்டபம். இந்த விடயத்தில் சீசன் இல்லாத மாதங்களில் திருமணத்தை நடத்தலாம். திருமணத்துக்கு வருபவர்களின் எண்ணிக்கை இருநூறுக்கும் மேல் இருந்தால் திறந்தவெளி மைதானத்தை தெரிவுசெய்து மண்டப வாடகையில் 50 சதவீதம் வரை சேமிக்கலாம். மணமேடை முதல் மண்டபம் வரை அலங்கரிப்பது அவசியமாகிவிட்டது. அந்தச் செலவைக் குறைக்க சீசனுக்கு ஏற்ற மலர்களைப் பயன்படுத்தலாம்.







விலை குறையும். செயற்கை மலர்கள் கொண்டும் அலங்காரம் செய்தால் செலவு பாதியாகக் குறையும். திருமணம் என்றாலே ஆடைகள் விடயத்தில் பல ஆயிரம் ரூபா செலவழிப்பவர்கள் உள்ளனர். ஆடம்பரமாக எடுக்கும் உடைகளை மீண்டும் அணிய பலரும் விரும்புவதில்லை. முக்கிய நிகழ்வுகளுக்கு மட்டும் ஆடைகள் எடுத்துக்கொண்டு ஆடம்பரமான உடைகளை வாடகைக்குப் பெற்று அணிந்துகொண்டு செலவைக் கட்டுப்படுத் தலாம். உடைகளைப் போன்றே நகைகளும் வாடகைக்கு கிடைக் கின்றன. அணியும் உடைக்கேற்ப இந்த நகைகளை தெரிவுசெய்து அணிந்துகொள்ளலாம். இவற்றில் ஆடம்பரம் முதல் எளிமையான டிசைன்கள் வரை பல ரகங்கள் இருக்கின்றன.

இப்போது விழாக்களுக்கு அழைப்பு விடுக்க பல முறைகள் உள்ளன.

ஸ்மார்ட் போன் என்பதே வாழ்க்கை என்ற நிலையில், ஸ்மார்ட் போன் மூலம் அனைவருக்கும் அழைப்பு விடுக்கலாம். அழைப்பிதழ் தெரிவு, அச்சடிப்பு, தபால் செலவு என எதுவுமின்றி அழைக்கலாம். அதில் பல வடிவங்கள் வீடியோ ஆகியவை உள்ளன.

திருமணத்தில் பல உணவு வகைகளைப் பரிமாறி ஆடம்பரத்தைக் காட்ட நினைத்தால் பட்ஜெட் நிச்சயம் எகிறிவிடும். எத்தனை பேர் திருமணத்துக்கு வருவார்கள் என்பதை தோராயமாகக் கணக்கிட்டு சமைப்பதே போதுமானதாக இருக்கும்.

திருமண நிகழ்வில் அனைத்தையும் புகைப்படம் எடுக்காமல் முக்கிய நிகழ்வுகளை மட்டும் பதிவுசெய்யலாம்.

இதற்காக புது சிந்தனைகளுடன் பலரும் குறைந்த பட்ஜெட்டில் புகைப்படம், வீடியோ எடுக்கும் பணியில் இறங்கியுள்ளனர். இதன் மூலம் செலவைக் கட்டுப்படுத்தலாம்.




# திருமண பூங்கொத்துகள்



ஒரு பெண்ணின் திருமண நாளில் நகை, ஆடை போல் கையில் கொடுக்கும் பூச்செண்டும் மிக முக்கியமான ஒன்றாகும். அதை மணமகன் மற்றும் மணமகள் ஆடையுடன் தொடர்புடைய நிறத்தில்தான் தெரிவுசெய்கிறார்கள். ஆனால், இவை தவிர, பூச்செண்டை தெரிவுசெய்யும்போது பூச்செண்டுக்கான பூக்களை தெரிவுசெய்வது மிக அவசியம். அதேபோல் அந்தப் பூக்களின் பொருட்களையும் தெரிந்துகொண்டு தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அப்பிடியான பூக்களை எப்படி தெரிவுசெய்வதென பார்ப்போம்.

**சிவப்பு ரோஜாக்கள்:**

அன்பு, ஆர்வம், மயக்கம் மற்றும் வெற்றி. இவற்றையெல்லாம் சிவப்பு ரோஜாக்கள் நிறத்தில் கொண்டுவருகின்றன.

**வெள்ளை ரோஜா:**

இந்த விடயத்தில் தூய்மையும் அப்பாவித்தனமும் இருக்கும். வெள்ளை என்பது நிரந்தர மற்றும் நீடித்த நிறம். அதனால்தான் மணப்பெண்களும் இந்த சாயலைத் தெரிவுசெய்கிறார்கள்.

**இளஞ்சிவப்பு நிறத்தில் ரோஜாக்கள்:**

அவை அழகு, நேர்மறையான சிந்தனை மற்றும் மகிழ்ச்சி போன்றவை. எனவே, அவற்றை பூச்செடியில் சேர்க்கிறார்கள்

**மஞ்சள் ரோஜா:**

இதன் பொருள் நட்பு. நீங்கள் மூடநம்பிக்கை இல்லாவிட்டால், பூங்கொத்துகளில் இதுபோன்ற ஒரு நிறத்தையும் சேர்க்க முடியாது.

**ஆரஞ்சு ரோஜாக்கள்:**

எமது மகிழ்ச்சியையும் வெற்றியையும் வெளிப்படுத்தும் விதமாக இவை சேர்க்கப்படுகின்றன.

**நீல ரோஜா:**

அதைப் பார்ப்பது சற்று கடினம். ஆனால், இன்னும், அது அமைதியையும் நல்லிணக்கத்தையும் பிரதிபலிக்கும். அதேபோல் அமைதியையும் தரும்.

**லாவெண்டர்**

திருமண பூச்செண்டுக்கான மற்றொரு விருப்பம் லாவெண்டர் பூக்கள். அந்த பழமையான பாணி மற்றும் வெளிப்புற கருப்பொருள் திருமணங்களில் நிறைய காணப்படுகின்றன, ஆனால், நீங்கள் இந்த விருப்பங்களைத் தெரிவுசெய்யாவிட்டாலும் அவற்றைப் பயன்படுத்தலாம். அவர்கள்தான் அன்பை ஈர்த்தவர்கள் என்று பல ஆண்டுகளாக கருதப்பட்டது. ஒருவேளை, அழகுக்கு கூடுதலாக, அது வாசனையின் காரணமாக இருக்கலாம். பெண்ணியத்தின் அடையாளத்தையும் கொண்ட ஒரு சிறப்பியல்பு இந்த லாவெண்டர் பூக்களுக்கு உண்டு.

**மல்லிகை**

திருமண பூச்செண்டுக்கு மல்லிகை சேர்ப்பது அதிகம். அவை அதிகம் வாசனைக்காக சேர்க்கப்படுகின்றன.

**டுலிப்ஸின் பூச்செண்டு**

பல மணப்பெண்களால் விரும்பப்படும் ஒரு மலர் இருந்தால், அது டுலிப்ஸின் பூச்செண்டு ஆகும்.

**பியோனீஸ்**

பியோனிகளும் நமக்கு ஒரு வலிமையான பொருளைக் கொண்டுவருகின்றன. இந்த மலர்களை உங்கள் திருமண பூங்கொத்தில் கொண்டுசென்றால் அவை மகிழ்ச்சியான திருமணத்தைக் குறிக்கும், மற்றும் நல்ல அதிர்ஷ்டத்தை ஈர்க்கிறது. கூடுதலாக, தம்பதியினருக்குக் கொடுக்கும்போது அவை சரியானவை, ஏனென்றால், இது சிறந்த விருப்பங்களின் அதே நேரத்தில் அன்பின் அடையாளமாகும்.

இந்த மலர்களின் வகைகள் கிட்டத்தட்ட எண்ணற்றவை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். வடிவங்கள் மற்றும் வண்ணங்களில் இரண்டும் கொண்டவை.

**அல்லிகள்**

இது மிகவும் பொதுவான திருமண பூச்செண்டு பூக்களில் ஒன்றாகும். ஒருவேளை நாம் எப்போதும் பார்த்தவை வெள்ளை நிறத்தில். அல்லிகள் நுட்பமான மஞ்சள் நிறத்தில் உள்ளன. ஆனால், இளஞ்சிவப்பு, ஊதா மற்றும் ஆரஞ்சு நிறங்களும் உள்ளன. அவை நமக்கு பெண்மைத்தன்மையையும், அன்பு, தூய்மை மற்றும் மாற்றத்தையும் கொண்டுவருகின்றன ஒரு புதிய சிறந்த வாழ்க்கையை நோக்கி.















# திருமண வாழ்க்கையில் அதிகம் எதிர்பார்ப்பு கொண்ட ராசிகள்!

திருமணம் என்பது 1000 காலத்துப் பயிர் என்பார்கள். திருமணம் செய்யும் முன் ஆயிரம் முறை இந்தத் துணை நமக்கு ஒத்து வருவாரா என யோசிக்கலாம். ஆனால், திருமணம் செய்த பின்னர் இந்தத் துணை நமக்கானவர் அல்ல என ஒருபோதும் யோசிக்கக் கூடாது. அப்படி திருமணம் செய்வதற்கு முன், திருமணம் செய்துகொள்ள விரும்புபவரின் உறவில் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் நம்பிக்கைத்தன்மையை அதிகம் எதிர்பார்க்கக்கூடிய ராசியினர் யார் என்பதை பார்ப்போம்.

### திருமண எதிர்பார்ப்பு கொண்டராசிகள்

சிலர் திருமணம் செய்துகொண்டால் தனக்கான அர்ப்பணிப்பு (commitment) அதிகரித்துவிடும். அதனால் நாம் விரும்பியதுபோல் செயல்பட முடியாது என நினைக்கின்றனர். அப்படி யோசிப்பவர்கள் தங்கள் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என மிகவும் அதிகமாக சிந்திக்கத் தொடங்கி விடுகின்றனர். அப்படி சரியாக திருமண வாழ்க்கை அமையாதவர்கள் வாழ்க்கையில் சலிப்பூட்டும் அனுபவத்தைப் பெற்றுவிடுகின்றனர்.



ஆனால், சிலர் தனக்கென ஒரு இலட்சியம் வைத்திருப்பார்கள். அது திருமணத்துக்குப் பின் நிறைவேற்றும் ஆசையையும் வைத்திருப்பர். அவர்கள் பரஸ்பரம் தங்களின் துணையுடன் பேசி தன்னுடைய இலட்சியத்தை அடைய முற்படலாம்.

இருப்பினும், நல்ல இலட்சியத்தை அடைய ஒருவர் விரும்பலாம். ஆனால், தான் ஆடம்பரமாக இருக்கவேண்டும். எப்போதும் செலவுசெய்ய அதிக பணம் இருக்கவேண்டும் என்ற யோசனையில் இருப்பவர்கள், மற்றவர்களைப் பார்த்து ஏற்றத்தாழ்வான நிலையில் இருப்பதாக நினைத்து தங்களின் வாழ்க்கையைச் சுவை குன்ற வைக்கின்றனர்.

அப்படி திருமணத்திற்கு முன் உறவில் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் நம்பிக்கைத்தன்மையை அதிகம் எதிர்பார்க்கக்கூடிய ராசியினர் குறித்து இங்கு பார்ப்போம்.

### ரிஷபம்

ஒருவருடன் வாழ்க்கையில் பாதுகாப்பான உறவில் இருப்பது, தன் ஆசைக்கு தடை ஏற்பட்டுவிடக் கூடாது என ரிஷப ராசியினர் எப்போதும் எண்ணுவதுண்டு. எனவே, நிலையற்ற மற்றும் பயனற்ற உறவுகளில் தங்கள் நேரத்தை வீணாக்க விரும்பமாட்டார்கள். அவர்கள் செட்டிலாகக்கூடிய ஒரு திருமண உறவை எதிர்பார்ப்பார்கள்.

### கடகம்

கடக ராசியினர் தான் திருமணம் செய்துகொள்ளப்போகும் துணையுடன் நிரந்தரமான, நம்பிக்கையான வாழ்க்கையை விரும்புகிறார்கள். இவர்கள் டேட்டிங் கலாசாரத்தை நம்பாதவர்கள். திருமணம் என்பது பிடித்தால் சேர்ந்து இருக்கலாம் அல்லது பிரிந்துவிடலாம் என்ற மனநிலை அற்றவர்கள். அதனால் திருமண உறவு வலுப்பட திருமண வாழ்க்கையில் அர்ப்பணிப்பு மற்றும் பாதுகாப்புடைய, அன்பான துணையை தேர்ந்தெடுக்க விரும்புவார்கள்.

### துலாம்

துலாம் ராசியினர் திருமண உறவில் எந்த ஒரு விடயத்துக்கும் சமரசம் செய்துகொள்ள விரும்பாதவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் குடும்பப்பாங்கான, குடும்ப உறவினர் அல்லது தங்களின் குடும்பத்துக்கு ஏற்ற ஒருவரை திருமணம் செய்துகொள்ள விரும்புவார்கள்.

அதேசமயம் தன் தரம், தகுதிக்குக் குறைவான நபரை ஒருபோதும் விரும்பாதவராக அவருடன் சேர்ந்து வாழாதவராக இருக்கும் மனநிலையைக் கொண்டிருப்பர்.

### விருச்சிகம்

விருச்சிக ராசியினர் பொதுவாகவே அதிகமாகவே யோசிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். அதனால் யார் தனக்கு சரியான திருமண துணைவன் என்பதை தேர்ந்தெடுக்கச் சற்று அதிகநேரம் எடுத்துக் கொள்வார்கள். இவர்கள் திருமணம் செய்யவுள்ள நபர் எப்படி இருக்கவேண்டும் என்பதை தீர்மானித்து வைத்திருப்பார்கள்.

அந்த எண்ணத்துடன் மதிப்பிட்டு தன்னை திருமணம் செய்பவர்களைப் பொருத்திப் பார்ப்பர். அப்படி ஒரு நபர் கிடைத்துவிட்டால் எப்போதும் அவரை விட்டுக்கொடுக்காமல் சிறப்பாக வாழ்வர்.

### மகரம்

மகரத்தில் பிறந்தவர்கள் இலட்சியமும், இலக்கை நோக்கி ஓடுபவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் தங்களின் திருமணம் பாரம்பரியமானதாக இருக்க வேண்டு என விரும்புவர். அதேசமயம் காதலிலும் ஆர்வம் கொண்டவராக இருப்பர்.

இவர்கள் தன்னை தனித்துவமாகவும், தனியாக செயல்படவிடக்கூடிய நபர் வேண்டுமென விரும்புவார்கள். யார் இவரின் இலட்சியத்தையும், ஆசையையும் மதிக்கிறாரோ அவரை திருமணம் செய்துகொள்ள தயங்கமாட்டார்கள்.

# விருச்சிக ராசி பெண்களை திருமணம் செய்ய விரும்புவோருக்காக



ஒவ்வொரு ராசிக்கும் ஒரு தனி குணம் உண்டு. இது ஆண் மற்றும் பெண்களில் மாறுபடும். வெளித் தோற்றத்தில் பார்க்கும்போது பலருக்கும் பல குணங்கள் பற்றி தெரியாமல் இருக்கலாம். அப்படி விருச்சிக ராசி பெண்கள் பற்றி பலருக்கும் தெரியாத குணாதிசயங்கள் பற்றி இங்கு தெரிந்துகொள்ளலாம். குறிப்பாக, ஆண்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விருச்சிக ராசி பெண்களின் குணங்கள் சிலவற்றை இங்கே பார்க்கலாம்.

விருச்சிக ராசி பெண்கள், நடந்து முடிந்த எந்த விடயமாக இருந்தாலும் எதையும் அவ்வளவு சுலபத்தில் மறந்துவிட மாட்டார்கள். இவர்கள் யாருடைய உதவியையும் எதிர்பார்க்க மாட்டார்கள். அதேசமயம் தங்களின் தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் வல்லமை வாய்ந்தவர்கள். மிகவும் புத்திசாலிகளான இவர்கள், ஆண்களை வசீகரிப்பதிலும் தனித்துவம் வாய்ந்தவர்கள்.

விருச்சிக ராசியில் இருக்கும் பெண்கள் பலரை நீங்கள் சந்தித்து, பழகியிருக்கலாம். பொதுவாக விருச்சிக ராசி பெண்கள் பழகுவதற்கு அன்பாக, இனிமையாக, கலகலப்பாக பேசக்கூடியவர்களாக இருப்பார்கள். தாங்கள் காதலிக்கும் அல்லது அன்பு வைத்திருக்கும் ஆணுக்கும் மிகவும் உண்மையாக, அக்கறையாக இருக்கக்கூடியவர்கள்தான்.

ஆனால், பலருக்கும் தெரியாத சில மர்மமான குணங்களும் விருச்சிக ராசி பெண்களிடம் உள்ளன என்பதை பல ஆண்கள் அறிந்திருக்க மாட்டார்கள். பிடிவாதம், பழிவாங்கும் குணம், வெறித்தனமான எண்ணம், கொஞ்சம் ஆதிக்கம் செலுத்தும் குணமும் கொண்டவர்கள் இவர்கள்.



**விருச்சிக ராசி பெண்களிடம் மற்றவர்கள் அறியாமல் இருக்கும் 10 குணங்கள்**

**★ இதில் இவர்கள் கில்லாடிகள் :**

விருச்சிக ராசி பெண்களின் மனதில் என்ன உள்ளது என்பதை யாராலும் கண்டுபிடிக்கவே முடியாது. இவர்களை பற்றியதாக இருந்தாலும் சரி, மற்றவர்களை பற்றியதாக இருந்தாலும் சரி இரகசியங் களைக் கட்டிக் காப்பதில் இவர்கள் கில்லாடிகள். தங்கள் துணையிடம் கூட இந்த இரகசியங்களைப் பகிர்ந்துகொள்ள மாட்டார்கள். அப்படியே கேட்டாலும் தங்களின் தனியுரிமை என தங்கள் துணையிடம் கண்டிப்புடன் சொல்லிவிடுவார்கள்.

**★ இவற்றையெல்லாம் விட்டுத் தர மாட்டார்கள்:**

விருச்சிக ராசி பெண்கள் மிகவும் தைரியமான, அதேசமயம் வலிமையானவர்களும் கூட. மற்றவர்களுடன் உறவை ஏற்படுத்திக்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். ஆனால், தங்களின் துணை தனக்கு மட்டுமே உரியவர் என பாதுகாப்பு வைப்பதில் இவர்களை மிஞ்ச முடியாது. இதை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். இதுவே பல சமயங்களில் துணையுடன் மோதல் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துவிடும்.

**★ கடின உழைப்பாளிகள் :**

விடாமுயற்சிக்குப் பெயர்பெற்றவர்கள் விருச்சிக ராசி பெண்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அதேசமயம் தாங்கள் வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்புடனும், தன்னம்பிக்கையுடனும், எதற்கும் பயப்படாமல் கடினமாக உழைக்கக்கூடியவர்கள். தாங்கள் நினைத்ததை நிறைவேற்றிக்கொள்ள தொடர்ந்து முயற்சி செய்வது மட்டுமல்ல, அதற்காக அத்தனையும் கொடுக்கத் தயாராக இருப்பார்கள்.

**★ விசுவாசிகள் :**

விசுவாசத்தில் விருச்சிக ராசி பெண்களை அடித்துக்கொள்ள யாருமே கிடையாது. தங்கள் காதலருக்கு இவர் எப்படி உண்மையாக இருக்கிறாரோ அதேபோல் அவர்களும் இருக்கவேண்டும் என அதிகம் எதிர்பார்ப்பார்கள். எப்போதும் மற்றவர்களை சார்ந்தே இருப்பார்கள். ஒருவரின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிக முயற்சி செய்பவர். அப்படி யாராவது இவர்கள் மீது நம்பிக்கை வைத்து விட்டால் எப்பாடுபட்டாவது அந்த காரியத்தை செய்து முடிக்காமல் விட மாட்டார்கள்.

**★ இது இவர்களுக்குப் பிடிக்காது :**

விருச்சிக ராசி பெண்கள் கண்டிப்புடன், கட்டுப்பாடுடன் இருப்பார்கள். ஆனால், மற்றவர்கள் இவர்களைக் கட்டுப்படுத்த நினைத்தால் அது இவர்களுக்குப் பிடிக்காது. உறவுகள், நட்பு என யாராக இருந்தாலும் சரி இவர்கள் தங்களின் முக்கியத்துவத்தை பதிவுசெய்துகொண்டே இருப்பார்கள்.

**★ இது மட்டும் இவர்களிடம் நடக்காது :**

விருச்சிக ராசி பெண்கள் தலைசிறந்தவர்களாக இருப்பார்கள். நல்லொழுக்கம் இவர்களிடம் நிறைந்திருக்கும். தங்களுக்கான இடத்தை எப்போதும் இவர்கள் உருவாக்கிக்கொண்டே இருப்பார்கள். இவர்கள் தங்களுக்கென ஒரு கொள்கை வைத்து அதை பின்பற்றி வருவார்கள். இந்தக் கொள்கைகளை எதற்காகவும், யாருக்காகவும் சமரசம் செய்துகொள்ளவே மாட்டார்கள்.

**★ இவர்களை மிஞ்ச முடியாது :**

விருச்சிக ராசி பெண்கள் செவ்வாயின் ஆதிக்கம் பெற்றவர்கள் என்பதால் தீவிர காதல் கொண்டவர்கள். நாள் முழுவதும் சண்டை என்றாலும் கூட ரொமான்சில் இவர்களை மிஞ்ச ஆள் கிடையாது. அதேசமயம் தங்களின் ஆசைகளையும் எப்படி வெளிப்படுத்தி, காரியம் சாதிக்க வேண்டுமோ அப்படி சாதித்து விடுவார்கள். புதிது புதிதாக திறமைகளை வளர்த்துக்கொண்டே இருப்பார்கள்.

**★ காதிலேயே வாங்க மாட்டார்கள் :**

எப்போதும் ஏதாவது ஓர் இலட்சியத்துடன் இருக்கும் விருச்சிக ராசி பெண்கள், தாங்கள் நினைப்பதை சாதிக்கும் வல்லமை படைத்தவர்கள். அதை சாதிக்க எந்தத் தடையும் இருக்க விட மாட்டார்கள். எப்போதும் தங்களுக்கென ஒரு எல்லையை வகுத்துக்கொள்ள மாட்டார்கள். யதார்த்தமான ஆசைகள் இல்லை என யாராவது எடுத்துச்சொன்னால் கூட அதை காதிலேயே வாங்கிக்கொள்ள மாட்டார்கள். எதற்காகவாவது இவர்களை ஏற்றுக்கொள்ள அல்லது நம்ப வைக்க முயற்சி செய்தால் கூட அதை கேட்க மாட்டார்கள்.

**★ பொறாமை குணம் அதிகம் :**

இவர்கள் ஏற்றுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும் விருச்சிக ராசி பெண்களுக்கு பொறாமைகுணம் அதிகம். அது பல சமயங்களில் மிக கடுமையாகக்கூட இருக்கும். ஆனால், தாங்கள் பொறாமைப்படுவதை வெளியில் காட்டிக்கொள்ளவே மாட்டார்கள். தங்கள் துணைக்கு உண்மையாக இருப்பதால் இந்தப் பொறாமை குணம் அவர்கள் துணை அறிந்திருக்க மாட்டார்கள்.

**★ நேரம் பார்த்து காரியம் சாதிப்பவர்கள் :**

ஊர் சுற்றும் குணம் விருச்சிக ராசி பெண்களுக்கு இயல்பாகவே இருக்கும். இருந்தாலும் தங்கள் துணையின் எண்ண ஓட்டத்தை சரியாக கணித்து, சரியான நேரம் பார்த்து தங்கள் விருப்பங்களை தைரியாக சொல்லி காரியத்தை சாதித்துக் கொள்வார்கள். தங்கள் துணை தங்களுடன் அதிக நேரம் செலவிட வேண்டும் என நினைப்பார்கள்.

தங்கள் துணையை எப்போதும் சீண்டிப் பார்த்து, கிண்டல் செய்து, நீங்கள் எந்தளவுக்கு அவர்களை நேசிக்கிறீர்கள் என்பதை தெரிந்துகொள்ள விரும்புவார்கள். அதேசமயம் விருச்சிக ராசி பெண்களை சரியான முறையில் கையாண்டால் இவர்களை உலகின் தலைசிறந்தவர்களாக மாற்றலாம்.



# நெற்றியில் குங்குமம் இடும் பெண்கள்

சுமங்கலிப் பெண்களின் தலைவகிட்டின் நுனியை சீமந்த பிரதேசம் என்பார்கள். அம்பிகையின் வகிட்டிலுள்ள குங்குமம் பக்தர்களுக்கு நன்மையைக் கொடுக்கும். சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம் ஸ்ரீ மகாலட்சுமியின் இருப்பிடம். சுமங்கலிகளின் சக்தி குங்குமத்தில் உள்ளது. வீட்டுக்கு வரும் சுமங்கலிகளுக்கு குங்குமம் கொடுப்பது, தருபவர் பெறுபவர் இருவருக்கும் மாங்கல்யத்தின் பலத்தைப் பெருக்கும்.

குங்குமம் ஆரோக்கியமான நினைவுகளை தோற்றுவிக்கும். குங்குமம் அணிந்த எவரையும் வசியம் செய்வது கடினம். பெண்கள் குங்குமத்தை தான் இட்டுக்கொண்ட பிறகே மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

தெய்வீகத்தன்மை, சுபதன்மை, மருத்துவத்தன்மை உள்ள குங்குமம் அணிவதால் முகம், உடல், மனம் ஆகியவைகளுக்கு அதிக நன்மைகள் உண்டாகும். திருமணமான பெண்கள் நெற்றி நடுவிலும் வகிட்டின் தொடக்கத்திலும் குங்குமம் அணிவது சிறப்பு.

ஆண்கள் இரு புருவங்களையும் இணைத்தாற்போல் குங்குமம் அணிவது தன்னம்பிக்கையை அதிகரிக்கும். கட்டைவிரலால் குங்குமம் இட்டுக்கொள்வது மிகுந்த துணிவைக் கொடுக்கும்.

குரு விரலால் (ஆள்காட்டி விரல்) குங்குமம் அணிவது முன்னணித்தன்மை, நிர்வாகம், ஆளுமை போன்றவற்றை ஊக்குவிக்கும்.

சனிவிரல் (நடுவிரல்) குங்குமம் இட்டுக்கொள்வது நீண்ட ஆயுளைக் கொடுக்கும். குங்குமம் அணிவது தெய்வீக தன்மை, உடல் குளிர்ச்சி மற்றும் சுயக் கட்டுபாட்டுக்கு நல்லது

புருவ மத்தியில், மூளையின் முன்புறம் பைனீயல் கிளாண்ட் என்னும் சுரப்பி உள்ளது. யோக சாஸ்திரத்தில் இதனை "ஆக்ஞா சக்கரம்' என்பர். இதனைக் குளிர்ச்சிப்படுத்தவே விபூதி, சந்தனம், குங்குமம் இடுகிறோம்.

நெற்றியில் இடும் பொட்டை 'நெற்றித்திலகம்' என்பர். 'திலம்' என்றால் 'எள்'. அளவில் சிறிதான எள்ளைப்போல் இட்டுக்கொள்வதால் 'திலகம்' என்று பெயர் வந்தது.

அக்காலத்தில், அரசர்கள் சந்தனம், ஜவ்வாது போன்ற வாசனைத் திரவியங்களாலான சாந்தை நெற்றியில் வரைந்துகொள்வர். இதற்கு 'திலக தாரணம்' என்று பெயர்.

பூக்கள், பாம்பு, திரிசூலம் போன்ற வடிவங்கள் இதில் இடம்பெறும். தாமரைமலர் வடிவம் இதில் சிறப்பானது.

இத்தனை சிறப்புவாய்ந்த குங்குமத்தை இட்டுக்கொள்ளாமல் ஸ்ரிக்கர் பொட்டுக்கு இன்றைய பெண்கள் மாறியது வேதனையே!

கொழும்பை வதிவிடமாகக்கொண்ட 1991இல் பிறந்த, உயரம் 5'3'' procurement manager ஆக பணிபுரியும் இந்து (வேளாளர்) மணமகளுக்கு படித்த மணமகன் தேவை. தொடர்புக்கு 077-2222325

இந்து முக்குலம் அரச துறையில் பணியாற்றும் இவருக்கு வயது 33. திருமணமாகி ஒரு நாளில் ஒருசில காரணங்களால் விவாகரத்துக்குள்ளான இவருக்கு தகுந்த நல்லொழுக்கமுள்ள அரசதுறை அல்லது தொழில்செய்யும் மணமகள் தேவை. மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். 077 3022758/072 6328336

இந்து நாயுடு இந்திய வம்சாவளி. வயது 23. அழகிய சிவந்த நிறமுடையவர். இவருக்கு பதிவுத் திருமணம் மட்டும் ஆகி ஒரு வாரத்தில் சில காரணங்களால் விவாகரத்தானவர். நல்லொழுக்கமுள்ள 30 வயதுக்குள் நல்ல மணமகளை ஐரோப்பிய நாடுகளில் எதிர்பார்க்கிறோம். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். 077 3022758 / Whatsapp 072 6328336.

மாத்தளை, 1992இல் பிறந்த தனியார் துறையில் சுப்பர்வைசர் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. சாதி மதம் தடை இல்லை, சீதனம் தேவை இல்லை. தொடர்பு 0765424575.

யாழ். இந்து வேளாளர் 1993, பூரட்டாதி, Doctor, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை. டச்சுவீதி, சாவகச்சேரி. 021 4923738, 077 4380900. Realmatrimony.com.

RC கணக்காளராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். உயரம் 5'4'' (வேறு மதத்தவரும் விரும்பத்தக்கது) வயது 35. 076 6612325.

புலோலி, இந்து வேளாளர், 1995 மகம் கல்வியியல் கல்லூரி ஆசிரியர், 5'6'', B.A படித்துக்கொண்டிருக்கும் 7இல் செவ்வாய், பா.கிரகம் 521/4 மணமகனுக்கு பட்டதாரி ஆசிரியர், கல்வியியல் கல்லூரி ஆசிரியர், பட்டதாரி உத்தியோகத்தர் மணமகளை எதிர்பார்க்கின்றோம். T.P:076 2674603, 0212261374

யாழ். கிறிஸ்தவம் (RC) வேளாளர் 1978இல் பிறந்த, சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. தொடர்புக்கு 076 3547191

யாழ். இந்து வேளாளர் 1988 அத்தம் 1இல் செவ்வாய் 38 பாவம் Auditor, 1989 உத்தரம் 12இல் செவ்வாய் 44 பாவம் சிங்கப்பூர் இஞ்ஜினியர், 1987 அத்தம் அவுஸ்திரேலியா PR, 1990 ரேவதி 8இல் செவ்வாய் சுவீடன் PR, 1991 அஸ்வினி சிங்கப்பூர் இஞ்ஜினியர், 1990 அவிட்டம் 8இல் செவ்வாய் நியூசிலாந்து இஞ்ஜினியர் தகுந்த மணமகள்மார் தேவை. தொடர்பு: 0770783832, 0779649245

இந்து வேளாளர் 1995இல் பிறந்த பூராடம் 3ஆம் பாதம் குற்றங்களற்ற இலங்கையில் கல்வி கற்று அவுஸ்திரேலியாவில் பொறியியலாளராக கடமையாற்றும் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற மணமகளுக்கு மருத்துவம் அல்லது பொறியியல்துறை சார்ந்த மணமகனை எதிர்பார்க்கின்றோம். whatsapp number +61493097250

இந்து சைவ வேளாளர், 1992.11.14, திருவாதிரை, மிதுனம், Brand Manager, B.B.A. (Kelaniya), C.I.M.A. M.B.A. (PIM), 56", பொது நிறம். மணமகன் தேவை. தொடர்புக்கு 0776562550/0770356527

நீர்கொழும்பை வதிவிடமாகக்கொண்ட, உயரம் 55", 42 வயது, திருமணம் செய்து 30 நாளில் விவாகரத்தான Training Manager மணமகனுக்கு NRC (bible) நல்லொழுக்க முள்ள மணப்பெண் தேவை. தொடர்புக்கு: 0771416590


**உங்கள் வரன்தேடும் விளம்பரங்களை இலவசமாக பிரசுரித்துக்கொள்ள**

**076 1393805**

**Whatsapp இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்**

# இந்த மந்திரத்தை மனதார சொல்லி வந்தால் விரைவில் திருமணம் நடக்கும்

“பொன் கிடைத்தாலும், புதன் கிடைக்காது” என்பது பழமொழி. அதாவது தங்கம், பணம் இவை கிடைத்தாலும் புதன்கிழமையில் சுப முகூர்த்தம் கிடைக்காது என்பதுதான் இதன் பொருளாகும்.

ஆனால், இப்போது பொன் மற்றும் புதன் இவை இரண்டுமே எளிதாகக் கிடைத்துவிட்டாலும் திருமணத்துக்காக மணப்பெண் கிடைப்பதுதான் அரிதாக இருக்கிறது. சில ஆண்களுக்கு திருமணத்துக்காக பெண் தேடினாலும் அவர்களுக்கான வரன் சரியாக அமையாமல் திருமணம் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கும்.

இவ்வாறு திருமணத் தடை இருக்கும் ஆண்கள் இந்த மந்திரத்தை உச்சரித்து வர அவர்களுக்கு இருக்கும் திருமணத் தடை நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும்.

அவ்வாறான மந்திரம் என்ன என்பதையும், அதற்கான பலன் என்ன என்பதையும் தெரிந்துகொள்வோம்.

திருமணத்துக்காக பெண் பார்க்கும்போது அந்தப் பெண் வீட்டார் அதிகம் எதிர்பார்ப்பது மணமகன் நல்ல தொழிலிலும், நல்ல குணத்துடனும் இருக்கவேண்டும் என்பதுதான்.

சில ஆண்களுக்கு இவை இரண்டும் இருந்தாலும் மணப்பெண் அமைவதில் சிக்கல்களும், திருமணம் தள்ளிப்போவதும் வழக்கமாக இருக்கிறது.

இதற்குக் காரணம், அவர்களின் ஜாதகத்தில் இருக்கும் கிரகங்களின் அமைப்பும் அவர்களுக்கு இருக்கும் தோஷமும்தான் காரணமாக இருக்கும்.

இதனை சரிசெய்ய எளிய பரிகாரங்கள் செய்வதுடன், சில கோவில்களுக்கும் சென்று வந்தால் இவ்வாறான திருமணத் தடைகள் நீங்கி விரைவில் மணப்பெண் கிடைத்து திருமணம் நடைபெறும்.

***விதேஹி தேவி கல்யாணம்***
***விதேஹி விபுலாம் ச்ரியம் ரூபம் தேஹி***
***ஜயம் தேஹி யசோ தேஹி திவ்ஷா***
***ஜஷி பத்னீம் மனோரமாம் தேஹி***
***மனோவ்ருத்தனு சாரீரம்***
***தாரீனிம் துர்கஸம்சார ஸாரசய***
***குலோத்பவாம் விதேஹி தேவி கல்யாணம்***
***விதேஹி விபுலாம் ச்ரியம் ரூபம் தேஹி***
***ஜயம் தேஹி யசோ தேஹி த்வ்ஷா ஜஷி***

தினமும் காலை அல்லது மாலைவேளையில் பூஜை அறையில் சாமி படத்திற்கு முன் அமர்ந்து உங்களுக்கு விருப்பமான தெய்வத்தை அல்லது உங்கள் குலதெய்வத்தை மனதில் நினைத்துக்கொண்டு இந்த மந்திரத்தை மனதார உச்சரிக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து நாற்பத்தியெட்டு நாட்கள் மனதார சொல்லி வந்தால் திருமணத் தடை நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும்.

தேவ தோஷம், பித்ரு தோஷம், ஷர்ப்ப தோஷம், திருஷ்டி தோஷம், அபிஷார தோஷம், பிரேத சாபம் இவ்வாறான ஆறுவகை தோஷங்களினால் தான் திருமணத் தடை உண்டாகிறது.

மனதார விரதமிருந்து கல்யாண சுந்தரேஸ்வரரை வணங்கி வந்தால் இந்த ஆறு தோஷங்களும் நீங்கி உங்களுக்கு உடனே திருமணம் நடைபெறும்.

திருமணத்துக்கு மணப்பெண் கிடைக்காத ஆண்கள், ஏழைப் பெண்ணுக்கு உணவு, தங்களால் இயன்ற புத்தாடையை தானமாக வழங்கினால் திருமணத் தடை நீங்கி, மணப்பெண் உடனே கிடைத்திடுவார்.


திருமண தேடல் விளம்பரங்களை
**இலவசமாக** பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!



“உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை நாம் உங்களுக்குத் தருகிறோம்.”

தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

**உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.**

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

thamilaneditor@gmail.com

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.



**Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07**

# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 3 இதழ் : 03 - 16.07.2023


ஈழத்தின் மூத்த
படைப்பாளுமை
ஞானசேகரன்

வாசிக்கப்பட வேண்டிய
'ஓட்டிச உலகில் நானும்'
– தன் வரலாறு நூல்

வெள்ளிவிழாவைக்
கொண்டாடும்
'நிருத்திய நர்த்தனாலயம்'



තමිල් මුරසු
Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0114 846 097

# சமகால புலம்பெயர் தமிழ் இலக்கியம்

தமிழ் இலக்கிய சூழலைப் பொறுத்தவரை இந்தியாவிலிருந்து தொழில் நிமித்தமாக வலிந்து அழைத்துச்செல்லப்பட்ட இலங்கை, மலேசிய, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளில் தோன்றி இருக்கக்கூடிய இலக்கியங்களை முதன்மை புலம்பெயர் தமிழ் இலக்கியமாகக் கொள்ளலாம்.

அந்தவகையில் இலங்கை நிலையில் நின்று நோக்குகையில், தென் இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி அழைத்துவரப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் மத்தியில் உருவெடுத்ததுதான் புலம்பெயர் தமிழ் இலக்கியமாக அமைதல் வேண்டும். ஆனாலும் அது அவ்வாறின்றி மலையகத் தமிழ் இலக்கியமாகத் தன்னை அடையாளப்படுத்தி வளர்த்துக்கொண்ட நிலையில், இலங்கையிலிருந்து பிற தேசங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றவர்கள் வளர்த்தெடுத்த தமிழ் இலக்கிய வகை புலம்பெயர் இலக்கியம் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

அப்படிப் பார்த்தாலும் கூட இலங்கையிலிருந்து மலையகத் தமிழர்கள் இந்தியாவுக்கு கட்டாயத்தின்பேரில் திரும்பவும் அனுப்பப்பட்ட மலையக மக்களிடத்தில் தமிழகத்தில் உருவான தாயகம் திரும்பியோர் எனும் வகுதியினரிடையே எழுந்த இலக்கியத்தையும் புலம்பெயர் இலக்கியமாகவே கொள்ள முடியும். ஆனாலும் அத்தகைய இலக்கியங்கள் மலையகத் தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியாக மாத்திரமே தன்னை அடையாளங்காட்டிக்கொண்டன அல்லது அடையாளப்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில், இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்த காலத்துக்கும் மேலான உள்நாட்டுப் போரின் காரணமாக இடப்பெயர்வுகளும் புலப்பெயர்வுகளும் தொடர்ச்சியாக நிகழத்தொடங்கின.

இதனோடு கூடவே கலை, இலக்கியங்களும் மக்களுடன் கூடவே இடம்பெயரத் தொடங்கின. அவ்வாறு மேற்குலக, அவுஸ்திரேலிய நாடுகள் நாடுகள் நோக்கிய புலம்பெயர்ந்த மக்களால் படைக்கப்படும் கலை இலக்கியப் படைப்புகள்தாம் சமகால புலம்பெயர் தமிழ் இலக்கியம் என இன்று பரவலான ஒரு புரிதல் ஏற்படுட்டுள்ளது.

இவர்களுக்கு மேலதிகமாக இலங்கையிலிருந்து இந்தியா நோக்கி அகதிகளாக சென்ற மக்கள் தமிழ்நாட்டில் ஆங்காங்கே மறுவாழ்வு முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மத்தியிலிருந்து எழும் இலக்கிய படைப்புகளும் கூட புலம்பெயர் தமிழ் இலக்கியங்கள்தாம். ஆனாலும் இவற்றுக்கும் சமகால புலம் தமிழ் இலக்கியத்தில் இடம் கிட்டாததால், அவர்கள் தமது இலக்கியப் படைப்புகளை அகதி இலக்கியம் என அண்மைக்காலமாக அடையாளப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

தாயகமான இலங்கையிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் பல்வேறு மொழி பேசும் நாடுகளில் வாழ்ந்தாலும் அங்கு சென்று சேர்ந்த மக்கள் தமது தாயகமான இலங்கை குறித்த சமூக, பண்பாட்டு கூறுகளை மனதில் நிறுத்தியவாறே தமிழ்மொழியில் தமது கலை, இலக்கியப் படைப்புகளை ஆற்றி வருவதும் அதனைத் தியாகத்துடன் தொடர்ச்சியாக பகிர்ந்துகொள்வதும் சிறப்பாகும்.

அந்தவகையில் அண்மைய காலங்களில் தொடர்ச்சியாக புலம்பெயர் இலக்கிய கர்த்தாக்கள் இலங்கையில் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதும் நூல்களை வெளியிடுவதுமான தொடர் நிகழ்வுகள் நடந்தேறி வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

நாடக அரங்க ஆளுமைகளான பாலேந்திரா தம்பதியர், கோவிலூர் செல்வராஜன், சரவணன், முருகபூபதி என வரிசையாக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் சந்திப்புகள் இடம்பெற்று வருகின்றன

புலம்பெயர்ந்து சென்றுவிட்டாலும் நூல்களாகவும் உரைகளாகவும், தாயகம் நோக்கி வரும் அனுபவப் பகிர்வுகளை 'தமிழ்முரசு' வாழ்த்தி வரவேற்கிறது.

# நதிகளின் தேசிய கீதம் கவிதை நூலிலிருந்து

**நதிகளின் தேசிய கீதம் கவிதை நூலில் எனக்குப் பிடித்த கவிதைகள் என கவிதாயினி மயிலிறகு மனசு ஷபானா அஸீமின் பார்வையில்..**

கவிதாயினி மஷூறா சுஹூர்தீன் எழுதிய 'நதிகளின் தேசிய கீதம் கவிதை நூலில் எனக்குப் பிடித்த கவிதைகள்' என்ற தலைப்பில், மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டத்தால் நடத்தப்பட்ட நிகழ்வில் கவிதாயினி மயிலிறகு மனசு ஷபானா அஸீம் ஆற்றிய உரையின் முக்கிய பகுதி.



நதிகளின் தேசிய கீதம் நூலை நான் வாசித்து முடித்தபோது எனக்கு நினைவில் வந்த பாடல் வரிகள் சித்தி சின்னத்திரை நாடகத்தில் இடம்பெற்ற எல்லோருக்கும் பரீட்சயமான பாடல் வரிகள் உங்களுக்கும் நினைவிருக்குமென்று நினைக்கிறேன். அது ''கண்ணின் மணி கண்ணின் மணி நிஜம் கேளம்மா. கங்கை நதி வைகை நதி பெண் தானம்மா. மலை நதி என்பது முள்ளில் கல்லில் மோதி வரும். பெண் நதி என்பது துன்பம் தாண்டி வரும். தியாகத்தில் ஒரு தரை சேவையில், மறுதரை பெண் நதி நடுவில் பாடிவரும்'' எனும் பாடல் வரிகளாகும் ரசிக்கவும் சிந்திக்கவைக்கவும் கூடியதான வரிகள் இவை. இப்பாடலில் உள்ளதுபோலவே நதிகளின் தேசிய கீதமும் பெண்ணை நதியாக தருவித்திருக்கிறது.




அதற்குச் சான்றாக நதிகளின் தேசிய கீதத்தில் இடம்பெற்றிருக்கும் இரண்டு கவிதைகளை முன்நிறுத்துகிறேன்

**முதலாவது கவிதை:- நான் எனும் நதி**

பாய்ந்து குதித்து தாண்டி சுரந்தோடி வந்து சலனமற்று ஓடுகிறதிந்த பெண் நதி கல்லும் மலையும் குதித்து காடும் செடியும் கடந்து உருட்டிப் புரட்டி ஊத்தைகளைக் கழுவி புனிதமாக்கி சலனமற்றுப் பிரவாகிக்கிறது..

**இரண்டாவது கவிதை:- நீரின் பாடல்கள்**

உலக இயக்கத்தில் உந்துசக்தியான நீரும் சங்கீத வித்துவான்தான். நீரோடையாய் சலசலத்து ஓடும் ஒரு நீலாம்பரியாய் மலைகளில் இருந்து சில்லென்று கீழ் விழும்போது கல்யாணி கடலாகி கொந்தளிக்கும்போதெல்லாம் பாடுகிறது அடாணா ஆணலையும் பெண்ணலையுமாகி கடலில் ஜலக்கிரீடை செய்யும் காதல் கீதமாய் வானம் பொழிந்து பூமி தடுமாறுகிறபோது முஹாரி ராகங்களோடு கடந்து செல்லுகிறது பிரளயமாய்.

**அடுத்த கவிதை:- யதார்த்தவாதி**

யதார்த்தவாதி என்னும் தலைப்பில் அமைந்த கவிதையானது யாரிடமும் எதற்காகவும் தன்சுயங்களை இழந்து மண்டியிடாமல் நீ நீயாகவே இரு என்பதாகும். அப்படி இருக்கும்போது உனக்கு நண்பர்களை விட பகைவர்கள் அதிகமாகலாம் பரவாயில்லை.

**அடுத்த கவிதை எஞ்சி இருக்கும் தீர்ப்புக்கள்**

எஞ்சி இருக்கும் தீர்ப்புக்கள் கவிதையில் கவிஞர் பெண்கள் தன்னை அலங்கரித்துக்கொண்டும் நளினம் காட்டிக்கொண்டும் ஒரு காட்சிப்பொருளாகவே தன்னுடலை வைத்துக்கொண்டிராமல் தன்னை ஆபத்தின்போது பாதுகாத்துக்கொள்ள தன் உடலையே கேடயமாக - ஆயுதமாக மாற்றி தயாராக வைத்திருக்குமாறு ஆலோசனை சொல்கிறார்.

**அடுத்த கவிதை ஆயுள் கைதி**

சிறுதேனும் அவளிடம் அழகு என்பது இல்லை. புன்னகைத்தால் குழி விழும் கன்னங்கள். பூவாய் விரியும் இதழ்கள். அவள் சீறும் போதும் படம் எடுக்கும் போதும் கொத்தப்படுவது அவன் தான். கண்டபடி அலையும் கெண்டை விழியுடையாள் அவளுக்கிருப்பது நாக்கு அல்ல, அவனுக்கான சாட்டை. பிறை நுதல் குமிழ்நாசி சுருள் கேசம் அழகேயில்லாதவள் அகங்காரமே கிரீடமாயானவள்... போன்ற பல கவிதைகளை குறிப்பிடலாம்.

'இவருடைய மனிதன் எனும் ஈனன்' எனும் தலைப்பிலான கவிதை ஒவ்வொரு தனி மனிதனின் சுயகௌரவத்தைப் பாதுகாத்திட முனைகிறது.

நான் இப்போது உங்களோடு பகிர்ந்து கொண்ட இக் கவிதைகள் மட்டும்தான் இத்தொகுதியில் நல்ல கவிதைகள் என்றில்லை எனக்கு கிடைத்த அவகாசத்திற்கு என்னால் ஒப்புவிக்க முடிந்தவைகளே இவை.

மூத்த கவிதாயினி சகோதரி மஷூறாவின் கவிதைகள் ஆழமான கருத்துகளைக் கொண்டவை. இவரது இலக்கியப் பணி மேலும் சிறக்க எனது வாழ்த்துகள்.

**கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்**




கால்நடை மருத்துவர் கிருபானந்த குமரேசன் எழுதிய 'காட்டுப்பன்றி புராணம்' நூல் வெளியீட்டு விழா பொறியியலாளர் கு.அனுஜன் தலைமையில் கடந்தவாரம் வவுனியா சுத்தான்ந்த இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. வைத்தியர் செ.மதுரகன் வெளியீட்டுரையையும், பேராசிரியர் த.மங்களேஸ்வரன் வாழ்த்துரையையும், கலாநிதி எஸ்.விஜயமோகன் நூல் ஆய்வுரையையும், மூத்த ஊடகவியலாளர் இ.பாரதி வாழ்த்துரையையும் நிகழ்த்தினார்கள்.

# இடர்கால இலக்கியங்கள்

## வாசிக்கப்படவேண்டிய
## 'ஓட்டிச உலகில் நானும்' - தன் வரலாறு நூல்

தனியே தீரனியப் பிள்ளைகளைக்கொண்டுள்ள குடும்பங்கள் மட்டுமல்ல, அனைத்துச் சமூகத் தவராலும் வாசிக்கப்பட வேண்டிய புத்தகம் 'ஓட்டிச உலகில் நானும்' .

தீரனியப் பிள்ளைகள் சார்ந்த குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் வாழ்வியல் பிரச்சினைகள் என்று அவர்கள் சார்ந்த பலவற்றைப் பிறரும் தெரிந்துகொண்டால் மட்டுமே தீரனியர் களை இயல்புக்குக் கொண்டுவரலாம் என்பது எனது நம்பிக்கை. தீரனியர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஊடாடும் சமூகத்தின் பொறுப்பு பெரியதென்பது எனது கருத்து. அவர்களுக்கும் அவர்கள் சார்ந்த குடும்ப அங்கத்தவர்களுக்கும் நம்பிக்கையூட்டுவதாகவும் அவர்களை வலுப் படுத்துவதாகவும் இச்சமூகம் இருக்கவேண்டு மெனில் முதலில் அவர்கள் பற்றி சமூகம் பூரணமான புரிதலோடு இருக்க வேண்டும். அதற்கு எழுத்தாளர் மைதிலி றெஜினோல்ட் எழுதிய 'ஓட்டிச உலகில் நானும்' என்ற இப்புத்தகம் வழிகாட்டுகின்றது. இது ஒரு தன் வரலாறாக எழுதப்பட்ட நூல். எழுத்தாளர் மைதிலி தனது அனுபங்களைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அதனை நேர்த்தியாக இந்நூலில் பதிவு செய்திருக்கிறார். அவரின் சமூக நோக்கு பாராட்டத்தக்கது.

தீரனியர்களைக்கொண்ட குடும்பங்களுடனான உறவு எனக்கு அவர்கள் பற்றி ஆரம்ப அறிவைத் தந்திருந்தாலும் கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் செயற்பாடுகளே அவர்கள் பற்றி மேலதிகமாக அறிய உதவின. ஒரு தீரனியரால் ஒலிம்பிக் வரை சென்று சாதிக்கலாம் என்பதை அவர்களே சமூகத்துக்கு உணர்த்தியவர்கள். அவர்களை ஓர் ஒழுக்கநெறிக்குட்படுத்துவதற்காக அங்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகள் பெறுமதி வாய்ந்தவைகளாக இருக்கக் கண்டேன். தொடரும் பயற்சிகளுக்கூடாக அவர்களை நன்நெறிப்படுத் தலாம் என்றதனை அண்மையில் அங்கு நடைபெற்ற ஆண்டு விழாவில் இடம்பெற்ற அவர்கள் தொடர்பான கலை நிகழ்வுகளுக்கூடாகக் கண்டுகொண்டேன்.

அதனை மேலும் வலுப்படுத்துவதாக எழுத்தாளர் மைதிலியின் நூல் பதிவுகள் இருப்பதைக் காண முடிகிறது. அந்நூல் 412 பக்கங்களைக்கொண்டு வெளிவந்திருக்கிறது. அதில் 411ஆவது பக்கத்தில் மைதிலியின் வேண்டுகோள் ஒன்று இவ்வாறாக அமைந் திருக்கிறது.

"அன்புள்ள பெற்றோர் களுக்கு ஒரு வேண்டுகோள்!

யாரையும் பாதிக்காத எந்தவொரு விடயமாயினும், உங்கள் மகிழ்ச்சிக்கு உதவினால் தயங்காமல் செய்யுங்கள். எப்போதும் மகிழ்ந்திருங்கள். ஏனெனில், உங்கள் மகிழ்ச்சி அதிர்வுகள்தான் பிள்ளையிலும் மெதுமெதுவாக அதிர ஆரம்பிக்கும்."




தீரனியர்களைப் பொறுத்த வரை அவர்கள் ஒரு மகிழ்ச்சிகரமான சூழலில் வாழவேண்டியவர்கள் அல்லது வளர்க்கப்பட வேண்டிவர்கள் என்பதை மேற்படி பதிவினூடாக மைதிலி வலியுறுத்தியிருக்கிறார். அது பெற்றோர்களுக்கான வேண்டுகோளாக இருந்தாலும் பொதுவாக சமூகத்துக்கு விடப்பட்ட வேண்டுகோளாகவும் அமைந்திருப்பதை அறிய முடிகிறது. மகிழ்ச்சிக்கு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமை இருக்கிறதென்பது பலரால் உணரப்பட்டதொன்று.

பிறக்கும் பிள்ளைகளில் சாதாரணமான, அசா தாரணமான பிள்ளைகளை இனங்காண அவர்கள் கடந்துவரும் வளர்ச்சிப் படிக்கட்டுகள் உதவியாக அமையும். ஓட்டிசம் எனப்படும் மூளைவிருத்தி நிலைக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட பிள்ளை களை புறத்தோற்றத்தால் இனங்காண முடியாது. பிள்ளைகளின் நடத்தைகள், செயற்பாடுகள், தொடர் பாடல், சமூக நடத்தைகள், புலன் சார்ந்த செயற் பாடுகள் என ஒரு தொடரான விருத்திப் படிக்கட் டுகளில் ஏற்படும் தடைகள் அல்லது தாமதங்களைக் கொண்டு இனங்காணக் குறைந்தது முழுமையாக இரண்டு ஆண்டுகளாவது தேவைப்படும்.

மகவைப் பெற்ற தாய் தன் பிள்ளை குறித்த கவலையை முதல் மூன்று மாதங்களுள் வெளிக்கொணர்வார். நாடுகடந்து சுவிட்சர்லாந்தில் வாழும் திருமதி மைதிலி றெஜினோல்ட் தனது தீரனிய தனயனின் தாய் என்ற வகிபாகத்தில் சொந்த அனுபவங்களைக் கைப்பட எழுதி "ஓட்டிச உலகில் நானும்" என்னும் தமிழ் மொழியில் வரவுள்ள நூலுக்கு உரை வரைவதில் நிறைவடைகிறேன் - என்று இந்நூலுக்குத் தான் எழுதிய முன்னுரையில் மட்டக்களப்பு தீரனியம் பாடசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பா.ஆ.டி ரமேஷ் ஜெயக்குமார் குறிப்பிட்டிருக்கிறார்.

தன் மகனின் ஒவ்வொரு வளர்ச்சிப் படிநிலையிலும் தாயாக அவர் எதிர்நோக்கிய பின்னடைவுகளையும் சவால்களையும் வெற்றிகளையும் தெளிவான இலகுநடையில் எழுதியுள்ளார். ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் தன் வாழ்க்கையில் உறைந்து நின்ற இடங்களையும் நிலைகுலைந்து போன தருணங்களையும் கண்முன்னே நிறுத்தி தம்மை ஆராய்ந்து உணர்ந்து கொள்வதற்காக தத்ரூபமாக எடுத்தியம்பியமை இப் புத்தகத்துக்குக் கிடைக்கப்போகும் புகழைப் பறைசாற்றி நிற்கின்றது.

இப் புத்தகத்தின் வருகை சமுதாயத்துக்குக் கிடைத்த ஓட்டிசம் பற்றிய விழிப்புணர்வுக்கான நல்லதொரு கருவி. பலரும் பேசாத, பேசப்படத் துணியாத விடயத்தை நேரமெடுத்து எழுதித் தனது அனுபவங்களுக்கூடாக எங்களுக்குப் பாடத்தை தந்திருக்கும் மைதிலிக்கு எனது பாராட்டுகள் – என தீரனிய தாயுள்ளத்தில் இருந்து என்ற தலைப்பில் அமைந்த வாழ்த்துரையில் குறிப்பிட்டிருப்பவர் மட்டக்களப்பிலுள்ள தீரனியர் பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியையான திருமதி சுபாசினி.

இவர் ஒரு தீரனியனின் தாய் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஓட்டிச உலகில் நானும்" என்னும் இந்த தன் வரலாற்று நூலை எங்கட புத்தகங்கள் ஊடாக வெளிக்கொணர்வதில் நாங்கள் மிகவும் மகிழ்சியடைகிறோம். ஒரு தாயாக மைதிலி றெஜினோல்ட் தனது மகனோடு தான் கடந்துவந்த வாழ்க்கையை உணர்ச்சிபூர்வமாக எழுதியிருக்கிறார். சமூகத்தில் பலருக்கும் தெரியாத, பலரும் புரிந்துகொள்ளாத ஓட்டிச உலகை சிறந்த முறையில் வாசகரிடம் கொண்டுசேர்க்கும் வகையில் அவரது எழுத்து அமைந்திருப்பது சிறப்பு. இவ்வாறான புத்தகங்களை வெளிக் கொணர்வதிலும் மக்களிடம் கொண்டுசேர்க்கும் பணியிலும் எங்கட புத்தகங்கள் தொடர்ந்து பயணிக்கும் – எனத் தனது வெளியீட்டுரையில் எங்கட புத்தகம் நிறுவனத்தின் தலைவர்குலசிங்கம் வசீகரன் குறிப்பிட்டிருக்கிறார்.

மொத்தத்தில் இது சமூகத்துக்கு வேண்டியதொரு நூல் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**கணபதி சர்வானந்தா**





முருகபூபதியின் 'சினிமா பார்த்ததும் கேட்டதும்' நூல் வெளியீட்டு விழா கடந்த வாரம் அவை 59இல் வெளியிட்டு வைக்கப்பட்டது. அல்வாய் கலையகத்தில் எழுத்தாளர் கொற்றை பி.கிருஷ்ணானந்த தலைமையில் நடைபெற்ற விழாவில் நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் இ.சு.முரளிதரனும், கருத்துரையை எழுத்தாளர் அ.யேசுராசாவும் நிகழ்த்தினார்கள். 'எனது இலக்கிய அனுபவங்கள்' எனும் தலைப்பில் லெ.முருகபூபதி உரையாற்றினார்.



# 25 வருடங்களாக தொடர்ந்து ஒரு நடனப்பள்ளியை நடத்துவதே சாதனை தான்

## ஸ்ரீமதி ஷாந்தி கணேசராஜா

உரையாடல் : ஜீவா சதாசிவம்

**என்னிடம் சில மாணவர்கள் அரங்கேற்றம் செய்துள்ளனர். சிலருக்கு அரங்கேற்றம் செய்வதற்கு வசதிகள் இல்லாவிடினும் இன்றைய இந்த வெள்ளிவிழா மேடை சிரேஷ்ட மாணவிகளுக்கு ஒரு அரங்கேற்றமாகவே அமைகின்றது என்கிறார் நடன ஆசிரியை ஸ்ரீமதி ஷாந்தி கணேசராஜா.**

**'நிருத்திய நர்த்தனாலயா'வின் 25ஆவது ஆண்டு வெள்ளிவிழாவை முன்னிட்டு 'நிருத்திய உற்சவ' எனும் நடன நிகழ்வை இன்று (16.07.2023) இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடத்தவுள்ளது.**

**இந்நிலையில், 25 வருட நீண்ட பயணம் மற்றும் துறைசார் அனுபவம் குறித்து உரையாடியதில் அவர் பகிர்ந்துகொண்ட விடயங்கள் இங்கு எமது வாசகர்களுக்காக...**

**25 வருட வெள்ளி விழா கொண்டாடும் நிலையில் உங்களது உணர்வலைகள் எவ்வாறிருக்கின்றன?**

மிகவும் மகிழ்ச்சியாக உணர்கின்றேன். இந்த 25 வருட வெள்ளி விழாவைக் கொண்டாடும் முகமாகவும் எனது பயணத்தைத் தொடர்வதற்கு உறுதுணையாக இருந்த இறைவனுக்கு நன்றியாகவும் 'நிருத்திய உற்சவ' எனும் நடன நிகழ்வை நடத்தவுள்ளோம். நடராஜபெருமானின் அருள் இல்லையென்றால், இவ்வாறான நீண்டதூர பயணத்துக்கு சாத்தியமில்லை. அவரது அருளாலே இன்று வெள்ளிவிழாவைக் கண்டிருக்கின்றோம்.

அது மிக்க மகிழ்ச்சியாகவும் மன நிறைவாகவும் இருக்கின்றது. அத்துடன், மிகுந்த பொறுமையும், பரதக் கலையில் அர்ப்பணிப்பும் உண்மைத்தன்மையுமே காரண மாகும். நடன வகுப்புகளை நடத்துவதென்பது இலகுவான விடயமல்ல. பல கடினங்களையும் சவால்களையும் கடந்து பயணித்து வந்த நீண்டதொரு பயணத்தின் விளைவாகவே இன்று இந்த வெள்ளிவிழாவை சிறப்பாக கொண்டாடக் காரணமாகின்றது. நிருத்திய நர்த்தனாலய மாணவர்கள் பலர் மூன்று, நான்கு வயதிலிருந்து என்னுடன் பயணித்து வந்தது மாத்திரமல்லாமல் அவர்களும் மகிழ்வுடனும் பெருமையுடனும் இந்த நிகழ்வை வழங்குகின்றனர் பெருமிதத்துடன்.

**உங்களது நடனத் துறைசார் பயணம் மற்றும் உங்களது நடனக் கல்லூரியின் பயணம் குறித்து எம்முடன் பகிர்ந்துகொள்வீர்களா?**

எனது கலைப்பயணம் சிறுவயது முதலேயே ஆரம்பித்துவிட்டது. எனது ஆரம்பப் பயணம் யாழ். சாவகச்சேரியில் ஆரம்பமானது. நாட்டிய கலைமணி மதிப்பிற்குரிய யசோதரா விவேகானந்தன் எனது குரு. சுமார் 11 ஆண்டு காலம் அவரிடமே பரதக் கலையைக் கற்றேன். அந்த ஆரம்ப காலம் எனது குரு எனக்கு வழங்கிய பயிற்சி மற்றும் அவரிடம் கற்றவை ஏராளம். அவர் இட்ட பிள்ளையார் சுழியே எனது 25 வருட பயணத்துக்கு உத்வேகம் என்று கூறலாம்.

11 ஆண்டுகளின் பின்னர் இடம் பெயர்ந்து கொழும்புக்கு வந்த பின்னர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனிடம் எனது பரதக் கலையைத் தொடர்ந்தேன். அவரிடம் கற்றதும் ஏராளம். கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனிடம் தொடர்ச்சியாக பயிற்சி பெற்றதையடுத்து 1994ஆம் ஆண்டு கொழும்பு, பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில், எனது அரங்கேற்றம் கோலாகலமாகவும் மிகவும் சிறப்பாகவும் இடம்பெற்றது. இதனையும் எனது கலைப் பயணத்தின் முக்கிய மாக பார்க்கின்றேன்.

பிரபல திரைப்பட நடிகர் அமரர் சரத்பாபு எனது அரங்கேற்றத்தில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டிருந்தமை சிறப்பு அம்சமாகும். எனது அரங்கேற்றத்தின் பின்னர் பல நடன நிகழ்வுகளில் பங்குபற்றியது மாத்திரமல்லாமல் பல நடன நிகழ்வுகளையும் நடத்தியுள்ளேன். பாடசாலை ஆசிரியராக இருப்பதனால் பாடசாலையிலுள்ள கலை விழாக்கள், நடன நிகழ்வுகளை சிறப்பாகவும் தரமாகவும் வழங்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவேன். நடன ஆசிரியராக யாழ். வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் (மீசாலை) எனது ஆசிரியப்பணி ஆரம்பமானது.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம்...)

**ஸ்ரீமதி ஷாந்தி கணேசராஜா அரசாங்க சேவையில், யாழ். கல்வித் திணைக்களம் ஊடாக பரத நாட்டிய ஆசிரியராக இணைந்துகொண்டவர். பல மேடை நிகழ்ச்சிகளிலும், தொலைக்காட்சிகளிலும் பங்குபற்றியுள்ளார். இவர் சாஹித்ய விழா, கலாபூஷண அரச விருது விழா, கம்பன் விழா போன்ற மாபெரும் விழாக்களில் நடனமாடியவர். எண்ணற்ற நடன நிகழ்வுளில் பங்குபற்றி பலரது பாராட்டையும் பெற்ற இவர், சிறந்த நடன ஆசிரியராவார். நூற்றுக்கணக்கான மாணவர்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உருவாக்கிய பெருமைக்குரியவர். 1998ஆம் ஆண்டு ஸ்ரீமதி ஷாந்தி கணேசராஜாவை இயக்குநராகக்கொண்டு உருவாகிய நிருத்திய நர்த்தனாலயம் அதன் வளர்ச்சியில் 5ஆவது, 10ஆவது, 15ஆவது, 18ஆவது, 20ஆவது என ஆண்டுவிழாக்களை முறையே நிருத்தியாஞ்சலி, நிருத்திய வந்தனம், நிருத்தியலாவண்யா போன்ற நிகழ்வுகளை வெற்றிகரமாக மேடையேற்றி சிறப்பிடம் பெற்றுள்ளது.**



04 ஆம் பக்கத் தொடர்ச்சி...



பின்னர் கொழும்பு, கொட்டாஞ்சேனை தமிழ் மகாவித்தியாலயம், கொள்ளுப்பிட்டி சென். அந்தனிஸ், பம்பலப்பிட்டி சென்.மேரிஸ் ஆகிய பாடசாலைகளிலும் கற்பித்து தற்போது வெள்ளவத்தை புனித. கிளேயர் கல்லூரியில் நடன ஆசிரியராக 33ஆவது வருடத்தில் பயணித்துக்கொண்டிருப்பது எனக்கு மிகுந்த அனுபவத்தை தந்துள்ளது.

நடனத்துறையில் இருப்பதனால் ஆசிரியர் பயிற்சியை (பரத நாட்டியம்) தேசிய கல்வி நிறுவகத்திலும் (மஹரகம) பரத நாட்டிய பட்டப் படிப்பை யாழ். பல் கலைக்கழகத்திலும் மேற்கொண்டு கலைமாணிப் பட்டம் பெற்றுள்ளேன்.

ஆனாலும், இதனை விட இந்த நீண்ட பயணத்தில் நான் பெற்ற அனுபவ அறிவை மிகவும் சிறந்ததாக உணர்கின்றேன்.

**ஸ்ரீமதி ஷாந்தி கணேசராஜாவை இயக்குநராகக் கொண்ட 'நிருத்திய நர்த்தனாலயா'வின் வெள்ளிவிழா இன்று 16ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அநிருத்தனன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ள இந்நிகழ்வில், சிறப்பு மற்றும் கௌரவ அதிதிகள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் விஷேட அம்சமாக குறித்த நடனக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் அற்புதமான பல புதிய படைப்புகள் மேடையேற்றப்பட்டவுள்ளன.**

### நிருத்திய நர்த்தனாலயம்... பற்றி?

எனது கலை நிறுவனமான 'நிருத்திய நர்த்தனாலய'ம், 1995 ஆம் ஆண்டு சிறிதளவில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1997இல் ஐங்கரன் மண்டபத்தில் தொடர்ந்த பயணம் இன்றுவரை தொடர்ச்சியாக நடத்தப்பட்டு அது நடனப்பள்ளியாக வளர்ச்சிக் கண்டுள்ளது. வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனையில் வகுப்புகளை இடைநிறுத்தாது தொடர்ந்து நடத்தி வருகின்றேன். இங்கு பயிலும் மாணவிகள் பரதக் கலையில் வளர்ச்சிப்பெற்று உயர்ந்து நிற்பதையே காணக்கூடியதாக உள்ளது.

ஆரம்பத்திலிருந்து என்னுடன் பயணித்த மாணவிகள் பலர் இன்னும் நடனக் கலையில் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டவர்களாக விளங்குகின்றனர். வெளிநாடுகளில் சிலர் பரதக் கலையை தொடர்கின்றனர். சிலர் ஆசிரியர்களாகவும் உள்ளனர். அரங்கேற்றம் செய்த மாணவிகள் அந்தத் துறையில் சிறந்து விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. சிலர் மருத்துவம் உட்பட ஏனைய துறைகளிலும் இருந்தாலும் கூட ஒரு நடனக்கலைஞராகவும் நடன நிகழ்வில் பங்குகொள்கின்றனர். ஒரு சிலர் நடன ஆசிரியராகவும் இருக்கின்றனர்.

### 25 வருடங்களில் நீங்கள் சாதித்தது என்ன என சொல்லத் தோன்றுகின்றது?

25 வருடங்களாக தொடர்ந்து நடனப்பள்ளியை நடத்துவதே ஒரு சாதனையாகத் தான் பார்க்கத் தோன்றுகிறது. தொடர்ச்சியாக நடனப்பள்ளியை நடத்த உந்துசக்தியாக இருந்த அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி பகிர்கின்றேன். எண்ணற்ற மாணவிகள் என்னிடம் கற்றுள்ளனர். அனைவரும் மிகுந்த திறமை மிக்கவர்கள் அவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி, தேசிய நிகழ்ச்சிகள் உட்பட அனைத்திலும் தமது பங்களிப்பை வழங்கி நமது நடனப்பள்ளிக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.




### இதுவரை நீங்கள் எத்தனை மாணவர்களை அரங்கேற்றியுள்ளீர்கள். அதன் அனுபவம் எத்தகையது?

என்னிடம் சில மாணவர்கள் அரங்கேற்றம் செய்துள்ளனர். சிலருக்கு அரங்கேற்றம் செய்வதற்கு வசதிகள் இல்லாவிடினும் இன்றைய இந்த மேடை சிரேஷ்ட மாணவிகளுக்கு ஒரு அரங்கேற்றமாகவே அமைகின்றது. பரத நாட்டிய உருப்படிகளை கச்சேரி அமைப்பு முறையில் ஆடி அரங்கேற்றம் காணவுள்ளனர் மிகுந்த ஈடுபாட்டுடன்.

### உங்களிடம் கற்கும் மாணவர்கள் மற்றும் வெள்ளிவிழா அன்று விசேடமாக நடைபெறவுள்ள நிகழ்வுகள் குறித்து எம்முடன் பகிர்ந்துகொள் வீர்களா?

இந்த வெள்ளிவிழா நிகழ்வு ஒரு பரத நாட்டிய கச்சேரியாகவே அமையவுள்ளது. பார் போற்றும் பரதக் கலையின் தெய்வீகத்தன்மையும் சாஸ்திரம் வழுவாத கலப்படம் இல்லாத பரத நாட்டியத்தையே எமது மாணவர்கள் இந்நிகழ்வில் வழங்கவுள்ளனர்.





'நிருத்திய நர்த்தனாலய'த்தில் கல்லூரியில் பயின்ற பல மாணவிகள் வெளிநாடுகளிலிருந்து வாழ்த்துகளைப் பகிர்ந்ததுடன், அவர்களும் இணைந்து இவ்விழாவை நடத்துவதற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கியுள்ளனர். இறைவனுக்கு அர்ப்பணமாகக் கொண்டாடவுள்ள இவ்வெள்ளி விழாவில் எமது அனைத்து மாணவர்களும் கலந்துகொள்வார்கள். நிகழ்வுகளிலும் பங்குபெறுகின்றனர். அனைவரையும் இவ்வெள்ளிவிழாவில் பங்கேற்குமாறு அன்புடன் வரவேற்கின்றேன்.



# ‘செவாலியார் இளவாலை அமுது’ நூல் வெளியீட்டு நிகழ்வில்...



பிரித்தானியாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர் சிவ தணிகாசலம் எழுதிய ‘செவாலியார் இளவாலை அமுது’ நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு யாழ். பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் தேவராஜா தலைமையில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.



தலைமை உரையை ஆற்றிய யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதி தேவராஜா,

‘‘பிரித்தானியாவில் வசிக்கும் பிரபலமான எழுத்தாளர் சிவ தணிகாசலம் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர். தனது ‘செவாலியார் இளவாலை அமுது’ என்னும் நூலை 2021ஆம் ஆண்டு பிரித்தானியாவிலுள்ள துர்க்கை அம்மன் ஆலயத்தில் முதல் பிரதியை வெளியிட்டவர். 2022 ஆம் ஆண்டு இந்தியா பாண்டிச்சேரியிலுள்ள பிரபல பல்கலைக்கழகத்தில் இரண்டாவது நூலை வெளியிட்டதுடன், மூன்றாவதாக யாழ்ப்பாணம் இணுவில் பொது நூலகத்தில் வெளியிடப்பட்டது’’ எனத் தெரிவித்தார்.



நிகழ்வின் ஆசி உரையை சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்தினார்.

வாழ்த்துரையை ஏசிரி கல்வி நிலைய அதிபர் இரா. அருட்செல்வம் நிகழ்த்தியதுடன், முதற்பிரதியை இராமலிங்கம் மகாராஜா பெற்றார்.



# பாரம்பரியம் நிகழ்ச்சியில் ‘இஸ்லாமிய சமய பாடசாலை’ நிகழ்ச்சியின் நினைவுகள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம் பரியம் நிகழ்ச்சியில், எதிர்வரும் 18 ஆம் திகதி (18.07.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் அந்நாட்களில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான முஸ்லிம் நிகழ்ச் சிகள் வரிசையில் நேயர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்ற நிகழ்ச்சியே "இஸ்லாமிய சமய பாடசாலை"நிகழ்ச்சி. இது பற்றிய தகவல் கள் நேயர்களோடு பரிமாறப்பட இருக்கிறன.

1950 ஆம் ஆண்டு இலங்கை வானொலியில் ஒலிபரப்பாக துவங்கிய இந்நிகழ்ச்சி 1968 ஆம் ஆண்டு கால பகுதி வரை தொடராக ஞாயிற்றுக்கிழமைகளில் அன்றைய தமிழ் தேசிய சேவையில் காலை 9.30 மணி தொட்டு 10 மணிவரை ஒலிபரப்பாகியது.

பின் 1969ல் இதே நிகழ்ச்சி "நூருல் இஸ்லாம்" எனும் பெயரில் மாற்றம் பெற்று நீண்ட காலமாக ஒலிபரப்பாகியது.

முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப் பாளர் அல்ஹாஜ் மௌலவி இஸட்.எல்.எம். முஹம்மத் அவர்களே இதன் ஸ்தாபக தயாரிப்பாளராவார். தொடர்ந்தும் அவரே நிகழ்ச்சியை தயாரித்து வழங்கியதோடு அவ்வப்போது நடாத்தியும் உள்ளார்.மர்ஹூம் மௌலவி அல்ஹாஜ் அப்துர்ரஹ்மான் பஹ்ஜி தொடராக நடாத்தியமை குறிப்பிட தக்கது.

பின் "நூருல் இஸ்லாம்" என மாற் றம் பெற்றபோது, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வெவ்வேறு உலமாக்கள் நடாத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்கள் பலர் அதிதிகளாக கலந்து இந்நிகழ்ச்சி குறித்த தம் நினைவுகளை பகிர்ந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்து வழங்க, முஸ்லிம் சேவை பொறுப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# கதிரவன் கலைக்கழகத்தினால் வீதி நாடகம் அரங்கேற்றம்!







மண்முனை வடக்கு எதிர்நீச்சல் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு, மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் அனுசரணையுடன் "பிளாஸ்ரிக் மூலம் ஏற்படக் கூடிய மாசைத் தடுப்போம். சூழலைப் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் கதிரவன் தமிழ் நாடகக் குழுவினர் நடத்திய விழிப்புணர்வு நாடகம் கடந்தவாரம் கல்லடி கடற்கரையில் அரங்கேற்றப்பட்டது.

இதன்போது பொலித்தீன் பாவனையால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் நகைச்சுவை ஊடாக வெளிக்கொணரப்பட்டது.

இதனை நூற்றுக்கணக்கான மக்கள் பார்வையிட்டனர்.

இதேவேளை, ஏறாவூர் ஸம் ஸம் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு, மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் அனுசரணையுடன் "பொலித்தீன் பாவனையைக் குறைப்போம். எமது சூழலைப் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் கதிரவன் தமிழ் நாடகக் குழுவினர் நடத்திய நகைச்சுவை விழிப்புணர்வு நாடகம் ஏறாவூர் லகூன் பாக்கில் மாலைவேளையில் அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது.

க.கிருபாகரன், கல்லடி

# தமிழ்த் தேசியத்தைத் தட்டியெழுப்பிய பேச்சும் எழுத்தும் இவனுடைத்தே..!

அமரர் நாவேந்தன் நான் பள்ளிச் சிறுவனாக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே சிறந்த தமிழ்ப் பற்றாளராகவும், தமிழ் உணர்ச்சியும் தியாக உணர்வும் நிறைந்த அரசியலாளராகவும், உயிர்த் துடிப்புள்ள தமிழ்ப் பேச்சாளராகவும் விளங்கித் தமிழ்த் தொண்டாற்றியவர்.

தமிழ் மொழியின் மீதுள்ள ஆழ்ந்த - ஆறாத பற்றின் காரணமாக செந்தமிழ் நடையையும், மரபுவழித் தமிழ்ப் பாரம்பரியத்தையும் இடையறாது போற்றியவர். ஆயினும் பாரதியின் கவித்திறனாலும் பாடற்பொருள் திறனாலும் கவரப்பட்டு தமிழில் புதுமைக்கும் இடமுண்டு என்று சிந்தித்தவர்.

பேச்சாற்றலில் தமிழகத்துத் தலைசிறந்த பேச்சாளர் வரிசையில் வந்த ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், அண்ணாதுரை போன்றோரின் வழியில் இலங்கையில் பழந்தமிழ் இலக்கியத்தை அழகு தமிழில் எளிமையாகப் பாமரரும் புரிந்துகொள்ளும்வகையில் ஆற்றொழுக்காகப் பேசும் பாணியில் ஒரு முன்னோடியாக விளங்கியவர்.



தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதன் இளைஞர் அணி முக்கியஸ்தராகக் கட்சிக் கொள்கைகளைப் பரப்பித் தமிழ் உணர்வும் தமிழ்த் தேசியவாதமும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பட்டிதொட்டிகளிலெல்லாம் பரவும் வகை செய்தார்.

தமிழரசுக் கட்சியின் அதிகாரபூர்வப் பத்திரிகையான சுதந்திரன் இவரது வீராவேச எழுத்து வேகத்துக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. அரசியல் அரங்கு, கதை, கட்டுரை, இலக்கிய விமர்சனம் என்று சுதந்திரன் பத்திரிகையில் ஆஸ்தான எழுத்தாளராகப் பல புனைபெயர்களில் பொருள் மிகுந்த கருத்துகளை அள்ளித் தெளித்தவர்.

இவர் நடத்திய சங்கப்பலகை என்ற பத்திரிகையில் நக்கீரன் என்ற பெயரில் நாவேந்தன் எழுதிக் குவித்தவை, எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் முன்வைத்த வாதங்களையெல்லாம் தவிடு பொடியாக்கும் தர்க்க முறையான வாதத்திறன் கொண்டவையாக அமைந்திருந்தன. அரசியல் எதிராளிகள் நாவேந்தன் மீது கொண்டிருந்த அச்சமும் நியாயமானதே.

எனது மாமனார் இரா. மு.நாகலிங்கம் கண்டியில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வெளியிட்ட செய்தி வார இதழில் வெளியான முக்கிய அரசியல் கட்டுரைகள் இவர்கள் வீட்டிலிருந்தே அனுப்பப்பட்டவை என்பது நான் நேரடியாகக் கண்ட உண்மை.

தாம் கடைப்பிடித்த அதே நேர்வழியில் தமது குடும்ப உறுப்பினர்களையும் ஈடுபடச் செய்து சிறந்த தமிழ் அபிமானிகளாக அவர்களை வளர்த்தெடுத்தவர் நாவேந்தன்.

மொத்தத்தில் தமிழ்த் தேசியவாதம் இன்று உண்மையாக வளர்ச்சியுற்று அகில உலகக் கவனத்தை ஈர்த்ததுடன், தென்னாசியாவில் ஓர் உறுதியான கருத்திற்கொள்ள வேண்டிய சக்தியாக வளர்ந்துள்ளதென்றால் அதில் நாவேந்தனுக்கும் ஒரு முக்கிய இடமுண்டு.

அன்னாரின் இழப்பு இலங்கைத் தமிழருக்கும் தமிழ் கூறும் நல்லுலகுக்கும் மட்டுமன்றி, தமிழும் தமிழரும் அவர்தம் பண்பாடும் செழித்து வாழ வேண்டும். அவர்தம் பண்பாட்டு அடையாளங்கள் சிதைவுறாது உன்னதமாகப் பேணப்படல் வேண்டுமென்றும் சிந்திக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் ஒரு மாபெரும் இழப்பே என்பதில் ஐயம் எதுவுமில்லை.

**(அமரர்: பேராசிரியர் சோ. சந்திரசேகரம் எழுதிய கட்டுரை)**

# நேரு கருணாகரனின் 'களவாடப்பட்ட தலைமுறைகளின் கதை' நூல் வெளியீடு அட்டனில்



சட்டத்தரணி நேரு கருணாகரன் தினக்குரல் பத்திரிகையில் 2012 - 2015 வரையான காலப்பகுதிக்குள் எழுதிய வாரம் ஒரு சினிமா பகுதியில் வெளிவந்த உலக சினிமா திரைப் படங்களை பற்றிய கட்டுரைகளில் 32 கட்டுரைகள் அடங்கிய 'களவாடப் பட்ட தலைமுறைகளின் கதை' எனும் நூல் வெளியீடு அட்டனில் இடம் பெறவுள்ளது.

காட்சி மொழி பதிப்பகத்தால் நூல் உருவாக்கம் பெற்றுள்ள நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அட்டன் நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.




வரவேற்புரை, தலைமை யுரையை அடுத்து நூல் அறிமுக வுரை தனராஜ் கஜேந்திரகுமார் (ஆணையாளர், பண்டாரவளை மாநகர சபை) வழங்கவுள்ளார். வே.தினகரன் (அதிபர் - சென்.கிளையர் தமிழ் மகா வித்தி யாலயம்), சு.விஜயகுமார் (சட்டத்தரணி- காவத்தை, இரத்தினபுரி), எட்டியாந்தோட்டை கருணாகரன் (அதிபர் - கந்தரோலயா தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

ஜோதிராஜ் ஜெகன் தொகுத்து வழங்கவுள்ள இந்நிகழ்வு ஏற்புரை, நன்றியுரையுடன் நிறைவடையும். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# 'காணிக்கு குருநாதன்' நூல் வெளியீடு!






**( வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண குடியேற்ற உத்தியோகத்தர் தொழிற்சங்க ஏற்பாட்டில் "காணிக்கு குருநாதன்" எனும் நூல் வெளியீட்டு விழாவும் கௌரவிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (9) மாலை கல்முனை கிரிஸ்டா இல்ல மண்டபத்தில் இடம்பெற்றது.

நிந்தவூர் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம் றஜாய் எழுதிய "காணிக்கு குருநாதன்" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வில் முன்னாள் உதவி காணி ஆணையாளர் கே.குருநாதன் வாழ்த்தி கௌரவிக்கப்பட்டார்.



அம்பாறை மாவட்ட தலைமைப்பீட காணி உத்தியோகத்தர் கே.எம்.முஸம்மில் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

# ஈழத்தின் மூத்த, முக்கிய படைப்பாளுமை- இயல் முனைவர், சாஹித்ய ரத்னா, டாக்டர் தி. ஞானசேகரன்



## ஆளுமைகளின் அடையாளம்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

ஈழத்து இலக்கியப் பெருவெளியில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக முனைப்போடு இயங்கிவரும் மூத்த இலக்கிய ஆளுமை, நாவல், சிறுகதை, பத்தி எழுத்து, பயணக் கட்டுரைகள் எழுதுபவராக மட்டுமல்லாது, சஞ்சிகை ஆசிரியராகவும் எழுத்தின் பல்வேறு தளங்களில் இலங்கும் குறிப்பிடத்தக்க படைப்பாளி, இலக்கியத் துறையில் உச்ச விருதுகளைப் பெற்றிருந்த போதும் அத்தோடு நின்றுவிடாமல் தொடர்ந்தும் ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதில் அக்கறை செலுத்துகின்ற காத்திரமான - கனதியான எழுத்தாளர் - டாக்டர் தி.ஞானசேகரன்.

இலங்கையர்கோன், சம்பந்தர், சி.வைத்திலிங்கம் போன்ற இலங்கையின் முன்னோடி எழுத்தாளர்களின் அடுத்தகட்டத் தொடர்ச்சியாகப் பார்க்கப்படுபவர்.

1964இல் பிழைப்பு என்ற சிறுகதையை, 'கலைச்செல்வி'யில் (இலங்கையில் ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து வெளிவந்த சிற்பி என்ற பிரபலம் பெற்ற மூத்த எழுத்தாளரை ஆசிரியராகக் கொண்டிருந்த காத்திரமான இலக்கிய இதழ்) எழுதியதன் மூலம் இலக்கியப் பிரவேசம் பெற்றவர்.

செம்பியன் செல்வன், செ.யோகநாதன், செங்கை ஆழியான் போன்ற முக்கிய படைப்பாளர்கள் வரிசையில் முக்கியத்துவம் பெற்ற படைப்பாளியாகத் திகழ்பவர். தமிழ்கூறும் நல்லுலகெங்கும் கனதியான இலக்கிய இதழாக அங்கீகாரம் பெற்றிருந்த இந்திய இதழான 'கலைமகளி'ல் எழுதியதன் மூலமாக பரந்த தமிழ் இலக்கிய வாசகர்களின் அபிமானத்தைப் வென்றிருப்பவர் - டாக்டர் தி.ஞானசேகரன்.

இற்றைவரை 23 நூல்களை அவர் இலக்கிய உலகுக்குத் தந்திருக்கின்றார்.

வட இந்தியப் பயண அனுபவங்கள் - 2013

எனது இலக்கியத் தடம் முதலாம் பாகம் 2013

கா. சிவத்தம்பி - இலக்கியமும் வாழ்க்கையும் (நேர்காணல்) - 2005

ஞானசேகரன் சிறுகதைகள் (சிறுகதைகள்) - 2005

அவுஸ்திரேலியப் பயணக்கதை (பயண இலக்கியம்) - 1999

புரிதலும் பகிர்தலும் (நேர்காணல்) - 1999

அல்ஷேசனும் ஒரு பூனைக்குட்டியும் (சிறுகதைகள்) - 1998

கவ்வாத்து (குறும் புதினம்) - 1996

லயத்துச் சிறைகள் (புதினம்) - 1994

குருதிமலை (புதினம்) - 1979 புதிய சுவடுகள் (புதினம்) - 1977 காலதரிசனம் (சிறுகதை) - 1973, என்று அந்நூல்களின் பட்டியல் நீளும்.

'ஞானம்' என்ற மாதாந்த இலக்கிய இதழை 23 வருடங்களுக்கும் மேலாக இடையறாது நடத்தி வருபவர் அவர். ஜூலை 2023 வரை 278 இதழ்களை ஞானம் விரித்துள்ளது.

புதிய சுவடுகள், எரிமலை, குருதி மலை, லயத்துச் சிறைகள், கவ்வாத்து என்று ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில் தடம்பதித்த ஐந்து நாவல்களை டாக்டர் தி.ஞான்சேகரன் தந்திருக்கின்றார். புதிய சுவடுகள், சாதியத்துக்கு எதிரான நாவல் என்ற வகையிலும் யாழ்ப்பாண கிராமிய மண்வாசனையைச் சிறப்பாகக் கொண்டுவந்த நாவல் என்ற வகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது.

எரிமலை, ஈழப்போராட்டம் பற்றிப் பேசுகின்ற நாவல்."இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக விரிவாகவும் விளக்கமாகவும் பேசுகின்ற நாவல் இது. இனப்பிரச்சினை தொடர்பாக முழுமையான பார்வையை இந்நாவல் தருகின்றது" என்று பேராசிரியர் துரைமனோகரன் இந்நாவல் பற்றி குறிப்பிடுவார்.

மலையகத்தில் நீண்டகாலம் வாழ்ந்து, அனுபவித்து அவர் எழுதிய குருதிமலை, கவ்வாத்து, லயத்துச் சிறைகள் என்ற நாவல்கள் மலையக மக்களின் வாழ்வை, தொழில் ரீதியான சுரண்டலை, அரசியலை எடுத்துக்காட்டுவன.

மலையக நாவல் இலக்கியத்தின் சிகரமாக அவை போற்றப்படுவதோடு மலையகத்தின் வரலாற்று ஆவணங்களாகவும் பார்க்கப்படுகின்றன.

இவற்றில் குருதி மலை, புதிய சுவடுகள் என்ற நாவல்கள் தேசிய சாஹித்ய மண்டலப் பரிசு பெற்றவை. குருதிமலை, கொடகே நிறுவத்தினரால் 'தலென யக்கட' என்ற பெயரில் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. மதுரை அமெரிக்க மிஷன் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்புக்கு பாடநூலாகவும் வைக்கப்பட்டிருந்த (1992-1993) பெருமையும் இந் நாவலுக்கு உண்டு.

லயத்துச் சிறைகள், கவ்வாத்து என்ற நாவல்கள் மத்திய மாகாண சாஹித்ய விருது பெற்றவை.

எரிமலை, கொடகே சாஹித்ய விருதையும், தமிழ்நாட்டு கரிகாற்சோழன் விருதையும் பெற்றது.

இந்நாவல், கொடகே நிறுவத்தினரால் சிங்கள, ஆங்கில மொழிகளிலும் வெளியிடப்பட்டது.

நாவலைப் போலவே சிறுகதைத் துறையிலும் சிறந்து விளங்குபவர் தி. ஞானசேகரன்.

கனமான கருவுள்ள படைப்புகளைத் தருபவராகவும், கருவைச் சிதையவிடாது கதையை நகர்த்திச் செல்லும் லாவண்யம் உடையவராகவும், பல்வேறுபட்ட உத்திகளைத் தனது படைப்புகளில் கையாள்பவராகவும் சிறுகதை உலகில் மதிப்புப் பெற்றிருப்பவர் அவர்.

காலதரிசனம், அல்சேஷனும் பூனைக்குட்டியும், ஞானசேகரன் சிறு கதைகள் என்பன அவரின் சிறுகதை நூல்கள். அல்சேஷனும் பூனைக்குட்டியும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கலைமாணி பட்டப் படிப்புக்கான பாடநூலாக இருந்து வருகிறது. இவரின் தெரிவு செய்யப்பட்ட 10 சிறுகதைகளை சிங்கள மொழிக்கு மாற்றி 'பரதேசி' எனும் பெயரில் கொடகே நிறுவனம் வெளியிட்டுள்ளது .

ஞானம் இதழினூடாகவும் ஞானம் பதிப்பகம் ஊடாகவும் அவர் ஆற்றியுள்ள தமிழ் இலக்கியப் பணிகள் அறிஞர் பெருமக்களின் நல்லபிப்பிராயத்தைப் பெற்றிருக்கின்றன

600 பக்கங்களைக்கொண்ட 'ஈழத்துப் போர் இலக்கியம்' என்ற நூல், 976 பக்க புலம்பெயர் இலக்கிய நூல், 60 இலங்கை எழுத்தாளர்களின் நேர்காணலை உள்ளடக்கிய 1000 பக்கங்களைக்கொண்ட 'ஈழத்தமிழர் இலக்கிய வெளி' என்ற நூல் என்பன ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய வகைமையையும், சஞ்சிகை வரலாற்றில் புதிய உத்வேகத்தையும், பாய்ச்சலையும் ஏற்படுத்தியவை. இவற்றோடு நில்லாது அவர் ஆற்றிய சஞ்சிகை, பதிப்பக அரும்பணிகளால் 35இற்கும் மேற்பட்ட புதிய எழுத்தாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

சான்றோர் கௌரவிப்பு, இலக்கிய விழாக்கள், நூல்கள் வெளியீடு என்பன இடம்பெறுகின்றன.

டாகடர் தி. ஞானசேகரன், அவரின் வட இந்திய, அவுஸ்திரேலிய, லண்டன் ஐரோப்பிய, கனடா பயணங்களை ஒட்டியதாக இலக்கியச் சுவை மிகுந்த ஐந்து பயணக் கட்டுரை நூல்களை தந்திருக்கின்றார் .

பல்துறை எழுத்தாளர் டாக்டர் ஞானசேகரனின் நாவல், சிறுகதை, பயண இலக்கியம், இதழியல், பத்தி எழுத்து, பதிப்பக முயற்சி என்பவை தனித்தனியாகப் பிரித்து, முறையாக ஆய்வு செய்யப்பட வேண்டியவை.

இலக்கிய உலகில் அவர் பெற்றிருக்கின்ற விருதுகள் பட்டங்கள் அநேகம். கலாபூஷணம், சாகித்திய ரத்னா, இயல் முனைவர் என்ற இலங்கையின் உச்ச விருதுகளோடு 35க்கும் மேற்பட்ட விருதுகளையும் பட்டங்களையும் அவர் பெற்றிருக்கின்றார்.கொழும்பு தமிழச்சங்கம், இலங்கை கலாசாரத் திணைக்களம், தேசிய சாஹித்ய மண்டலம் போன்றவை அவரைக் கௌரவித்து உயர் விருதுகளையும் பட்டங்களையும் வழங்கியுள்ளன. மல்லிகை, கொழுந்து, படிகள், அகமதி, மண், ஏழைதாசன் போன்ற சஞ்சிகைகள் அவரைக் கௌரவித்து முகப்பக்கத்தில் அவரின் படத்தைப் பிசுரித்துள்ளன.

சாஹித்ய ரத்னா டாக்டர் தி. ஞானசேகரன், யாழ். புன்னாலைக் கட்டுவனில் து.தியாகராசா ஐயர் - பாலாம்பிகை தம்பதியின் மகனாக 1941இல் பிறந்தவர்.

யாழ். புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்ப் பாடசாலை, புன்னாலைக்கட்டுவன் மெதடிஸ்த ஆங்கில பாடசாலை, உரும்பிராய் இந்துக் கல்லூரி, இலங்கை மருத்துவக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக் கழகம் என்பவற்றில் கல்விகற்றவர். மலையகத்தில் மருத்துவராக நீண்ட காலம் கடமையாற்றியவர். பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பட்டதாரி பட்டமும் பெற்றவர். அகில இலங்கை சமாதான நீதிபதி. மனைவி - எழுத்தாளர் ஞானம் ஞானசேகரன்.

மகன்- ஞானம் நிர்வாக ஆசிரியர் ஞா. பாலச்சந்திரன்.

அமுத விழாக்கண்ட ஈழத்தின் தமிழ் இலக்கிய அடையாளம், சாஹித்ய ரத்னா, இயல் முனைவர் டாக்டர் தி. ஞானசேகரன் இன்னும் பல்லாண்டு காலம் தேகநலத்தோடு வாழ்ந்து தமிழ் இலக்கியப் பணி புரிய வேண்டும், அவர் நூற்றாண்டு விழாவும் கண்டு மகிழ்ந்து தொடரவேண்டுமென்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

கிக்
கிக்
வாசிக்க
வாசிக்க...
மலர் : 02, இதழ் : 33 - 16.07.2023



வாழ்க்கையை அழகாக்கியது மொடலிங்
- தாரா

கவர்ச்சித் தோற்றத்தில் திஷா

ESPYS Award இல் மகிழ்ச்சி செய்தியை வெளியிட்ட தம்பதி

தாரா



# வாழ்க்கையை அழகாக்கியது மொடலிங்

**- தாரா**

இலங்கை மொடலிங் துறைக்குள் 'தாரா' என்னும் அடையாளத்தை தன்னந்தனியாக உருவாக்கிக்கொண்டு ஸ்டார் மொடலிங் கலைஞராகவும் இலங்கை சினிமாவில் வெள்ளித்திரை – சின்னத்திரை நடிகையாகவும் வலம் வந்துகொண்டிருப்பவர் தாரா கலுஆராச்சி. அவரே இன்றைய நம் 'கிக்' அட்டைப்படத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பவர்.

தன்னுடைய மொடலிங் துறை மற்றும் சினமாத் துறை பிரவேசம் குறித்து மனம் திறக்கிறார் தாரா...

முதலில் நான் 'மொடலிங்'லிருந்தே ஆரம்பிக்கிறேன். இத்துறையில் கால்பதித்து சுமார் 09 வருடங்கள் கடந்துவிட்டன. யாருடைய உதவியுமின்றி தன்னந்தனியே இத்துறைக்குள் வந்தேன். அதற்கு பல்வேறு ஏற்ற இறக்கங்கள் கண்டு இன்று 'தாரா' என்றால் 'மொடல்' என்று சொல்லுமளவுக்கு என்னை நான் செதுக்கிக் கொண்டுள்ளேன்.

நான் கொட்டாவை பகுதியைச் சேர்ந்தவள். இங்கேயே எனது ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்விவரை கற்றேன். எனது தாய், தந்தை, சகோதரன் சகோதரி என ஐவர் கொண்ட சிறிய குடும்பம் எங்களுடையது. ஆரம்பத்தில் என்னுடைய குடும்பத்தினரே நான் மொடலிங் துறையில் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும், காலப்போக்கில் அவர்களே எனக்கு ஆலோசனை சொல்லுமளவுக்கு வந்துவிட்டனர்.

இன்று 'மொடல்' என்றால் நம் சமூகத்தில் ஒருசிலருக்கு தவறான கண்ணோட்டம் காணப்படுகிறது. அதனை நாம் களையவேண்டும். அந்த எண்ணத்தை உடைக்கவேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கிறது. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு – இலக்கு இருக்கிறது. அதனை முதலில் நாமே தெரிவு செய்கிறோம். முடிவும் செய்கிறோம். இந்த முடிவுக்கும் தெரிவுக்கும் இடையிலான இடைவெளியில் நம் கனவு மற்றும் இலக்கு குறித்து உங்களின் நம்பிக்கைக்கு உரியவரிடம் ஆலோசனைகளை கேட்கலாம். ஆனால், முடிவு நம் கையிலேயே இருக்கின்றது. முடிவு எடுத்த பின் இதிலிருந்து பின்வாங்கக்கூடாது.

அந்தவகையில் ஆரம்பத்திலிருந்து என் கனவு – இலக்கு மொடலிங்காக இருந்தது. எனது 19ஆவது வயதில் மொடலிங்குக்குள் கால்பதித்தேன். தன்னந்தனியே ஒவ்வொரு படிமுறையாக கற்றுக்கொண்டு தனித்து நின்று கற்றுக்கொண்டேன். எவரும் எனக்கு உதவவில்லை. அப்போது எனது சுற்றத்தாரும் புறத்தில் உள்ளோரும் எனது மனம் நோகும்படியான பல்வேறு கதைகளை கூறினர். எனினும், அதனை நான் கருத்திற்கொள்ளவில்லை. என் இலக்கை நோக்கி நகர்ந்துகொண்டே இருந்தேன். இன்று தாரா என்றால் மொடல் என்று சொல்லுமளவுக்கு என்னை நான் வளர்த்துக்கொண்டுள்ளேன். மொடலிங் நிகழ்வுகளில் கலந்துகொள்வதனூடாக வருமானம் ஈட்டக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் இடம்பெறும் அருந்ததி உள்ளிட்ட பல்வேறு மணப்பெண் அலங்கார அணிவகுப்புகளில் கலந்துகொள்கிறேன். அதற்கான அழைப்புகள் என்னைத் தேடி வருகின்றன.

அதுமட்டுமன்றி இலங்கையின் முன்னணி தொலைக்காட்சிகளில் தற்போது ஒளிபரப்பப்படும் 'லொக்கி –2', 'சிக்ஸ்பெக்' மற்றும் 'எண்கவுண்டர்' ஆகிய தொலைக்காட்சி தொடர்களில் முன்னணி கதாபாத்திரமேற்று நடித்துள்ளேன்.

சிங்கள சினிமாவின் 'பிங்பொங்' என அனைவராலும் அறியப்படும் ஹிரான் சாமிகரவின் இயக்கத்தில் வெளிவரவுள்ள 'ரைடர்' என்ற திரைப்படத்தில் துணைநடிகையாக நடித்துள்ளேன். அதேபோன்று இயக்குநர் உதயகாந்தவின் இயக்கத்தில் மற்றுமொரு திரைப்படத்தில் கதாநாயகியாக நடிப்பதற்கும் ஒப்பந்தமாகியுள்ளேன்.

எது எவ்வாறாயினும் என்னுடைய முதல் தெரிவு நடிப்பா அல்லது மொடலிங்கா என்று கேட்டால் நான் சற்றும் யோசிக்காமல் கூறும் பதில் மொடலிங் தான். அத்துறையை அவ்வளவு நேசிக்கிறேன். அதுவே இன்று என்னுடைய வாழ்க்கையை அழகாக்கியுள்ளது. 'மொடல் தாரா' என்ற அடையாளத்தை தந்துள்ளது. அதனூடாகவே இன்று சினித்துறை வாய்ப்புகளும் எனக்கு கிடைக்கின்றன.

இன்று பலர் பணம் ஈட்டுவதற்காக மொடலிங் துறையை தெரிவு செய்கின்றனர். அவர்கள் எதையும் கற்றுக்கொண்டு இத்துறைக்குள் வருவதில்லை. பணம் மட்டுமே அவர்களின் இலக்காக இருக்கிறது. அவ்வாறானவர்களால் மொடலிங் எனும் கலைக்கு இழுக்கு ஏற்படுகிறது. வெறுமனே வெளித்தோற்றத்தை மட்டும் வைத்துகொண்டு இத்துறையை தெரிவு செய்யக்கூடாது. கற்றுக்கொண்டு கால்பதிக்கவேண்டும். அதுவே சாலச்சிறந்தது.

**சுஜானி**



nsn hr m h r l
r l h tmrd R knm& cdl


**கிக் - 'வார இதழ்'**

இல. 91, விஜேராம மாவத்தை,
கொழும்பு 7.
தொலைபேசி : 011 588 6187
வட்ஸ்அப் : 076 139 3805
தொலைநகல் : 011 267 3442

கிக் – வாசிக்க வாசிக்க...

g l lk mk
Kick - கிக்
g l lk m h l lk nl
h g l lk m

தொகுப்பு: நிர்ஷன் இராமானுஜம்
வடிவமைப்பு : ஆர்.எஸ்.தர்ஷி



## Lnvd Island 2022 அறிமுகமாகிறார் எல்லா

சர்வதேச ரீதியில் இலட்சக்கணக்கான ரசிகர்களை தன்வசம் வைத்திருக்கும் பிரித்தானியாவின் பிரபல டான்சரும் மொடல் அழகியுமான எல்லா பார்ன்ஸ் தொடர்பில் புதிய அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

ஐரிவி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் Love Island 2023 நிகழ்ச்சியில் இவர் கலந்துகொள்ளவுள்ளதாக அந்நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அந்நாட்டில் ஒளிபரப்பாகும் மிகப் பிரபலமான நிகழ்ச்சிகளில் Love Island 2023 முன்னிலை வகிக்கிறது. சினிமா உள்ளிட்ட ஏனைய துறைகளில் மிகப் பிரபலமானவர்களைக் கொண்டு இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இது குறித்து கருத்து வெளியிட்ட எல்லா பார்ன்ஸ், அனைவரையும் கவரும் விதத்தில் திறமையை வெளிக்காட்டவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.




## Award இல் மகிழ்ச்சி செய்தியை வெளியிட்ட தம்பதி



விளையாட்டுத் துறையில் மிளிரும் வீரர்களை கௌரவிக்கும் நோக்கில் எஸ்பிஸ் விருதுகள் வழங்கப்படுவதுண்டு. இந்த வருடத்துக்கான விருது விழா ஜுலை 12ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் டொப்லி தியேட்டரில் இடம்பெற்றது.

இந்த விருதுக்கு தம்பதியினரான என்றூவ் ஈஸ்ட் மற்றும் ஷான் ஜோன்சன் ஆகியோர் வருகை தந்திருந்தனர். இவர்களுக்கு செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது.

இதன்போது அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்களிடம், தாங்கள் மூன்றாவது குழந்தைக்கு பெற்றோராகப் போவதாக அறிவித்தனர். இந்த மகிழ்ச்சியான செய்தியை பகிர்வதில் பெருமிதம் கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஷான் ஜோன்சன் அமெரிக்காவைச் சேர்ந்த பிரபலமான ஜிம்னாஸ்டிக் வீராங்கனையாவார். ஒலிம்பிக் பதக்கங்களை வென்றுள்ள அவருக்கு 31 வயதாகிறது. அன்றூவ் ஈஸ்ட் அமெரிக்காவின் முன்னாள் உதைபந்தாட்ட வீரராவார். பல்வேறு போட்டிகளில் விளையாடி வரும் அவர் உதைபந்தாட்டத் துறையில் தனக்கென தனியிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர்கள் இருவரும் திருமணம் முடித்து இரு குழந்தைகள் உள்ள நிலையில், மூன்றாவது குழந்தை தொடர்பில் எஸ்பி விருது வழங்கும் விழாவில் முத்தமிட்டு மகிழ்ச்சியான செய்தியை வெளியிட்டுள்ளனர்.

# மெல்போர்ன் திரைப்பட விழாவில் திரையிடப்படும் 'கிடா' திரைப்படம்

சர்வதேச விழாக்களில் கவனம் ஈர்க்கும் கிடா திரைப்படம் மெல்போர்ன் இந்தியத் திரைப்பட விழாவில் திரையிடப்படவுள்ளது. ஸ்ரீ ஸ்ரவந்தி மூவீஸ் நிறுவனம் சார்பில் ஸ்ரவந்தி ரவி கிஷோர், கிருஷ்ண சைத்தன்யா தயாரிப்பில், அறிமுக இயக்குநர் ரா.வெங்கட் இயக்கத்தில், பூ ராமு, காளி வெங்கட் முதன்மை பாத்திரத்தில் உருவாகியுள்ளது கிடா திரைப்படம். வாழ்வியலை அழகாகச் சொல்லும் ஒரு அழுத்தமான கலைப்படைப்பாக உருவாகியுள்ள இப்படம் சர்வதேச விழாக்களில் கவனம் ஈர்த்து வருகிறது.

சமீபத்தில், இந்தியன் பனோரமா மற்றும் சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் பெரும் வரவேற்பைப் பெற்ற இப்படம், அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் ஒகஸ்ட் 11 முதல் 20 வரை நடக்கும் '14th 'Indian film festival of Melbourne' என்ற திரைப்பட விழாவில் திரையிடத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிடா திரைப்படத்தில் பூ ராமு, காளி வெங்கட் முதன்மை பாத்திரத்தில் நடித்துள்ளனர். மதுரை அருகே உள்ள கிராமத்தில் வாழும் ஒரு சிறுவனுக்கும் அவனது தாத்தாவுக்கும் மற்றும் ஒரு ஆட்டுக்கும் உள்ள உறவுப்பிணைப்பை சொல்லும் படமாக இப்படம் உருவாகியுள்ளது.



இன்னும் திரைக்கு வராத நிலையில் உலகம் முழுக்க பல திரைப்பட விழாக்களில், இப்படத்துக்கு உட்சபட்ச பாராட்டுகள் கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது. உலகம் முழுக்கவுள்ள திரை ரசிகர்களைக் கவர்ந்துள்ள இப்படம், தமிழக ரசிகர்களைக் கவரும் வகையில் விரைவில் திரைக்குவரவுள்ளது.

பூ ராமு, காளிவெங்கட், மாஸ்டர் தீபன், பாண்டியம்மா, லோகி, கமலி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர்.



# மகாராஜாவாக மாறிய விஜய் சேதுபதி




தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான விஜய் சேதுபதியின் 50ஆவது படத்தை, குரங்கு பொம்மை படத்தை இயக்கி பிரபலமடைந்த இயக்குனர் நித்திலன் சுவாமிநாதன் இயக்குகிறார். இப்படத்தில் நட்டி (எ) நட்ராஜ் சுப்ரமணியம், முனீஷ்காந்த், அருள்தாஸ், பாய்ஸ் மணிகண்டன் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

பேஷன் ஸ்டுடியோஸ் சுதன் சுந்தரம் மற்றும் தி ரூட் ஜெகதீஷ் பழனிசாமி இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அஜனீஷ் லோக்நாத் இசையமைத்துள்ளார். தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு ஏற்கனவே முடிவடைந்து போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இந்தப் படத்தின் டைட்டில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்திற்கு மகாராஜா என படக்குழு தலைப்பு வைத்துள்ளது. மேலும், இது தொடர்பான ஃபர்ஸ்ட்லுக் போஸ்டரையும் படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த போஸ்டர் தற்போது சமூக வலைத்தளத்தில் ட்ரெண்டாகி வருகிறது.

# நயன்தாராவுடன் நடிக்க ஆவலாக உள்ளேன்

**- மீரா ஜஸ்மீன்**



தமிழில் 'ரன்' படத்தின் மூலம் அறிமுகமாகி பின் 'சண்டக்கோழி', 'ஆயுத எழுத்து' போன்ற படங்களில் நடித்து திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் மீரா ஜஸ்மீன்.

அதனைத்தொடர்ந்து மலையாளம், தெலுங்கு என பிஸியாக நடித்துவந்த அவர், 2014க்குப் பிறகு படங்களில் நடிக்கவில்லை. சினிமாவிலிருந்து விலகியிருந்தார்.

இந்நிலையில், தற்போது இயக்குநர் சசிகாந்த் இயக்கும் 'டெஸ்ட்' படத்தின் மூலம் ரீ-என்ட்ரி கொடுக்கவுள்ளார். இப்படத்தில் மாதவன், சித்தார்த், நயன்தாரா ஆகியோர் நடிக்கவுள்ளனர்.

இதுதொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த மீரா ஜஸ்மீன், "நான் ஏற்கனவே மாதவன், சித்தார்த் ஆகியோருடன் நடித்துள்ளேன். தற்போது நயன்தாராவுடன் நடிக்க ஆவலாக உள்ளேன். எனது பயணம் சிறப்பான ஒன்றாகவே இதுவரை இருந்திருக்கிறது. சில ஆண்டுகாலம் எனது தனிப்பட்ட காரணங்களுக்காக நடிப்பதிலிருந்து விலகியிருந்தேன். இப்போது மீண்டும் நடிக்கத் தொடங்கியிருக்கிறேன். அதனால் எனது பயணம் மீண்டும் ஆரம்பமாவதுபோல் இருக்கிறது. சமூக வலைத்தளங்களில் என்னுடைய பதிவுகளுக்கு ரசிகர்கள் பொஸிட்டிவாக பதிலளிப்பதால் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று தெரிவித்திருக்கிறார்.



# விரைவில் 'வேட்டையாடு விளையாடு-2'

கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு வெளியான படம் 'வேட்டையாடு விளையாடு'.

இதில் டிஜிபி ராகவன் என்ற கதாபாத்திரத்தில் கமல்ஹாசன் நடித்திருந்தார். இதில் ஜோதிகா, கமலினி முக்கர்ஜி, பிரகாஷ் ராஜ், டேனியல் பாலாஜி உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ரவிவர்மன் ஒளிப்பதிவில் ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் வெளியான இப்படம் அன்றைய சினிமா சூழலில் ரசிகர்களை திரும்பிப் பார்க்க வைத்தது.

நீண்ட வருடங்களுக்குப் பிறகு 'வேட்டையாடு விளையாடு' படம் ஜூன் 23ஆம் திகதி திரையரங்குகளில் புதுப்பொலிவுடன் ரிலீஸ் ஆனது. சென்னையில் வெளியான இத்திரைப்படம் ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் திரையரங்குகள் நிறைந்து வந்தன.

'வேட்டையாடு விளையாடு' படத்தின் மறு வெளியீட்டு வெற்றியை இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனன், இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ், தயாரிப்பாளர் மாணிக்கம் நாராயணன் கேக் வெட்டி கொண்டாடினர்.

இந்நிலையில், நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்ட கௌதம் வாசுதேவ் மேனன், ''வேட்டையாடு விளையாடு இரண்டாம் பாகத்தின் கதையை நடிகர் கமலிடம் கூறியுள்ளேன், அவருக்குப் பிடித்திருந்தது. துருவ நட்சத்திரம் வெளியீட்டுக்குப் பின் வேட்டையாடு விளையாடு இரண்டாம் பாகத்தின் பணிகளை தொடங்கத் திட்டமிட்டிருக்கிறேன்'' என்று கூறியுள்ளார்.



# ஊதியத்தை உயர்த்திய மிருணாள்

ஹிந்தி நடிகையான மிருணாள் தாகூர், 'சீதாராமம்' படம் மூலம் தென்னிந்திய சினிமாவுக்கு வந்தார். துல்கர் சல்மான், ராஷ்மிகா நடித்த இந்தப் படம் தமிழ், தெலுங்கு, இந்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இதையடுத்து மிருணாள் தாக்கூருக்கு மூன்று மொழிகளிலும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. சமீபத்தில் அவர் நடிப்பில் 'லஸ்ட் ஸ்டோரிஸ் 2' என்ற வெப் சீரிஸ் வெளியானது.

இந்நிலையில், அவர் தெலுங்கில் 2 புதிய படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார். நானி ஜோடியாக ஒரு படத்திலும் விஜய் தேவரகொண்டா ஜோடியாக இன்னொரு படத்திலும் நடிக்க இருக்கிறார். நானி படத்துக்கு ரூ.3 கோடி சம்பளம் வாங்கிய அவர், விஜய் தேவரகொண்டா படத்துக்கு ரூ.3.5 கோடி சம்பளம் பேசியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒரே நேரத்தில் ஒப்பந்தமான 2 படங்களுக்கும் அவர் வெவ்வேறு ஊதியம் வாங்கியிருப்பது சினிமா உலகில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இதற்கிடையே ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கும் படத்தில் இவர்தான் கதாநாயகி என்று கூறப்படுகிறது.

# தோல்வி பற்றி கவலையில்லை - அனன்யா

பிரபல ஹிந்தி நடிகர் சங்கி பாண்டேவின் மகள் அனன்யா பாண்டே. நடிகையான இவர், 'லைகர்' படத்தில் விஜய் தேவரகொண்டாவுடன் நடித்திருந்தார். பான் இந்தியா படமாக உருவான இந்தப் படம் தமிழிலும் வெளியானது. இந்தப் படமும் அதற்கு முன் அவர் நடித்த 'கெஹ்ரையான்' படமும் தோல்வியைச் சந்தித்தன. இப்போது ஆயுஷ்மான் குரானாவுடன் 'ட்ரீம் கேர்ள் 2'என்ற இந்திப் படத்தில் நடித்து வருகிறார்.



தனது படங்களின் தோல்வி பற்றி அவர் கூறும்போது, "அது பற்றி வருத்தமில்லை. ஒவ்வொரு படங்களிலிருந்தும் பாடங் களைக் கற்றுக்கொள்கிறேன். ஏனென்றால், இது ஒரு பயணம்; முடிவல்ல. தோல்வி பற்றி அதிகம் சிந்திக்காமல் கற்ற பாடத்தை அடுத்த படங்களில் எப்படி செயற்படுத்த முடியும் என்று மட்டுமே யோசிக்கிறேன்" -என்றார்.

இவர், ஹிந்தி நடிகர் ஆதித்யா ராய் கபுரை காத லித்து வருவதாகக் கூறப்படுகிறது. இதுபற்றி கேட்டபோது, "நான் யாரைக் காதலிக்கிறேன் என்பதில் ரசிகர் கள் ஆர்வமாக இருப்பது நல்ல துதான். அவர் கள் ஊகித்துக் கொண்டே இருக்கட் டும்" -என்றார்.



# "லால் சலாம்" படத்தின் படப்பிடிப்பை நிறைவு செய்த ரஜினி

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் "லால் சலாம்''. கிரிக்கெட்டை மையமாக வைத்து உருவாகி வரும் இந்தத் திரைப்படத்தில் விக்ராந்த், விஷ்ணு விஷால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

மேலும், இதில் சிறப்புத் தோற்றத்தில் நடிகர் ரஜினிகாந்த், முன்னாள் கிரிக்கெட் வீரர் கபில்தேவ் ஆகியோர் நடிக்கின்றனர்.

இதில் ரஜினி மொய்தீன் பாய் என்ற கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இப்படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தின் படப்பிடிப்பு பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வந்த நிலையில், இப்படத்தில் ரஜினி தனது பகுதிக் காட்சிகளை நிறைவுசெய்துள்ளதாகப் படக்குழு புகைப்படம் வெளியிட்டுள்ளது.

# ஷங்கருடன் மீண்டும் இணைகிறார் விஜய்

நடிகர் விஜய், 'லியோ' படத்தில் நடித்து முடித்துள்ளார். அடுத்து வெங்கட் பிரபு இயக்கும் படத்தில் நடிக்கவிருக்கிறார். விஜய்யின் 68ஆவது படமான இதன் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்கவிருக்கிறது. இதற்கிடையே விஜய் அரசியலுக்கு வரவிருப்பதாகவும் அதற்காக 3 வருடங்கள் சினிமாவிலிருந்து விலக இருப்பதாகவும் செய்திகள் வெளியாகின. ஆனால், விஜய் தரப்பில் அதை மறுத்துள்ளனர். இந்நிலையில், விஜய், இயக்குநர் ஷங்கருடன் இணையப்போவதாகக் கூறப்படுகிறது.

விஜய் நடித்த 'நண்பன்' படத்தை ஏற்கனவே இயக்கியிருந்தார் ஷங்கர். இப்போது அரசியல் த்ரில்லர் கதையை அவர் இயக்கவிருப்பதாகவும் இதற்கான ஒன்லைனை விஜய்யிடம் கூறி ஓகே வாங்கியிருப்பதாகவும் செய்திகள் வெளியா



கியுள்ளன. இது விஜய்யின் 70 ஆவது படமாக இருக்கும் என்றும் 69 ஆவது படத்தை அட்லி இயக்குவார் என்றும் கூறப்படுகிறது.

# காரைக்கால் அம்மையார் – பொன் விழா ஆண்டில் இந்த படங்கள்

## ஸ்வீட் சிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்



சைவ சமய நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவர் என்ற பேறுபெற்றவர் காரைக்கால் அம்மையார். பெண் நாயன்மார்கள் மூவருள் ஒருவ ரான இவரை சிவனே, அம்மையார் என்று போற்றி அழைத்துள்ளார். அவருடைய சரித்திரத்தை இ.வி.ஆர். பிக்சர்ஸ் பட நிறுவனம் 1973ஆம் ஆண்டு கலரில் படமாகத் தயாரித்தது. படத் தயாரிப்பாளர் இ.வி.ராஜன், இயக்குனர் ராமண்ணாவின் மைத்துனராக இருந்தபோதும் படத்தை இயக்கும் பொறுப்பை ராமண்ணாவிடம் தராமல், ஏ.பி.நாகராஜனிடம் ஒப்படைத்தார். பக்திப் படங்களை உருவாக்குவதில் புகழ் பெற்ற நாகராஜனும் அவ்வாறே படத்தை இயக்கினார்.

காரைக்காலில் பிரபல வணிகரின் மகளாகப் பிறந்த புனிதவதி சிறுவயது முதல் சிவபெருமான் அடியவளாகவே விளங்கி வருகிறாள். அவளின் திருமணம் தள்ளிப்போவதைக் கண்டு கவலைப்படும் அவளின் பெற்றோர் தங்களுக்கு அறிமுகமான பரமதத்தன் என்ற இளம் வணிகனுக்கு அவள் சம்மதத்தின் பேரில் அவளை மணம் முடித்து வைக்கிறார்கள். பரமதத்தன் நல்லவன். ஆனால், இறை மறுப்பாளன். ஆனாலும் மனைவியின் பக்திக்கு குறுக்கே நிற்பவன் அல்ல. இதனால் இல்வாழ்வு இனிதே நடக்கிறது. ஒருநாள் தன் வேலையாள் மூலம் இரண்டு மாங்கனிகளை மனைவிக்குக் கொடுத்து அனுப்புகிறான் பரமதத்தன். அச்சமயம் புனிதவதியின் இல்லத்துக்கு ஒரு வயதான சிவனடியார் வரவே, புனிதவதி அவருக்கு அமுது படைக்கிறாள். தனக்குக் கிடைத்த மாங்கனிகளில் ஒன்றையும் அவருக்குப் பரிமாறுகிறாள்.

பரமதத்தன் இல்லம் திரும்பவே அவனுக்கு உணவு பரிமாறி, மீதி இருந்த மாங்கனியையும் அவனுக்கு கொடுக்கிறாள் புனிதவதி. அதை உண்ட பரமதத்தன் மற்றைய கனியையும் கொண்டு வரும்படி கேட்கவே பூஜை அறைக்குச் சென்று சிவனை வணங்க, மற்றுமொரு மாங்கனி அவள் கரங்களில் விழுகிறது. அதனை கணவனுக்கு கொடுக்கவே இரண்டு மாங்கனிகளுக்கும் சுவையில் வித்தியாசம் இருப்பதை சுட்டிக்காட்டி காரணம் கேட்கிறான் அவன். நடந்த உண்மையை அவனிடம் கூற, தன்னை இறை நம்பிக்கை உள்ளவனாக்க அவள் நாடகமாடுவதாக அவன் சந்தேகப்படுகிறான். மீண்டும் புனிதவதி சிவனை வணங்க மற்றுமொரு மாங்கனி அவள் கரங்களில்



விழுகிறது. இதைக் கண்டு திகைக்கிறான் பரமதத்தன். கடவுள் எங்கே, அவனை காண முடியுமா என்று கேட்டுக் கொண்டிருந்தவன் இப்போது தன் மனைவியையே தெய்வம் என்று போற்றி வணங்குகிறான். அவளுடன் இல்லறம் நடத்த முடியாது என்று கூறி அவளை பிரிந்து சென்று விடுகிறான். அதன்பின் தன்னுடைய இளமையை எடுத்துக்கொண்டு முதுமையை தரும்படி புனிதவதி சிவனை வேண்ட இறைவன் அவளை மூதாட்டியாக்குகிறான். காரைக்கால் அம்மையாராக உருமாறும் புனிதவதியின் ஆன்மீகப் பயணமே மீதி படம்.

படத்தில் புனிதவதியாக லக்ஷ்மியும், காரைக்கால் அம்மையாராக கே.பி.சுந்தராம்பாளும் நடித்தனர். இருவரும் பாத்திரத்துடன் ஒன்றிப் போயிருந்தார்கள். பக்தி உணர்வைக் காட்டும் போதும், கணவனிடம் உருகும் போதும், சிவனிடம் மன்றாடும் போதும் லக்ஷ்மியின் நடிப்பில் முதிர்ச்சி தெரிந்தது. காரைக்கால் அம்மையாராக வரும் சுந்தராம்பாள் நடிப்பு மட்டுமன்றி, அவரின் குரலும் கணீர் என்று ஒலித்து பரவசப்படுத்துகிறது. பரமதத்தன் வேடம் முத்துராமனுக்கு. கஷ்டப்படாமல் நடிக்கிறார். இவர்களுடன் எஸ்.வி.சகஸ்ரநாமம், குமாரி ருக்மணி, வி.எஸ்.ராகவன், சீதாலஷ்மி, குமாரி பத்மினி, கே.டி.சந்தானம் ஆகியோரும் நடித்தனர். சுருளிராஜன், மனோரமா நகைச்சுவை ஜோடி படத்தின் கதையோடு ஒட்டி நகர்கிறது. சிவனாக சிவகுமாரும், பார்வதியாக ஸ்ரீவித்யாவும் நடித்திருந்தனர். நடிப்போடு இருவரும் இணைந்து சிவத் தாண்டவமும் புரிந்திருந்தனர். அதற்கு கே.பி.எஸ்ஸின் ''தக தக தகவென ஆடிவா'' பாடல்



மெருகு சேர்த்தது.

படத்துக்கு இசை குன்னக்குடி வைத்யநாதன். நடனத்தை பி.எஸ். கோபாலகிருஷ்ணன் அமைத்திருந்தார். பிரபல கெமராமேன் டபிள்யூ.ஆர். சுப்பாராவ் படத்தை அழகாக ஒளிப்பதிவு செய்தார். அரங்க நிர்மாணத்தை கங்கா அருமையாக அமைத்திருந்தார்.

இரா.பழனிச்சாமி எழுதிய கதைக்கு திரைக்கதை வசனம் எழுதி இயக்கியிருந்தார் ஏ.பி.நாகராஜன். நட்சத்திர நடிகர்களைப் பயன்படுத்தாமல் கே.பி.சுந்தராம்பாளை பாதி படத்துக்கு மேல் கதாநாயகியாகப் போட்டு வெற்றிகரமாக பக்திப் படத்தை உருவாக்கியிருந்தார் ஏ.பி.என்!



## கவர்ச்சித் தோற்றத்தில் திஷா

பொலிவூட் சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்துவரும் நடிகை திஷா பட்டாணி 'தோனி' படத்தின் மூலம் மிகவும் பிரபலமானார். அதனைத் தொடர்ந்து பொலிவுட்டின் முன்னணி ஹீரோக்கள் படங்களில் நடித்துவரும் அவர், தற்போது சூர்யாவின் 'கங்குவா' திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

ஒல்லி பெல்லி தோற்றத்தை வைத்துக்கொண்டு எப்போதும் மணிக்கணக்கில் ஜிம்மில் நேரத்தை செலவிட்டு வருவார். தற்போது பிகினி உடையில் ஹொட்டாக போஸ் கொடுத்து அத்தனை பேரையும் கதிகலங்க வைத்துவிட்டார்.

அந்தப் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. இதனையடுத்து அவற்றை உடனடியாக நீக்கிவிட்டு சிவப்பு ஆடையில் கவர்ச்சித் தோற்றத்தில் படங்களை வெளியிட்டார். இப்போது ரசிகர்கள் அந்தப் படங்கள் பற்றியும் பேசி வருகின்றனர்.





# மன அழுத்தத்துக்கு மருந்தாகும் பாலுறவு!

ஒருவர் அதிக மன அழுத்தத்தில் இருக்கும்போது உடலுறவைப் பற்றிச் சிந்திப்பதுகூடச் சாத்தியமற்றது என்றே கூற வேண்டும். ஆனால், அந்தச் சமயத்தில் உடலுறவு கொள்வதன் மூலம் உங்கள் மனநிலையை மாற்றமுடியும் எனக் கூறப்படுகிறது. உடலுறவு என்பது சந்தேகத்திற்கிடமின்றி உங்கள் மன நிலையில் மாற்றத்தைக் கொண்டு வரும். குறிப்பாக, கடினமான காலங்களில் இது மன அழுத்தத்தைக் குறைக்கும்.

உடலுறவு காரணமாக மன அழுத்தம் குறையும் என்று கூறப்படுவதற்கு சில எளிய காரணங்கள் உள்ளன. உடலுறவின் போது உடல் 'டோபமைன்' எனப்படும் மகிழ்ச்சியான ஹோர்மோனை சுரக்கிறது. எனவே, விஞ்ஞானத்தின்படி உடலுறவின் போது இந்த ஹோர்மோன் சுரக்கப்படுவதால் இது நம் மனநிலையை மாற்றியமைக்கிறது. மன அழுத்தத்தை நிர்வகிக்க உடலுறவு எப்படி செயற்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள புகழ்பெற்ற உளவியலாளரான பாத்திமா ஆலன் கூறுவதைக் கேட்போம்.

''உடலுறவு என்பது வெறும் இன்பத்திற்காக மட்டுமல்ல, அது ஒவ்வொரு உயிரினத்தின் அடிப்படைத் தேவை யாகவும் உள்ளது. உணவைப் போலவே உடலுறவும் வாழ்க்கையின் அவசியமான ஒரு பகுதியாக உள்ளது.

உடலுறவு மற்ற விலங்குகளில் இருந்து நம்மை எங்கே வேறுபடுத்துகிறது என்றால், மனிதனுக்கு உடலுறவு என்பது இனப்பெருக்கத்தைத் தாண்டி நெருக்கம் மற்றும் ஆசை, காதல் தொடர்பானதாக இருக்கிறது. அதனால் கிடைக்கும் நன்மைகளை நாம் மறுக்க முடியாது. ஆனால், நீங்கள் நினைப்பதை விட உடலுறவு உங்களுக்கு நன்மை பயக்கிறது" என உளவியலாளர் திருமதி ஆலம் கூறுகிறார்.

பாலியல் ரீதியாக சுறுசுறுப்பாக உள்ள நபர்கள் பல ஆண்டுகளுக்கு ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சி யான வாழ்க்கையைப் பெற வாய்ப் புள்ளது என ஆய்வுகள் தெரிவிக்கின் றன. உடல் முதல் மனநலம் வரை உடலுறவில் உள்ள சில குறும்புகள் மூலம் நீங்கள் பயனடையலாம்.

உடலுறவு கொள்ளாத நபர்களை விடவும் உடலுறவு கொள்ளும் நபர்கள் சிறந்த நோயெதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்க வாய்ப்புள்ளது. பாக்டீரியா மற்றும் வைரஸ்களுக்கு எதிராகப் போராடும் ஆண்டிபாடிகள் உடலுறவு கொண்டவர்களுக்கு அதிகமாக உள்ளது. இது பொதுவாக ஏற்படும் நோய் அபாயத்திலிருந்து காக்கிறது.

நீங்கள் அதிக உடல் எடையைக் கொண்டிருந்தால் அதைக் குறைக்க உடற்பயிற்சியோடு - உணவோடு உடலுறவும் மிகச் சிறந்த உடற்பயிற்சியாகும். ஏனெனில், உடலுறவின்போது அதில் பல தசைகள் ஈடுபடுகின்றன. குறிப்பாக, இடுப்புத்தசைகள். எனவே, உடலுறவு கொள்வது அதிக கலோரிகளை எரிக்க உதவுகிறது.

பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும்போது இன்ப ஹோர்மோன் கள் அதிகமாகச் சுரக்கிறது. இதனால் மன அழுத்தம் மற்றும் பதற்றம் குறைய இது உதவி புரிகிறது. இதனால் தூக்கமின்மை குறைகிறது. உடலுறவில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு நிம்மதியான தூக்கத்தை ஏற்படுத்துகிறது. நல்ல மகிழ்வான உடலுறவுக்குப் பிறகு உங்கள் மன அழுத்தம் பன்மடங்கு குறைந்திருப்பதை நீங்கள் நன்றாகவே உணர முடியும்.

# ஜிகினாவிடம் கேளுங்கள்!

★ உங்கள் மனம் கவர்ந்த வாசகம் எது (Quote)?

**வாசுகி - மாத்தளை**

என் மனம் கவர்ந்த வாசகம் இதோ உங்கள் பார்வைக்கு.

"நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்து வை
முழுப் படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை
முதலில் முதல் படி ஏறு.
ஆயிரம் மைல் பயணம் கூட முதல் அடியில் தான் தொடங்குகிறது"

★ ஒருவர் பக்குவமடைந்து விட்டார் என்று அறிந்து கொள்வது எப்படி?

**மாலினி யோகராஜன் - தெமட்டகொடை**

தேவையற்ற உணர்ச்சிகளைத் தெளிவாக அறிந்திருப்பார்.

ஆச்சரியமாக ஏதாவது விஷயத்தைக் கூறினால் இயல்பாக எடுத்துக்கொள்வார். மனதிற்குள் மகிழ்ச்சி இருக்கும்.

எந்தச் செயல்களையும் பெரிய மனப்பான்மையுடன் செய்வார்.

கண்களில் எந்தவொரு உணர்ச்சிகளும் இருக்காது. யதார்த்த பார்வை மட்டுமே இருக்கும்.

மாற்றங்களைத் தனக்கு ஏற்றாற் போல தகவமைத்துக் கொள்வார்.

அடுத்தவர் பேசும்போது குறுக்கிடமாட்டார்.

அமைதி இருக்கும் இடத்தில் இவரைக் காணலாம்.

உடலசைவுகள் மிகக் குறைவாக இருக்கும்.

செய்த தவறுகளை திருத்திக் கொண்டு புது பழக்கங்களுக்கு மேம்படுத்திக்கொள்வார்.

சிரிப்பு ஒன்று மட்டுமே பல கேள்விகளுக்குப் பதிலாக இருக்கும்.

★ வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவர்கள் எந்த நிலையில் இருப்பார்கள்?

**சுப்பிரமணியம் -நீர்கொழும்பு**

எந்த நிலையில் இருந்தாலும் கூனிக் குறுகியே தான் இருப்பார்கள். அவர்களின் மனச்சாட்சியே அவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்க்கும். வெயிலில் இருக்கும் புழு போல துடிப்பது வெளியில் யாருக்கும் தெரியாது. நிறையப்பேர் எதிலாவது சிக்கிக்கொண்டு வெளிய வரத் தவிப்பார்கள். அவர்களுக்குத்தான் மேலே சொன்ன நிலைமை. ஒருசிலர் சாண் என்ன முழம் என்னவென்று மூழ்கி யிருப்பார்கள்.

ஒழுக்கமில்லாதவருக்கு வளர்ச்சி இல்லை . அவன் பிறப்பே பயனில்லாமல் போய்விடும். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக எண்ண வேண்டும்.ஒழுக்கம் வீடு பேறு தரும் என்றெல்லாம் திருவள்ளுவர் கூறுகிறார்.

சீனாவிற்கென்று ஏன் கிரிக்கெட் டீம் இல்லை?

**வினோ - பதுளை**

சீனாவிற்கென்று கிரிக்கெட் அணி இருக்கிறது. ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கான அணியும் இருக்கிறது. ஏனைய நாடுகளைப் போன்று Under - 19 அணி கூட இருக்கிறது. அவர்களை ஐ.சி.சி. "Associate Team" என்று அழைக்கிறது. சீனாவைப் போலவே சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ் என நாற்பதுக்கும் மேற்பட்ட அணிகள் Associate அணிகளாக இருக்கின்றன.

அவர்களுக்கென்று தனி உலகக் கிண்ணப் போட்டிகள் கூட நடக்கும். அத்தகைய Associate அணிகளுக்கிடையிலான போட்டிகளில் தொடர்ந்து வெற்றிகள் பெற்றால் டெஸ்ட் அந்தஸ்துடைய அணிகளுடன் மோதும் வாய்ப்பு கிடைக்கும். அப்படி Associate அணியாக இருந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அணியாக மாறிய அணிகள்தான் அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் போன்றவை.



உங்கள் கேள்விகளை 65 0 8 7 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.
'ஜிகினாவிடம் கேளுங்கள்'
வட்ஸ்அப் : 076 139 3805






# விமர்சனம்

ஒரு தெற்கத்தி கிராமம். அங்கே 2 கிராமியக் கலைக் குழுக்கள். காடப்புறா கலைக்குழுவை நடத்தி வரும் பாவாடைசாமி (முனீஷ்காந்த்), தன் குழுவின் கலைஞர்களை குடும்பமாகப் பாவிக்கிறார். அவர் தமிழை (ஹரிகிருஷ்ணன்), தத்துப்பிள்ளைபோல் வளர்க்கிறார். தமிழ், மற்றொரு கலைக்குழுவை நடத்தும் பென்சில் மீசை பெருமாளின் (சுப்பர்குட் சுப்ரமணி) தங்கை கலையரசியைக் (சுவாதி) காதலிக்கிறார். பாவாடை சாமிக்கும் பெருமாளுக்கும் தொழில் ரீதியான முரண்பாடுகள் இருப்பதால், காதலை ஒளித்தே வைத்திருக்கிறார்கள். இதற்கிடையில் பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிடும் ஈஸ்வரமூர்த்தியை (மைம் கோபி) எதிர்த்துக் களம் காணும் சரவணனை ஆதரிக்கிறார் பாவாடைசாமி.



தேர்தலில் வெற்றிபெற்றது யார்? கிராமியக் கலைகளைப் புறக்கணிக்கும் ஈஸ்வரமூர்த்தியால் காடப்புறா கலைக்குழுவுக்கு என்ன நேர்ந்தது? தமிழ் – கலையரசி காதல் கைகூடியதா என்ற கேள்விக்கு விடை சொல்கிறது கதை.

நடனம், கரகம் என கிராமிய ஆட்டம் எதுவானாலும் அதில் ஆபாசம் சேர்க்கமாட்டோம், கலைக்குழுவிலுள்ள பெண் கலைஞர்களை யாரும் தொடக்கூடாது என்பன உட்பட பாவாடைசாமி விதிக்கும் நிபந்தனைகள், அசலான கிராமியக் கலைஞர்கள் விரும்பும் சுயமரியாதையை பளிச்சென்று எடுத்துக்காட்டிறது. எதிர்த்தரப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ள பென்சில் மீசை பெருமாள், பாவாடைசாமி எதிர்பாராத வகையில் பகையைச் சம்பாதித்துக்கொள்ளும் பஞ்சாயத்துத் தலைவர் ஈஸ்வரமூர்த்தி ஆகிய கதாபாத்திரங்கள் வழக்கமான சட்டக வார்ப்புகள்.

நிகழ்த்துக் கலைகள் பிரிவை எடுத்து, அதில் முதுகலைப் பயிலும் வளர்ப்பு மகன் தமிழ் கதாபாத்திரம், நவீன உலகில் கிராமியக் கலையை எந்த உயரத்துக்கு எடுத்துச்செல்லலாம் என்பதையும் தகுதியான ஒருவருக்கு கொடுக்கப்படாத அங்கீகாரத்தை எடுத்துக்கூறி பெற்றுவிடலாம் என்பதையும் சாதித்துக் காட்டுவது திரைக்கதை நாடகத்துக்கு வலுவாகக் கைகொடுத்திருக்கிறது.

முனீஷ்காந்தின் நகைச்சுவை பல காட்சிகளில் எடுபடவில்லை. குணச்சித்திர காட்சிகளில் நடிப்பால் ஈர்த்துவிடுகிறார். காளி வெங்கட் தனது கதாபாத்திரம் குறைவாக இருந்தாலும் நடிப்பால் அதை நிறைத்து விடுகிறார். மைம்கோபி, வில்லன் வேலையை சரியாகச் செய்திருக்கிறார். ஆத்தங்குடி இளையராஜா, அளவாக நடித்து ஆச்சரியப்படுத்தியிருக்கிறார். தமிழாக வரும் ஹரிகிருஷ்ணனும் கலையரசியாக வரும் சுவாதியும் கிராமிய இயல்புடன் வசீகரிக்கிறார்கள். பாடல் காட்சிகளைத் தவிர, வேறு காட்சிகளில் கிராமியக் கலைகள் பயன்படுத்தப்படாதது பெருங்குறை. அதைப் பின்னணி இசையால் ஈடுசெய்திருக்கிறார் ஹென்ரி.

ஒருவரின் கதையைத் தெரிவுசெய்தபின், அதற்குள் கிளைக் கதைகளின் எண்ணிக்கையை தேவையின்றி அதிகப்படுத்துவது திரைக்கதையின் சீரான ஓட்டத்துக்குத் தடையாகிவிடும். அந்தச் சிக்கல் காடப்புறாவுக்கும் நேர்ந்திருக்கிறது. அதைத் தாண்டி, கிராமியக் கலைகளின் நிலையைப் பேசுவதால் ஈர்க்கிறது இக் கலைக்குழு.

## காவலையா பாடல்!



**திரைப்படம்: ஜெயிலர்**
**பாடலாசிரியர்: அருண் ராஜா காமராஜ்**
**இசை: அனிருத் ரவிசந்தர்**
**பாடகி: ஷில்பா ராவ்**

பெண் : ரா என் ராவெல்லாம்
லாங் ஆவுதே
ராபரிகு
ரா வே ரா வே

பெண் : ரா நீ பாத்தாலே
தீ ஆவுதே
தீ பிடிக்க
ராவையா வே

பெண் : மச்சத்த முறைச்சா
அச்சத்த குறைச்சா
இச்சத்த மறச்சா
மிச்சம் இல்லாம

பெண் : மச்சமே நுவ்வையா
அச்சமே லேதையா
இச்சமே நேனையா
மிச்சம் ஏமையா

பெண் : வா நூ காவலையா
நூ காவலையா
ரா ரா ரா ரா ரா
ரா ரா ரா ரா ரா

பெண் : வா நூ காவலையா
நூ காவலையா
ரா ரா ரா ரா ரா
ரா ரா ரா ரா ரா

பெண் : பத்திக்க வெக்கும் போதைய யா
எப்பப்பா எப்பப்பா எப்பப்பா
கண்ணுக்குள நீ செய்தி சொல்லேன் பா
சிக்கிக்க வைக்கும் ஆசையா
வந்தாயேய் யப்பா
தங்கத்துல தான் தேச்சுகோயேன் பா....

பெண் : கொஞ்சம் தயங்காதா பா
கொஞ்சம் அடங்கா வேணாம் பா
ரொம்ப மயங்காத பா..
தப்பப்பா தப்பப்பா

பெண் : கொஞ்சம் பாட்டு காவலா
கொஞ்சம் டேன்சு காவலா
ரெண்டு உனக்காகவே
காவலா காவலா

பெண் : வா நூ காவலையா
நூ காவலையா
ரா ரா ரா ரா ரா
ரா ரா ரா ரா ரா

பெண் : வா நூ காவலையா
நூ காவலையா
ரா ரா ரா ரா ரா
ரா ரா ரா ரா ரா

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07